
# கவின் தமிழ் 2003



## வடக்கு கிழக்கு மாகாண
## தமிழ் மொழித்தின விழா சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/800/12097

# கவின்தமிழ்

வடக்கு – கிழக்கு மாகாணம்

# தமிழ் மொழித்தினம்

# 2003

**2003ஆம் ஆண்டு**

**ஜூலை 26ஆம் திகதி**

**வடக்கு - கிழக்கு மாகாண**

**கல்வித் திணைக்களம்**

**திருக்கோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60.248

# தமிழ்த்தாய் வணக்கம்



நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ
லனைத்துலக மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்னடமுங் களிதெலுங்குங்
கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம் போ லுலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே

-மனோன்மணியம்-

சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# "கவின்தமிழ் 2003"

## மலர்க்குழு

திரு. வீ. இராசையா
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

திரு. ந. அனந்தராஜ்
உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்மொழிப்பிரிவு)
மாகாண நூலக இணைப்பாளர்

திரு. செ. மகேஷ்
உதவிக் கல்விப் பணிப்பாளர்

திரு. ஏ. ஆர். மைக்கல்
பொப்லெப் மாகாண மேற்பார்வையாளர்

## இதழ் ஆசிரியர்

திரு. ந. அனந்தராஜ்

### முகப்பு ஓவியம்

2வது உலகத் தமிழாராய்ச்சி மாகாநாட்டு
மலர்க் குழுவினருக்கு எமது நன்றிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தின விழா-2003

### விழாக் குழுவினர்

**காப்பாளர் -** **திரு. இ. தியாகலிங்கம்**
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாணம்

**தலைவர் -** **திரு. சு. மகாலிங்கம்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு கிழக்கு மாகாணம்

**இணைப்பாளர் -** **திரு. வீ. இராசையா**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்

**செயலாளர் -** **திரு. ந. அனந்தராஜ்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்

**பொருளாளர் -** **திரு. ஜே. ரி. புவிராஜ்**
பிரதம கணக்காளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்

### யாழ்ப்பாண விழாச்செயற்குழு இணைப்பாளர்கள்

**திருமதி. செ. மகாலிங்கம்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாண மாவட்டம்

**திரு. ப. விக்கினேஸ்வரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. வே. தி. செல்வரத்தினம்**
வலயக் கல்விப் பணிப்பாளர்
வடமராட்சி கல்வி வலயம்

திரு.வி.செல்வராசா,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
தென்மராட்சி கல்வி வலயம்

திரு.எஸ்.வேணுகோபால வாணிதாசன்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
தீவக கல்வி வலயம்.

திருமதி.றெ.இருதயநாதன்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தினம் - 2003

## விழா ஆலோசகர்கள்

**திரு. வே. மகேந்திரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. த. அருணகிரிராஜா**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. கே. முருகுப்பிள்ளை**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திருமதி. பி. செல்வின் இரேனியஸ்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. வி. ஸ்ரீஸ்கந்தராஜா**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. செ. மகேஷ்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திருமதி. எஸ். கணேசலிங்கநாதன்**

**திரு. வி. சௌந்தரராஜன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திருமதி. அ. வேதநாயகம்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. ஏ. விஜயானந்தமூர்த்தி**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. ஏ. ஆர். எம். ராபி**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**செல்வி. அ. கனகசூரியம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. மு. ராதாகிருஸ்ணன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. வி. தங்கவேல்**
ஓய்வுபெற்ற அதிபர்

**திரு. வி. எஸ். சிவசுப்பிரமணியம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

## விழா சிறப்புற உதவியவர்கள்

**ஜனாபா எம். எம். ஆலீப்**
நிருவாக உத்தியோகத்தர்

**திருமதி. பு. தண்டாயுதபாணி**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. எஸ். சந்திரமோகன்**
பிரதம எழுதுநர்

**செல்வி. கே. கலாரதி**
எழுதுநர்

**திருமதி. சி. பரமேஸ்வரன்**
சுருக்கெழுத்தாளர்

**திரு. கே. சசிதரன்**
உதவியாளர்

**திரு. கை. நந்தகுமார்**
உதவியாளர்

**திரு. எஸ். டொமினிக்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு. ஏ. ஆர். மைக்கல்**
"பொப்லெப்" மேற்பார்வையாளர்

**செல்வி. எஸ். சுகிர்தகலா**
எழுதுநர்

**திரு. பா. கஜேந்திரன்**
கணனி இயக்குநர்

**செல்வி. கே. சுமதி**
தட்டெழுத்தாளர்

**திரு. எஸ். ரமணன்**
உதவியாளர்

**திரு. கே. குலராஜ்**
உதவியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விழாச்செயற் குழுவினர்

**திருமதி. தே. முருகுப்பிள்ளை**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
திருகோணமலைக் கல்வி வலயம்

**திரு. ஆ. ராஜேந்திரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
வடமராட்சிக் கல்வி வலயம்

**திரு. எஸ். நாகராஜா**
நிருவாக உத்தியோகத்தர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. எஸ். ராதாகிருஸ்ணன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
தீவகம் கல்வி வலயம்

**திரு. எஸ். நந்தகுமார்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வடமராட்சி கல்வி வலயம்

**திருமதி. ச. நாகராஜா**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்

**திருமதி. மீ. அருள்நேசன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பணம் கல்வி வலயம்

**திரு. எஸ். சுகுமார்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்

**திரு. க. கமலானந்தன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வடமராட்சி கல்வி வலயம்

**திரு. சி. சிவநேசன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்

**திரு. ஜே.ஏ. தேவராஜா**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி கல்வி வலயம்

**திரு. நா. வரதராஜா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. க. துரைசிங்கம்**
கணக்காளர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. எஸ். சுந்தரசிவம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்

**திரு. யோ. ரவீந்திரன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. எஸ். இராசலிங்கம்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. சி. விஜயேந்திர சர்மா**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்

**திரு. சி. மாதவகுமாரன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலகாமம் கல்வி வலயம்

**செல்வி. வி. கந்தையா**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலகாமம் கல்வி வலயம்

**திரு. எம். எஸ். ஸ்ரீ தயாளன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. என். உலகநாதன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி. எஸ். காங்கேயன**
கோட்டக் கல்வி அதிகாரி
நல்லூர் கல்விக் கோட்டம்

**திரு. கா. சந்திரபாலன்**
கோட்டக் கல்வி அதிகாரி
தெல்லிப்பளை கல்விக் கோட்டம்

**திரு. எஸ். சிவஞானசுந்தரம்**
கோட்டக் கல்வி அதிகாரி
கோப்பாய் கல்விக் கோட்டம்

**திரு. க. தங்கராஜா**
கோட்டக் கல்வி அதிகாரி
யாழ்ப்பாணம் கல்விக் கோட்டம்

**திரு. நா. ரெட்ணசிங்கம்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. எஸ். செல்வப்பிரகாசம்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. ஏ. தவநாயகம்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. நா. மகாநாதன்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. நா. சுவாமிநாதன்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. பூ. குகதாசன்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. வே. பரிமேலழகுப்பிள்ளை**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திருமதி. பா. பாலசுப்பிரமணியம்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**செல்வி. எஸ். யோகேஸ்வரி**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. எஸ். சிவகுமார்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**செல்வி. ம. கிருஸ்ணவேணி**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திருமதி. ப. செல்வேந்திரகுமார்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. எஸ். வரதராஜன்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. எஸ். சுந்தரலிங்கம்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. பா. இராஜசேகரம்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்

**திரு. சி. துரைசிங்கம்**
முதன்மை ஆசிரியர்
வலிகாமம் கல்வி வலயம்

**திரு. நா. அரியபுத்திரன்**
முதன்மை ஆசிரியர்
வலிகாமம் கல்வி வலயம்

**திரு. வே. கைலாயநாதன்**
முதன்மை ஆசிரியர்
யாழ்ப்பாணம் கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. வீ. இராமச்சந்திரன்**
முதன்மை ஆசிரியர்
வலிகாமம் கல்வி வலயம்

**திரு. சி. தில்லைநாதன்**
முதன்மை ஆசிரியர்
வடமராட்சி கல்வி வலயம்

**திரு. க. நடராஜா**
முதன்மை ஆசிரியர்
வலிகாமம் கல்வி வலயம்

**திரு. எஸ். சிவகடாட்சம்**
அதிபர்,
யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்

**செல்வி. சோ. ஜெயேந்திராதேவி**
ஆசிரியை,
யா/ ஊரெழு கணேசா வித்தியாலயம்

**திருமதி. ப. லலிதா**
ஆசிரியை,
யா/ அச்சுவேலி மகா வித்தியாலயம்

**திருமதி. கி. தருமராஜா**
ஆசிரியை,
யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

**திரு. சி. கருணாகரன்**
ஆசிரியர்,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

**திரு. எஸ். திருச்சபேசன்**
முகாமையாளர்,
தீவக வலயம் ஆசிரிய நிலையம்

**திரு. எஸ். ரவீந்திரன்**
முகாமையாளர்,
யாழ்ப்பாண வலயம் ஆசிரிய நிலையம்

**செல்வி. பா. தேவிகாராணி**
எழுதுநர்,
வலிகாமம் கல்வி வலயம்

**திரு. மு. சந்திரசேகரன்**
முதன்மை ஆசிரியர்
வடமராட்சி கல்வி வலயம்

**திரு. இ. சர்வேஸ்வரன்**
முதன்மை ஆசிரியர்
தென்மராட்சி கல்வி வலயம்

**திரு. எஸ். இராஜவரோதயம்**
முதன்மை ஆசிரியா
வலிகாமம் கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்குமிட நிலைய இணைப்பாளர்கள்

**திருமதி. க. பொன்னம்பலம்**
அதிபர், யா/ வேம்படி மகளிர் கல்லூரி

**திரு. எஸ். ஸ்ரீகுமரன்**
அதிபர், யா/ இந்துக் கல்லூரி

**திரு. க. இராசதுரை**
அதிபர், யா/ மத்திய கல்லூரி

**திருமதி. ச. ஜெயராசா**
அதிபர், யா/ இந்து மகளிர் கல்லூரி

**அருட்சகோதரி ஜோலண்ட்**
அதிபர், யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

**திரு. கே. தனபாலன்**
அதிபர், யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி

**வணபிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்**
அதிபர், யா/ சென் பற்றிக்ஸ் கல்லூரி

**திருமதி. ரி. இராஜரட்ணம்**
அதிபர், யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

**திரு ந. வன்னியசிங்கம்**
அதிபர், யா/ வைத்தீஸ்வரா கல்லூரி

**திரு. வே. கமலநாதன்**
அதிபர், யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி

**திரு. ந. சிவகடாட்சம்**
அதிபர், யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

**திரு. வி. மாணிக்கம்**
அதிபர், யா/ கனகரெட்ணம் மத்திய ம. வித்தி

**திரு. த. சிவராஜா**
அதிபர், யா/ முத்துத்தம்பி வித்தியாலயம்

**திருமதி. எஸ். விஸ்வலிங்கம்**
அதிபர், யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி

**திரு. கே. சிவராஜா**
அதிபர்,யா/வண்ணை நாவலர் வித்தியாலயம்

**திரு. கே. நடராஜலிங்கம்**
அதிபர், யா/ சன்மார்க்க விதியாலயம்

**திரு. எஸ். அகிலதாஸ்**
அதிபர்,யா/கோப்பாய் மகா வித்தியாலயம்

**திரு. எஸ். செபஸ்ரியாம்பிள்ளை**
அதிபர், யா/ சென்மேரிஸ் வித்தியாலயம்

**திரு. ஏ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**
அதிபர், யா/ கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM HON. MAJOR GENERAL ASOKA K. JAYAWARDHANA GOVERNOR, NORTH EAST PROVINCE.

Knowledge is power and without knowledge life is a shadow. The spirit of the language makes the life of the people vibrant. Language carries knowledge.

" Every generation enjoys the use of that vast hoard bequeathed to it by antiquity, and transmits that hoard, augmented by fresh acquisitions to future ages" says Thomas Maculay.

Tamil Language with its richness of heritage and culture is learnt with delight by the Tamil people as well as by other people who cherish its richness of literature.

Schools provide the base for language development. Government through its institutions offers the children the necessary competitions for further development and excellence. These competitions spur them to master and enjoy their language.

We are in an era of nation building. Competitions of this nature should promote peace, nation building and spirit of brotherliness among the citizens.

It gives me great satisfaction to congratulate the Provincial Director of Education, NEP and his spirited staff for organizing a successful Tamil Language Day Competition 2003.

Let these competitions produce a new generation that promotes peace and nation building.

**MAJ. GEN. ASOKA K. JAYAWARDANA, RWP, RSP, VSV, USP**
**GOVERNOR, NORTH EAST PROVINCE.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வடக்கு கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளர்*

**திரு. எஸ். ரங்கராஜா**

*அவர்களின்*

# வாழ்த்துச் செய்தி

தமிழின் சிறப்பும், தமிழர் தம் வாழ்விடங்களின் வளமும் பெருகத் தமிழ் மொழித்தின விழாவெடுக்கும் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினரைப் பாராட்டுகிறேன். இம்முறை யாழ்ப்பாண நகரில் கோலாகலமாக அதனைக் கொண்டாட முன்வந்த விழாக்குழுவினரின் கலை இலக்கிய கலாச்சார ஆக்கங்களால் எழில் பெறும் வெளியீடான கவின் தமிழ் மலருக்கு ஆசிச்செய்தி தருவதில் உளம் மகிழ்கின்றேன்.

எமது நிலமும், மக்களும் தமிழிலக்கியப் பெருமைகளின் நோக்கில் தமிழினத்தின் வீரம், கல்வி, செல்வம் ஆதியாம் விழுமியங்களை வேற்றினத்தாரும் போற்றும் வகையில் இவ்விழாவின் மூலம் வெளிக்கொணர்வது கண்டு இன்புறுகின்றேன்.

தமிழெனும் இளையாள் என்றும் போல் இனிமையாய், எல்லோரிடத்தும் உவகையோடுலாவர உருப்பெற்ற இந்நந்நாள் நிகழ்வுகள் யாவும் மேன்மையுற வாழ்த்துகின்றேன்.

இன்றைய வாழ்க்கைப் போராட்டங்களை எதிர்கொண்டு வெற்றிகாணும் ஆற்றல் மிகும் இலக்கிய வெளிப்பாடுகளை இவ்விழாக் கோலம் எமக்கு விளங்க வைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

அமைதியின் நிழல் தொடர யாழ் நகரில் எமது அனைத்து மாவட்ட மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும் ஒன்று கூடும் இத்தமிழ் மொழித்தின விழாவின் வெற்றிக்கு எனது ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

**பேராசிரியர் கலாநிதி. சு. மோகனதாஸ்**

அவர்களின்

# ஆசிச்செய்தி

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஆண்டுதோறும் நடத்திவரும் தமிழ் மொழித்தின விழாவினையொட்டி வெளியிடப்படும் "கவின்தமிழ்" என்னும் சிறப்பு மலருக்கு இந்த ஆசிச்செய்தியினை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். "கவின்தமிழ்" ஆண்டுதோறும் பல நல்ல கட்டுரைகளையும் இலக்கிய ஆக்கங்களையும் தாங்கி வெளிவருகின்றது. எங்களுடைய பிரதேசத்தின் கலை, பண்பாடு தொடர்பான பல செய்திகளை மக்களுக்கு வழங்குவதற்கு இத்தகைய மலர் நன்கு உதவுமென்பதில் ஐயமில்லை.

தமிழர் பிரதேச வரலாற்றுக் கூறுகள் ஆவணப்படுத்தப்படல் வேண்டும். இந்த வகையில் "கவின்தமிழ்" அவற்றை ஆவணப்படுத்துவதுடன் அவை பற்றிய ஆய்வு விளக்கங்களையும் தருவதாயுள்ளது. வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடத்தும் தமிழ் மொழித்தின விழா சிறப்புறவும் "கவின்தமிழ்" நல்ல முறையிலே அமைந்து பலருக்கும் பயன்படவும் என் அன்பான ஆசிகளைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர் கலாநிதி சு. மோகனதாஸ்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாணம். கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர்,

**இ. தியாகலிங்கம்** அவர்களின்

# ஆசிச் செய்தி

காலத்தால் அழிக்க முடியாத செழுமை பெற்ற வளம் மிக்க ஒரு மொழியாகத் தமிழ் மொழி உலகின் பல நாடுகளில் பெருமையுடன் பேசப்பட்டு வருகின்றது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் வளம் நிறைந்த தமிழ் மொழிக் கான ஆய்வுகள் இன்று ஐரோப்பியர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருவது எமது மொழியின் பெருமையை நாமறியச் செய்து வருகின்றது.

மாணவர்களின் மொழிவிருத்திச் செயற்பாடுகள் வளர்த்தெடுக்கப்பட்டு வரும்பொழுதுதான் அவர்கள் முழுமை பெற்றவர்களாக வளர்த்தெடுக்கப் படுகின்றார்கள் என்பதற்கு இத்தகையை தமிழ் மொழித்திறன் விருத்திப் போட்டிகள் சான்றுகளாக அமைகின்றன.

வருடத்திற்கு ஒரு தடவை பாடசாலை மட்டத்திலும் வலய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் தமிழ் மொழித் திறன் விருத்திப் போட்டிகளை முன்னெடுப்பதுடன் நின்றுவிடாது, நாளாந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளினூடாக மாணவர்களின் மொழிவிருத்திச் செயற்பாடுகளை வளர்த்தெடுப்பதில் ஆசிரியர்களும், அதிபர்களும் உழைத்துவர வேண்டும்.

இத்தகையை செயற்பாடுகளினூடாக மாணவர்களின் வாசிப்புத்திறன் ஆக்கத்திறன் போன்ற பல்வேறு திறன்களை வளர்த்தெடுப்பதில் பாடசாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

வடக்கு கிழக்கு மாகாண நிலையில் வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் தமிழ்மொழித் தின விழா இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படுவதன் மூலம் எமது மாகாணத்தின் ஏனைய மாவட்டத்தில் உள்ள மாணவர்களும், ஆசிரியர்களும் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணம் செல்வதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளமை இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வும், ஐக்கியமும் ஏற்படுவதற்கான வாய்ப்பாகவும் அமைந்து விட்டது.

தமிழ் மொழித் தின விழாவின் போட்டிகளும் தமிழர் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் நாட்டுக்கூத்து விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் வேளையில், தமிழின் பெருமையையும், எமது பிரதேசத்தின் வரலாற்று நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தும் ஒரு செயற்பாடாக 'கவின்தமிழ்' சிறப்பு மலர் வெளியிடப்படுவது முக்கியமான ஒரு நிகழ்வாகும். 'கவின்தமிழ்' தமிழ்மொழியின் சிறப்பையும், வடக்கு கிழக்கின் பிரதேச வரலாறுகளையும் வெளிக் கொணரும் நூலாக வெளிவர வேண்டும் என்று ஆசி கூறுகின்றேன்.

இவ்விழாச் சிறப்புற நடைபெற உழைத்து வரும் மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அலுவலர்கள் மற்றும் வலயங்களின் பணிப்பாளர்கள், வலயக் கல்வி அலுவலர்கள் ஆகியோரின் பணிகள் மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

**சு. மகாலிங்கம்** அவர்களின்

# ஆசிச் செய்தி

தமிழுக்கு விழா எடுப்பதன் மூலம் எமது இனத்தின் மொழி, பண்பாட்டுப் பாரம்பரிய விழுமியங்களின் பெருமைகளை உலகறியச் செய்வதுடன், வளர்ந்து வரும் சமுதாயத்தில் இன மொழி உணர்வுகளும் வளர்த்தெடுக்கப்படுகின்றன.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் மொழி விருத்திச் செயற்பாடுகளையும் ஆக்கத்திறன் விருத்திகளையும் வளர்த்தெடுக்கும் பொழுது, அவர்களின் மொழியாற்றலும், படைப்பிலக்கியத்திறனும் மெருகூட்டப்படுகின்றன. இத்தகைய செற்பாடுகளை சாதாரண பாட வேளைகளில் செயல்படுத்த முடியாத நிலையில் மொழித் திறன்விருத்திப் போட்டிகள் மூலம் மாணவர்களின் மொழி ஆற்றல் வளர்த்தெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில், அகில இலங்கை ரீதியாக பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டு வரும் தமிழ் மொழித்திறன் விருத்திப் போட்டிகளும், தமிழ் மொழித்தின விழாக்களும் மொழித்திறன் விருத்திக்கு உந்து சக்திகளாக விளங்குகின்றன என்பது நிதர்சனம்!

இத்தகைய விழாக்கள் பாடசாலை மட்டத்திலும், வலய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் கொண்டாடப்பட்டு வரும் பொழுது மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வும், எழுச்சியும் ஏற்படுகின்றன.

மாணவர்கள் மத்தியில் பல்வேறு நிகழ்ச்சிகளினூடாக தமிழ் மொழி தொடர்பான போட்டிகளை நடத்திச் செல்லும்பொழுது அவர்களின் எழுத்து, பேச்சு, ஆக்கம், நடிப்பு, நுண்மதி ஆகிய திறன்கள் வளர்க்கப்படுகின்றன.

இவற்றை இலக்காகக் கொண்டு, வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்திறன் விருத்திப் போட்டிகளும், விழாக்களும் வருடாவருடம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இவ்வருடம் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் 'தமிழ் மொழித்தினவிழா' வைக் கொண்டாடுவது தமிழுக்கும், தமிழ் இனத்திற்கும் ஒரு புதிய எழுச்சியைக் கொடுக்கும் என எதிர்பார்க்கின்றேன். அதேவேளை எமது இனத்தின் தனித்துவ அடையாளமாக விளங்கும் நாட்டுக்கூத்துப் போட்டிகளும், வீணை, வயலின், புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகள் தொடர்பான போட்டிகளும் நடத்தப்படுவது இன்னுமொரு புதிய பரிமாணமாகும்.

தமிழ் மொழித்தின விழாவின் இன்னுமொரு சிறப்பு நிகழ்ச்சியாக விளங்கும் ''கவின் தமிழ்'' சிறப்பு மலர் வெளியீடு தமிழர்களின் கலை பண்பாட்டு பாரம்பரியங்களை ஆவணப்படுத்திவரும் முயற்சிகளாகவும் இருந்து வருகின்றன.

தமிழ் மொழித்திறன் போட்டிகளைச் சிறப்பாக நடத்துவதற்கும், நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்துச் செயற்படுத்துவதற்கும் உழைத்து வருகின்ற மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அலுவலர்கள், உதவியாளர்கள் ஆகியோரின் தன்னலமற்ற சேவையும் பங்களிப்பும் மறக்க முடியாதவை.

யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படும் தமிழ் மொழித்தின விழாவும், 'கவின் தமிழ் - 2003' மலர் வெளியீடும், நாட்டுக்கூத்து விழாவும் சிறக்க என் நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழிப்பிரிவு பணிப்பாளர்

## திரு. என். நடராஜா

அவர்களின்

# *ஆசிச் செய்தி*

வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தால் தமிழ் மொழித்தினம் தொடர்பாக வெளியிடப்பெறும் 'கவின்தமிழ்' சிறப்புமலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரும்மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒவ்வொரு வருடமும் தமிழ்மொழித்தினப் போட்டிகள் மாகாண மட்டத்திலே சிறப்பாக நடைபெறுகின்றன. குறிப்பாக, வடக்கு கிழக்கிலே விழாக்கொண்டாடப்படுவதும் தமிழ்ப்பண்பாட்டுக்கலை நிகழ்ச்சிகள் அரங்கேறுவதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய கலைகள், பண்பாடு முதலியவற்றையும், தமிழ் மொழியின் சிறப்பு முதலியவற்றையும் உலகுக்கு வெளிப்படுத்தும் விழாவும், தொடர்ந்து வெளிவரும் 'கவின்தமிழ்' மலரின் தொண்டும் அளிப்பரியன.

உலகில் உன்னதம் வாய்ந்த செம்மொழி தமிழ் மொழி. காலவரையறை யற்றதும் அழகு, நன்மை, உண்மை எனும் உயர் பெறுமானங்களைத் தன்னகத்தே கொண்டதுமான தமிழ் மொழியின் சிறப்பையும் அதன் பண்பாட்டையும் வெளியுலகுகண்டு வியப்புறும் வண்ணம் தொழிற்படும் 'கவின்தமிழ்' வாழி நீ என வாழ்த்துகின்றேன்.

விழாவை முன்னின்று நடாத்தும் மாகாணக் கல்வித் திணைக் களத்தினருக்கு எனது நன்றிகள்.

விழா சிறப்பாக நடைபெறவும், 'கவின்தமிழ்' மணம் விட்டு மலரவும் வேண்டுகிறேன்.

என். நடராஜா
பணிப்பாளர்.

தமிழ் மொழிப்பிரிவு,
மனிதவள அபிவிருத்தி, கல்வி, பண்பாட்டு
அலுவல்கள் அமைச்சு. 'இசுருபாய'
பத்தரமுல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

**திருமதி. செ. மகாலிங்கம்**

அவர்களின்,

# வாழ்த்துச் செய்தி

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்மொழிப் பிரிவினால் இவ்வருடமும் வெளியிடப்படும் 'கவின் தமிழ்' சிறப்பு மலருக்காக வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த சில வருடங்களாகத் தவறாது வெளியிடப்பட்டு வரும் இச்சஞ்சிகை, என்றும் போல் தமிழின் பாரம்பரிய பண்பாடு சார்ந்த உயரிய ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டு இம்முறையும் மலர்வது கண்டு மகிழ்கின்றேன். பல்வேறு வயதுப் பிரிவினரும் வாசித்துப் பயன்பெறும் வகையில் இலக்கிய மலர்களால் இணைத்துப் பெறப்பட்ட கதம்பம் இது. ஆற்றலும், அறிவும் விடாமுயற்சியும் கொண்ட அறிஞர் குழாத்தினால் ஆக்கிப் பெறப்பட்ட கவிதைகள், கட்டுரைகள் துணுக்குகள், ஆய்வுக்கட்டுரைகள் யாவும் இம்மலரின் மலர்ச்சிக்கு மணம் சேர்க்கின்றன. தமிழ் மொழித்தினவிழாவைச் சிறப்பிக்க மலரும் கவின் தமிழ் மலர் விரிந்து மணம் பரப்ப நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. செ. மகாலிங்கம்.**
**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ் மொழித்தின விழா இணைப்பாளரின்

# இதயத்திலிருந்து......

எங்கள் தாய்மொழியாம் தமிழ் மொழியின் பாரம்பரியம், கலாசாரம் மேலோங்கும் வகையில் அதன் கலைத்துவப் படைப்புக்களால் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விப் புலம் தமிழுக்கு விழா வெடுக்கின்றது.

தமிழ் மொழியின் வழிசெழித்த கல்வியின் பெருமைகளை எமது தமிழினம் கண்டு களிக்கவும் எமது பாடசாலைச் செல்வங்கள் விளைத்த தமிழ் இலக்கியச் சுவையில் மனங்கள் இன்புறவும் யாழ் நகரில் இம்முறை விழாக் காணுகின்றோம்.

உயரிய கருத்துக்களும், உண்மைகளும் இன்றைய இன மொழி ஐக்கியத்தின் அவசியத்தை நோக்கியதாக, எமது தமிழ் மொழியின் சிறப்பும், செழுமையும் மாணவர்களால், ஆசிரியர்களால், பெற்றோர்களால் பேணப்படும் திறனும், வளர்த்துரைக்கப்படும் வகையும் வெளிப்படக் காணுகின்றோம்.

எமது இளைய தலைமுறை, தமிழ்மொழியின் பெருமையைப் பேசியும், பாடியும் போற்றும் இவ்வேளையில் தமிழின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் அதனோடு இணைந்த புகழுக்கும் மெருகூட்டும் புரட்சிப் படையல்கள் பலவற்றைப் பூக்கச் செய்யும் உத்வேகம் பெறவேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

இன்றைய சவால்களுக்கு எதிர்நிற்கும் புதிய வீரியம் மிகு இலக்கிய வடிவங்கள் எம்மத்தியில் தோற்றம் பெற வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மொழித்தின விழா களம் அமைக்கும் என்றும் நம்புகின்றேன்.

உன்னதமான தமிழ்மொழிக்கு உறுதியான வளர்புலம் எமது பாரம்பரிய முத்தமிழ்க் கோலங்களில் நிலைத்த கல்வி, செல்வம், வீரம் கலந்த கலையுணர்வே.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் நினைவோடு நிகழும் மாகாண நிலைத் தமிழ் மொழித்தின விழா, கல்விக் கண் திறக்கப் பள்ளிக்கூடங்களை ஆக்கிப் பெருமை பெற்ற, தமிழ் வளர்த்த ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் வாழ்ந்த யாழ் மண்ணில் இம்முறை கொண்டாடப்படுகின்றது.

சமகாலப் படைப்புக்கள் யாவும் எமது மொழியின் பெருமையைப் பறை சாற்றும் வகையில் வளர்ந்தோங்க வகை சமைத்தோர் யாவரையும் இவ்வேளை பாராட்டுகின்றேன்.

குறிப்பாக எமது மாகாணத்தின் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும், விழாச்சிறக்க ஒத்துழைத்த நிறுவனங்களையும் யாழ் மண்ணில் விழாச் சிறக்க உதவிநின்ற புகழ்சிறந்த பணிகளுக்காகப் பாராட்டுகின்றேன்.

திரு. வீ. இராசையா
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

மாகாணக் கல்வித் திணைக்களம்
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின்

# பார்வையில்.........



கடந்த பல ஆண்டுகளாக வடக்குக் கிழக்கின் பாரம்பரியப் பெருமைகளையும், தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களையும், வெளிக்கொணரும் வகையில் ''கவின்தமிழ்'' இதழ் வெளியிடப்பட்டு வருகின்றது.

'தமிழர் பாரம்பரியம்' என்று உலகளாவிய ரீதியில் பெருமையுடன் பேசப்பட்டு வரும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆண்டுதோறும் தமிழ் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருவதும் அதன் சிறப்பு நிகழ்வாக 'கவின்தமிழ்' சிறப்பு மலரொன்றை வெளியிடுவதும் தமிழன்னைக்கு இன்னுமொரு அணிகலனாக அழகூட்டி வருகின்றது.

உலகின் பல்வேறு நாடுகளிலும் பரந்து வாழும் தமிழர்களுக்கெல்லாம் தாய்நிலமாகவும், நம்பிக்கைதரும் ஒளியாகவும் விளங்கும் ஈழத்தின் வடக்கு கிழக்கு மாகாணத்தின் தலைநகரில் கொண்டாட ஆரம்பித்த 'தமிழ் விழா' இன்று வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்று பல்வேறு மாவட்டங்களிலும் கொண்டாடப்பட எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள், கூறுபடுத்தப்பட்ட தமிழ் நிலத்தை ஒருங்கிணைப்பதற்கும், பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை வாழும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே பிணைப்பினையும் அன்யோன்னிய உறவை ஏற்படுத்தவும் அவர்களிடையே சகோதர உணர்வுகளையும் வளர்த்தெடுக்கவும் உதவுகின்றன.

ஒவ்வொரு இனத்திற்கும் அதன் தனித்துவத்தை வெளிக்காட்டுகின்ற அடையாளமாக விளங்குவது, அந்த இனத்தின் பாரம்பரிய நிலமும், மொழியும்தான் என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் ''எமது நிலம் எமக்கு வேண்டும்'' என்ற உணர்வுகள் மேலோங்கி வருகின்ற வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தின விழாவும், நாட்டுக்கூத்து விழாவும், ''கவின் தமிழ்'' மலர் வெளியீடும் இவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் சிறப்பாகக் கொண்டாடப் படுவது புத்துணர்ச்சியையும், எழுச்சியையும் ஏற்படுத்து வதாக அமைந்துவிட்டது.

'கவின்தமிழ்' வெறுமனே ஒரு ஆண்டு மலராகவோ ஜனரஞ்சக இதழாகவோ வெளியிடுவது எமது நோக்க மல்ல. இது எமது இனத்தின் பெருமையைப் பேச வேண்டும், எமது நிலத்தின் வாழ்வியல் வரலாறுகளைப் பேச வேண்டும், எமது இனத்தின் கலை, பண்பாடு, அரசியல் வரலாறுகளைப் பேசவேண்டும் என்ற இலக்கை நோக்கியே அமைந்துள்ளது.

அந்த வகையில் தமது ஆக்கங்களை அளித்த அறிஞர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள் ஆகியோருக்கும், ஆசிச் செய்திகளையும், வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய கௌரவ ஆளுநர், கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், யாழ் அரச அதிபர், பிரதம செயலாளர் ஆகியோருக்கும், இம் மலரை சிறப்புற அச்சிட்டு உரியகாலத்தில் வழங்கிய திருக்கோணமலை றெயின்போ மினிலாப் பிறைவெற் லிமிற்ரெட் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.

தமிழ் மொழித்தினவிழா பல்வேறு மட்டங்களிலும் நடைபெற உழைத்தவர்களுக்கும், மாகாண மட்டத்தில் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பையும், உழைப்பையும் வழங்கிய மாகாணக் கல்வித் திணைக்களம், கல்வி அமைச்சு, வலயங்கள் ஆகியவற்றின் அலுவலர்களுக்கும், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண தமிழ்மொழித்தினக்குழு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

ந. அனந்தராஜ்,
இதழாசிரியர் - கவின்தமிழ்
செயலாளர்,
தமிழ்மொழித்தினக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழித்தின விழா

**26-07-2003 (சனிக்கிழமை) பி.ப. 3.00 மணி**

விருந்தினர் வரவேற்பு
மங்கள விளக்கேற்றல்

மங்கள இசை

தமிழ்த்தாய் வணக்கம்

வரவேற்புரை - திரு. ப. விக்கினேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்

தலைமை உரை - திரு. எஸ். மகாலிங்கம்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

கவின்தமிழ் மலர்
வெளியீட்டு வைபவம் - திரு. ந. அனந்தராஜ்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,

முதன்மை விருந்தினர் உரை - திரு. இ. தியாகலிங்கம்
செயலாளர், வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு

நன்றி உரை - திரு. ந. அனந்தராஜ்
செயலாளர், தமிழ்மொழித்தினக் குழு

தேர்ந்த நிகழ்ச்சிகள்
தமிழ் மொழி வாழ்த்து

## நாட்டுக்கூத்து விழா

27-07-2003 (ஞாயிற்றுக்கிழமை) பி.ப - 3.00 மணி

வரவேற்புரை - திரு. வி. மகேந்திரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

தலைமை - திரு. வீ. இராசையா
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்

முதன்மை விருந்தினர் உரை
- திரு. செ. பத்மநாதன்
அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்

நன்றி உரை - திரு.செ. மகேஷ்
உதவிக் கல்விப் பணிப்பாளர்

நாட்டுக்கூத்துக்கள்,
வயலின், விணை,
புல்லாங்குழல் இசை, நிகழ்ச்சிகள்
தமிழ் மொழி வாழ்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவின்தமிழை அலங்கரிப்பவை.....


பக்கம்

கவின் தமிழ் அட்டைப்பட விளக்கம் 23

இலங்கையின் தமிழ் நூல் வெளியீட்டு முயற்சிகள் 24
-த.சித்தி அமரசிங்கம்

மட்டக்களப்பு பிரதேச பாரம்பரிய இலக்கியங்கள் 30
-கலாநிதி செ. யோகராசா

பல்லாண்டு வாழ்க தமிழ் தினமே 34
- மூதூர் கலைமேகம்

மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்தியில்
அழகியல் - இலக்கியக் கல்வி -பா. தனபாலன் 35

தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகள் 39
- ஏ.டபிள்யூ.அரியநாயகம்

நினைவுகள் மட்டுமே - செல்வி முகைஷிரா முகைடீன் 43

வீட்டுக்கு விளக்கு வைக்கும் விதவைக் குருவி 44
- அகளங்கன்

அஜந்தா ஓவியங்கள் ஒரு நோக்கு 48
- சாரூபா சரவணபவன்

கல்வியின் தேசியக் குறிக்கோள்கள் 53
- எஸ். ரஞ்சன் செல்வகுமார்

தேமதுரத் தமிழ் வாழும் - பூ. ஜெயமலர் 58

என்றும் ஒன்றே தான் - பொத்துவில் -ஏ.எல்.ஏ. முகம்மது 59

இலங்கை ஓவியங்கள் - சாந்தினி சாந்தகுமாரன் 60

எங்கள் தமிழ் மொழி - வாகரை வாணம் 63

சீலர் நபியின் சிறு பங்சமூலம்
-கலாஜோதி ஏ.எம்.அப்துல் கஹ்ஹார் 64

அருகிவரும் கிராமியப் பண்புகள் - ஆ. முருகதாஸ் 65


புதுமைப்பித்தன் கதைகள் - ஒரு நோக்கு 68
- செல்வி. மபாஸா றிஸ்லா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்புத் திறன் விருத்தியில் பாடசாலை நூல்கள் 76
- வல்லை ந. அனந்தராஜ்
நவீன ஓவியங்கள் தொடர்பான ஒரு பார்வை - கோ. கைலாசநாதன் 82
முத்தரிப்பில் அல்லிராணி - செ. சகாயராணி துரம் 85
மன்னார் மக்களும் வாய்மொழி இலக்கிய மரபும் 87
- செல்வி. ஞா. மரிய கொறற்றி
புண்பட்ட தேக(ச)ம் - வி. குணபாலா 93
புலம் பெயர் இலக்கியங்களும் ஈழத்து தமிழர்களும் 94
- பாலகிருஷ்ணன்
அலுவலக வேளைகளில் -செல்வி. எஸ்.என்.பிர்தௌசியா 98
சங்கத் தமிழில் வீரத்தின் மாண்பு திருமதி. சிவகுமாரவேலு 99
தமிழ் முஸ்லிம்களின் நாட்டுப்புற வழக்காறுகள் - கு. மேகலா 104
அருகிவரும் யாழ்ப்பாணத்துக் கிராமியக் கூத்துக்கள்
- மு.விக்னேஸ்வரன் 107
மன்னார் மாதோட்டத் தமிழ்ப்புலவர் சரித்திரம் 111
- அசுமதா தியூர்சியஸ்
மூதூர் பிரதேச வயற்களத்தில் வழக்கொழிந்து வரும் சொற்கள் 116
-ஏ.எஸ். உபைத்துல்லா
உள் மனச் சித்திரம் - முத்து இராதாகிருஷ்ணன் 120
சிற்பங்கள் உணர்த்தும் கலைத்திறன் 122
- சைவப்புலவர் அ.பரசுராமன்
ஏர்வாடி 26 - பு.சத்தியமூர்த்தி 125
அறம்பாடுதல் - வ. கோவிந்தபிள்ளை 126
மட்டை இரண்டு குட்டை ஒன்றே
-பொத்துவில் ஏ.எல்.ஏ. முகம்மத் 130
திருக்குறளில் உடலுறுப்புகள் - த. கரதூஷணன் 131
மாணவர் பக்கம் 133
2002 தேசிய மட்டப் போட்டி முடிவுகள் 150


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கவின்தமிழ் அட்டைப்பட விளக்கம்

காதலும் வீரமும் ஒருங்கே போற்றிப் புகழப்படும் சங்க இலக்கியங்களில் புறத்திணையில் போர்க்களங்களில் எதிரியைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தல் ஆநிரை கவர்தல், எதிர்த்து நிற்கும் பகைவர்களைக் களத்தில் வீழ்த்துதல் என்பன மட்டும் ஒரு வீரனின் கடமையாக இருப்பதில்லை. போர் ஓய்ந்த நேரங்களில் தன் பலத்தைப் பரீட்சிப்பதற்கும், வீரத்தை எடுத்துக் காட்டுவதற்கும் யானைகளை வேல் எறிந்து கொல்லுதல் கூட இளைஞர்களுக் குரிய கடமைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. இதையே புறநானூற்றுப் பாடலின் 312வது பாடல் பின்வருமாறு கூறுகின்றது.

**ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்**
**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தமிழ் நூல் வெளியீட்டு முயற்சிகள்



**கலாவினோதன் கலாபூஷணம். த. சித்தி அமரசிங்கம்**

இலங்கையின் தமிழ் நூல் வெளியீட்டு முயற்சிகள் நீண்ட வரலாற்றைக் கொண்டதாக இருக்கின்றன. இலங்கையின் தமிழ் நூல் வெளியீட்டு முயற்சிகளை ஆராயப் புகுமுன், தமிழ் நூல் வெளியீட்டு முயற்சியின் தோற்றம் பற்றி நாம் சிறிது அறிய வேண்டியது அவசியமென உணர்கிறேன்.

என்று ஏட்டுச் சுவடிகள் அச்சுவாகனம் ஏறத் தொடங்கியதோ அன்றே இலக்கியப் பரப்பில் நூல் வெளியீட்டு முயற்சியும் முளைவிடத் தொடங்கியது.

அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் உலகத்தின் முதலாவது பத்திரிகை ஐரோப்பாவில் தோன்றியது. அதற்குமுன் காகிதத்தில் சில செய்திகள் கையால் எழுதப்பட்டு சில சமயம் வெளியிடப்பட்டது. உலகத்தின் முதல் பத்திரிகை 1605 ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவில் வெளிவந்தது. (உலகப் பத்திரிகையின் தோற்றமும் வளர்ச்சியும்.... மணிமேகலைப் பிரசுரம்) ஆனால் இந்த ஆண்டிற்கு முன்பே தமிழ் அச்சேறியது.

1958ஆம் ஆண்டு கல்கி தீபாவளி மலரில் தவத்திரு தனிநாயகம் அடிகளார் எழுதிய கட்டுரையில்......

''1554ஆம் ஆண்டு போர்த்துக்கல் தலைநகராகிய லிஸ்பன் மாநகரிலே முதல் தமிழ் நூல் அச்சேறியது. இந்நூல் தமிழ் ஒலி வடிவைக் குறிப்பதற்கு தமிழ் வரிவடிவைக் கையாளாது உரோம எழுத்துக்களே கையாளப்பட்டுள்ளன. இந்நூல் மூன்றாவது சுவாம் என்னும் போர்த்துக்கல் மன்னனின் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

இந்திய நாட்டில் முதலில் அச்சுக் கண்ட தமிழ் நூல் 1577ஆம் ஆண்டு கொல்லத்தில் அச்சிடப்பெற்றது. இந்நூல் 16 பக்கங்களைக் கொண்ட ''தம்பிரான் வணக்கம்'' என்னும் தலைப்பைப் பெற்றதாகும். இந்நூலை இயற்றியவர்கள் போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த சுவாமி என்றிக்ஸ் என்பவரும் தமிழ் நாட்டைச் சேர்ந்த சுவாமி மனுவேல் என்பவருமாவார்.

தென் இந்தியாவில் முதன் முதல் அச்சிடப் பெற்ற நூல் ''பிலசந்தோரும்'' (Flos Sanctoram) என்னும் நூலாகும். இது 1586ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. (கலைமுகம் ஆடி, புரட்டாதி 95)

இந்திய மொழிகளிலே முதல் அச்சுக் கண்ட மொழியாகும் பெருமை தமிழ் மொழிக்கே உரியதாகும்.

தமிழகத்திலே கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அச்சு ஏறியபோதும் ஈழ நாட்டிலே கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே தான் தமிழ் மொழி அச்சேறியதென்பது அறியக்கிடைக்கிறது.

தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் அச்சியந்திரம் ஆற்றிய தொண்டு மதிப்பிடற்கரியது.

ஈழத்தின் இலக்கியப் பரப்பை பலர் பலவாறாகப் பிரித்தபோதும் ஈழத்தின் தமிழ் இலக்கிய வளர்ச்சிபற்றி எழுதிய கலாநிதி. க.செ. நடராசா அவர்கள் இலக்கியம் எழுந்த 14ஆம், 18ஆம் நூற்றாண்டு காலகட்டத்தை ஆரியச்சக்கரவர்த்தி காலம் (கி.பி. 1250-1621) போர்த்துக்கேயர் காலம் (கி.பி. 1621, 1658) ஒல்லாந்தர் காலம் (கி.பி. 1658-1786) எனமுன்று பிரிவாகப் பிரித்துள்ளார். இந்தக் காலகட்டத்தில் வெளிவந்த நூல்கள் அனைத்தும் செய்யுள் வடிவமைக்கப்பட்ட சோதிட வைத்திய வரலாற்று நூல்களாகவே உள்ளன.

1310ஆம் ஆண்டுக்குமுன் இலக்கியங்கள் பற்றிக் கூறப்படாமை அக்காலங்களில் இலக்கியங்கள் தோன்றவில்லை என்பதல்ல. அன்று தோன்றிய இலக்கியங்கள் ஏதோவொரு காரணநிமித்தம் ஆய்வுக்குக் கிடைக்கவில்லை என்பதே காரணம்.

பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து ஆரம்பித்த ஈழத்தின் இலக்கிய நூல்களின் எழுச்சியின் வளர்ச்சி 17ம் 19ம் நூற்றாண்டுகளிலே அந்நியப் பிரவேசத்தால் அவர்கள்ஆட்சி வலுப்பெற்றிருந்த நிலையிலும் கூட குறைந்திட வில்லை, மங்கிடவில்லை. அந்தக்காலகட்டத்திலே தமிழ் மொழியின்மேல் பற்றுக் கொண்ட பாவலராலும் புலவர்களின் முயற்சியாலும் மேலும் வளர்ந்ததேயன்றிக் குறைந்துவிடவில்லை. அந்நியர் ஆட்சிக் காலத்திற்தான் மற்றையக் காலங்களைவிட பிரபந்தவகை இலக்கியங்கள் வளர்ச்சி கண்டுள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிற்தான் இந்தப் போக்கின் மாற்றம் காணப்பட்டது. இந்த மாற்றத்ததை உண்டாக்கியது ஈழத்தின் முதல் நாவல் என்று கருதப்படும் காவலப்பன் கதையும் சித்திலெப்பையின் அசன்பே சரித்திரமும் எஸ். இன்னாசித்தமிபியின் ஊசோன் பாலந்தை நாவலுமாகும். இந்த நாவல்கள் கூட இலங்கையை மையமாகக் கொண்டவையல்ல. அந்நியதேசத்தின் கதைகளை தழுவியனவாகவே காணப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிவரை பெரியஅளவில் தமிழ் நூல்கள் வந்ததாக அறியமுடியவில்லை. இந்தக் காலத்தின் பின்பே தமிழ் நூல்கள் எழுதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது.

ஈழமண்ணைக் களமாகக் கொண்ட முதல் நாவல் என்ற சிறப்பு 1902இல் இன்பவதிக்கே உரியது. இதனை அடுத்து 1904இல் கமலாவதி, 1905ஆம் ஆண்டில் வெளிவந்த வீரசிங்கன் கதை அல்லது சன்மார்க்க ஐயம், 1914ஆம் ஆண்டில் மங்களநாயகம் தம்பையாவின் நொருங்குண்ட இதயம் என்பன வெளிவந்தன. இதன்பின் நாட்டின் பலபாகங்களில் இருந்தும் நூல்கள் வெளிவரத் தொடங்கின.

இதுவரை ஈழத்தின் வெளிவந்த நூல்களையும் அதன் காலப் பகுதிகளையும் நூல்களின் தன்மையையும் முழுமையாக பார்க்கமுடியாவிட்டாலும் முடிந்தவரை தந்துள்ளேன். இனி இந்நூல்களின் வெளியீட்டில் முனைவர்களையும் நூல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைப்படுத்தலில் உள்ள சங்கடங்களையும் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதாகக் கூறும் போலிகளையும் அரசதிணைக்களங்களின் அசமந்தப் போக்குகளையும் சிறிது ஆராய்வோமாயின் எனது கட்டுரையின் நோக்கம் பூர்த்தியடையும் எனக் கருதுகின்றேன்.

பதினான்காம் நூற்றாண்டில் இருந்து பதினெட்டாம் நூற்றாண்டுவரை அதற்கும் மேலும் 16ஆம் நூற்றாண்டின் அன்னியபிரவேசத்தின் போதும் நூல்கள் வெளியீடு பற்றியும் முன்பு கூறியிருந்தேன். இதன் நடுப்பகுதியில் இருந்து நூல் வெளியீட்டு முயற்சியில் அச்சகங்கள் முன்னின்று உழைத்தன. உதாரணமாக ஆசீர்வாத அச்சகம். ஸ்ரீலங்கா புத்தகசாலை. சுப்பிரமணியம் புத்தகசாலை. குகன் அச்சகம். மெய்கண்டான் அச்சகம் இப்படிப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

இதையடுத்து அரசியல் கட்சிகளின் செயற்பாட்டு விளக்க வெளியீடுகள் சினிமா மெட்டிலான கட்சிப்பாடல்கள் என்பன அவ்வக் கட்சியால் வெளியிடப்பட்டன. இயக்கவளர்ச்சியின் வெளிப்பாடுகள் இயக்கங்களால் வெளியிடப்பட்டன. சமயம் சார்ந்த நூல்கள் சமய நிறுவனங்களால் வெளியிடப்பட்டன. இதற்குமத்தியில் தனிப்பட்ட வெளியீட்டு நிறுவனங்கள் உதாரணமாக உதயன் வெளியீடுகள், ஈழத்து இலக்கியச் சோலை, வரதர் பதிப்பகம், ஞானம் பதிப்பகம், அன்பு வெளியீட்டகம், ரக்ஷானா வெளியீட்டகம், மீராபதிப்பகம், நந்திப்பதிப்பகம், சிவகாமி அம்மாள் பதிப்பகம், மூன்றாவது மனிதன் பதிப்பகம், அருள் வெளியீட்டகம், அம்மா பதிப்பகம், நிலாப்பதிப்பகம் இப்படி இன்னும் பல பதிப்பகங்களைக் கூறலாம். கட்டுரையின் பக்கங்கள் கருதி இத்துடன் இதை நிறுத்திக் கொள்கின்றேன்.

இதுவரை நாம் நூல்வெளியீட்டு முயற்சியில் 14ஆம் நூற்றாண்டில் இருந்து 18ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய நூல்களான பிரபந்தவகைகள் பற்றியும் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுந்த நாவல்கள் பற்றியும் அதன் தொடர்பான வெளியீடுகள் பற்றியும் அதோடு ஒத்த வெளியீடான சிறுகதைத் தொகுப்புகளையும் பார்த்தோம்.

இதனை அடுத்து இந்தநூல் வெளியீட்டில் முன்னின்று உழைத்தோரைப் பற்றியும் வெளியீட்டாளரைப்பற்றியும் பார்த்தோம். இதில் ஒன்றை ஆராய மறந்து விட்டோம்.

அன்றைய பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்த வெளியீடுகளை நாம் மறந்தோம். சிந்திக்கவில்லை. இலங்கை சுதந்திரம் அடையும் வரை அதன் பின் சிலகாலங்கள் கூட எம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பிற நாட்டு நூல்களே வழக்கில் இருந்தன. தமிழ் நூல்களைப் பொறுத்தவரை இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் இருந்து வந்த நூல்களும் ஆங்கில நூல்களை நோக்கும்போது அமெரிக்கா இங்கிலாந்து இந்தியா போன்ற நாடுகளில் இருந்து வந்த நூல்களுமே அரசோச்சின. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே இந்த நிலை மாறத்தொடங்கியது. இந்த நிலைமாற்றத்திற்கு முன்னின்று உழைத்த அச்சகத்தாரையும் வெளியீட்டாளரையும் நாம் நன்றியுடன் நினைவு கூருவது அவசியமே. முற்றுமுழுக்க கூறமுடியாவிட்டாலும் எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சிலவற்றையாவது நினைவு கூருவது நாம் அன்னாருக்குச் செய்யும் கைமாறாகக் கருதுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946ஆம் ஆண்டில் இருந்தே இந்த தேசிய நூல்வெளியீடு ஆரம்பமாகியிருக்க வேண்டும்.

இந்த ஆண்டில்தான் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் பிரசுரமாக பாலபாடம் புத்தகத்தை வெளியிட்டது. ஒவ்வொரு வகுப்பிற்கும் முதலாம் பாடம் இரண்டாம் பாடம் மூன்றாம் பாடம் என்று வெளியிடப்பட்டது. எமக்குக் கிடைத்த ஐந்தாம் பால பாடம் பதினெட்டாம் பதிப்பாகும். இது சைவப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

இதையடுத்து சுதர்சன் வெளியீட்டினூடாக பல வெளியீடுகள் வெளி வந்திருக்கின்றன. 1948ஆம் ஆண்டு சுதர்சன் வெளியீடாக ஔவையார் அருளிய ''வாக்குண்டாம்'' வெளியிடப்பட்டது. இதில் ஒரு விசேடம் என்வென்றால் இதன் காரியாலயம் திருவனந்தபுரத்திலும் யாழ்ப்பாணத்திலும் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

1951இல் கொழும்பு கோட்டை குமாரவீதியில் அமைந்திருந்த கொழும்பு அப்போதிக்கரீஸ் கம்பெனி லிமிற்றட் பிரசுரித்து வெளியிட்ட ''புதிய சரித்திர வாசகம்'' இதன் ஆங்கில நூலாசிரியர் கொழும்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கழக அதிபர் எஸ்.எவ்.த சில்வா பீ.ஏ அவர்கள் இதனைத் தமிழாக்கம் செய்தவர் இலங்கைக் கல்விப்பகுதித் தமிழ்ப்பாட நூல்மொழி பெயர்ப்பாளர் மு. கணபதிப்பிள்ளை ஆவார்.

1952இல் தெல்லிப்பளையில் இருந்து அமெரிக்கன் சிலோன் மிசன் அச்சகத்தால் வெளியிடப்பட்ட நூல் தமிழ்வாசகம். இது எட்டாம் பதிப்பு. 4000 பிரதிகள் மொத்தம் வெளியிடப்பட்ட பிரதிகள் 22500. இது The Union Series of School text Book என்ற தொடரில் வெளிவந்த மூன்றாவது புத்தகம் இது. இலங்கைப் பாடப்புத்தகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

இதே ஆண்டில் ஏப்பிரல் மாதம் கொழும்பு டாம் தெரு 111 ஆம் இலக்கத்தில் இருந்த ஸ்ரீலங்கா பப்ளிஷிங் கொம்பனி. அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் எஸ். எவ். டி சில்வா எழுதிய ''இலங்கை சரித்திரமும் உலக சரித்திரமும் என்ற நூலை வெளியிட்டது. இதில் முதலாம் பாகம் இலங்கை சரித்திரம் 224 பக்கங்கள். இரண்டாம் பாகம் உலக சரித்திரம் 304 பக்கங்கள் இதன் விலை ரூபா. 3.00

1953இல் முன்பு குறிப்பிடப்பட்ட கொழும்பு அப்போதிக்கரீஸ் கம்பெனி லிமிற்றட் பேராசிரியர் எஸ். ஏ.பேக்மன் MA.FR.His ஜி.ஸி. மென்டிஸ் BA Phd ஆகியோர் எழுதிய 'நம் முன்னோரளித்த அருஞ்செல்வம்'' முதலாம் இரண்டாம் பாகம். இதனை மொழி பெயர்த்தவர் நாவலியூர் சோ. நடராஜன் ஆவார்.

சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்கலாசாலை தமிழாசிரியர் வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்களால் எழுதப்பட்ட ''பொற்காலத்தமிழ் இலக்கணம்'' என்ற நூல் 1954 இல் யாழ்ப்பாணம் ம. வஸ்தியாம்பிள்ளை அன் சன்ஸ் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. ஆனால் இது ஆரம்பத்தில் ''சென்னை கே. பழனியாண்டிப் பிள்ளை அன்கோ'' வால் 1932இல் அச்சிடப்பட்டது அதன் பின் பதிநான்குப் பதிப்புக்களைக் கண்டுள்ளது.

இது போன்று இன்னும் பல அமைப்புகள் இத்துறையில் பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளன. எனவே இதை இத்துடன் நிறுத்தி இலங்கை நூல் வெளியீட்டில் தனியார் முயற்சியில் ஏற்படும் இடர்பாடுகள் குறித்து சிறிது பார்த்து கட்டுரையை முடிவு செய்வது நலம் எனக் கருதுகிறேன்.

ஒரு அச்சகத்தாரின் ஒத்துழைப்பின்றி ஒரு நூலை வெளியீடு செய்வதென்பது முடியாத காரியம். பொதுவாக ஒரு அச்சகத்தாருக்கு ஒரு நூலை வெளியிட்டுவரும் இலாபத்தை விட துண்டுபிரசுரங்களையும் மரண அறிவித்தல்களையும் அச்சடிப்பதில் அதிகலாபம் மட்டுமன்றி அந்த வேலை முடிந்த மறுவினாடியே கையில் காசு. ஆனால் ஒரு நூலை வெளியீடு செய்வதில் பொருள் செலவு அதிகமாவது மட்டுமன்றி விரயம் அதிகமாவதும் பல நாட்கள் கடினமாக உழைக்க வேண்டியும் இருக்கும். சில சமயங்களில் எவ்வளவோ சிரமமெடுத்து ஒரு நூலை அச்சடித்துக் கொடுத்தபோதும் அந்த நூலுக்குரிய பணம் முழுமையாகக் கிடைக்க பல மாதங்கள் ஏன் சில சமயங்களில் வருடங்கள் கூட ஆகலாம். சில வேளை அச்சகத்தாரே பிரசுரிப்பாளரை வலைபோட்டுத் தேடிப்பிடிக்க வேண்டியும் ஏற்படலாம்.

அதே நேரம் சில படைப்பாளிகளும் சில அச்சகத்தாரிடம் வசமாக மாட்டிவிட்டால் அந்த அச்சகத்தாரிடமிருந்து அந்த நூலை அச்சடித்து எடுப்பதில் போதும் போதும் என்றாகிவிடும். அப்படியொரு அனுபவம் எனக்கும் ஏற்பட்டது. ஒரு நூலை அச்சகத்தாரிடம் கொடுத்துவிட்டு அதை வெளிக்கொணர சரியாக ஒரு வருடம் எடுத்தது.

எனவே இருதரப்பாரும் ஒருவரை ஒருவர் புரிந்து அது அதற்குக் கொடுக்க வேண்டிய மதிப்பையும் மரியாதையையும் கொடுக்கும் போதுதான் ஒரு சுமுகமான வெளியீட்டை செய்து கொள்ளலாம்.

இலங்கை எழுத்தாளர்களையும் படைப்புகளையும் ஊக்குவிப்பதாகக் கூறிவந்த கல்வி அமைச்சுகளும் கலாச்சார அமைச்சுகளும் அண்மைக்காலங்களில் எதிர்மாறாகவே செயல்பட்டுவருவதனைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கல்வி அமைச்சுக்களில் ஒரு காலத்தில் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை போதிய அளவு வாங்கி ஊக்குவித்ததை நாம் மறக்க முடியாது. ஆனால் இன்று கதிரை மாறும்போது ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் வாங்கப் பணம் மிகவும் குறைவாகவே இருப்பதாகக் கூறிக்கொண்டு இந்திய நூல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வாங்கிக் குவிக்கின்றார்கள். இந்தச் செயற்பாட்டால் பாதிக்கப்படுபவர்கள் யார். ஏன் இந்த அதிகார திமிர். சோளியன் குடுமி சும்மா ஆடாதென்பார்கள்.

ஒரு காலத்தில் எந்தவித கழிவுமின்றி நூல்களைக் கொள்வனவு செய்து உள்ளூர்ப் படைப்பாளிகளுக்கு உறுதுணையாய் இருந்த இந்துக்கலாச்சார அமைச்சு அண்மைக்காலமாக நூல்கொள்வனவில் எந்தப்படைப்பாளிகளை ஊக்குவித்ததோ அதே படைப்பாளிகளின் உதிரத்தை கழிவு என்ற போர்வையில் உறிஞ்சத் தொடங்கியது. அரசாங்கத்துக்கு இந்தக் கழிவு விடயங்கள் தெரியவேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஆனால் அரசாங்கத்துக்கு.மிச்சம் பிடித்துக் காட்டுவதாக முனைந்த முகவர்களே இதற்குக் காரணமாக இருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தத்தில் நம்மவரே நமக்கு விரோதிகள். கடைகளுக்கு கழிவோடு சந்தைப்படுத்தக் கொடுக்கும் நூல்களோ விற்பனையின்றித் தூங்கிக் கிடப்பதைக்காண வேதனைதான். ஒருமுறை ஒரு வெளியீட்டாளர் என்னோடு உரையாடும் போது ஒரு பதிப்பில் 350 பிரதிகளுக்கு மேல் விற்பது கடினமாகவே இருப்பதாகக் கூறியிருந்தார்.

இதனால் தானோ என்னவோ சில வெளியீட்டாளர்கள் தங்கள் வெளியீடுகளை 250 அல்லது 300 பிரதிகளோடு நிறுத்திக் கொள்கின்றார்கள்.

விடுதலையைப்பற்றியும் சுதந்திரத்தைப் பற்றியும் பேசும் நம்மவர் சுதந்திரத்தை தட்டில் வைத்துக் கொடுத்தாலும் சுதந்திரமாக வாழவே மாட்டார்கள். அவர்களுக்கு அந்நிய மோகத்தை விடமனமே இல்லை. உடையில் உரையாடலில், வாசிப்பில், உணவில் இப்படி எல்லாவற்றிலுமே அடிமைகளாகவே இருக்கிறார்கள். காலகாலமாக இந்தியக் குப்பைகளை வாசித்துப் பார்த்துப்பழகிய இவர்கள் இலகுவில் அதில் இருந்து மீள்வதென்பது கடினம்தான்.

இவ்வளவு போராட்டத்துக்கும் மத்தியிலும் ஒரு சிலர் துணிந்து செயலாற்றுவது போற்றக்கூடிது மட்டுமன்றி அவர்களை உற்சாகப்படுத்தி உறுதுணையாக நிற்கவேண்டியது எமது ஒவ்வொரு இலக்கிய வாசகர்களின் கடமையாகும். இந்த சூழலில் நமது இலக்கியப் பணியை நாம் எப்படி முன் எடுத்துச் செல்வது என்று சிறிது சிந்தித்தோமானால் அது வருங்கால இலக்கிய வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என எண்ணுகின்றேன்.

அகில இலங்கை ரீதியாக உள்ள படைப்பாளிகள் நூறுபேர் தங்களுள் ஒற்றுமையின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு மனப்பான்மை மறந்து தங்கள் நூல்களைப் பரிமாற்றம் செய்யும் போது சந்தைப்படுத்தும் சிக்கலில் இருந்து விடுபடுவது மட்டுமன்றி நூல்கள் பரவலாக்கப்படுவதற்கும் வாய்ப்பு உருவாகும் என்பது நிச்சயம்.

ஒரு வெளியீட்டாளர் தனது படைப்பில் பத்துப் பிரதிகளை மற்றப் பிரதேச படைப்பாளிகளுக்கு அனுப்பி அதன் பெறுமதிக்கு அனுப்பியவர்களிடமிருந்து அவர்களது நூல்களைப் பெறுவாரேயானால் இதனூடாக அவரது ஆதரவாளர் ஒருவருக்கு அவரின் நூலின் பத்துப்பிரதிகளை விற்கும் வாய்ப்பை உண்டாக்கிக் கொள்கின்றார். அந்தவகையில் எங்களுக்கு ஒரு இருநூறு ஆதரவாள்கள் இருந்தால் போதுமானதே. இவர்களை முதலாக்கொண்டே எமது சகல வெளியீடுகளையும் நாம் சந்தைப்படுத்திக் கொள்ளலாம். அதுமட்டுமன்றி எமது சந்தைப்படுத்தலில் நாம் எந்தப் புத்தகக் கடைகளையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. விரும்பின் அவர்கள் எங்கள் படைப்புக்களை முற்பணம் கொடுத்து வாங்கி விற்பனை செய்யட்டும்.

இதில் ஒரு சிக்கல் உண்டு. பரிமாற்றம் செய்யப்படும் போது கழிவு பெறுவதிலும் வழங்குவதிலும் பரஸ்பர ஒருமைப்பாடு இருக்க வேண்டும்.

முடிந்தவரை என் அனுபங்கள் கற்றுத் தந்தவற்றை வெளிப்படையாகக் கூறியுள்ளேன். இந்தக் கருத்துக்கள் நூல் வெளியீட்டாளர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் பெரிதும் உதவலாம் என நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு பிரதேச பாரம்பரிய இலக்கியங்கள் - ஒரு நோக்கு

கலாநிதி. செ.யோகராசா

நான் ஏலவே நன்கறிந்துள்ள மரபுசார்ந்த இலக்கியம் என்பதே பாரம்பரிய இலக்கியம் என்று இங்கு கருதப்படுகின்றது. நவீன இலக்கியம் 16ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றம் பெறும்வரை இத்தகைய இலக்கியங்களே ஈழத்தில் எழுந்துள்ளன. மேலும் இவ்வாறான இலக்கியங்களாகக் கருதப்பட்டு வந்தவை செந்நெறிப் பாங்குடையதும் உயர்புலவர்களால் இயற்றப்பட்டதுமான இலக்கியங்களாகவே அமைந்திருந்தன. எனினும் இவ்வாறான இலக்கியங்களுக்குச் சமமாக செந்நெறி இலக்கியப் பண்பும் வாய்மொழி இலக்கியப் பண்பும் விரவிய இலக்கியங்களும் தோற்றம் பெற்றிருந்தன. இவ்வகையான இலக்கியங்களும் செந்நெறி இலக்கியங்கள் போன்றே ஏடுகளிலே எழுதப்பட்டு பேணப்பட்டு வந்துள்ளன.

மேற்கூறிய வகையிலான ஏட்டு இலக்கியங்கள் மட்டக்களப்பு பிரதேசத்தில் கணிசமாக உள்ளன. எனினும், இவ்ஏட்டு இலக்கியங்களுள் சிலவே பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவையாவன.

i) வசந்தன் கவித்திரட்டு: வாய்மொழிப் பாடல்களின் தொகுப்பு (பாதிப்பு:1935)

ii) கஞ்சன் அம்மானை: விஷ்ணு கிருஷ்ணாவதாரமெடுத்து கஞ்சனைக் கொன்ற வரலாறு (பதிப்பு:1961)

iii) கண்ணகி வழக்குரை: (பதிப்பு:1968)

iv) மகாமாரித்தேவி திவ்விய கரணி: சடங்குகளின்போது சிறுதெய்வங்கள் மீது பாடப்படும் பாடல்கள் (பதிப்பு: 1971)

எ) இசுவா அம்மானை : இசுவா அம்மையார் என்பவரது கற்பு, வீரம் என்பவற்றையும் இறைவிசுவாசத்தின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தும் கதைப்பாடல். (பதிப்பு,1990)

vi) பாரத அம்மானை: (பதிப்பு : 2002)

vii) இராமர் அம்மானை: பதிப்பிப்பதற்கு ஏற்ற முறையிலிருப்பினும் இன்னமும் அது சாத்தியப்படவில்லை)

ஒன்றுக்கு மேற்பட்ட, மேற்குறிப்பிட்டவாறான மட்டக்களப்புப் பிரதேச வாய்மொழி சார்ந்த இலக்கியங்கள் பற்றி நன்கறிய நேர்ந்துள்ள இன்றைய நிலையில் இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஈழத்துப் பாரம்பரிய இலக்கிய வளர்ச்சி பற்றி சிந்திக்க முற்படுவதும் அவ்வழி பாரம்பரிய இலக்கிய வரலாற்றினை அகலப்படுத்துவதும் அவசியமானதாகின்றது.

மேற்கூறிய வழியிலே சிந்திக்கும் போது, முற்குறிப்பிட்ட ஏழு இலக்கியங்களினதும் அடியாக பின்வரும் இலக்கியப் பண்புகளை அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) சமயச்சார்பு: முற்குறிப்பிட்ட இலக்கியங்கள் அனைத்தும் சமயச் சார்பானவை: கண்ணகி வழக்குரை, மட்டக்களப்பு பிரதேசத்தில் பிரசித்தமான வழிபடு கடவுளான கண்ணகியின் வரலாற்றை எடுத்துரைக்கிறது. மகாமாரித்தேவி திவ்விய கரணியிலுள்ள பாடல்களுள் சிலவும், வசந்தன் கவித்திரட்டிலுள்ள பாடல்களுட் கணிசமானவையும் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புபட்டவையே. மகாமாரித்தேவி திவ்வியகரணியிலுள்ள ஏனைய பாடல்கள் மாரியம்மன், காளியம்மன் முதலான தெய்வங்கள் பற்றிய பாடல்களாகும். கஞ்சன் அம்மானை, விஷ்ணு வழிபாட்டுடனும் பாரத அம்மானை திரௌபதி வழி பாட்டுடனும் தொடர்புபட்டவை. இசுவாஅம்மானை இறைவிசுவாசம் பற்றி எடுத்துரைக்கின்றது.

2) கோயில்களில்/ வீடுகளில் படிக்கப்படுதல்: கோயில் திருவிழா வேளையில் மேற்கூறியவற்றுள் பல, இன்றுவரை படிக்கப்பட்டு வருகின்றன. வீடுகளிலும் படிக்கப்படுகின்ற வழக்கம் இருந்து வந்துள்ளது. (எ-டு:கஞ்சன் அம்மானை)

3) நீதிபோதனை: பாரத அம்மானை, இராமர் அம்மானை, இசுவா அம்மானை என்பன நீதி போதனை நோக்குடன் படிக்கப்பட்டு வந்துள்ளன.

4) பொதுமக்கட் சார்பு: மேற்கூறியவற்றைவிட, இவ்வகையான இலக்கியங்கள் பொதுமக்கள் நலனை மனங்கொண்டு பொதுமக்கள் முன்னிலையில் பாடப்பட்டு வந்துள்ளமையே இவற்றின் தனித்துவமான பண்பாகிறது. மேலும் செந்நெறிப்பாங்கான ஏட்டு இலக்கியங்களிலிருந்து, இவ் வகையான ஏட்டு இலக்கியங்கள் முக்கியமாக இவ்விதத்திலேயே வேறுபடுகின்றன என்பதும் கவனத்திற்குரியது இத்தகு நூல்கள் பொதுமக்கள் முன்னிலையில் பாடப்பட்டு வந்துள்ளன என்பதற்கு இந்நூல்களிலுள்ள பின்வரும் பாடற்பகுதிகள் ஆதாரமாகின்றன.

''கிளர்ந்த பெருஞ்சீர்க் கிருட்டிணாவதாரமதை
உளர்ந்தனிற் பத்தியினால் ஓர்ந்து உணர்ந்துரைத்த
அம்மானை தன்னை யறிந்து படிப்போரும்
எம்மருங்குந் துன்னி யிருந்துகதை கேட்போரும்.
......................................................................''

- கஞ்சன் அம்மானை
(நிறைவுப்பகுதி)

''வாமன் வரதன் வரிசை பெருங்கதையைப்
பூமண்ட லத்திற் புகழ்ந்தெழுதினோர் படித்தோர்
துரவங் கத்தோன் திருக்கதையைக் கேட்டோரும்
......................................................................''

- கஞ்சன் அம்மானை
(நிறைவுப்பகுதி)

''மன்றிலுள்ளோர் எல்லோரும் மனமகிழ்ந்து கேட்டருளீர்''
- பாரத அம்மானை (அவையடக்கம்)

''பேரா மிசுவா பெருங்கதையைக் கேட்பவர்கள்
நேராஞ் சுவர்க்க பதி நீடூழி வாழ்ந்திருப்பார்
ஆனதினா லிக்கதையை அருந்தமிழாற் சொல்லுகின்றேன்
தோகையரு மாடவருஞ் சூழ்ந்திருந்து கேட்பீர்கள்''
(இசுவா அம்மானை. செய். 14)

மேற்கூறியவாறு பொதுமக்கள் முன்னிலையில் பாடப்படுவதற்கான, இவை பொதுமக்களைக் கவரக்கூடிய அம்சங்களைப் பெற்றிருந்தன. அவையாவன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) பொருத்தமான இடங்களிலே நாட்டார்பாடல் வடிவங்களைப் பயன்படுத்துதல்; எ-டு: கண்ணகி வழக்குரையில் கண்ணகி புலம்பல் ஒப்பாரி முறையில் இடம்பெற்றுள்ளமை.

''பரியங்கந் தனிற்கிடந்து பள்ளிகொள்வீர் நானறிய
பிரியங்கந் தனிற்கிடந்தீர் பேய்கழுகு கூகைகளும்
உரியங்க நாரைகளும் ஒன்றை ஒன்று தான்பிணங்கி
நரியங்கந் தின்னாமல் நாய்காக்கக் கிடந்தீரோ.

சந்தனமுங் குங்குமமுஞ் சாந்தும்மிகத் தான்பூசி
வந்திசெய்யும் மாதவியார் மலரடியி லேவிழுந்து
சிந்தைமிக வேமகிழ்ந்து சேர்ந்துமிக வாழாமல்
அந்தரமோ திருமேனி அவிகாயப் பட்டீரோ.

பண்ணாருந் தமிழ்தெரியும் பட்டணத்தில் வாழாமல்
மண்ணாளும் வாள்மாறன் மாமதுரை தனில்வந்து
எண்ணாதா ரியலிடத்தே என்னையுமே தனியிருத்திக்
கண்ணாலும் பாராமற் கைவிட் டகன்றீரோ.

சித்திரம்போ லேயுமது செய்யதிரு மேனியெல்லாம்
பத்திரம் பார்ப்பதனாற் பருமணலிற் கண்டுயின்றீர்
உற்றதுணை யாருமன்றி உள்ளமெல்லாம் வாடுகின்றேன்
முத்துவடம் இலங்கவந்தென் முன்னாலே நில்லீரோ.

பேய்கள்தாம் மிகவலறப் பெருவேங்கை மரநிழற்கீழ்
ஐயாகோ வென்று சொல்லி அடியேனே தஞ்சமென்று
கையாரப் புல்லி எந்தன் கண்ணீரை மிகத்துடைத்து
மையாருங் கருங்கூந்தல் வாரிநீர் முடியமுரோ

எழுதரிய பிறையழகும் இலங்கியதோர் பவழவாயும்
பழுதிலாத் திருவடியும் பாலைவென்ற மணிமொழியும்
தொழுதிறைஞ்சி உள்ளமெல்லாஞ் சுகமிருந்து வாழாமல்
அழிவுசெய்தாய் கூற்றுவனே ஐயாகோ ஐயாகோ.''

ஆ) பாடுவதற்கும் இலகுவாக கதை சொல்லுவதற்குமேற்ற இலக்கிய வடிவங்களைப் பின்பற்றல் (எ-டு: அம்மானைப் பிரபுந்தத் தெரிவு),

(இ) வர்ணனையைச் சுருக்கி விட்டு, சம்பவங்கள், காட்சிகள் முதலானவற்றை விரித்துரைத்தல் (எ-து: பாரத அம்மானையில் 450 வரிகள் கண்ணன் புலம்பலாகும்; இ∴து வில்லிபாரதத்திலே 3 பாடல்களில் இடம்பெறுதல்)

(ஈ) நகைச்சுவை அம்சங்களைப் புகுத்துதல் (எ-டு: அம்மானை)

(உ) தாம் எடுத்துக்கொண்ட இதிகாசக் கதையுடன் இரசனை நோக்கிற்காக, புராணக்கதைகள் சிலவற்றைத் தொடர்புபடுத்துதல் (எ-டு: பாரத அம்மானையில் இடம் பெற்றுள்ளன இடும்பன் - இடும்பி கதை)

(ஊ) பேச்சு மொழிப் பிரயோகங்களைக் கையாளுதல் (எ-டு: பாரத அம்மானை, கண்ணகி வழக்குரை),

(எ) தனிப்பாடல்கள் மட்டுமன்றி காவியங்கள் கூட (உரைதேவைப்படாத அளவிற்கு) எளிமைத்தன்மை கொண்டிருத்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஏ) பெருமளவு பாடல்கள் இசைத்தன்மை கொண்டுள்ளமை.

தவிர, மேற்குறிப்பிட்ட நூல்களுள் சில, பின்வரும் காரணங்களால் பிரதேச நிலைப்பட்ட முக்கியத்துவத்தையும் பெற்றுள்ளன.

அ) மக்களது சமூகப் பண்பாடு/ நம்பிக்கைகள்: குறிப்பாக கண்ணகி வழக்குரை, மட்டக்களப்பு பிரதேச மக்களது ஒரு காலகட்டப் பண்பாடு, பழக்கவழக்கம், பேச்சு வழக்கு முதலானவற்றை எடுத்துக் காட்டுகின்றது.

ஆ) பிரதேச வரலாறு: மட்டக்களப்பு பிரதேசத்திற்கும் கண்டி ராச்சியத்திற்கு மிடையில் நிலவிய தொடர்பினை (மகாமாரித்தேவி திவ்விய கரணியிலும், வசந்தன் கவித்திரட்டிலுமுள்ள) சில பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இ) தமிழக/ ஈழத்தொடர்பு: இவ்வாறான இலக்கியங்கள் ஏதோ ஒரு விதத்தில் தமிழகத்துடன் தொடர்புபட்டுள்ளமை காரணமாக, தமிழக/ ஈழத்து இலக்கிய சமூக, கல்வித் தொடர்புகள் பற்றிய புதிய தகவல்களைத் தரக் கூடியனவாகவுள்ளன.

இதுவரை நாம் கவனித்த இலக்கியங்கள் ஏட்டு இலக்கியங்களாக உள்ளமை காரணமாக, இவ் ஏடுகள் பற்றியும் எமது கவனத்திற்குரிய சில விடயங்களுள்ளன. அவையாவன:

(அ) இத்தகைய ஏடுகள் கவனமாக பேணப்பட்டு வந்துள்ளன; கோயில்களில் படிக்கப்பட்ட ஏடுகள் புனிதமானவையாகக் கருதப்பட்டு வந்துள்ளன,

(ஆ) ஏடுகளைப் பிரதிசெய்யும் வழக்கமும், விலைக்கு வாங்கி வைத்திருக்கும் வழக்கமும் நிலவிவந்துள்ளன. பின்வரும் மேற்கோள்கள் இதற்குச் சான்றாகின்றன.

> ''இந்தச் 'சுருதி நூல் முறை'யெழுதினது எருவில் பகுதி
> களுதாவளை வேலாயிதர் வீரபத்திரனதிகாரியாகவு(ம்)
> என்தாய் கண்ணம்மை பொருட்டாக........."
>
> ''குறித்த இந்த ஏட்டை எழுதி நிறைவேற்றியது எருவிற்
> பகுதியைச் சேர்ந்த மகிழூரி சின்னத்தம்பி போடியுடையார்
> புத்திரன் பாரபரிப்புக் கண்ணுப்போடி....... இதைக் கிரயமாய்க்
> குறுமண்வெளியிலிருக்கும் கதிரவண்ணான் மூத்த வண்ணானுக்கு
> என்னால் கொடுக்கப்பட்டது. கிரயம் ரூபாய் ஏழு சதம் ஐம்பது''

மேற்கூறிய மேற்கோள்கள் ஊடாக அறியவரும் விடயங்களை ஆழ்ந்து சிந்திக்கும் போது பொதுமக்கள் அதுவும் அடிநிலை மக்கள் கூட தமது சமய, இலக்கிய அறிவு விருத்தியில் கொண்டிருந்த நாட்டம் எமக்குப் பிரமிப்பை ஏற்படுத்தவே செய்கின்றது.

எவ்வாறாயினும், இதுவரை நாம் கவனித்த விடயங்களை மேலும் ஆய்வுக்குட்படுத்தி ஏலவே யாமறிந்த செந்நெறி இலக்கிய வளர்ச்சிப் போக்குடன் இணைந்து நோக்கும் போதுதான் ஈழத்தின் பாரம்பரிய இலக்கியவரலாறு முழுமை பெறும் வாய்ப்புள்ளது என்பதனை அழுத்தியுரைக்க வேண்டியது அவசியமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்க தமிழ் தினமே



அமுதே! தமிழே! வளர் தினமே!
ஆண்டுகள் தோறும் புலர் தினமே!
அமிழ்தினு மினிய நற்றமிழை
அகிலமே போற்றச் செய் தினமே!

முத்தமிழ் தன்னின் மகிமை தனை
மேலாய் யெங்கும் முழக்க மிட
சித்தமாய் தொண்டில் மிளிர்கின்ற
சிறப்புக் கவின் மலர் வாழியவே!

பொங்கு தமிழின் பெருமை யினை
புகழ்ந்தே பாடிக் களி கூர்வோம்
எங்கும் இதமாய்த் தமிழ் மணக்க
ஏற்றம் புரிவாய் தமிழ் தினமே!

இனத்தால் மொழியால் பகை வளர்த்து
இனிய நட்பைக் குலைத்தோரை
அணைத்தே ஒற்றுமை ஓங்குதற்காய்
அனைவரும் வாழ்த்திட வா! தினமே!

யுத்த மேகம் மறைந் தின்று
யுகங்கள் பல நாள் கடந்தாலும்
நித்தமும் சமாதானம் நிலைத்திடவே
நிலையாய்க் கருணை பொலி தினமே!

உலகத் தமிழினம் ஒன்றிணைந்து
உன்றன் சேவையை மெச்சிடவே
கலகம் மீண்டும் வெடிக்காது
காத்திட வேண்டும் தமிழ் தினமே!

ஒற்றுமை யொன்றே உயர் வழியாம்
உண்மையிற் தமிழே! நல் மொழியாம்
பற்றுதல் பூண்டு நேசிக்கிறோம்
பல்லாண்டும் வாழ்க ''தமிழ் தினமே''!!

**மூதூர் "கலைமேகம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்தியில் அழகியல் - இலக்கியக் கல்வி

**பாலசுப்பிரமணியம் தனபாலன்**
உப பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

இந்த நூற்றாண்டை எதிர்நோக்கும் உலகிலுள்ள தேசிய இனங்கள் எல்லாம் தமது அடையாளங்களை நிலை நிறுத்த கலைகளையும், இலக்கியங்களையுமே பெரிதும் நம்பியிருக்கின்றன. என யுனெஸ்கோ நிறுவனம் தனது அண்மைய வெளியீட்டில் தெரிவித்திருந்தது. இத் தேசிய இனங்களில் தமிழினமும் ஒன்றாகும். இதற்கமைய தமிழினமும் தனது தேசிய கலைத்துவ அடையாளங்களை நிலை நிறுத்த பல்வேறு முயற்சிகளையும், துணிகரமான முடிவுகளையும் எடுக்க வேண்டியது இன்றைய காலத்தின் பணியாகவுள்ளது.

இச்சூழலில் எமது எதிர்காலச் சந்ததிகளான இன்றைய மாணவர்களுக்குத் தாய் மொழியினூடு அழகியற் கலைகள், இலக்கியக் கல்வியினூடாக புதிய சிந்தனைகளையும், புத்தாக்கத் திறன்களையும் விருத்தியாக்கப் பல முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதற்குச் சிறந்த களங்கள் பாடசாலைகளே ஆகும். ஆனாலும் இன்றைய பாடசாலை முறைமையில் மாணவர்களின் அசைவும் இடப்பெயர்வுகளும் இல்லாமல் வகுப்பறைக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பரீட்சைகளை நோக்கமாகக் கொண்டு பாடசாலையிலும், வீட்டிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் மாணவர்கள் இயந்திரங்களாகச் செயற்படுகின்றனர். இதனால் நீண்டகால நோக்கில் சுயநலம் கூடியவர்களாகவும், தேசப்பற்றற்றவர்களாகவும், அழகியலுணர்வு இல்லாத மனிதத்துவப் பண்புகளற்ற வர்களாகவும் மாறக்கூடிய நிலமைகள் தோன்றுகின்றன. இவற்றை நீக்க பாரம்பரிய கலை - அழகியல்- இலக்கியங்களை நயக்கும் திறன்களை மாணவர்கள் பெறக்கூடிய கலைத்திட்டச் சீராக்கங்களைச் செய்ய வேண்டியுள்ளது.

எமது தொன்மையான நாட்டார் மரபு அழகியல் இலக்கியக் கல்வியானது வாழ்க்கைத் தொழில்களோடும், வாழ்வோடும் ஒன்றிணைந்த செயற்பாடாக விரவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்துள்ளது. வரன் முறையான கல்விச் செயற்பாடு சமூக முறைமைகளோடு ஒன்றிணைந்து வளரலாயின. இதனூடு அழகியல்- இலக்கியக் கல்வி முறைமை சார்ந்த வகையிலே ஒழுங்கமைத்தல் நிகழலாயிற்று. முறைசார்ந்த வகையில் அழகியல் - இலக்கியக் கல்வியைக் கையளித்தல், முறைமை சாரா வகையில் நாட்டார் மரபுகள் வழியாக அழகியல் இலக்கியக் கல்வியைக் கையளித்தல் என்ற இரு வகைக் கோலங்களில் கல்விக் கையளிப்புக்கள் நிகழ்ந்து வருகின்றன. இது சைவ-இந்து மரபிலே,

i) தெய்வீக உணர்வுகளை அழகியல்-புராண-இலக்கியங்களின் விழுமியங்களை மாணவர் உள்ளங்களில் நிலை நிறுத்தல்.

ii) அதனைத் தொடர்ந்து பராமரித்தல் - அவற்றினூடாக மானுட தர்மங்களை நிலைநிறுத்தல்.

iii) தர்மங்களை வளப்படுத்தும் மனவெழுச்சிக்களை வளர்த்தல்.

iv) அறியாமையில் இருந்து மீண்டெழ தர்ம ஒளியைக் காட்டுதல், உய்வதற்கும் உயர்வதற்கும் இவ் அழகியல் இலக்கியக் கல்வியைத் துணையாகக் கொள்ளல் என்ற வகையில் பின்பற்றப்பட்டது.

## இரசனை

அழகியல் - இலக்கியங்களினாலேயே மனிதன் விலங்குகளில் இருந்து வேறுபட்டு வாழத் தொடங்கினான். ஆனால் இன்று அழகியல்-இலக்கிய இரசனை அற்ற நிலையினால் விலங்கு வாழ்க்கையை மனிதன் மேற்கொள்ள ஆரம்பித்து விட்டான் என விமர்சிக்கப்படுகின்றது. இதை நீக்க இளம் பாடசாலை மாணவர்களின் ஐம் புலன்களுக்கும் இதமூட்டக்கூடிய விதமாக, அவர்களின் எண்ணங்கள் கருத்துக்கள், அறிவு என்பவற்றைத் தூண்டத்தக்க அழகியல் கலை இலக்கிய ஆக்கங்களின் மதிப்பினை மாணவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது. அவற்றை இரசிக்கும் அனுபவத்தையும் வழங்க வேண்டியுள்ளது. இங்கு இரசித்தல் என்பது; யாதேனும் நிகழ்வுப் புலங்களை வருடுவதால் ஒருவருக்குள் ஏற்படும் மானசீகமான திருப்தி எனச் சுட்டப்படுகின்றது. மாணவர்களின் இரசிக்கும் ஆற்றலை மேம்படுத்த;

* பல்வேறுவகைக் கலையாக்கங்களை இலக்கியங்களை அறிய வாய்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
* கலையாக்கங்களை புதிய இலக்கியங்களை உருவாக்க வழிகாட்டல்.
* கலையாக்கங்களை விமர்சன ரீதியாக நோக்கி பகுப்பாய்வித்தல்.
* கலையாக்கங்களுடன் இணைந்த சமூக - இன-கலாசார - தேசிய உணர்வுகளை மதிப்பிடல்.

இவ்வாறு சிறந்த இரசனை அனுபவத்தைப் பெற்ற மாணவன் கடமையை மதிப்பவனாகவும், தேசப்பற்றாளனாகவும், சமாதானப் பிரியனாகவும், மனக்குழப்பங்கள் அற்றவனாகவும் இருப்பான். இரசனை அனுபவமானது வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்யும் நல்லெண்ணங்களால் உடலும்-உள்ளமும் புத்துயிர் பெறுதலே இதற்குக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகும். மாணவர்களிடம் இரசனையை ஏற்படுத்த முதலில் ஆசிரியர் கலை-இலக்கிய இரசனையுடையவராக இருத்தல் வேண்டும்.

இன்றைய எல்லாப்பாட ஆசிரியர்களும் அழகியற் கலை-இலக்கிய செயன் முறைகளில் திறமையும், திறனும் கொண்டவர்களாக வேண்டும். புதியன ஆக்குதல், பாடல்களைப் பாடுதல், ஆக்குதல், நடித்தல், ஆடுதல், சித்திரம் வரைதல், கட்டுரை எழுதுதல் என்பவற்றில் ஈடுபாடும் ஆக்கத்திறனும் கொண்டிருத்தல் அவசியமாகும். இவற்றை அவதானித்தல், பரிசோதித்தல், கண்டுபிடிப்புக்கள், போன்ற செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது அவர்களுக்கும் ஆக்கத் திறன்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக ஓவியச் சுவையை நோக்கினோமானால்;

காணாதவற்றைக் காணுதலும், தெரியாதவற்றைத் தெரியப்படுத்துதலும், உணராதவற்றை உணர்தல் முதலானவையும் ஓவியத்தின் பண்புகளாகும். சிறந்த ஓவியம் அழகையும், கலை வலிமையையும், உருவத்தையும், உள்ளடக்கத்தையும் ஒன்றிணைக்கின்றது. இக்கலை கட்புலக்கலையாக இருந்தாலும் ஏனைய புலன்களின் அதிர்வுகளையும், சுவைகளையும், அது கட்புல வீச்சுக்குள் கொண்டு வந்து விடுகின்றது. இரு தள ஓவியங்கள் முப்பரிமாணத்தைக் காட்டுதல், வடிவமைப்பின் வழியாக ஒரு பொருளின் நறுமணத்தைப் புலப்படுத்தல், தூரிகை அசைவுகளால் ஒலியின் பண்புகளை உணர்தல் போன்ற பண்பியல்கள் ஓவியச் சுவையாகப் பரிணமிக்கின்றன. இக்கருத்தியல் கலைகளை - இலக்கியங்களை இரசிக்கின்றபோது ஏற்பட்ட அனுபவம் ஆக்கத்திறனாகப் பிறக்கின்றது.

## ஆக்கத்திறன்

புதியன புனைதல், ஆக்கத்திறன், புத்தாக்கம், கற்பனை செய்தல் ஆகிய சொற்கள் கலை இலக்கியங்களில் நீண்ட காலமாக இடம் பெற்று வந்துள்ளன. எமது கல்வித் துறையில் இவற்றின் ஈடுபாடு கூடுதலாக அண்மைக்காலத்திலேயே ஏற்பட்டு வருகின்றது.

ஆக்கத்திறன் தொடர்பாக பல்வேறு கல்வியலாளர்கள் பல கருத்துக்களை முன் வைத்துள்ளனர். மாஸ்லோ; தைரியம், துணிவு, சுய ஏற்புடைமை, சுயமான இயக்கம் ஆகியன ஆக்கத்திறனில் ஒருவருக்குரிய தனிப்பட்ட சிறப்பியல்புகள் என்கின்றார். மனிதர்களில் பெரும்பாலானவர்கள் ஆக்கத்திறனுடையவர்களே, முக்கியமாக சமையல் செய்யும் பெண்ணையே மிகவும் ஆக்கத்திறனுடையவர் என மாஸ்லோ குறிப்பிடுகின்றார். அவள் புதுமை, புதுப்படைப்பு, ஆக்க ஆற்றல், கண்டு பிடிப்பு ஆகிய சகல துறைகளிலும் முதன்மையானவள். பணமின்றியே அவளுடைய வீடு எப்பொழுதும் அழகாக இருக்கும். அவளது உணவு சிறந்த விருந்து என்ற வகையில் சாதாரண வாழ்வியலூடாக அழகியல்-கலை இலக்கிய உணர்வுகளை ரசித்தல் புத்தாக்கங்களுக்கு வழிகளாகும் என்கின்றார். ஆக்கத்திறனில் பின்வரும் விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.

புதுமை - ஆக்கப்டுவது புதுமையாக இருக்க வேண்டும். தனித்தன்மை வாய்ந்ததாகவும் அல்லது பொதுவாகக் காணப்படாத ஒன்றாகவும் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான தன்மை

-தேவைகளுக்கும், விருப்புகளுக்கும் பொருந்தும் தன்மை.

மாற்றிப்பயன்படுத்தல்

-ஒரு விடயத்தை அல்லது பொருட்களைக் கையாளும் போது அணுகு முறையில் உண்டாகும் தீவிர இடப்பெயர்ச்சி.

சுருக்குதல்- ஒரு விடயத்தை விரிவாக அல்லது விளக்கமாகக் கூறாமல் சுருக்கமாகக் குறியீடுகள் மூலம் உணர்த்தல்.

மாணவர்களின் ஆக்கத் திறன்கலையை; அழகியற் கலை, இலக்கியங்களினூடாக விருத்தியாக்க; ஆராய்வறிவு, விடாமுயற்சி, ஆபத்து நிலைகள் எதிர் நோக்கல், நுண்ணறிவு, கற்பனை, ஆர்வம், தடையார் சிந்தனை, சிந்தனை நெகிழ்ச்சி, புதியன புனையுந்திறன், முழுமையாக்குதல் ஆகிய பண்புகளை விருத்தியாக்க வழிகளைக் காட்ட வேண்டியுள்ளது. இதற்கு தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டச் செயற்பாடுகளையே சிறப்பாக பயன்படுத்தலாம். இதற்கான விசேட வாண்மைத்துவப் பயிற்சிகளை எமது ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. மேலும் பாடசாலை மாணவர்களின் ஆக்கத் திறன் விருத்தியை ஊக்குவிக்க பின்வரும் வகுப்பறைச் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

* வகுப்பறையைச் சுதந்திரமாக வைத்திருத்தலுடன் மாணவர்களை வினாக்கள் கேட்கத் தூண்டல். புத்தாக்கங்களை எழுதுவித்தல், அரங்கேற்றல்.

* மாணவர் புதிய கருத்துக்களை, கண்டுபிடிப்புக்களை முன்வைக்கும் பொழுது அவற்றைப் பெறுமதியுடையதாக்கல்.

* செயல்திட்ட வேலைகள்- சுய வழிப்படுத்தப்பட்ட கற்றலுக்கு வழிகாட்டல் நூலகம், செயற்பாட்டறைகளை முழுமையாகப் பயன்படுத்த வாய்ப்புக்களை வழங்குதல்.

* வழமையான பாடங்களுக்கு மேலதிகமான அழகியற் கலை, இலக்கிய நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல்.

* புதிய கலைப் படைப்புக்களைப், புத்தாக்கங்களை மேற்கோள்வொருக்கு உயரிய கணிப்பைக் கொடுத்தல்.

ஒவ்வொரு மாணவர்களும் கலைஞர்களேயாவர். அழகியல்-கலை இலக்கியங்களுக்கும் கலைஞனுக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு. கலைஞன் சமூகத்தில் காணப்படும் உண்மை நிகழ்வுகளில் இருந்து தான் பெற்றுக்கொள்ளும் பலவித அனுபவங்களைக் கருத்துச் செறிவுடைய கலைவடிவமாக்கித் தருகின்றான். அவனது இரசனையும் அவன்பெற்ற அனுபவமும் அவனது ஆக்கத்திலிருந்து இரசிகனால் கிரகித்துக் கொள்ளப்படுகின்றது. இக்கிரகித்தலே கற்றலின் மெய்ப்பெறுமானமாகும். ஆக்கமொன்றின் உள்ளும் - புறமும் உள்ள உண்மைகளும் உள்ளக் கிடக்கைகளும் வெளிப்படும் போது இரசனை அனுபவம் உயர் தத்துவமாகின்றது. இது புலனுறுப்புக்களுக்கு எட்டக்கூடிய அறிவுக்கும் தர்க்க ஞானத்திற்கும் அப்பாற்பட்டது. இரசனை மூலம் இரசிகன் தன் அறிவினால் மட்டுமன்றி உள்ளத்தினாலும் யதார்த்தத்தை அணுகுகின்றான். அந்த யதார்த்தம் அவனது சொந்த அனுபவமாக மாறுகின்றது. வாழ்நாளில் அறிந்து கொள்ள முடியாத உலகின் உண்மைகளை அவன் அறிந்து கொள்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தூது

# தவத்திரு. தனிநாயகம் அடிகள்

**கலாபூஷணம். புலவர். ஏ.டபிள்யூ அரியநாயகம் J.P.**
முன்னாள் ஆசிரிய ஆலோசகர் (தமிழ்), தீவகவலயம்

''தேமதுரத் தமிழ்ச்சோலை வனப்பே தேங்கத்
திசையனைத்தும் அமுதத்தேன் பொழிந்த மேகம்,
பூமுகத்தை அரவணைத்தே உறவு பூண்டு
புதுவாழ்வை இணைத்துயர்ந்த அன்புப் பாலம்
நாநலத்தால் தமிழ்த்தூதை ஞாலம் போற்ற
நயந்துலங்க முழங்கி நின்ற வெண்பொற் சிங்கம்
மாதவத்தின் மகிமையொடு குளிர்ந்த திங்கள்
மறைந்த துயர் நெஞ்சத்தில் மறக்கலாமோ?

எனக் கவிஞரால் புகழப்பட்டவர்

''தமிழ்த்தூது தவத்திரு தனிநாயக அடிகளார் ஆவர்.''
''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்''
தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே'' என்ற திருமூலா் வாக்கையும்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்' - என்ற புறநானூற்றடியையும்
மேல்வரிச்சட்டமாகக் கொண்டு தமிழ்த்தூது' சென்ற தமிழ்மகன்.

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்'' என்ற பாரதியின் கனவை
நனவாக்கிய தமிழ்ப் பேரறிஞர் - சமயகுரு ஆராய்ச்சியாளர்.

அமெரிக்கா, யப்பான், இங்கிலாந்து, போர்த்துக்கல், கனடா, இத்தாலி, சோவியத் ஒன்றியம், ஜேர்மனி, வியட்னாம், மேற்கிந்திய தீவுகள் என்பவற்றிற்குச் சென்று தமிழின் தொன்மை, இனிமை, தமிழர் பண்பாடு, கலாசாரம் என்பன பற்றியெல்லாம் எடுத்துரைத்தார். ''தமிழர் பண்பாடு'' பற்றி அடிகளார் நிகழ்த்திய



உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''தமிழர் பண்பாடுகள் பலவற்றை நம்மிலக்கியங்களில் தெளவாகக் காணலாம். பரந்த உலக மனப்பான்மை ஒரு கொள்கை. அதனால்தான் புறநானூற்றில்'' யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றும், வள்ளுவத்தில் ''யாதானும் நாடாமால் ஊராமால்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. விருந்தோம்பல் ஒரு சிறந்த கொள்கை.

பிறரன்பு, ஈகை, 'தமக்கென வாழாப் பிறா்க்குரியாளன்' எனும் கோட்பாடு, ''என்கடன் பணிசெய்து கிடப்பதே எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து, அகத்திணை புறத்திணை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல், ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற மனநிலை ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' எனும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டில் அரிய சில கோட்பாடுகளெனக் கூறலாம்; எனக் குறிப்பிட்டார்.

தமிழ்த்தூதின் அவசியத்தை அடிகளாரே தம் தமிழ்த்தூது எனும் நூலில். ''இத்தொண்டு இக்காலத்து இன்றியமையாது வேண்டுமோவெனின், இன்றியமையாது வேண்டும். உலக மொழிகளின் பிறப்பைக் கண்டும், அவை சிதையவும், மாறவும், வழக்கொழியவும், தான் என்றும் தன் கன்னித்தன்மையைக் காத்து வருகின்ற தமிழன்னைக்கு இன்று இடுக்கணும் இடும்பையும் நேர்ந்துள்ளன. தமிழன்னை மீது பல்வேறு பகைவர் அறிந்தும், அறியாததும் படையெடுத்துள்ளனர். இப்பகை எல்லாவற்றையும் புறங்காணும் கருவி தமிழ்த்தூது முரசின் ஒலி ஒன்றே என நம்புகின்றேன்'' எனக் கூறியுள்ளார்.

1964ஆம் ஆண்டு தைத்திங்கள் 7ம் நாள் புது டில்லியில் நடந்த அனைத்துலகக் கீழைத்தேய அறிஞர் மகா நாட்டின் போது உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை அடிகளார் முன்னின்று உருவாக்கினார். இத்தகைய அமைப்பு அவசியம் அவசரம் என்பதை 1951ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த நான்காம் தமிழ் விழாவில் நிகழ்த்திய ''சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு'' எனும் உரையின் போதே குறிப்பிட்டார்கள்.

இந்திய வரலாற்று நூல்களை எடுத்து நோக்குமின், Discovery of India என்றும், History of Indian Literature என்றும் பலப்படப் புனைந்து வெளிவரும் ஏடுகளை விரித்துப் பார்மின், மாக்ஸ்முல்லர், லின்றர்னிட்ஸ் போன்றவர் முதலாகப் பலரும், வடமொழி இலக்கியத்தின் பெருமையையே விரித்துக் கூறுவர். அவ்விந்திய இலக்கியங்களின், வரலாற்றிலே தமிழ் இலக்கியத்தைப் பற்றியோ, திராவிட நாகரிகத்தைப் பற்றியோ, ஒரு சொல்லேனும், ஒரு குறிப்பேனும், ஒரு கருத்தேனும் காணக்கிடையா. இந்தியப் பண்பு, இந்திய நாகரிகம், இந்தியக் கலைகள், இந்தியமொழிகள், என அவர் மொழிவனவெல்லாம், திராவிடப் பண்பு, திராவிட நாகரீகம், திராவிடக் கலைகள், திராவிட மொழிகள் இவற்றையே அடிப்படையாகக் கொண்டவை. ஆயினும் பல்லாண்டுகளாக, நடுவுநிலை கடந்தோர் பலர், இவ்வுண்மையை மறைத்தும், திரித்தும், ஒழித்தும் நூல்கள் யாத்தமையின் இன்று இவ்வுண்மையை எடுத்துக் கூறுவதும் மக்கள் மனதில் ஐயம் விளைப்பதாக இருக்கின்றது. அங்ஙனம் எடுத்துக் கூறுவதற்கும், பெரிதும் மனத்துணிவு வேண்டற் பாலதாயிற்று. தமிழர்களாகிய நாமும் நமது இந்திய மொழிகளிலேனும், நம் தமிழைப் பற்றிய உண்மைகளை இதுகாறும் கூறினோம் அல்லேம்.

**''மெய்யுடை யொருவன் சொல மாட்டாமையால்**
**பொய்போ லும்மே பொய்போ லும்மே - ''**

**"பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால்**
**மெய்போலும்மே மெய் போலும்மே''**

ஆதலின் உலகம் நம்மை உணராமலும், நாமே நம்மை யுணராமலும் ''பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு, நாமமது தமிழர் எனக் கொண்டு, இங்கு உயிர்'' வாழ்ந்து வந்துள்ளோம். இன்று இத்தமிழ்க் கோயிலில் நிகழும் தமிழ் விழா உலகில் தமிழ் நாட்டின் பெருமையையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழியின் பெருமையையும் நிலை நாட்டும் புதிய தோர் இயக்கத்தை உண்டாக்க வல்லதாயின், அது தமிழ் மக்களுக்கே பெருமை தருதலால் நாம் அனைவரும் நமக்கே நன்மை பயக்கும் நற்றொண்டைச் செய்தோமாவோம்.

அடிகளாரின் சிறப்புரைக்குத் தலைமைத்தாங்கிய சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் ''தனிநாயகம் உரைக்கு சபாநாயகம்'' (தலைவர்) எதற்கு எனப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

தமிழின் சிறப்பு, தமிழர் பண்பாடு, கலாசாரம் வரலாறு பற்றி உலக அறிஞர் தெரிந்து கொள்ளவென 1952இல் Tamil Culture (தமிழ்ப்பண்பாடு) எனும் ஆங்கில முத்திங்கள் இதழை வெளியிட்டார். இவ்விதழ் 15 வருடங்களாக சிறப்புடன் வெளிவந்து பலரின் பாராட்டுதலையும் பெற்றது. தாய்லாந்து நாட்டு அரசச் சடங்குகளில் திருவெம்பாவையின் முதலிரு பாடல்கள் பாடப்படுவதை எடுத்துக் கூறினார். சுமத்திரா நாட்டில் காரோபட்டக்கு என்னும் இனத்தவர் மூவேந்தர் பெயர்களுடன் அழைக்கப்படுவதாகவும், தமிழ்ச் சொற்கள் பல வழக்கத்தில் உள்ளதையும் எடுத்துரைத்தார்.

தமிழ்த்தூது, ஒன்றே உலகம், திருவள்ளுர், சங்க இலக்கியத்தில் இயற்கையின் இடம்'' போன்ற நூல்களையும், இருநூற்றிற்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் அடிகளார் எழுதியுள்ளார். ஓர் இடத்தில் அடிகளார்...............

'வெர்ஜில் எனும் பெருமை வாய்ந்த இலத்தீன் புலவரை என் இருகைகளாலும் எடுத்து ஏந்திப் படித்து மகிழ்ந்துள்ளேன். எகிப்து நாட்டின் தொன்மை வாய்ந்த ஏடுகளையும், எகிப்து நாகரிகத்தின் எழில் வாய்ந்த பெரும் சின்னங்களையும் பார்த்து வியந்துள்ளேன். நடு அமெரிக்கா, தென்னமெரிக்கராகிய இன்கா, அஸ்தெக்கர் பண்பிற்கு அறிகுறிகளான கோட்டைகளையும், கட்டடங்களையும் என் இரு கண்ணாரக் கண்டு களித்துள்ளேன். எனினும் தொல்காப்பியரை என் கைகளில் ஏந்தி விரிக்கும் பொழுது எனக்கு ஏற்படும் அத்தகைய உள்ளக் கிளர்ச்சி, வேறு எந்நூலாலும் ஏற்படுவதன்று என்பது உண்மை. நம்பண்டைத் தமிழ் நூல்களைத் தொட்டதும், பல்லாயிரம் ஆண்டுகளாக நிகழ்ந்து பண்பில் வளர்ந்து திருந்திய இலக்கிய, இலக்கணப் பயிற்சி, தம் மனக்கண்முன், நிழற்படம் போல எழுந்து நிற்பதே இதற்குக் காரணம். எனக்குறிப்பிடுகின்றார்.

1913ஆம் ஆண்டு ஆவணிமாதம் 2ம் திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டில்; விருந்தோற் பண்பில் சிறந்து விளங்கும் நெடுந்தீவைச் சேர்ந்த நாகநாதன் கணபதிப்பிள்ளை கென்றி ஸ்ரனிஸ்லோஸ் என்பவருக்கும் ஊர்காவற்துறை கரம்பனைச் சேர்ந்த சிசில் இராசம்மாவிற்கும் மூத்த புதல்வனாகப் பிறந்தார்.

தந்தையார் யாழ் புனித பத்திராசிரியார் கல்லூரியின் ஆங்கில ஆசிரியர். நீர்கொழும்பு புனித மரிஸ்ரெலாகல்லூரி, மன்னார் புனித சவேரியார் கல்லூரி என்பவற்றிலும் ஆசிரியராகவும்; நெடுந்தீவின் தபாலதிபராகவும் கடமையாற்றியவர்.

1934இல் உரோமாபுரிக் குருத்துவப் பல்கலைக் கழகத்தில் படித்து கலாநிதிப்பட்டம் பெற்று 1938இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1940முதல் தென்இந்தியாவில் உள்ள தூத்துக்குடியில் மறைப் பணியாற்றியதுடன், புனித குழந்தை யேசு திரேசம்மாள் உயர்நிலைப் பாடசாலையில் துணை அதிபராகக் கடமையாற்றினார்.

1945ஆம் ஆண்டு தமிழ் நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுமானிப்பட்டமும், 1949இல் கலாநிதிப் பட்டமும் பெற்று பெரும்புகழ் பெற்றார்.

1951ஆண்டு முதல் உலகின் பல பாகங்களுக்கும் ''தமிழ்த்தூது'' சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1952முதல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

திரு S.W.R D. பண்டாரநாயக்கா அவர்களின் ''சிங்கள மட்டும்' சட்டத்தை எதிர்த்து காலிமுகத்திடலில் நேரடியாகக் கலந்து கொண்டார் இந்நிகழ்வைக் கவிஞர் ஒருவர்.

''அஞ்சாமற் கொழும்பு நகர்க் காலிமுகத் திடலில்
ஆவியிலும் மேலான தமிழ் மானம் காத்தான்" எனப் போற்றி புகழ்ந்து பாடினார்.

இவ்வாறு அறப்போராட்டத்தில் அடிகளார் ஈடுப்பட்டமையால், ஆட்சியாளர்களால் அரசியல் வாதியாக்கப்பட்டு கைது செய்யப்படவுள்ள நிலையில் இலங்கையை விட்டுச் சென்று 1961இல் மலேசியாப் பல்கலைக் கழகத்தில் இந்தியக் கலைகள் பிரிவில் பேராசிரியராகவும், தலைவராகவும் பீடாதிபதியாகவும் கடமையாற்றினார்.

அனைத்துலக தமிழாராட்சி மன்றத்தின் ( Inter National Association of Tamil சார்பில் 1966இல் உலகு தழுவிய தமிழாராய்ச்சி மகாநாட்டை கோலாலம்பூரில் நடாத்தி உலக அரங்கில் தமிழின் பெருமையை - சிறப்பை- பண்பாட்டை, கலாசாரத்தை உயர்த்தி புதிய வரலாற்றைத் தொடங்கி வைத்தார்.

இம்மகா நாட்டில் கலந்து கொண்ட அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் அமரர் எஸ். திருச்செல்வம் அவர்கள் இலங்கை திரும்பியதும் தனிநாயகம் அடிகளாரைக் காண எமக்குப் பெருமையாக இருந்தது. உலகின் பல பாகங்களிலும் இருந்து மகா நாட்டிற்கு வந்த அறிஞர்களை அடிகளார் விமான நிலையத்தில் வரவேற்றார். எந்த மொழியைப் பேசும் அறிஞர் வந்தாலும் அந்த மொழியிலே அவர்களை வரவேற்று உரையாடி அழைத்துச் சென்றது என்னை மெய்சிலிர்க்க வைத்தது எனக் குறிப்பிட்டார்கள்.

கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தமிழுக்காக அளவிடற்கரிய பணியாற்றியவர்களில் தனிநாயகம் அடிகளாரை விஞ்சியோர் எவருமில்லை. எனப்பேரறிஞர் கலாநிதி திரு குலேந்திரன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அண்மையில் அடிகளாரின் திருவுருவச் சிலையை திறந்து வைத்த ஆயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகளார் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் என்றார் பாரதியார். நாங்கள் சொன்னால் உலகம் அதனை ஏற்காதிருக்கலாம். ஆனால் தனிநாயக அடிகளார் தமிழ் மொழி போல் வேறு எந்த மொழியும் இல்லை என்றால் அதை உலகம் ஏற்கும். ஏனெனில் அவர் 18ற்கும் மேற்பட்ட மொழிகளில் புலமை பெற்றிருந்தார். எனக் குறிப்பிட்டார்.

அடிகளார் இறுதியாக வேலணையில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில் கலந்து கொண்டு கண்களில் ஒளி மங்குகின்றது. கைகளோ நடுக்கம் கொள்கின்றது. ஆனால் என் நினைவெல்லாம் தமிழின் மீது தவழ்ந்து கொண்டிருக்கின்றது எனக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பிலுள்ள தியான இல்லத்தில் வாழ்ந்த அடிகளார் சிறிது காலம் நோயுற்று 1980-09-01 அன்று இறைவனடியில் இணைந்தார். ''தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை" என்ற பாரதி தாசனின் வாக்கிற்கேற்ப; மறைந்தும் மறையாது தமிழ்கூறும் நல்லுலகில் என்றும் அடிகளார் நிலைத்து வாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நினைவுகள் மட்டுமே ................ "

இன்னும்.............
நாங்கள் உயிருடன் தான் இருக்கின்றோம்
இப்போதெல்லாம்...............
நாம் நினைப்பது,
நினைவுகள் மட்டும் தான்,
நிஜங்கள் அல்லவே !

கடந்த காலங்களில் - நாம்
சிந்திய இரத்தக் கண்ணீருக்கெல்லாம்,
இறைவனாய்ப் பார்த்துக்
கொடுத்த இடைவெளியா.........?
இந்த சமாதானம் !

யுத்தங்கள் நிறுத்தப்பட்டாலும் - நாம்
கொண்ட துக்கங்கள் மாறுமா?
இதயத்தில் ஏற்பட்ட வழுக்களை
இரேசர் கொண்டு தான்,
அழிக்க முடியுமா?

ஏ- நைன் தான் திறந்தாலும்
ஏற்றுமதிகள் நடந்தாலும் எம்
பால்யப் பருவத்து
பறிக்கப்பட்ட பசுமைக்கு
இது தீர்வாமோ?..........

ஆலையில் இட்ட கரும்பாய்.......
ஆசைகள் தீயிலிட்டு,
அரைப் பிணமாய் நடமாடிய நாட்களை,
அரை நொடியில்
மறக்கத் தான் முடியுமா ?

வெளியே.......
சொல்லவும் முடியாத மெல்லவும் முடியாத
இன்னல்கள் - நம்
வேடந்தாங்கல்களுக்கெல்லாம்........
விலங்கிட்டதுவே !

பரீட்சை நிலையிலும் கூட
பயத்தின் ஒலி உயர்ந்ததே !
பட்டதாரிகளாய் வெளிவர வேண்டிய நாம்
பயங்கர வாதிகளாய் பயிற்சி பெற
வழி சமைத்ததே!

புத்தகங்கள் சுமக்க வேண்டிய கைகள்
புதுரக ஆயுதங்களை தாங்கி
குறி பார்த்து உயிர் குடிக்க
பழக்கப் பட்டதே !

இதயத்தை இரும்பாக்கி
வாழ வைத்ததே!
உயிரின் தவிப்பினையும்,
உள்ளக் குமுறலையும்,
அடக்கி அடக்கியே......... நம்
அன்றாட வாழ்வு கழிந்ததே !

ஆசா பாசங்களை அனுபவிக்க முடியாத
அடிமைக் கோலம் கொடுத்ததே !
இத்தனை வலிகளையும் தந்து விட்டு
இறுதியில்,
காலம் கடந்து கிடைத்த ''கசாயம்'' - நம்
உள் வலிக்கும்
மருந்தாகுமோ?


இன்னும்
நாங்கள் உயிருடன் தான் இருக்கின்றோம்.
இப்போதெல்லாம்........
நாம் சுவைப்பது,
நினைவுகள் மட்டும் தான்,
நிஜங்களை அல்லவே !

**பாலையூற்று**
**செல்வி - முகைசிரா முகைடீன்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீட்டுக்கு விளக்கு வைக்கும் விந்தைக்குருவி

தமிழ்மணி அகளங்கன்.

புலவன் என்றதுமே அவன் கற்பனை உலகில் சஞ்சரிப்பவன் என்ற எண்ணம் பலருக்கு வந்து விடுகின்றது.

தனது கவிபுனையும், புலமையையும் அறிவுப் புலமையையும் கொண்டு உலகுக்கு வழிகாட்டுவதற்காக அவன் பொருள் தேடினானே அல்லாமல், தன் வாழ்வை வளப்படுத்தப் பொருள் தேடவில்லை.

சில புலவர்களுக்குப் பாடுபொருள் எளிதில் கிட்டிவிடுவதில்லை. அதனால் தனித்திருந்து மண்டையைப் போட்டுக் குழப்பிக்கொள்வார்கள்.

சில புலவர்கள் கற்பனையிலே சில பாடுபொருள்களைக் கண்டு, அவற்றைப் பாடுவார்கள்.

பெரும் புலவர்களுக்கு, அவர்கள் காணுகின்ற காட்சிகள் எல்லாம் பாடு பொருளாகவே தென்படும். அவைகளை எல்லாம் பாடிக் குவித்துவிடுவார்கள். மகாகவி பாரதி இத்தகையதோர் புலவன் எனலாம்.

பொதுவாகவே, புலவனின் உள்ளம் குழந்தையுள்ளம் போன்றதெனக் கருதப்படுகின்றது.

தான் புதிதாகக் காணுகின்ற ஒரு காட்சியில் மனதைப் பறிகொடுத்து இலயித்துப் போதல், அதனைப் பல்வேறு விதமாகவும் விபரித்துக் கூறுதல் குழந்தையின் இயல்பாகும்.

விபரிக்கின்ற முறையில் குழந்தைக்குக் குழந்தை வேறுபட்டு நிற்கும் இப்பண்பு புலவர்களுக்கும் பொருந்தும்.

எமது வன்னிப் பகுதியில் நாம் காணுகின்ற பறவைகளில் ஒன்று தூக்கணாங் குருவி இது மரக்கிளையிலே தொங்குகின்ற அழகான கூட்டைக் கட்டி வாழுகின்ற ஒரு பறவை.

அணம் என்பது மேலே எனும் பொருளைக் கொண்ட ஒரு சொல். அண்ணன், அண்ணம் என்ற சொற்கள் எல்லாம் அணம் என்னும் சொல்லோடு தொடர்பு பட்டவையே. எனவே தூக்கணாங்குருவி என்பது மேலே தொங்குகின்ற குருவி எனப் பொருள்படும்.

பறவைகளின் கூடுகளுக்குள்ளே தூக்கணாங்குருவியின் கூடு மிகவும் அற்புதமானது. தூக்கணாங்குருவியின் கூட்டைப் போன்றதொரு கூட்டைக் கட்டுவதென்பது மிகவும் கடினமானது. முடியாத காரியம் என்று கூடச் சொல்லலாம்.

ஔவையார், அரிய காரியங்கள் சிலவற்றைப் பட்டியல் போட்டுப் பாடும் போது தூக்கணாங் குருவியின் கூடு போல கூடுகட்டுவது மிகவும் அரிய காரியம் என்று, அதனை முதல் வைத்து பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்குருவியின்கூடு வல்லரக்குத் தொல்கறையான் தேன் சிலம்பியாவர்க்குஞ் செய்யரிதால் - யாம்பெரிதும் வல்லோமே என்று வலிமை சொவ வேண்டாங்காண் எல்லார்க்கு மொவ்வொன் றெளிது.

இப்பாடலில் ''வான்குருவியின் கூடு'' என்று ஔவையார் குறிப்பிடுவது தூக்கணாங் குருவியின் கூட்டையே யாகும்.

கெட்டவர்களுக்குப் புத்தி சொன்னால், சொன்னவர்க்குத் துன்பமேற்படுமே அல்லாமல், ஒரு பயனுமில்லை, என்பதனை விளக்குவதற்காக குரங்கையும் தூக்கணாங்குருவியையும் சம்பந்தப்படுத்திப் பாடப்பட்ட பாடலொன்று விவேக சிந்தாமணி என்னும் நூலிலே உண்டு.

குரங்கொன்று மழையில் நனைந்து வருந்திக் கொண்டு இருந்தது. மரக்கிளையில் தன்கூட்டுக்குள்ளே பாதுகாப்பாக இருந்த தூக்கணாங்குருவி, குரங்குக்கு வீடுகட்டி வாழும்படி புத்தி சொன்னதாம்.

கோபங்கொண்ட குரங்கு மரத்திலே பாய்ந்து ஏறித் தூக்கணாங்குருவியின் கூட்டைப்பிய்த்தெறிந்து நாசஞ் செய்ததாக அப்பாடல் சொல்கிறது.

**வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்**
**தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்**
**ஞானமும் கல்வியும்! நவின்ற நூல்களும்**
**ஈனருக்கு உரைத்திடில் இடர தாகுமே.**

தூக்கணாங்குருவியின் கூடு, எவ்வளவு அழகாக, அற்புதமானதாக இருக்கின்றதோ, அதை விட அற்புதமானதொண்றுண்டு, தனது கூட்டுக்குள்ளே வெளிச்சம் இருப்பதற்காகத் தூக்கணாங்குருவி கையாண்ட முறைதான் அது.

தூக்கணாங்குருவி தனது கூட்டிற்குள் வெளிச்சம் வருவதற்காகக் கையாண்ட முறையைக் கண்ட புலவர்கள் பெரிதும் ஆச்சரியப்பட்டனர்.

''புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்'' எனக் கம்பன் பாடுவதற்கு ஏற்பப் புலவர்களும் அப்புதுமையைப் பல்வேறு விதமாகவும் பாடத் தொடங்கி விட்டனர்.

தூக்கணாங்குருவிகள் தமது கூடுகளுக்குள்ளே வெளிச்சத்தை எப்படி ஏற்படுத்துகின்றன தெரியுமா?

பச்சைச் சாணத்தில் அல்லது களிமண்ணில் சிறிதளவை எடுத்துக் கொண்டு வந்து கூட்டுக்குள்ளே ஒட்டி வைத்து விட்டு மின்மினிப் பூச்சியைப் பிடித்து வந்து அதிலே பொருத்தி விடுகின்றன.

முதன் முதல் தம் இருப்பிடத்திற்கு வெளிச்சத்தை ஏற்படுத்திய உயிரினமாக தூக்கணாங் குருவியைத்தான் சொல்லலாம் போல் தெரிகின்றது.

இந்த விடயத்தைக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் ஒருவிதமாகக் கையாளுகின்றான். தனது இராமாயணத்துப் பாலகாண்டத்தில் கோசலநாட்டின் வளத்தைப்பாடவந்த கம்பன் கோசல நாட்டுக் குப்பைமேட்டின் சிறப்பின் மூலம் தன் எண்ணத்தை ஈடேற்றுகிறான்.

கோசல நாட்டுக் குப்பைமேடுகளிலே மேய்கின்ற கோழிகள், தமது கால்களால் குப்பைகளைக் கிளற அங்கே மாணிக்கக் கற்கள் கிடந்து ஒளி வீசுகின்றனவாம்.

கவனிப்பாரற்றுக் குப்பைக்குள் கிடக்கும் பெறுமதி வாய்ந்த மாணிக்கக் கற்களை மின்மினிப் பூச்சிகள் என நினைத்துத் தூக்கணாங்குருவிகள் தூக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போய்த் தம் கூட்டுக்குள் வைக்கின்றனவாம்.

**சூட்டுடைத் தலைச் செந்நிற வாரணந்**
**தாட்டுகணைக் குடையத் தகை சான்மணி**
**மேட்டி மைப்பன மின்மினி யாமெனக்**
**கூட்டி னுய்க்குங் குரீகியின் குழாமரோ.**

தூக்காணங்குருவி மழைக்கால இருட்டைப் போக்குவதற்காக மின்னலாகிய மின்மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தன் கூண்டுக்குள் வைக்கும் என்று அதீதமான ஒரு கற்பனையைக் கார்காலத்தை வர்ணிக்கும் பாடலொன்றில் பாடுகிறார் பிற்காலப் புலவரொருவர்.

**கன்னலெனுஞ் சிறுகுருவி**
**ககனமழைக் காற்றாமல்**
**மின்னலெனும் புழுவெடுத்து**
**விளக்கேற்றும் கார்காலம்**
**மன்னவனாம் தென்மதுரை**
**மாவலிவா ணனைப் பிரிந்திங்**
**கென்னபிழைப் பென்னவிருப்**
**பென்ன நகைப் பின்னமுமே.**

இப்பாடலில் கன்னல் எனும் சிறு குருவி எனப் புலவர் குறிப்பிடுவது தூக்கணாங்குருவியையேயாகும். மட்டக்களப்பு நாட்டார் பாடலொன்றில்.

கன்னக் கிரான் குருவி
கடும் மழைக்கு ஆற்றாமல்
மின்னி மின்னிப் பூச்செடுத்து
விளக் கேற்றும் கார்காலம் எனவருவதையும் ஒட்டி நோக்கலாம்.

கந்தப்புராணத்தைப் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் இந்த விடயத்தை இருண்டு வகையாகக் கற்பனை பண்ணிப் பொருத்திக் காட்டுகிறார்.

வள்ளியம்மை திருமணப்படலத்தில் வருகிறது ஒன்று. வள்ளியம்மை தினைப்புனத்தைக் காவல் செய்து கொண்டிருக்கின்றார்.

கலியுகவரதனாம் கந்தப்பெருமானின் இச்சைக் குகந்தவராகிய வள்ளியம்மையின் தராதரம் புரியாத காட்டு வேடர்கள், அவரைக் கொண்டு போய் தினைப்புனங் காக்க வைத்திருக்கிறார்களே என்று கவலைப்பட்டுக் கோபப்பட்டு பாட்டுப் பாடுகிறார். கச்சியப்பர்.

காட்டிலே எளிதாகக் கிடைத்த ஒரு மாணிக்கத்தை அதன் பெறுமதி அறியாத தூக்கணாங்குருவி கொண்டு போய், ஒரு மின்மினிப் பூச்சியாக நினைத்துக் கூண்டுக்குள்ளே உள்ள இருள்போக்க வைத்தது போல இருக்கின்றது இச்செய்கை என்கிறார் கச்சியப்பர்.

காட்டில் எளிதுற்ற கடவுள்மணி யைக்கொணர்ந்து
கூட்டில் இருளோட்டக் குருகுய்த்த வாறன்றோ.
தீட்டுசுடர் வேற்குமரன் தேவியாம் தெள்ளமுதைப்
பூட்டுசிலைக் கையார் புனங்காப்ப வைத்ததுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சியப்பரின் அடுத்த கற்பனை மிகவும் அற்புதமானது. கந்த புராணத்தில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்ற கற்பனை அது.

முருகப் பெருமானின் தம்பியாகிய வீரவாகுதேவர் முருகப் பெருமானின் தூதுவனாக, வீரமகேந்திரபுரிக்குச் சூரபன்மனிடம் செல்கிறார்.

வீரமகேந்திர புரியின் அழகைப் பார்த்து வியப்படைகின்றார். இவ்வளவு அழகான வீரமகேந்திரபுரி அழிந்து நாசமாகப் போகிறதே என்ற அவலம் அவருள்ளத்தை அரிக்கிறது.

வீரமகேந்திரபுரி அழிந்து போகக் காரணம், தேவர்களைச்சூரபன்மன் பிடித்து வந்து சிறைவைத்திருப்பதுதான் என்று எண்ணுகின்றார் அவர்.

இப்பொழுது அவருக்கு ஒரு காட்சி தென்படுகிறது வீரமகேந்திரபுரி அழகிய அற்புதமான ஒரு தூக்கணாங்குருவிக்கூடாகவும், சூரபன்மன் அந்த வீர மகேந்திரப்புரியைக் கட்டிய தூக்கணாங்குருவியாகவும் தெரிகிறது.

அவருக்கு சிறையிலுள்ள தேவர்கள் கூட்டுக்குள் வைக்கப்பட்ட நெருப்புக் கொள்ளிக் கட்டைகளாகத் தெரிகிறது.

இப்பொழுது அவருக்கு ஒரு அப்பாவித் தூக்கணாங்குருவியின் செய்கை ஞாபகத்திற்கு வருகின்றது.

ஒரு அப்பாவித் தூக்கணாங்குருவி, தனது அழகிய வீட்டிற்குள் வெளிச்சம் வேண்டும் என்பதற்காக, மின்மினிப் பூச்சியைப் பிடித்துக் கொண்டு வருவதாக நினைத்து, நெருப்புக் கொள்ளியைத் தூக்கிக் கொண்டு வந்து கூட்டிற்குள் வைத்து விட்டதாம்.

அந்தச் சிறு நெருப்புக் கொள்ளியால் கூடும் எரிந்து குஞ்சுகளும் எரிந்து தானும் எரிந்து போனதாம்.

இதே செய்கை தான் தேவர்களாகிய நெருப்புக் கொள்ளிகளைச் சூரபன்மனாகிய கூட்டிற்குள் கொண்டு வந்து வைத்த செய்கை. இதனால் வீரமகேந்திர புரியோடு சூரபன்மனும் அவனது சுற்றமும் அழிந்து போகக் போகின்றன, என்று அருமையாகப் பாடுகிறார். கச்சியப்ப சிவாச்சாரியார்.

**மெய்ச்சோதி தங்கு சிறுகொள்ளி தன்னை**
**விரகின்மை கொண்ட குருகார்**
**கச்சோத மென்று கருதிக் குடம்பை**
**தனிஷய்த்து மாண்ட கதைபோல்**
**அச்சோ எனப்பல் இமையோரை ஈண்டு**
**சிறைவைத்த பாவம் அதனால்**
**இச்சூர பன்மன் முடிவெய்து நாளை**
**இதனுக்கொர் ஐய மிலையே.**

இங்கே கச்சோதம் என்பது மின்மினிப் பூச்சியையும், குருகு என்பது தூக்கணாங்குருவியையும் குறிக்கும் சொற்கள்.

புலவர்கள் தாங்கள் காணுகின்ற அறுபுதங்களை எங்கெங்கே கொண்டுபோய், எதெனோடெல்லாம் பொருத்திப் பார்த்துப் பாடுகிறார்கள் என்பதைப் பார்க்கும் போது அற்புதமாக இருக்கிறதல்லவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஜந்தா இந்தியாவின் மகராஷ்திரா மாநிலத்தில் (முன்னாள் ஐதராபாத் சமஸ்தானத்தில்) ஔரங்கபாத் என்னும் இடத்தில் இருந்து 65 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. கோட்டைச் சுவர்களைப் போல் உயர்ந்து நிற்கும் மலைத் தொடர்கள் பிறைச் சந்திர வடிவில் வளைந்து காணப்படுகின்றது. இம்மலைகளுக்கிடையே ''வாகோரா'' என்னும் நதி வெகு ஆழத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. கிழக்கு மேற்காக அமைந்துள்ள அம்மலைகளின் வலது பக்கத்தின் தொடரிற் தான் அஜந்தா குகைகள் 29 உள்ளன.

# அஜந்தா ஓவியங்கள் – ஒரு நோக்கு

இக்குகை 7ம் நூற்றாண்டு வரையான காலத்தில் வெட்டப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது. குகைகள் வெட்டிச் சித்திரம் வரைவதற் கென்றே இத்தகைய வசதியான ஒரு சூழ்நிலையை பாதுகாப்பான ஒரு பகுதியை ரகசியமான ஓர் இடத்தை இயற்கை உலகிற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அடுக்கடுக்கான பூவிதழ்களுக்குள்ளே பூவின் இதயத்துள் மறைந்து கிடக்கும் வேதனை போல் அடுக்கடுக்கான மலைத் தொடர்களுக்குள்ளே, யாராலும் எளிதில் அண்டிவிட முடியாத ரகசிய குகைகளின் இதயத்தில் அஜந்தா சித்திரங்களும் மறைந்து கிடக்கின்றன. நிறையப் பாரிஜாத மலர்கள் சூழ்ந்த இயற்கை அரண் ஆகும். ஆயிரம் ஆண்டு காலம் மலைகளுக்குள் மறைந்து கிடந்த இந்த இடத்தைக் கடந்து நூற்றாண்டிற் தான் பிரித்தானிய ஆட்சியைச் சேர்ந்த மதராஸ் ராணுவத்தினர் தற்செயலாக கண்டு பிடித்தனர்.

இக்குகைகளில 9, 10, 19, 26, 29ம் இலக்கக் குகைகள் தாதுகோபங்களாகவும் ஏனையவை விகாரைகளாகவும் கருதப்படுகின்றன. சமயப்பிரிவில் நோக்கும் போது 8, 9, 10, 12, 13, குகைகள் ஹீனாயானா பௌத்த (தேரவாத பௌத்தம்) பிரிவுக்குரியன இது கி.மு. 200 - கி.பி. 200 வரையில் வெட்டப்பட்டவை. ஏனையவை மகாஞான பௌத்தத்திற்கு உரியன.

**சாரூபா சரவணபவான்,**
**சித்திரமும் வடிவமைப்பும், நுண்கலைத் துறை யாழ் பல்கலைக்கழகம்.**

10வது குகையே மிகப் பழைமையானது. 6, 7, 11ம் இலக்ககுகைகள் கி.பி. 450 - கி.பி. 500ம் ஆண்டு வரை வெட்டப்பட்டவையாகும். 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26ம் இலக்க குகைகள் கி.பி. 5ம் நூற்றாண்டிற்கும் கி.பி. 6ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவையாகும். 1, 2, 3, 4, 13ம் இலக்க குகைகள் கிபி. 6ம் - 7ம் நூற்றாண்டிற்கு இடைப்பட்டவை ஆகும். சாதவாகனர், குஷானர், குப்தர், வாகாடகர் ஆகிய அரச பரம்பரையினர் குகைகளில் 1ம், 2, 9, 10, 16, 17ம் இலக்க குகைகள் புகழ் பெற்றவையாகும். இக்குகைகள் பௌத்த சம்பந்தமான ஜாதகக் கதைகள், புத்தரின் வரலாற்று நிகழ்வுகள் போன்றவை ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. ஈரச்சுதை உலர்சுதை ஆகிய இரு முறைகளிலும் ரேகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கீழைத்தேச பாணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையப்பட்டுள்ளன. நீண்ட விரல்கள், ஒடுங்கிய இடை, திரண்ட மார்பகங்கள், காதளவிற்கு நீண்ட கண்கள் போன்றவை இவ் ஓவியங்களின் சிறப்பாகும். இவ்ஓவியத்தைப் பின்பற்றியே இலங்கையில் சிகிரியா ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. செங்காவி, மஞ்சள் காவி, புகைக்கறுப்பு நீலம் வெள்ளை போன்ற வர்ணங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இப்போது ஈரச்சுதைமுறை அதாவது ''பிரெஸ்கொ'' (FRESCO) ஓவியங்கள் சுவர்களில் பூசப்படும்சுண்ணாம்பு காயுமுன் ஈரமாக இருக்கும்போது அதன்மீது வரையப்படும். இத்தாலிய தேசத்தில் தான் இந்தமுறையை முதல் கையாண்டனர். அக்காலத்தில் இந்தியாவிலும் இதரஆசிய நாடுகளிலும் ''மியூரல் பெயிண்டிங் முறைதான் கையாண்டார்கள். இது சுண்ணாம்புப் பூச்சு உலர்ந்த பிறகு வரையும் சித்திரங்களை மியூரல் அதாவது உலர்சுதை சித்திரங்கள் என்பார்கள்.



முதலில் குகைக்குள் போனதும் தோன்றுவது கறுப்பு வர்ணம் தான் அதாவது இருட்டாக தெரியும் சற்று நேரத்திற்குப் பின் இருட்டு கண்ணுக்குப் பழக்கமானதும் சுவரில் இருந்த சித்திரக் காட்சிகள் ஒவ்வொன்றாக தெரியும் அரண்மனைகள் ஒவ்வொன்றாக தெரியும். அரண்மனைகள், அந்தப்புரங்கள், அரசர்கள் இராணிகள் முனிவர்கள், ஊர்வலங்கள் யானை, சேனை, பரிவாரங்கள், பிராணிகள் பறவைகள் வாத்தியக் கோஷ்டிகள், நந்தவனங்கள் புஷ்பங்கள் முத்துமாலைகள், ரத்தினக் கீரிடங்கள், கந்தர்வ ஸ்திரிகள், நாட்டியப் பெண்கள், பெண்களின் விதம்விதமான கொண்டைகள், அணிகலன்கள், தலை யலங்காரங்கள்!..... அளவிட முடியாதது. அஜந்தாவைப்பற்றி நேருஜி கூறியதாவது., ''சரித்திரம் என்பது ஏட்டிலே உள்ள பழங்கால நிகழ்ச்சி என்றும் நம்மையும் அதையும் நீண்ட நெடுங்கால இடைவெளி பிரித்து வைத்திருப்பதாகவும் எண்ணிக் கொண்டிருக்கிறோம். அல்லவா? அந்த எண்ணத்தை அஜந்தா சித்திரங்கள் மாற்றி விடுகின்றன. சரித்திரம் அங்கே உயிருள்ள நிகழ்ச்சியாக மாறி நம்கண்முன் நடப்பது போல் தோன்றுகின்றது!''

கரடு முரடான இக்குகையை முதலில் அம்மி பொழிவது போல் பொழிந்து கொண்டார்கள். அப்புறம் களிமண் மாட்டுச் சாணம் கற்பாறைப் பொடி உமி இவற்றுடன் கோந்தையும் கலந்து ''பிளாஸ்டர்'' செய்து கொண்டார்கள். பற்கள் போல பொளியப்பட்ட பாறைச்சுவர்கள் மீது அந்தப் பிளாஸ்டரை ஒன்றரை அங்குலம் கனத்துக்கு அப்பிச் சமம்படுத்தினர். அதற்கு மேல் கிளிஞ்சல் ஒரு கனத்துக்கு சுண்ணாம்பைப் பூசினர் வழவழப்பான அந்தச் சுண்ணாம்பு மீது தான் சைத்திரிகர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் தூரிகைகளால் 'அவுட் லைன்' காட்டிக் கொண்டு வண்ண ஜாலங்களைச் செய்திருக்கின்றார்கள். தற்போது அதனுள் மின்சார விளக்குகள் உண்டு அதனுள் சில பாதிக்கப்பட்டு அழிந்த நிலையில் உள்ளன. அதைத் தவிர மற்ற இடங்களில் தெரிந்த சித்திரங்களும் வர்ணங்களும் இன்று வரைந்தவை போன்று புத்தம் புது மேனியுடன் புது மெருகு குலையாமல் பளிச்சிட்டன. அக்காலத்தில் இவ் இருண்ட குகையுள் வெளியிலுள்ள சூரிய ஒளியைக்கு கைக்குள் பிரதிபலிக்கச் செய்யும் சாதனங்களைக் கையாண்டிருக்கலாம்.



முதல் விஹாரத்துக்குள் சிபிச் சக்கரவர்த்தி புறாவைக் காப்பாற்றும் நிகழ்ச்சி புத்தரின் ஜாதகக் கதைகளில் ஒன்றாக மாறிக் காட்சி தருகிறது. அத்துடன் இங்கே மகா ஜனகஜாதகக் கதைகளும் மறக்க முடியாத ஓவியக் காட்சிகளாகத் திகழ்கின்றன. சித்திரங்கள் பல இடங்களில் அடைஅடையாகப் பெயர்ந்து விழுந்து போயிருப்பது மிகுந்த மனவேதனையைத் தருகிறது இதன் எதிர்ப்பக்கத்தில் உள்ள வர்ணச் சித்திர மடலில் காணும் 'ஒரு ராஜ வரவேற்பு' எனும் சித்திரம் கற்பனை நயத்துடனும் செய்திருப்பது அழகாகவும் வியக்கத்தக்கது.

1ம் குகையில் நாம் காணக்கூடிய ஓவியங்களில் மிகமிக முக்கியமானவை. போதி சத்துவ பத்மபாணியும், வஜ்ரபாணியும் ஆகும். அடுத்து "Dark Princess" எனப்படும். கருமை நிறம் படைத்த ஓர் இராணியின் தோற்றம் நிறம் கறுப்பாக இருந்த போதிலும் அந்த இராணியின் முகத்தில் காணும் வசீகரம் அணிந்துள்ள ஆபரணங்களின் பளபளப்புகளையும் சொல்லுதல் சாத்தியமில்லை கருவறையில் காணும் புத்தர் பிரானின் சிற்பம் அஜந்தா சிற்பங்களுக்குள்ளேயே மிக உயர்வானது எனக் கருதப்படுகின்றது. இங்குள்ள புத்தரின் முகத்தில் மூன்று விதமான தோற்றங்களைப் பார்க்க முடிகிறது. வலது பக்கத்திலிருந்து மின்சார ஒளியைச் செலுத்தினால் முகம் முழுவதும் புன்னகை தவழ்கிறது. இடது பக்கத்தில் இருந்து செலுத்தினால் முகத்தில் துறவி மனப்பான்மை தெரிகிறது. நேரிடையாக எதிரில் சென்று செலுத்தினால் தவக் கோலங்கள் நிஷ்டையில் இருப்பது போல கருணையே வடிவமாக காட்சிதருகிறார். இத்தகைய அற்புத சிற்பங்களையும் சித்திரங்களையும் உருவாக்கிய கலைஞர்கள் யாரோ! இது 2ம் புலிகேசி காலத்தில் வெட்டப்பட்டது. அஜந்தா குகைக்குள் 16 குகைச் சித்திரங்களே எஞ்சியுள்ளன. 1, 2, 16, 17, 19ல் மட்டுமே அதி சிறந்த சித்திரங்களைக் காணமுடிகிறது.

புத்தரின் கடைசி அவதாரக் காட்சியை இரண்டாவது குகையில் சித்தரித்தி ருக்கிறார்கள். புத்தரின் தாயார் மாயாதேவி தன் உடலுக்குள் ஆறு தந்தங்களுடைய யானை ஒன்று புகுந்து விட்டதாக கனவு காண்கிறாள். அவள் வயிற்றில் உத்தம புத்திரன் தோற்றம் பெறுகிறான் என்பதற்கு அறிகுறியே இந்தக்கனவு என்று கூறப்படுகிறது. அடுத்தாற் போல் குழந்தை புத்தர் தாமரை மலர்மீது நடப்பது போலவும் அந்தக் குழந்தைக்கு இந்திரன் குடை பிடிப்பது போலவும் ஒரு காட்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே குகையில் இன்னொரு இடத்தில் புஷ்பங்களும் பழங்களும் அடங்கிய தட்டுக்களைக் கையில் ஏந்திக் கோயிலுக்குச் செல்லும் பெண்களும் பின்னணியில், வாழை மரங்கள் தெரிகின்றன. இந்த காட்சியை பார்த்துக் கொண்டு நிற்கும் போது விளக்கை அணைத்து இருட்டில் பார்த்தால் என்ன ஆச்சரியம்! அந்தச் சித்திரப் பெண்கள் உயிர் பெற்றுச் சுவரிலிருந்து பெயர்ந்து எழுந்த எம்மை நோக்கி மெதுவாக நகர்ந்து வருவது போல இருக்கும் இத்தகைய பெண்ணுருவத்தை புத்த பிக்குகள் வரைந்திருப்பார்கள் என்று நம்ப முடியவில்லை. இவற்றை இல்லற வாழ்க்கையை அனுபவித்தவர்களும் உலக வாழ்க்கையோடு ஒட்டியவர்களுமே வரைந்திருக்க முடியும்.

16ம் குகையில் இராணி சுந்தரி சோகமே வடிவமாக அமர்ந்திருக்கும் காட்சியைக் காணும் போது நம் உள்ளம் நெகிழ்கிறது. புத்தரின் ஒன்று விட்ட சகோதரனான நந்தா தவக்கோலம் பூண்டு பிட்சுவாக மாறி விடுகிறார். இந்தச் சேதியை அறிந்த சுந்தரி கணவனைப் பிரிந்த சோகத்தில் மயக்க முற்றுக்கிடக்கிறாள். இந்தச் சித்திரமும் 17வது குகைப் பெண்ணொருத்தி முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்துக் கொண்டு ஒப்பனை செய்து கொள்ளும் காட்சியும் அஜந்தா சித்திரங்களின் மாஸ்டர் பீஸ் என்று மேலை நாட்டு ஆர்ட்கிரிடிக்குள் கூறுகிறார்கள்.

கலை உணர்ச்சி அற்ற மூடர்கள் சில இடங்களில் சித்திரங்களின் மீது கூரிய ஆணிகளாலும் கற்களாலும் தாறுமாறாக கிறுக்கிப் பாழ் படுத்தியிருக்கிறார்கள். சிலர் சித்திரங்கள் அழிந்தாலும் தம் கையெழுத்து அழியாத படி அவர்களுடைய பெயரை ஆழமாக எழுதி வைத்துள்ளனர்.

அந்தச் சித்திரங்களிலே உள்ள உணர்ச்சிமயமான உருவங்கள், காணுமிடமெங்கும் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் புத்தர் பிரானின் பல்வேறு பாவங்கள், மண்டபங்களின் மேல் தளங்களில் பளபளக்கும் சித்திர விசித்திரமான பூக்கோலங்களின் கவர்ச்சி, அஜந்தா அழகிகள் என்று உலகப் புகழ் பெற்ற பெண்ணின் கூந்தல் அலங்காரங்களே என்று சொல்லியியலாத ஓவியங்கள்.

சித்திரங்கள் மட்டும் அஜந்தாவில் இடம் பெறவில்லை சிற்பங்களும் அவற்றுள் போட்டி போடுகின்றன. சுருங்கச் சொன்னால் உளியும் தூரிகையும் அங்கே கைகோர்த்து விளையாடுகின்றன!

1வது குகையில் தர்மச்சக்கர முத்திரையுடன் புத்தர்சிலையெனினும் புத்தரின் வாழ்க்கை வரலாறு வாழ்க்கைச் சம்பவங்களான புத்தரும் மனைவியும் அமைந்த காட்சி, புத்தர் தவம் செய்யும் போது மாறன் என்பவன் தன்னுடைய இளம் புதல்வியர்களை அனுப்பி மேனியழகைக் காட்டி புத்தரை மயக்க முயலும் காட்சி, நந்தன் துறவு பூணுதல், புத்தர் பல்வேறு மாய உருவங்களில் காட்சிதருதல். மற்றும் சிபி ஜாதகம், சங்குபால ஜாதகம், மகாஜானக ஜாதகம் சாம்பேய ஜாதகம் போன்றவையும் பிண்ணனியில் கமுகு மரங்களில் குரங்குகள் குதித்து விளையாடல் ஆண் பெண் மயில்கள் காதல் காட்சிகள் போன்றவை காணப்படுகிறது. 2வது குகையில் போதி தத்துவர் தத்துவத்தைச் சித்தரிக்கும் நீண்ட ஓவிய அணிகள், ஹம்சஜாதகம், விதுரபண்டித ஜாதகம், குரு ஜாதகம், கசாந்தி ஜாதகம் பூரண என்பவரை புத்தர் தன் வழிப்படுத்தும் காட்சியும் புத்தரின் ஆயிரம் வர்ண ஓவியங்களை கொடையாக அளித்ததாகக் கூறும் பட்டயமும் காணப்படுகிறது. 10வது குகையில் ஓர் அரசன் பத்துப் பெண்களுடன் போதிமரத்தை வழிபடும் காட்சி ஓர் அரசன் பத்துப் பெண்களுள் போதி மரத்தைச் சுட்டிக்காட்டி ஏதோ கூறும் காட்சி ஷட்தநிதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாதகம் (அறுகோட்டி யானையின் கதை) போன்றவை காணப்படுகின்றன. 16வது குகையில் தூங்கும் மாதின் உருவம் புத்தரின் மூன்று உருவங்கள் நந்தன் எனப்படும். அரசனின் வாழ்க்கை வரலாறு தேவமாதர்கள் (அப்ரசா) அஸ்திஜாதகம், மகாஉம்பசிக ஜாதகம், சுத்தமோ ஜாதகம் போன்றவை காணப்படுகிறன. 17வது குகையில் 7 உருவங்களில் புத்தர் தீட்டப்பட்டுள்ளார். காற்றில் பறந்து செல்லும் அழகிய தேவதைகள், தேவதத்தன் புத்தர் மீது யானை ஏவுதல், விஜயனின் இலங்கை வருகை புத்தர் மனைவியிடமும் மகனிடமும் பிச்சை ஏந்துதல் மகாசபிஜாதகம் சரபமிக ஜாதகம், சிம்மல அவதாரகதை போன்றவை இரண்டு எருதுகள் சண்டையிடல் இரண்டு யானைகள் சண்டையிடல் போன்றனவும் காணப்படுகின்றன. 16ம், 17ம் குகை ஓவியங்கள் இலங்கை சிகிரியா ஓவியங்கள் வரையப்பட்ட காலத்தில் வரையப்பட்டவையாகும்.

பழைய நாகரிகங்களும் அவற்றை ஓவியங்களில் பிரதிபலிக்கச் செய்த கலைஞர்களும் மறைந்து விட்டனர். ஆனாலும் அஜந்தாவால் அவர்கள் வரைந்த சித்திரங்களும் வடித்த சிறபங்களும் இன்னமும் முரசு கொட்டி ஒலிக்க இருக்கின்றன.

# கல்வியின் தேசியக் குறிக்கோள்கள்

எஸ். ரஞ்சன் செல்வகுமார்.

தேசிய ஐக்கியம், ஒருமைப்பாடு, பிணைப்பெனும்
திரவியம் மூன்றும் தேடி அடைதல்;

சர்வ வியாபகம் கொண்டு விளங்கும்
சமூக சேவை சீராய் நிறுவல்;

நிலைபேறான வாழ்க்கைப் பாங்கும் முறையும்
நிறைவாய் வடிவம் பெறவழி சமைத்தல்;

நிறைவும் மதிப்பும் (இ)லட்சிய தாகமும்
நிறைவாய்த் திருப்திசெய் தொழில் பல படைத்தல்;

மனிதவள அபிவிருத்திப் பணிதனில் யாவரும்
மனம் மொழி மெய்யால் முனைப்புடன் பங்காற்றல்;

நாட்டைக் கட்டும் நலமுறுபணியினில் நாமும்
நாளும் பரஸ்பரம் அக்கறை காட்டல்;

நாளும் பொழுதும் நாற்புறமும் தோன்றும்
நானாவிதமாம் மாற்றந்தனுக்குத் தகவுறுதிறனை வளர்த்தல்;

சிக்கல்மிக்க திடீர் சவால்கள் மற்றும்
சீற்றங்களுக்கும் முகந்தரு தகைமைகள் வளர்த்தல்;

சர்வதேச சமூகம் நடுவே நந்தேசம் மிடுக்காய்
செருக்காய்த் தனக்காய் ஓரிடம் பிடித்திட உழைத்தல்;

தேசிய கல்வி ஆணைக்குழு வகுத்த
தேடற்கரிய நவ தேசியக் குறிக்கோளாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்குப் பெருமை சேர்த்த தமிழ் முஸ்லிம் அறிஞர்கள்

**நாமகள் சின்னத்துரை**

**க/கண்டி விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயம்**

''தமிழுக்கும் அமுதென்று பெயர் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' ''தமிழ்'' என்ற மூன்றெழுத்திலே, இயல், இசை, நாடகம் அடங்குகின்றது. இந்த இன்பத்தமிழை வளர்த்துக் காத்த பெருமை தமிழ், முஸ்லிம் அறிஞர்களைச் சாரும் எனில் அது மிகை ஆகாது.

தமிழை வளர்த்த அறிஞர்கள் என்னும் போது சங்ககாலம் தொட்டு இன்றுவரை உள்ளவர்களைக் குறிப்பிடலாம். தமிழ் நாட்டிலே பாடலி புரத்திலும், தென்மதுரையிலும் சங்கமமைத்து தமிழ் வளர்த்தவர்கள் நம் அறிஞர்கள். முதல், இடை, கடை என முச்சங்கங்கள் இருந்ததாகவும், காலநிலை பாதிப்புக்களாலும் கடல் கொண்டதனாலும் அவை அழிவுபட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. அந்த சங்கங்களில் கடைச்சங்க கால அறிஞர்களாக ஈழத்துப் பூதந்தேவனார். பரிமேலழகர், நச்சிநார்க்கினியன், கபிலர், நக்கீரர், அகத்தியர், முரஞ்சியூரர், காளமேகம், ஒட்டக்கூத்தரைக் குறிப்பிடலாம். இவர்களோடு தமிழை வளர்த்த அறிஞர்கள் என, கம்பர், வள்ளுவர், இளங்கோ, சீழ்தலை சாத்தனார், ஔவை முதலியவர்களையும் குறிப்பிடலாம். மேற் சொன்ன அறிஞர் பெருமக்கள், அரும் பொக்கிஷங்களான இலக்கண இலக்கிய நூல்களை எமக்கு அளித்தனர். அவை இன்றும் எமக்கு நல்ல தெள்ளமுதாக விளங்குகின்றன.

சங்கத் தமிழ் நூல்களாக

'' நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்தபதிற்றுப்பத்து ஓங்கபரிபாடல், கற்றறிந்தார் ஏற்றும் கவியே அகம் புறம் என்று, இத்திறந்த எட்டுத் தொகை என்ற வெண்பாவால் அறிய முடிகின்றது. இவை அகத்திணை, புறத்திணை, மக்கள் வாழ்வு, வீரம், கொடை, போர், காதல் என்பவற்றை எமக்கு எடுத்தியம்புகின்றன. இனி கீழ்வரும் பாடலை நோக்கின்

**'' முருகு பெருநாறூறு பன்னிரெண்டு முல்லை**
**பெருவள மதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோ நெடுநல் வாடை கோல் குறிஞ்சிப் பட்டினப்**
**பாலை கடாத் தொடும் பத்தும்.''**

இவை பத்துப்பாட்டு நூல்கள் என நாம் அறியலாம் இவை மக்கள் வாழ்வையும் அவர்தம் இன்பதுன்ப நிகழ்வுகளை எடுத்துக் கூறுகின்றன. இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்போரையும் கேட்போரையும் தன்பால் ஈர்க்கக் கூடிய தெள்ளமுதாக உள்ளன. இவற்றை விட ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை என்பனவும் காணப்படுகின்றன. இவற்றை விட பதினெண் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்களையும் அறிஞர் பெரு மக்கள் அளித்துள்ளனர். திருக்குறள் திருவள்ளுவர் தந்த தெய்வத்திருமறை, கம்பர் தந்த வடமொழி மொழி பெயர்ப்பு கம்பராமாயணம், வியாசர் அருளிய மகாபாரதம் இவை மட்டுமா திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்ற மருத்துவ நூல்கள் நாயன்மார்கள், ஆழ்வார்கள், அருணகிரிநாதர், காரைக்கால் அம்மையார், கச்சியப்பர் தந்த பக்தி இலக்கியங்கள், ஔவை தந்த ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்பனவும் உள்ளன.

இனி நாம் தமிழுக்குப் பெருமை சேர்த்த, எமது தாய்த்திரு நாடாம் ஈழநாட்டு அறிஞர்களைப் பார்ப்போம். இவர்களில் தலை சிறந்தவர்களாக விளங்கியவர்கள் ஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்த அடிகள், நவாலியூர் சோம சுந்தரப்புலவர், குமாரசுவாமிப்புலவர், சின்னத் தம்பிப்புலவர், சிவை தாமோதரம் பிள்ளை, அறிஞர் கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி, கல்லடி வேலன், அறிஞர் சித்திலெப்பை, சீறாப்புராணம் தந்த உமறுப்புலவர் (இந்தியநாடு) ஏ.எம்.ஏ அலிஸ், மாப்பிள்ளை லெப்பை, ஆலிம் அப்துல்காதர் லெப்பை, பேராசிரியர் ம.மு உவைஸ் போன்ற அறிஞர்கள் மறைந்தும் மறையாதது போல விளங்குகின்றனர்.

இனி நாம் நல்லை நகர் தந்த ஆறுமுகநாவலரைப்பற்றிப் பார்ப்போம் இவர் வாழ்ந்த காலம் 1822-1879 வரையாகும் ''நல்லை நகர் ஆறுமுக நாவலர்பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே" போன்ற அடிகளின் மூலம் அவர் தமிழுக்காற்றிய தொண்டினை நாம் புரிந்து கொள்ளலாம். அன்னியராட்சியிலும் ஆங்கில மோகத்திலும், கிறீஸ்தவ மதமாற்றத்திலும் மூழ்கிக் கிடந்த தமிழ் சமுதாயத்தைத் தட்டியெழுப்பி, தமிழுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் புத்துயிர் ஊட்டியவர், தமிழ், ஆங்கிலம், வடமொழி, சமஸ்கிருதம் ஆகியவற்றை நன்கு கற்று சிறந்த புலமை உடையவராக விளங்கினார். நல்லை சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். சைவதிராவிடபாஷா சங்கத்தை அமைத்து பண்டித வகுப்புக்களை நடத்தினார். இதன் மூலம் பல தமிழ்ப் பண்டிதர்களை உருவாக்கினார். அச்சியந்திரத்தை இந்தியாவிலிருந்து ஈழநாட்டிற்குக் கொண்டு வந்து நூல்களை அச்சேற்றிய பெருமை நாவலர் ஐயா அவர்களையே சாரும் பல சைவ பிரசங்கங்களை நடத்தினார். வினாவிடைமூலம் கேள்விகளை எழுப்பினார். தன் மாணாக்கரைக் கொண்டும் சைவப் பிரசங்கங்கள் நடத்தினார். குழந்தைகளுக்கான பாலர் பாடம், சைவ வினாவிடை, போன்ற நூல்களையும் பிரசுரங்களையும் அச்சிட்டு வெளியிட்டார். அவற்றில் திருவிளையாடற் புராணவசனம், கோயிற் புராண உரை குறிப்பிடத்தக்க சமய நூல்களாம். இவர் வசன நடை கைவந்த வல்லாளர். தமிழ் நாட்டின் திருவாவடுதுறை ஆதின முதல்வராக விளங்கினார். இவரின் சைவ,தமிழ்த் தொண்டைப் பாராட்டி அந்நிறுவனம் ஐயாவுக்கு, ''நாவலர்'' என்ற பட்டத்தை அளித்து கௌரவித்தது. ஐயாவின் உருவச்சிலை இன்றும் யாழில் நின்று அவரை எமக்கு நினைவூட்டுகின்றது.

அடுத்து மட்டக்களப்பு தந்த மகத்தான சுவாமி விபுலானந்த அடிகள். மீன் பாடும் தேனாட்டினில் பிறந்து தேனாகத் தமிழை இசைத்த முத்தமிழ் வித்தகர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனைப் பட்டினத்துக்கு அருகேயுள்ள காரைதீவு அவரின் பிறப்பிடம். 1872ம் ஆண்டு சாமித்தம்பி, கண்ணம்மை தம்பதியருக்கு அருந்தவப் புதல்வனாக வந்துதித்தார். பெற்றோர் இவருக்கு இட்ட இயற்பெயர் மயில்வாகனனார் என்பதாகும். இளமையிலே கல்வியறிவும், அன்பு, அடக்கம், பொறுமை, ஆன்மீக நாட்டமுடையவராக வளர்ந்தார். இளவயசிலே ஆசிரியப்பயிற்சியை முடித்து ஆசிரியராகக் கடமையாற்றினார். மானிப்பாய் இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி, யாழ் சம்பத்தரிசியார். கல்லூரி என்பவற்றில் ஆசிரியராக விளங்கினார். திருகோணமலை இந்துக்கல்லூரியின் அதிபராக விளங்கினார். 1922ம் ஆண்டு இராமகிருஷ்ண மடத்துறவியாகி ''சுவாமி விபுலானந்தர்'' என்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பண்டிதப் பட்டத்தைப் பெற்றார். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கில மொழிகளில் சிறந்த புலமை பெற்று விளங்கினார். அண்ணாமலை, இலங்கைப் பல்கலைக்கழகங்களின் முதற் பேராசிரியராக விளங்கினார். உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டார்.

சமயம், மொழி, பண்பாடு, இலக்கணம் போன்றவற்றில் பல கட்டுரைகளை எழுதினார். சிறந்த செய்யுள் நூல்களை தமிழுக்குத் தந்தார். யுகக் கவிஞன் பாரதியை உலகுக்கு அறிமுகம் செய்தார். விஞ்ஞானப் பட்டதாரியான இவர் பல அரிய ஆங்கில விஞ்ஞான நூல்களை தமிழுக்குத் தந்தார். மட்டக்களப்பு சிவானந்தாக் கல்லூரியை நிறுவினார். 1934ம் ஆண்டு சொல்லாக்கக் கழகம் ஒன்றை பச்சையப்பன் கல்லூரியில் நிறுவினார். கலைச் சொற்கள் என்னும் அகராதியை வெளியிட்டார். வேத நூல், பூத நூல் போன்றவற்றில் தாம் கற்றறிந்த நுணுக்கங்களை எடுத்துக் கூறினார். ''ஈசன் உவக்கும் இன் மலர்கள் மூன்று'' என்னும் நூலை எமக்குத் தந்தார். தமிழ் மக்கள் தேடாதிருந்த பாரதியாரின் பாடல்களை, அண்ணாமலை தமிழ்ச்சங்கத்திற்கு, புலவர் ஒருவரை அழைத்து இசையுடன் பாடவைத்தார். ''யாழ்நூல்'' என்ற இசைத்தமிழ் நூலை எமக்களித்தார். மதங்க சூளாமணி என்ற அருமையான நாடக நூலை எமக்குத் தந்தார். பழைய இசைக்கருவியாம் யாழில் நல்ல பரிட்சயம் உள்ள அவர் அதை உலகுக்கு அறிமுகப்படுத்தினார். சிறந்த உரை நடையாளர், செய்யுள் இயற்றும் ஆற்றலுடையவர். இதனால் இவர் முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்பட்டார் முத்தமிழை ஆராய்ந்து பல கட்டுரைகளை எழுதினார். இத்தகைய புகழ் படைத்த அடிகளார் எமக்களித்த அரும் செல்வங்கள் முத்தமிழேயாகும்.

ஈற்றில் 1947ம் ஆண்டு ஜுலை 19ம் திகதி அன்னார் சமாதி அடைந்தார். இலங்கை அரசாங்கம் அவரின் உருவச்சின்னம் பதித்த முத்திரையை வெளியிட்டு அவரைக் கௌரவித்தது. அவர் இறந்த தினமான ஜுலை 19ம் திகதியை கல்வியமைச்சு அகில இலங்கை தமிழ் மொழிதின விழாவாகக் கொண்டாடுகின்றது. மட்டக்களப்பு சிவானந்தாக் கல்லூரியில் அமரரின் சமாதி காணப்படுகின்றது.

அவரின் தமிழ்த் தொண்டின் அழியாப் புகழாக விபுலானந்த மண்டபம், மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக்கல்லூரி என்பன விளங்குகின்றன. அன்னாரின் பூதவுடல் நீங்கினாலும் புகழ் உடம்பு இன்றும் அழியாது காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி நவாலியூர் தந்த தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர் அவர்களை நோக்குவோம். 1800களில் யாழ்ப்பாணத்தில் உள்ள நவாலி என்னும் ஊரில் பிறந்து தமிழுக்கு அளப்பரிய தொண்டாற்றியவர். இனிக்க இனிக்க பேசுபவர் இளம் பராயம் முதல் 50 ஆண்டுகள் வரை கவிபாடியவர். பாரதியின் தனிச் செய்யுள்களையும் பாடினார். பதிற்றுப் பத்து, நாமகள் புகழ் மாலை, நல்லையந்தாதி போன்ற நூல்கள், குறிப்பிடத்தக்கன. பாடசாலைப் பிள்ளைகளுக்காக இவர் பாடிய ''ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை'' ''கத்தரித்தோட்டத்து வெருளி'' என்பன விசேடமான பாடல்கள் ஆகும். கும்மிப் பாடல்கள், பள்ளு என்பனவும் இவரால் பாடப்பட்டன. இவரது தமிழ் உரை நடை கவர்ச்சியானதாகும். தாத்தாவின் புகழ் இன்றும் நீங்காது நிலைக்கின்றது.

குமார சுவாமிப் புலவர் அவர்கள் சுன்னாகம் தந்த அறிஞராவார். 1922ம் ஆண்டு மாசி மாதம் பிறந்தார். தந்தையார் அம்பலவாணப் பிள்ளை தாயார் சிதம்பர அம்மையார். பண்டிதரான தந்தையாரிடமே முதலில் தமிழைப் பயின்றார். பின்னர் மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் கற்றுத் தேறினார். அதன் பின்பு நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். நாவலர் ஐயா, நீர் வேலி சங்கர பண்டிதர் ஆகியோரின் நன் மாணாக்கராக விளங்கினார் நிகண்டு இவருக்குக் கைவந்தகலை, தமிழில் சூடாமணி என்ற நிகண்டையும் சமஸ்கிருதத்தில் அமரம் எண்ட நிகண்டையும் மனப்பாடமாகச் சொல்லக் கூடியவர். நாவலர் அவர்களிடம் சமஸ்கிருதத்தை ஐயம் திரிபறக்கற்றறிந்தார். தமிழ் இலக்கிய சொல்லகராதியை எழுதினார். இன்நூலில் நாம் எமக்குத் தமிழைத் தந்த எத்தனையோ, புலவர்களைப்பற்றி அறியலாம். முருகேச பண்டிதர் என்பவருக்கு மாணாக்கராக விளங்கினார். ''நம்பியகப் பேருரை, யாப்பருங்கலக்காரிகையுரை, தண்டியலங்காரவுரை'' போன்ற வடமொழி நூல்களை தமிழில் மொழி பெயர்த்துத் தந்தார். இலக்கணநூல், வினைப்பகுபதவாக்கம், இலக்கண சந்திரிகை முதலிய நூல்களையும் தமிழுக்குத் தந்த அறிஞராவார். இவ்வாறாக இவர் தமிழுக்குப் பெருமை சேர்த்தார்.

சின்னத் தம்பிப்புலவர் பல வருடங்களுக்கு முன் நல்லூரிலே வாழ்ந்த கச்சேரி முதலியார் வில்வராயரின் அருமைப்புதல்வராக வந்தவதரித்தார். சின்னத்தம்பிப் புலவருக்கு ஏழு வயதிலேயே கவிபாடும் வல்லமை இயல்பாகவே இருந்தது. பாடசாலைக் கல்வி அவருக்கு எட்டிக்காயாகக் கசத்தது. இதனால் தந்தையாரின் கண்டிப்புக்கும் கோபத்துக்கும் ஆளானார்.

தந்தையைத் தேடிவந்த இந்தியப் புலவருக்கு பாட்டின் அடிகளாலே தங்கள் வீட்டிற்கு வழி சொன்னார். அப்பாடல் பின்வருமாறு அமைகின்றது.

**''பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்**
**நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்- மின்பிரபை**
**வீசுபுகழ் நல்லூரான் வில்வரா யன்கனக**
**வாசலிடைக் கொன்றை மரம்.''**

புலவர் மூலம் மகனின் பாடலைக் கேட்ட வில்வராயர் மனம் மகிழ்ந்தார் இவரின் இயல்பாகவே கவிபாடும் திறனுக்கு எடுத்துக்காட்டாக இன்னொரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். தந்தையார் பாடிய பாடலின் மிகுதியடிகளை அவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிமுடித்தார். இதனை அறிந்த தந்தையார் மகனைப் பாராட்டி அன்புகொண்டார். கரவெட்டியில் வாழ்ந்த தந்தையாரின் நண்பர் வேலாயுத முதலியார் மீது "கரவை வேலன் கோவை" என்னும் நூலைப்பாடி பரிசுபெற்றார். கல்வளை விநாயகர் மீது கல்வளையந்தாதி பாடினார். அரசகேசரி, மறைசையந்தாதி பறாளய் விநாயகர் பள்ளு என்பவற்றைப் பாடினார். இந்த அறிஞர்கள் வரிசையிலே கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி சி.வை தாமோதரம்பிள்ளை, கல்லடி வேலுப்பிள்ளை போன்ற அறிஞர்களையும் நாம் உள்வாங்கிக் கொள்வோமாக.

இனிநாம் மட்டுவில் தந்த பண்டிதமணி ஐயா சி.கணபதிப்பிள்ளை அவர்களைப் பற்றிப் பார்ப்போம். மட்டுவில் கிராமத்தில் 1899ம் ஆண்டு ஆனி 27ம் திகதி பிறந்தார். ம.க. தேவகப்பிள்ளை, அவர்களுடன் சந்திரமௌலீஸ்வரர் வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வியைப் பயின்றார். பின்பு சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி பயின்றார். கல்வியல் குமாரசுவாமிப்புலவர், த. கைலாசபிள்ளை ஆகியோரிடம் கல்வி பயின்றார். 1926ம் ஆண்டு மதுரை தமிழ்ச்சங்க பண்டிதர் பரீட்சையில் சித்தி எய்தினார். 1929இல் திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக்கலாசாலையின் கடமையை ஏற்று 30 ஆண்டுகள் பணிபுரிந்தார்.

பண்டித மணிஐயா வளர்த்தெடுத்தவை சமயமும் தத்துவமும், சமூகமும் பண்பாடும், இலக்கிய இரசனை என்பனவாம். சித்தாந்த உட்பொருள் விளங்க பல கட்டுரைகளை எழுதினார். அத்துவைத சிந்தனை, கந்தபுராண கலாச்சாரம், கந்தபுராண போதனை போன்ற நூல்களை எழுதினார். பொன்னம்பலப்பிள்ளை அவர்களின் இலக்கிய நயத்தை பண்டிதமணி ஐயா மக்களுக்கு எடுத்தியம்பினார். இலக்கியவழி தந்தார். தமிழ்ப்புலவர் பலரின் சொல்நயம், பொருள்நயம் மிக்க கருத்துக்களை எடுத்துரைத்தார் அவரது ஈழநாட்டுப்புலவர்கள் என்ற நூலில் அரசகேசரி முதல் சோமசுந்தரப் புலவரைக் குறிப்பிடுகின்றார். கந்தபுராணத்துக்கு உரை எழுதியுள்ளார். 1978இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இலக்கியக் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். பிரம்மச்சாரிய வாழ்வில் ஈடுபட்ட ஐயா தந்த அரும் பொக்கிஷங்கள் எமக்குக்கிடைத்த அழியாக் கனிகளே.

இனிநாம் தமிழுக்குத் தொண்டாற்றிய முஸ்லிம் அறிஞர்கள் வரிசையில் முதலில் நாம் சீறாப்புராணம் தந்த உமறுப்புலவரைப் பார்ப்போம். இவர் 1052இல் பிறந்தார் தமது பத்தாவது வயதிலேயே வடக்கேயிருந்து வாதிலே வாகைசூடி வந்த வளைவை வருதி என்னும் பெரும்புலவரை வாதிலே வென்று வாகை சூடினார். கடிகை முத்துப்புலவரின் நன் மாணாக்கராக விளங்கினார். தூய வாழ்வு வாழ்ந்த நபியவர்கள் மானுக்காக பிணை நின்றதையும் அவரின் வாழ்வியல் சம்பவங்களையும் இந்நூல் எடுத்துக் கூறுகின்றது. இது மூன்று காண்டங்களைக் கொண்டது. 92 பாடல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நீர் தேடிவந்த மான்கூட்டத்தில் கலையையும், கன்றையும் பிரிந்த ஒரு பிணை மானிற்காக அவர் வேடனிடம் பிணை நின்ற சம்பவம் மிகவும் உணர்ச்சிபூர்வமானது. 5025 விருத்தப்பாக்கள் இன்னூலின் கண் உள்ளன. இது மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. விலாத்துக்காண்டம் நபிகளின் பிறப்பையும், துவ்புவத்துக் காண்டம் தனித்துவம் பெற்றகதையையும், ஹிஜ்ரத்துக்காண்டம் மக்காவை விட்டு மதினாவுக்கு நீங்கியதையும் கூறுகின்றது.

இனி தமிழுக்குப் பெருமை சேர்த்த அறிஞர் சித்திலெப்பை பற்றிப் பார்ப்போம். முகம்மது காசிம்சித்திலெப்பை 11.5.1838இல் கண்டியில் பிறந்தார். தந்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் முகம்மது லெப்பை மரைக்கார் சித்திலெப்பை மரைக்கார் என்பதாம். அண்ணன் ஆலிம் புலவரிடம் தமிழைக்கற்றார். 1862இல் சிறந்த வழக்கறிஞராக பணியாற்றினார். முஸ்லிம் நேசன் என்ற பத்திரிகையை ஸ்தாபித்து அதன் பொறுப்பை, முஸ்லிம் ஏற்று தமிழுக்காய்த் தொண்டாற்றினார். முஸ்லிம் பாதுகாவலன், முஸ்லிம் அநுபந்தம், சர்வஜன நேசன் போன்ற நூல்களை எழுதினார் முஸ்லிம்கள் துருக்கித் தொப்பி அணிந்து நீதிமன்றம் செல்ல உரிமை பெற்றுத் தந்தார்.

இனி எ.எம்.ஏ. அலீஸ் அவர்கள் 1911-1973 வரை வாழ்ந்தார். யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகக் கொண்டார். இலங்கையில் இஸ்லாமிய மொழி பெயர்ப்புக் கலையை அறிமுகப்படுத்தினார். குவாதர்ரேலிலும், போர்பந்தலிலும், கராச்சியிலும் உயர் கல்வி பெற்றார். பம்பாயில் உயர் கல்வி கற்று வர்த்தகப் பட்டதாரியானார். மிஸ்றின் வசியம், கிழக்காபிரிக்கா காட்சிகள், தமிழ் யாத்திரை அற்புதத் தமிழ், ஆபிரிக்க அனுபவங்கள், எங்கள் அன்புத்தமிழ் ஆகிய நூல்களை தமிழுக்குத் தந்தார். இவர் வரிசையில் மாப்பிள்ளை ஆலிம், அப்துல் காதர்லெப்பை, பேராசிரியர். மு.மு. உவைஸ் போன்றோரைக் குறிப்பிடலாம்.

எண்ணில் அடங்கா தமிழ், முஸ்லிம் அறிஞர்கள் இனிய மொழியாம் தமிழை நன்கு கற்றறிந்து அதற்கு பெருமை சேர்த்த காரணத்தினால் தான் இன்றும் நம் மொழி மூத்த மொழியாக நின்று நிலைக்கின்றது. அதற்காக இவ் அறிஞர்களை நாம் போற்றுவோம். வாழ்த்துவோம்.

## தேமதுரத் தமிழ் ஓசை

**இராகம் - ஆபோதி** **தாளம் - ஆதி**

*பாடலெடுத்தேன் நான் பாடிவைக்க*
*அன்னை பைந்தமிழே – உன்னை*
*ஆருரைத்தாரோ அமுதமும் என்று*
*அள்ளி வைத்தார் மூன்று அழகினில் உன்னை*

*ஏடெடுத்து மக்கள் எழுதுமுன்னே – அவர்*
*நாவினிக்க வந்து நடைபயின்றாய்*
*சாதிகள் பேதமின்றி நீயிருந்தாய் – சங்க*
*பலகையிலேயே பேறி உறுதி கொண்டாய்.*

*வேற்று மொழி வந்து புகுந்திடினும் – என்*
*வேகம் குறைந்த தில்லை யென்றே*
*சாற்றி நின்ற எங்கள் தண்தமிழே*
*தரணியெல்லாம் போற்றும் இனியவளே.*

*மம்மி டடி என்று மாறிடினும் – நம்*
*அம்மாவின் சுகம் அழியவில்லை*
*தேமதுரத் தமிழ் ஓசையினைப் பல*
*திக்கிலும் நாட்டிடச் செய்வதற்கே.*

**பூ. ஜெயமலர் (ஆசிரியை)**
யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் ஒன்றேதான்!

மதங்கள் வேறுபடலாம்
மனிதகுலம் ஒன்றேதான்!
பணியும் தலங்கள் பலவாகலாம்
படைத்தவன் ஒருவன் தான்!

உரைக்கும் மொழியும்
உடையணியும் பாணியும்
திருமணச் சடங்கும் - இங்கே
இரு தரப்புக்கும் ஒன்றேதான்!



தம்பிராசாவும் தங்கம்மாவும்
தம்பிக்கண்டும் ராசம்மாவும்
தமிழர்க்கும் இஸ்லாமியர்க்கும்
பொதுத் திரு நாமங்களே!

பெரும்பான்மை அரசியலில்
சிறுபான்மை என்பதாலும்......
ஒரேமொழி பேசுவதாலும்........
வட-கிழக்கின் வாரிசு என்பதாலும்......
'இன ஒதுக்கல்' முறையால்-
இன்னலுறுவதிலும் - நாம்
இங்கே இனம் ஒன்றேதான்!

ஈழத்து வாழ் தமிழரும் - இங்கே
இணைந்திருந்த இஸ்லாமியரும்
இந்தியத் தாயின் கருவறையிலே
இருந்து வந்த சகோதரரே!

வரலாற்றின் விரலிடுக்கிலே
சிறைப்பட்ட சின்னப் பேனா
சொல்லிய நிகழ்வுகளின்
சொந்தக் காரர் நாமேதான்!

வடக்கிலும் கிழக்கிலும் - என்றும்
வளமான நமது நல்லுறவிலே.....
வளர்ந்த இன ஒற்றுமையிலே - இன்று
முரண்பாடுகள் முளைப்பதோ?

**பொத்துவில் ஏ.எல்.ஏ.முகம்மத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஓவியங்கள்.

**சாந்தினி. சாந்தகுமாரன்**

**2ம் வருடம், சித்திரமும் வடிமைப்பும், யாழ். பல்கலைக்கழகம்.**

கட்டடக் கலை சிற்பம் முதலியவற்றுக்கு எவ்விதம் இலங்கை புகழ்பெற்றதோ அவ்விதம் ஓவியக்கலையிலும் சிறந்து விளங்கியது. இந்திய ஓவியக்கலை இலங்கையிலும் பரவியது. குப்தர் கால அஜந்தா ஓவியமும் பாக் ஓவியமும் உலகப்புகழ் பெற்றவை. அஜந்தா ஓவியத்துக்கு அடுத்து சிகிரியா ஓவியம் மதிக்கப்படுகிறது.

ரூவான் வெலிசாயாவிலும், லோகமகாபாயாவிலும் ஓவியங்கள் அமைக்கப் பட்டிருந்தன. லோகமகாபாயவிரத இல்லத்தின் மேல் மாடத்தில் ஓவியம் அழகுற அமைக்கப்பட்டன என மகாவம்சம் கூறுகிறது. தம்புள்ளவிலுள்ள குகைக் கோவில்களில் பௌத்த ஓவியங்கள் காணப்படுகின்றன. அக்கோயில்களை முதல் அமைத்தவன் கி.மு. 1ம் நூற்றாண்டிலிருந்த வத்தகாமனி அபயன் எனும் அரசன். அவ்வோவியங்கள் பின் நிஸங்கமல்லனால் புதுப்பிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அதன் பின் கண்டி அரசர் காலத்தில் அவை புதுப்பிக்கப்பட்டதாக காணப்படுகின்றது. அக்குகையில் இன்னும் சில இடங்களில் பழைய ஓவியங்கள் காணப்படுகின்றன.



பொலநறுவையிலுள்ள இலங்கா திலக விகாரையிலும், திவங்க ஆலயத்திலும், கல்விகாரையிலும் அக்காலத்து ஓவியங்கள் காணப்படுகின்றன. சோழர் ஓவியக் கலையை போற்றி வளர்த்தனர். மும்முடிச் சோழ மண்டலம் என்னும் இலங்கைக்கு பொலநறுவை இராசதானியாக விளங்கியமையால் அக்காலத்தில் அந்நகரிலுள்ள நிலையங்களிலும் சோழர்களது ஓவியங்கள் இருந்திருக்க வேண்டும் எனப்படுகிறது. இவை பல்லவரை பின்பற்றி வரையப்பட்ட ஓவியங்களாகவும் காணப்பட்டன.



1ம் பராக்கிரமபாகு பொலநறுவையில் தான் அமைத்த கோவில்களில் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த சமய சம்பந்தமான ஓவியங்களை அமைத்தான். அவன் காலத்தில் அமைத்த ஓவியங்கள் இன்றும் காணப்படுகிகிறது. திவங்க ஆலயத்திலுள்ள சில ஓவியங்கள் அஜந்தா ஓவியத்தை நினைவூட்டுகின்றன.

ஹிந்தலாகலா மகியங்கண திம்புலாகலா, பொலி கொடகல்கே முதலிய இடங்களில் பழைய ஓவியங்கள் காணப்படுகின்றன. மகியங்கண போதி சத்துவ ஓவியம் அஜந்தா போதிசத்துவ வடிவத்தை போன்றது. ஹிந்தலாகலா குகை ஓவியங்கள் 6ம் 7ம் நூற்றாண்டை சேர்ந்ததெனக் கருதப்படுகின்றது. வடமத்திய மாகாணத்திலுள்ள திம்புலாகல குகை ஓவியங்களும் அக்காலத்தனவே.



ஹிந்தலகலா, மகியங்கண, திம்புலாகலா, பொலி கொடகல்கே, தம்புள்ள, பொலநறுவை முதலிய இடங்களிலுள்ள ஓவியங்கள் சமய சம்பந்தமானவை. ஆனால் சிகிரியா ஓவியங்கள் அரண்மனை வாழ்க்கையில் ஈடுபட்ட மாதர்களைக் குறிக்கும் ஓவியமாகும். சிகிரியா ஓவியம் என்ன நிகழ்ச்சியை குறிக்கிறது என எவரும் அறுதியிட்டுக் கூறவில்லை. அவை அப்சரஸ்திரிகளாக இருத்தல் வேண்டுமென சிலர் கூறுகின்றனர். சிலர் அவை காசியப்பன் அரண்மனைப் பெண்களும் தாதிகளும் எனவும் கூறுகின்றனர்.

இலங்கையில் காணப்படும் ஓவியங்கள் யாவும் குகை, சுவர் ஓவியங்களாகும். சிகிரியா, தம்புள்ள, கல்விகாரை, ஹிந்தலாகலா, திம்புலாகலா, எனும் இடங்களில் குகை ஓவியங்களும் பொலநறுவை, கண்டி, மகியங்கண, களனியா எனும் இடங்களில் சுவர் ஓவியங்களும் காணப்படுகின்றன.

இலங்கை ஓவியங்கள் இந்திய ஓவியங்களை போல அபிநயச் சிறப்பு வாய்ந்தன. உணர்ச்சி பொருந்திய நிலைகளை உடல் நெளிவினாலும். விரல் முத்திரைகளினாலும் வெளிக்காட்டும் இயல்பில் இலங்கை ஓவியம் இந்திய ஓவியத்தை ஒத்தது. மனத்தின் நிலையை வரிகளால் காட்டுவது இலங்கை ஓவியங்களின் சிறந்த இயல்பு இத்தன்மை பொலநறுவை, மகியங்களை ஓவியங்களில் நன்கு புலப்படுகின்றது. திவங்க ஆலயத்திலும் மகியங்கணவிலுள்ள வடிவத்திலும் ஆத்மீக இயல்பு பெரிதும் பிரகாசிக்கிறது. இத்தன்மை சிகிரியா ஓவியத்தில் காணப்படவில்லை. களனியா, தம்புள்ள ஓவியங்களும் கலை வனப்புப் பொருந்திப் பெரிதும் காணப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொலநறுவை காலத்திற்குப்பின் இலங்கையில் ஓவியக்கலை அபிவிருத்தி அடையவில்லை என்றே கூற வேண்டும்.

சிற்பவடிவங்களுக்கு வர்ணந் தீட்டும் வழக்கமும் இலங்கையில் இருந தது. கட்டடங்களின் மரவேலைப்பாடு டைய பகுதிகளுக்கு வர்ணம் அமைத் தலும் பழைய வழக்கமாகும். கண்டி தந்த ஆலயத்து மரவேலைப் பகுதிகள் வர்ணந் தீட்டப்பட்டி ருப்பதை நாம் காணலாம்.

சிகிரியா, தம்புள்ள ஓவியங்களை விட எல்லாப் பழைய ஓவியங்களும் இன்று அழிந்த நிலையில் காணப்படுகிறன. பழைய ஓவியங்களின் சிறப்பினை நாம் பூரணமாக அறிய முடியா நிலையில் இன்று இருக்கிறோம். ஆனால் அவ்வோவியங்களின் வரிகளைக் கொண்டும் அவற்றின் சிறப்பியல்புகளை ஓரளவுக்கு நாம் அறிந்து கொள்ள முடியும்.

கட்டுரை, படங்கள் போன்றவற்றின் உதவியால் நாம் பழைய ஓவியங்களின் தனிப் பெருஞ் சிறப்பினை அறிந்து கொள்ளுதல் இயலாது. இவ்வோவியங்களை நேரில் கண்டு அவற்றின் கலைவனப்பை நுகர்தலே பொருத்தமுடையது. இலங்கையிலுள்ள ஓவியங்களின் சிறப்பினை நேரில் கண்டு இன்புறும் வண்ணம் பலநாட்டு மக்கள் எங்கள் நாடு நோக்கி வருகின்றனர்.



## பண்பாட்டுத் தூதுவர்கள்

''பொன் மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்................''

- மதுரைக் காஞ்சி, 81-83 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தமிழ் மொழி

எங்கள் தமிழ் மொழி இனிய தமிழ்மொழி
இயல் இசை நாடகமே
சங்கத் தமிழ்மொழி சான்றோர் புகழ்மொழி
சகமெலாம் வாழியவே.

பழமைத் தமிழ் மொழி பக்தி நனிமொழி
பாரெலாம் சிறந்திடுமே
இளமைத் தமிழ்மொழி இணையத் தமிழ்மொழி
இவ்வுல காண்டிடுமே!

கன்னித் தமிழ்மொழி கணனித் தமிழ்மொழி
காலங்கள் வென்றிடுமே
அன்னைத் தமிழ்மொழி அறிவுத் தமிழ்மொழி
ஆண்டாண்டு வாழியவே

வளரும் தமிழ்மொழி வாழும் தமிழ்மொழி
வானிலும் உயர்ந்திடுமே
அழுகுத் தமிழ்மொழி அறிவுத் தமிழ்மொழி
அவையெல்லாம் நிறைந்திடுமே.



நான்கு தமிழ்மொழி நமது தமிழ்மொழி
நாளெல்லாம் வாழியவே
ஈங்கு தமிழ்மொழி இலங்கைத் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

பொங்கு தமிழ்மொழி பொதிகைத் தமிழ்மொழி
புகழும் பொலிந்திடுமே
எங்கும் தமிழ்மொழி எதிலும் தமிழ்மொழி
இணையின்றி வாழ்ந்திடுமே!

பாட்டுத் தமிழ்மொழி பாரதி தமிழ்மொழி
பாங்குடன் திகழ்ந்திடுமே
நாட்டுத் தமிழ் மொழி நல்ல தமிழ்மொழி
நானிலம் போற்றிடுமே.

எங்கள் தமிழ்மொழி இணையிலாத் தமிழ்மொழி
எனிறென்றும் வாழியவே
தங்கக் கதிரென தவளுநில வென
தரணியில் வாழியவே.

தெய்வத் தமிழ்மொழி தென்னன் தமிழ்மொழி
சேர்ந்து நாம் துதித்திடுவோம்
பொய்யாத் தமிழ்மொழி புலவர் தமிழ்மொழி
போற்றி நாம் மகிழ்ந்திடுவோம்.

- வாகரைவாணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீலர் நபியின் சீர்பஞ்ச மாலை

கலாஜோதி. ஏ. எம். அப்துல் கஹ்ஹார்

அல்லாஹ் ஒருவ னவனடியார் தூதுவராம்
நல்லார் முஹம்மதெனும் நலவாக்குச் - சொல்லல்;
இறை தொழுதல்; நோன்பிருத்தல்; ஜக்காத்து, ஹஜ்ஜி
நிறையுஞ்சன் மார்க்க நெறி.

முறைமை; ஹலால் ஹராம்; முன்னுதாரணங்கள்;
மறைவான செய்திகளின்; மீதே - இறையவன்
குர்ஆன் தனையே கொடுத்தா னதை யேற்போர்.
சொர்க்கத்தில் காண்பார் சுகம்.

முற்பாவம் நீங்கி விடும்; முன் வாழ்ந்தோர் நல்வழக்காம்;
குற்றப் பரிகாரம்; நோய் தடுக்கும்; - உற்ற
இறைநெருக்க; மைந்து மிரவு வணக்கத்தில்
நிறைந்துள்ள தென்று நினை

பொருளபிவிருத்தி; துயர்நீங்கல்; நோய்க்கு
மருந்து; ஸிராத் பாலங் கடத்தல்; - சுருதமின்றி
சொர்க்கப் பிரவேசம்; சொல்லுங்கா லிவ் வைந்தும்
தர்மத்தி லுள்ள தலை.

கண்ணாலே; காதாலே; காலாலே; உள்ளத்தின்
எண்ணத்தால்; நாவாலே; எக்களிப்பாய்ப் - பண்ணிய
தன்பாவம் நோன்புதனை நோற்றுத் திறக்கையிலே
மன்னிக்கப்பட்டு விடும்.

நோய் வருமு னாரோக்யம்; நல்குரலின் முன் செல்வம்;
மாய்வுக்கு முன்வாழ்வு; வேலையின் முன் - ஓய்வோடு;
தள்ளாடும் மூப்பின் முன் தன்னிளமை; யிவ் வைந்தும்
கொள்ளைப் பொருளாய்க் கொள்.

விண்ணாணம் பண்ணாதே! வீண்விரயஞ் செய்யாதே!
உண்பா யுடுப்பா யுயரறங்கள்- பண்ணிப்
பலன்யாவும் பெற்றிந்தப் பாருலகில் மிக்க
நலமோடு வாழ்வாய் நயந்து.

பெண்ணைத் தனியாய்ப் பிறவிடத்தே வையாதே;
துண்டத்தில் மொத்தாதே; திட்டாதே; - உண்டா
லுணவு முடுத்தா லுடையும் வழங்கி
கணவாயீ துன்றன் கடன்.

பிள்ளைக் கழகுப் பெயரிட; லூணளித்தல்;
கல்வி; நெறி; நீச்சற்; கற்பித்தல் - கொள்ளும்
வயதில் மணஞ் செய்து வைத்தலிவ் வைந்தும்
பயந்தார் கடமைப் பணி.

சேகரித்தல்; கல்வி; செலவழித்தல்; வாலிபம்;
தேகமிவை பற்றிப் பதிற் தெளி - வாகப்
பகரும் வரையும் பரனின் முன் நின்று
நகர முடி யாது. நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமம் என்பது கூட்டுறவு அடிப்படையில் இனபந்தங்களோடு ஒன்றித்து வாழ்வதாகும். ''ஒற்றுமையே பலம்'' என்பதற்கிணங்க கிராமமக்கள் புரிந்துணர்வுடனும், கடமையுணர்வுடனும் செயற்பட்டனர். கிராமத்திற்குக் கிராமம் பேச்சுவழக்கு, உபசரிக்கும் முறை ஆகியவை வேறுபாடுடையதாகவே காணப்பட்டன. இக்கிராமங்களிடையே காலம் காலமாக வளர்ந்த பண்பாடுகள் யாவும் பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய இடங்களை மையமாக வைத்தே வளர்த்து வந்தன. இம்மக்களிடையே மற்றவர்களுக்கு உதவக்கூடிய மனப்பாங்கு முன்னேறின. அதாவது பொறுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நன்றியுணர்வு, கட்டுப்பாடு ஆகியவை அவர்களிடையே காணப்பட்டன. ஒரு குடும்பத்தினருக்கு ஏற்படும் துன்பம், மற்றக் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட துன்பமாகவே கருதி வாழ்ந்தனர். அத்துன்பத்தில் அவர்களும் கலந்து இடர்துடைக்க முயன்றனர்.

# அருகி வரும் கிராமியப் பண்புகள்

கிராமங்களுக்கென ஒரு பண்பாடு உண்டு. அதாவது இறுக்கமான கலாச்சாரப்பண்பு அவர்களிடையே காணப்பட்டது. உறவு முறைகள் இறுக்கமானதாக, பலமுள்ளதாக, சுதந்திரமுள்ளதாக, ஒற்றுமையுடையதாக இருந்தது. இவ்வாழ்க்கை முறையானது தொடர்ச்சியான ஒரு உறவு முறையாகக் காணப்பட்டது. கிராமிய மக்கள் பொருளாதார ரீதியில் நலிவுடைய மக்களாகவே அந்நாட்களில் காணப்பட்டனர். இதனால் ஒருவருக்கொருவர் ''நன்றி மறப்பது நன்றன்று'' என்பதற்கேற்ற மானிடநேயம் கொண்டவர்களாக வாழ்ந்தனர்.

கிராமிய வாழ்க்கையில் கிணறுகளை ஒரு குறிப்பிட்ட குடும்பத்தினர் பயன்படுத்தி வந்தனர். அவற்றிற்கேற்படும் செலவீனங்களை அவர்கள் தாமே பங்கிட்டுத் தம் வாழ்க்கையைக் கொண்டு சென்றனர். துலா, கப்பி ஆகியவைகளைக் கிணறுகளில் பாவித்து நீரைப் பெற்றனர். விவசாயத்துறையில் பட்டைமூலம் கிணற்றில் நீரை இறைத்துப் பயிர்களுக்கு நீர்பாசனஞ் செய்தனர். ஆனால் இன்று கிராமங்களில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதனால் வீட்டுக்கு வீடு குழாய்க் கிணறுகள் உள்ளன. அதாவது குடும்பங்கள் தங்கள் வாழ்க்கை முறைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். திருமணங்கள், வீடு வேய்தல், இழவுவீடுகள், ஆலயங்கள் ஆகியவைகளில் வித்தியாசமான நடைமுறைகளே கையாளப்படுகின்றன.

**திரு. ஆ. முருகதாஸ் (ஆசிரியர்)**
**யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை, வல்வெட்டித்துறை**

கிராமங்களில் திருமணங்களை எடுத்துக் கொண்டால் உறவு முறைகள் பலமடைய வேண்டும் என்ற நோக்கத்தில் சொந்த மைத்துனனையே மைத்துனிக்குத் திருமணஞ் செய்தனர். அத்துடன் சொத்துக்கள் தங்கள் குடும்பங்களிடையே நிரந்தரமாக இருக்க வேண்டுமென விரும்பினர். ஆனால் இன்று சொந்த உறவு முறைத் திருமணங்கள் அருகியே காணப்படுகின்றன. திருமணம் சொர்க்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயிக்கப்படுகின்றது என்ற நிலை மாறி இன்று பல லட்சங்களால், வர்த்தக நோக்கத்தில் தீர்மானிக்கப்படுகின்றது. அதாவது தரகர் (புரோக்கர்) மூலமே நிச்சயிக்கப்படுகின்றது. பழைய கிராமிய முறைகளில் தம் குடும்பங்களிடையே திருமணத்தில் தடங்கல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அந்த மணமகன் அல்லது மணமகளின் தந்தை சென்று அவர்களுடன் பேசித் தீர்த்துக் கொள்கின்றார். ஆனால் இன்று இப்பிரச்சனைகள் தரகர்களாலேயே தீர்த்து வைக்கப்படுகின்றது.

திருமணம் நடைபெறும் போது, அந்த வீட்டிலுள்ள உற்றார், உறவினர் பல நாட்களாக அத்திருமண வீட்டிற்குத் தேவையான சகல ஏற்பாடுகளையும் செய்தனர். பந்தல் அமைக்கின்ற வேலைகளில் அத்திருமண வீட்டாரின் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் பங்கேற்றனர். அந்தத் திருமண வீடுகளில் கப்புகளை நாட்டி கிடுகுகள் மூலம் பந்தல்களை வேய்ந்து வர்ணக்கடதாசிகள், சேலைகள் மூலம் அலங்காரஞ் செய்தனர். இதனால் அக்கிராமங்களிடையே உள்ள குடும்பங்களில், இறுக்கமான தொடர்புகளே வலிமையடைந்தது. ஆனால் இன்று வீடுகளில் தகரக் கொட்டகைகள் அமைப்பதனால் அவை சுகாதாரக் கெடுதிகளை விளைவிக்கக் கூடியனவாகக் காணப்படுகின்றன. கிடுகுப் பந்தலிலே உள்ள சுவாத்தியம் இவற்றில் காணப்படுவதில்லை. அத்துடன் இன்று வெளிநாட்டுப் பணவசதிகளினால் கிராமியத் திருமணங்கள் மண்டபத் திருமணங்களாக மாற்றமடைந்துள்ளன. அத்திருமணங்களுக்குச் சமூகமளிக்கும் உறவினர்கள் கூட மண்டபத்துடனேயே தங்கள் வருகையை முடித்துக் கொள்கின்றனர். அன்று சிக்கனத் திருமணங்களாக நடந்த வைபவங்கள் இன்று ஆடம்பரமான ஒரு செயற்பாடாக விளங்குவதைச் சமுதாயங்களிடையே காணக்கூடியதாய் உள்ளது. இன்றையத் திருமணங்கள் தூர இடங்களில் நடைபெறுவதனால், உடனடியாக விவாகரத்து நீதிமன்றங்கள் மூலம் கிடைக்கிறது. கிராமிய உறவு முறைத்திருமணங்களில் ஏதாவது பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அவை உறவினர்களால் பேசித் தீர்க்கப்படுகின்றன.

பாரம்பரிய கிராமங்களில் கூடுதலான வீடுகள் மண்வீடுகளாகவே இருந்தன. இவ்வீடுகள் ஓலைகளால் வேயப்பட்டனவாகக் காணப்பட்டன. அக்கிராமத்திலுள்ள மக்கள் எல்லோரும் சேர்ந்து காலை உணவையும் உண்டு ஒற்றுமையாகவும், இலவசமாகவும் வேய்ந்தனர். ஆனால் இன்று பொருளாதார மேம்பாடு கிராமங்களில் ஏற்பட்டதனால் மண்வீடுகள் அருகிக் கல்வீடுகள் கட்டப்படுகின்றன. அவ்வாறு மண்வீடுகள் குறைந்தளவு காணப்படுவதால் இன்று அந்த ஏழைக் கிராமிய மக்கள் கூலி கொடுத்தே வேய்கின்றனர். இவை ஒரு தொழிலாக மாற்றமடைந்து வருவதை எமது சமுதாயத்தில் காணக்கூடியதாய் உள்ளது.

கிராமங்களில் ஒரு குடும்பத்தில் இழவுவீடு ஏற்பட்டால் அக்குடும்பத்தைச் சேர்ந்த உறவினர் அந்தியேட்டி வரை படுத்து இழவுகாத்தனர். ஒரு ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இழவுவீடு ஏற்பட்டால் அக்கிராமத்தைச் சேர்ந்த சில வசதி படைத்தவர்கள் சேர்ந்து அந்நிகழ்வை ஒப்பேற்றி வைக்கின்றனர். இந்நிகழ்வு அவர்களின் ஒற்றுமையுணர்வை எடுத்துக் காட்டுகின்றது. அந்த இழவு வீட்டைச் சேர்ந்தவர்களுக்குக் காலை ஆகாரம், மதிய உணவு ஆகியவற்றைக் கொடுக்கின்றனர். இவை திருப்பிக் கொடுக்கின்ற ஒரு சம்பிரதாயப் பண்பாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய மக்களிடையே காணப்படுகின்றது. இன்று இச்செயற்பாடுகள் குறைந்து விட்டன.

கிராமிய வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டாக ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவை சான்றுபகருகின்றன. பாரம்பரிய கிராமங்கள் ஆலயங்களில் குல தெய்வங்களை வைத்தே வழிபட்டனர். அதாவது இன்று இம்மக்கள் தமக்கென ஆகம முறைப்படி ஆலயங்களை அமைத்து வழிப்படுகின்றனர். ஆலயங்களில் அதன் வளர்ச்சி கருதி, முனைப்பாக இன்று திருமண மண்டபங்கள் அமைக்கப்படுகின்றமையை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இம்மக்கள் தங்கள் அறிவுவிருத்தியை வாசிப்பின் மூலம் வளர்க்கச் சனசமூக நிலையங்களை அமைத்தனர். அந்தச் சனசமூக நிலையங்களினூடாக விளையாட்டுக் கழகங்களைத் தோற்றுவித்துச் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். இம்மக்கள் தங்கள் அணிக்காக ஆதரவு அளித்து வெற்றி பெறுவதற்காகப் பாடுபடுகின்றனர். அத்துடன் அம்மக்களே அந்த அணிகளுக்கு வேண்டிய அங்கிகள், உபகரணங்கள், பொருளுதவி ஆகியவற்றைச் செய்கின்றனர்.


பாரம்பரிய திருமணஞ் செய்த கிராமியப் பெண்கள் குங்குமம் இட்டுக் கணவனே கண்கண்ட தெய்வம் என வாழ்ந்தனர். இன்றைய கிராமியப் பெண்கள் ஒட்டுப் பொட்டுகளோடு முழங்காலை மூடாத பாவாடையணிந்து இணங்காண முடியாதவர்களாக நடமாடுகின்றனர். திருமணம் செய்த பாரம்பரிய கிராமியப் பெண்கள் வீட்டிலிருந்து யிடங்களுக்குச் சேலை அணிந்தே சென்றனர். இன்றைய பெண்கள் சேலைகளை மறந்து ''ரைட்ஸ்கேட்'' உடையணிந்து குதி உயர்ந்த சப்பாத்துப் போட்டுச் செல்கின்றனர். முகம் குளிர மஞ்சள் பூசிய பெண்கள் ∴ பெயர் அன் லவ்லி பூசுகின்றனர்.

கிராமங்களில் பாதணிகளை வீட்டிற்கு வெளியே கழற்றி வைக்கும் முறை காணப்பட்டது. ஆனால் இன்று வீட்டுக்குள்ளும் கழற்றாது செருப்புக்களை அணிந்து செல்லும் பெண்களையும் ஆண்களையும் காண்கின்றோம். நாம் எந்த நாட்டிற்குச் சென்றாலும் எமது கிராமியப் பண்புகளைக் கைகொள்ள வேண்டும். என்பதை மறக்கக் கூடாது நாகரிகம் வளர்ச்சியடைந்தாலும் எமது பண்புகளை மாற்றாமல் நாம் வாழ வேண்டும்.

பாரம்பரிய கிராமங்களில் பெரியோர்களை வாலிபர்களும், மாணவர்களும் ஏனையோரும் மதித்துச் செயற்பட்டனர். ஆனால் இன்று பெரியோர்களை கனம் பண்ணும் செயல் அருகியே காணப்படுகின்றது. பாரம்பரிய கிராமங்களில் மக்கள் திட்டமிட்டு நிர்வாக ரீதியாகச் செயற்பட்டனர். அதாவது அம்மக்கள் எழுதப்படாத யாப்பைப் பேணியே வாழ்ந்தனர். உலகில் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டாலும் நாம் எமது பண்புகளில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடாது. எனவே இக்கிராமியப் பண்புகளை நாம் கைக் கொள்ளாவிட்டால், தமிழ் மொழிக்கே ஆபத்து ஏற்படக்கூடிய ஒரு நிலை உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதுமைப் பித்தன் கதைகள்

– ஒரு நோக்கு

**செல்வி. மபாஸா றிஸ்லா**
தமிழ் விசேட துறை - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

தமிழ் சிறுகதை உலகில் தடம் பதித்தவர்களில் முக்கியமான, முதன்மையான ஒருவராகப் புதுமைப்பித்தன் விளங்குகின்றார். சொ. விருத்தாசலம் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் 1906ம் ஆண்டு திருநெல்வேலியில் பிறந்தார்.

புதுமைப்பித்தன் அவர்கள் தமிழ் சிறுகதை உலகில் பெரியதொரு புரட்சியை உண்டாக்கியவர். அவருக்கு முன்பு மிக மெதுவாக வளர்ந்து வந்த தமிழ் சிறுகதை, சம்பிரதாய ரீதியிலே நடைபோட்டுக் கொண்டிருந்தது. ஐரோப்பியர் வரவால் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே சிறுகதை இலக்கியமானது. தமிழ் இலக்கிய உலகில் அதற்கெனத் தனியான ஓர் இடத்தை பெற்று, குறுகிய காலத்திலேயே வியத்தகு, வளர்ச்சியைக் கண்டது. இவ்வாறு வளர்ச்சிபெற்று வளம் பெறுவதற்கு 'மணிக்கொடிக்' காலமே பெரும்பங்கு செலுத்தியது, எனலாம் இம்மணிக்கொடிக் கால ஆசிரியர்களில் ஒப்பற்ற ஒருவராகப் புதுமைப்பித்தன் காணப்படுகின்றார். இதனாற் தான் 'உலகத்தில் தலைசிறந்த சிறுகதைகளுடன் ஒப்பிடக்கூடிய சிறுகதைகளைத் தமிழ் உலகுக்கு அளித்த பெருமை புதுமைப்பித்தனுக்கே உரியது' என்பர்.

இன்றைய நவீன உலகில் எழுத்தாளர்கள் பெறச் சாத்தியப்பட்டிருக்கும் எண்ணற்ற அனுபவங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது; புதுமைப்பித்தன் அறிய நேர்ந்த உலகம் சிறியது இவ்வாறு இருந்த போதிலும் அவரது கதைகளில் பல விடயங்களில் தனித்தன்மையைக் காணலாம். அதாவது, ஏனையோர் தொட அஞ்சுகின்ற புதிய புதிய கதைப் பொருள்களின் தேர்ந்தெடுப்பு, அதற்கேற்ப நேர்த்தியான வடிவம், வேகம், கையாளும் நடை, வாழ்க்கை பற்றிய கூர்மையான பார்வை, சிந்தனைத்திறன், பாத்திரங்கள், பாத்திரங்களை சிறந்த முறையில் படைக்கும் ஆற்றல், அழுத்தமாக நையாண்டியாக தன் கருத்தைக் காட்டும் பாங்கு, தன்னம்பிக்கை, சொல்வளம், இடத்திற்கேற்ற உவமானங்கள் போன்ற கதையின் சகல பரிணாமங்களிலும் சாதனை படைத்தவர் எனலாம்.

உடம்புக்கு உயிர் எவ்வளவு முக்கியமோ அதே போல் கதைக்கு இன்றியமையாதது, அக்கதையின் கரு, வீரம், காதல், கடவுள் என்று ஓர் எல்லைக்குள் பொருளைத் தெரிவு செய்யாது யதார்த்தமான முறையில் தாம் வாழ்ந்த சமுதாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலைகளை கதைப் பொருளாகக் கொண்டுள்ளார். மனிதனின் உயர்ந்த பண்புகள், மேன்மைகளை மட்டுமல்லாது. அவனது குறைபாடுகளை, குணக்கேடுகளை, சிறுமைகளை சீரழிவுகளை, வக்கிரங்களை, மனித சமுதாயத்தின் அவலங்களை, பிரச்சனைகளை, உணர்வு பூர்வமாக சித்தரிக்கின்றார். அது மாத்திரமன்றி தான் எடுத்துக் கொண்ட கருவிற்கேற்ப கதையின் வடிவத்தை சிறந்த முறையில் கையாண்டார்.

இவரது கதைகளில் ''புதிய கூண்டு'' ''கோபாலய்யங்காரின் மனைவி'' எனும் கதைகள் கலப்புத்திருமணம் பற்றிக்கூறுவன. காதலித்து மதமாறி திருமணம் செய்ததால் பாதிக்கப்பட்ட இந்துக் குடும்பத்தின் நிலைமை, அதைச் சேர்ந்த தனி நபர்களின் போக்குகள், உறவினரிடையே ஏற்பட்ட பிரிவு இக்கலப்புத் திருமணத்தால் ஏற்படும் பிரச்சனை என்பவற்றை சிறந்த முறையில் சித்தரித்துக் காட்டுவதே ''புதிய கூண்டு'' எனும் கதை ஆனால், ''கோபாலய்யங்காரரின் மனைவி'' எனும் கதை கலப்புத்திருமணம் பற்றி வேறு வகையில் செப்புகிறது. வாழ்க்கையில் பல முரண்பாடுகள் இருக்கின்றன. என்பதைச் சுட்டிக்காட்டி பரிகசிப்பது போல் இதை எழுதியுள்ளார்.

தெய்வத்தின், மதத்தின் தத்துவங்களைப் பேசிக் கொண்டே வாழும் பெரிய மனிதர்களின் வேஷங்களையும், செயல்முறைகளையும் ''கொடுக்காய்ப் புளியமரம்'' ''நியாயம்'' ''வாழ்க்கை'' போன்ற கதைகள் வெவ்வேறு வகையில் சித்தரித்துக் காட்டப்படுகின்றன. ''கொடுக்காய்ப் புளியமரம்'' கதையை நோக்கினால் இதில் சுவாமிதாஸ் ஐயர் என்பவர் கர்த்தரின் திருப்பணியைத் தமது வாழ்க்கையில் ஜீவனாம்சமாகக் கொண்டவர் உலக சம்பிரதாயப்படி பக்திமான், நல்லவர், தர்மவான். இப்படிப்பட்ட ஒருவர் தனது வீட்டின் முன்நின்ற புளியமரத்தின் கீழ் விழுந்த பழத்தை பொறுக்கியதற்காக ஒரு பிச்சைக்காரக் குழந்தையை கம்பால் எறிகிறார். இதனால் குழந்தை இறக்கிறது.

சிறந்த குணமாண்புகளை ''சொன்னசொல்'' ''வெளிப்பூச்சு'' போன்ற கதைகள் சித்தரிக்கின்றன. ''வெளிப்பூச்சில்'' வரும் ரங்கநாதன் எட்டணாவைக் கடன் வாங்குகிறான். அதுவும் போதாத நிலையில் அவர் இருக்கும் போது தன் நண்பன் வந்து கேட்கவும் அதை அவருக்கு கொடுத்து விடுகிறார். இக்கதை சிறந்த குணமாண்பை வெளிப்படுத்திய போதும் மத்தியவர்க்கத்தின் வாழ்க்கையானது வெளிப்பகட்டே என்பதைக் காட்டி நிற்கிறது.

வாழ்க்கையில் மிகவும் கொடியது வறுமை இதனால் வாழும் மனிதர்களை யதார்த்தமாகவும், உருக்கமாகவும் படைத்துள்ளார். அது மாத்திரமன்றி மத்தியதரவர்க்கத்தின் வாழ்க்கை, வறுமை நிலை என்பவற்றையும் சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகிறார். ஒரு நாளைக் கழிப்பதற்காக என்னன்னவோ செய்தும், பேசியும் வருகின்றவர்களிடம் கடன் வாங்கி வாழும் எழுத்தாளன் ஒருவனின் வறுமை பற்றி ''ஒரு நாள் கழிந்தது'' எனும் கதை விபரிக்கின்றது. முருகதாசன் எனும் எழுத்தாளனின் வறுமையை; கையில் இருக்கும் கோரைப்பாயை விரிப்பதே ஒரு ஜாலவித்தை நெடுநாள் உழைத்தும் பென்சன் கொடுக்கப்படாததால் அது நடுமத்தியில் இரண்டாகக் கிழித்து ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை விரிப்பது என்றால் முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டு, கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்து பொருந்த வைக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டுகிறார். இவ்வாறே முருக தாசனின் குடிசை பற்றிய சித்தரிப்பு, கடன்காரனின் தொல்லை போன்றவற்றை யதார்த்தமான முறையில் இக்கதையின் வாயிலாக தெளிவு படுத்துகின்றார். இவ்வாறே வறுமையின் சீரழிவை, கஷ்டத்தை, துன்பத்தை சிறந்த முறையில் 'பொன்னகரம்,' 'கவந்தனும் காமகனும்', 'தியாக மூர்த்தி' 'புதிய கூண்டு' போன்ற பல கதைகள் விளக்குகின்றன.

'செல்லம்மாள்' புதுமைப்பித்தனின் சிறந்த கதைகளில் ஒன்று சிறந்த முறையில் எழுதப்பட்ட சோகம் ததும்பும் வாழ்க்கைச் சித்திரமாகும். மத்தியதர வர்க்கத்தின் உழைப்பாளி மனிதனின் ஆசைகளையும், கனவுகளையும், ஏக்கங்களையும், வாழ்க்கை நிலைமைகளையும் உள்ளது உள்ளபடி கூறுகிறது இக்கதை. இவ்வாறே மத்திய தரவர்க்கத்தின் நிலமைகளை 'மனிதயந்திரம்', 'சுப்பையா பிள்ளையின் காதல்கள்' போன்ற கதைகளில் காணலாம்.

வாழ்க்கை மனிதனின் யந்திரமாக மாறிவிட்ட போதிலும் மனித உணர்ச்சி மாறுவதில்லை என்பதை 'மிஷின்யுகம்' எனும் கதை விளக்குகிறது. மிஷின்மாதிரி வேலைசெய்யும் ஓட்டல் சர்வர் திடீரென 'சார் உங்கள் கைக்குட்டை கீழே விழுந்து விட்டது' எனக்கூறி அதை எடுத்துக் கொடுக்கும் மனிதத்தன்மையை, உணர்வை எடுத்துக் காட்டுகிறது இக்கதை.

இவ்வாறே பொருளாதார ரீதியில் அடுத்தவரைத் தண்டிப்பது, வாழ்க்கை அவலங்கள், சமூகக் கொடுமை பற்றி ''நாசகாரக்கும்பல்' 'துன்பக்கேணி' போன்ற கதைகள் காட்டுகின்றன. தோட்டத்திலே வேலை செய்யும் மருதி என்ற ஏழைப் பெண்ணின் குடும்பநிலை, கஷ்டம், தோட்ட எஜமானனால் படும் இன்னல், என்பவற்றையும் தோட்டத் தொழிலாளிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகளையும் இக்கதை தெளிவுப்படுத்துகின்றது.

விதவைப் பெண்களின் உணர்வுகள், ஆசைகள், சமூகக்கட்டுப்பாடுகள், அவர்களின் வாழ்க்கை, சமூகத்தில் அவர்களது நிலை என்பவற்றை 'வாடாமல்லிகை' 'வழி' போன்ற கதைகள் சித்தரிக்கின்றன. 'வழி'யில் விதவைப்பெண் அலமு தன் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் குமுறிக் கொதிப்படைகிறாள். 'ஒவ்வொரு நிமிசமும் நெருப்பாகத் தகிக்கும் சதி அல்லவா வைதவ்யம்' என்று புழுங்குகிறாள். எதிர் வீட்டில் கணவனும், மனைவியும் உல்லாசமாக இருப்பதைக் கண்டு மனம் கலங்குகிறாள். பின் அவள் உயிரை விடுவதாக இக்கதை நிறைவுறுகிறது.

பொருந்தாத் திருமணம் இதனாற்படும் சிரமங்கள், மனித உணர்வுகள் என்பவற்றை 'கல்யாணி' எனும் கதை சித்தரிக்கின்றது. கல்யாணி என்ற இளமங்கை வறுமை காரணத்தினால் ஒரு கிழவனுக்கு இரண்டாம் தாரமாகிறாள். இதனால் அவளுக்கு இன்பம் கிடைக்காது அவள் வீட்டுக்கு சாப்பிடவரும் சர்மா என்பவருடன் உறவு கொள்கிறாள். இவ்வாறே மனிதர்கள் உணர்ச்சிவசப்படுகிறவர்கள் அவர்கள் இவ்வாறுதான் இருக்கவேண்டும் என்று கணித்து விட முடியாது என்பதை 'ஆண்சிங்கம்', 'சணப்பன் கோழி' போன்ற கதைகளின் வாயிலாக உணர்த்துகின்றார்.

பேய் பிசாசுகள் பற்றிய மர்மக்கதைகளாக 'காஞ்சனை' 'ஞானக்குகை', 'காளிகோயில்', 'பிரம்மராஷஸ்', 'வேதாளம் சொன்ன கதை' கபாடபுரம் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கதைகளை எழுதியுள்ளார். இக்கதைகள் சொல்வளமிக்க கற்பனைவளமிக்க கதைகளாகக் காணப்படுகின்றன. காஞ்சனையில் பேய், வீட்டு வேலைக் காரியாகிறாள். அதை பெண்ணாக நம்பும் மனைவி; புதியவளை சந்தேகிக்கும் கணவன் போன்றவற்றை திறமையாக, சுவைபடப் படைத்துள்ளார்.

கற்பனைக்கு நிறைய இடமளித்து புராதனகாலப் பாத்திரங்களை, கதைகளை, நிகழ்ச்சிகளை எடுத்து புதிய நோக்கில் அழகுபடுத்தி 'சாபவிமோசனம்', 'கபாடபுரம்' 'அகலிகை', 'அன்றிரவு' போன்ற கதைகளை எழுதியுள்ளார். அகல்யை - கௌதமர் வாழ்வும் இந்திரனின் லீலையும் அழகிய முறையில் கதையாக்கப்பட்டுள்ளது. இக்கதையின் நடை, பாத்திரங்கள், உள்ளடக்கம் என்பன திறம்பட ஆளப்பட்டுள்ளது.

கடவுள் பற்றி, யமன்பற்றி சுவாரஸ்யமான முறையில் அறிவொளி மிக்கதாக பல கதைகளை ஆக்கியுள்ளார். அவற்றுள் 'காலனும் கிழவியும்' எனும் கதை கிழவிக்கும், யமனுக்கும் நடந்த சுவாரஸ்யமான விவாதத்தை விளக்குகிறது 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் எனும் கதை கற்பனை வளமுள்ள சிறந்த கதை இதில் நையாண்டியாகவும், கற்பனையாகவும், மனித இயல்புகள் பற்றியும் விளக்குகிறார். இதில் வரும் கடவுளுக்கும், கந்தசாமிப்பிள்ளைக்கும் நடக்கின்ற உரையாடல்கள் ரசமானவை.

''தெரிந்த தொழிலைக் கொண்டு லோகத்தில் பிழைக்க முடியாது போல இருக்கே'' என்றார் கடவுள்.

''நான் சொன்னது உங்களுக்குப் பிடிக்கவில்லை. உங்களுக்குப் பிடித்தது லோகத்துக்குப் பிடிக்கவில்லை. வேணும் என்றால் தேவாரப் பாடசாலை நடத்திப்பார்க்கிறது தானே' என்றார் கந்தசாமிப்பிள்ளை.

கடவுள் 'ச்சு' என்று நாக்கை சூள் கொட்டினார்.

'அதற்குள்ளே பூலோகம் புளிச்சுப்போச்சா' என்றார் கந்தசாமிப்பிள்ளை முடிவில் உங்களிடமெல்லாம் எட்டி நின்று வரம் கொடுக்கலாம். உடனிருந்து வாழமுடியாது' என்றார் கடவுள்.

'உங்கள் வர்க்கமே அதற்குத்தான் லாய்க்கு' என்றார் கந்தசாமிப்பிள்ளை இவ்வாறு இந்தக்கதை சுவாரஸ்யமாகக் காணப்படுகின்றது. 'சிற்பியின் நகரம்' 'ஆற்றங்கரையில் பிள்ளையார்' போன்ற கதைகள் கடவுளைப் பொருளாகக் கொண்டவை.

இவ்வாறு பல கோணத்திலும் பல்வேறுப்பட்ட கருத்துக்களைக் கொண்டு கதைகளை அவர் சிறந்த முறையில் எழுதியுள்ளார்.

புதுமைப்பித்தன் தான் தேர்ந்தெடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ப மிகவும் பொருத்தமான தலைப்புக்களை கொடுப்பதில் வல்லவர் 'நாசக்காரக் கும்பல்', 'துன்பக்கேணி', 'சொன்னசொல்', 'சங்குதேவனின் தர்மம்' 'கயிற்றரவு', 'வெளிப்பூச்சு', 'நினைவுப்பாதை', 'கட்டிலை விட்டிறங்காத கதை' இவ்வாறு அவர் கதைகளின் தலைப்புக்களைக் கூறிக்கொண்டே போகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக இவரது 'வாடாமல்லிகை' எனும் கதை சரசு என்கின்ற பதினேழு வயதுப் பெண் இளம் வயதிலேயே திருமணம் செய்து விதவையாகிறாள். அவளின் ஆசைகள், உணர்வுகள், மனநிலை என்பவற்றால் அவள் தனக்குள்ளேயே மனக்கொதிப்படைகிறாள். ஏனெனில் அவள் ஒரு இந்துப் பெண் அவளால் மறுமணம் செய்யமுடியாது. இதனால் அவள் தன்மன எழுச்சியைக் கட்டுப்படுத்தமுடியாமல் இளமங்கையாக, வாடாமலராகவே மரணிக்கிறாள். உண்மையில் 'வாடாமல்லிகை' என்ற இதன் தலைப்பு இக்கதைக்கு மிகப்பொருத்தமானதே இவ்வாறே அவரது ஏனைய கதைகளும் காணப்படுகின்றன.

'ஒரு ஊரிலே ஒரு ராஜா' போன்ற பழைய கதை மரபுகளைவிடுத்து ஆங்கிலக் கதை உத்திகளைக் கையாண்டு இவர் கதைகளை எழுதியுள்ளமை குறிப்படத்தக்கது. இவரது கதைகளின் ஆரம்பமே வாசகனுக்கு வாசிக்கும் ஆர்வத்தை உண்டாக்கக்கூடியன. ஆரம்பமுதல், கடைசி வரை அழகாக விறுவிறுப்பாக அவர் கதைகள் நகர்ந்து கொண்டு செல்வதை நாம் காணலாம். கதைகளை எப்படி ஆரம்பித்தால் தான் உணர்த்த விரும்புகின்ற உணர்வுகளை உணர்த்தலாம் என உணர்ந்து சிறந்த முறையில் கதைகளை ஆரம்பிப்பார்.

'சாலையில் ஒரு கற்சிலை தளர்ந்து நொடிந்து போன தசைக்கூட்டத்திலும் வீரியத்தை துள்ளவைக்கும் மோகனவடிவம்'.

இவ்வாறு தொடங்கும் 'சாபவிமோஷனம்' அகலிகையின் சாபவிமோசனத்தை சுட்டிக்காட்டித் தொடங்குகின்றது. இவ்வாறு இவரது கதைகளின் ஆரம்பங்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறே இவரது கதை முடிவுகள் மிகச் சிறந்தவை. மனித சிந்தனையைத் தூண்டி, பல கேள்விக்கணைகளை மக்களை நோக்கி விடுத்து கதைகளை முடிப்பார். இவரது ஒவ்வொரு கதையும் முக்கிய பிரச்சனைகளை கேள்விக்குறியாகக் கொண்டது.

'என்னவோ கற்பு கற்பு என்று கதைக்கின்றீர்களே 'இதுதான் ஐயா பொன்னகரம்' என அவர் முடிக்கும் 'பொன்னகரம்' கதை அம்மாளு எனும் பெண்ணின் கணவன் நோயினால் வீட்டில் படுத்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு பாற்கஞ்சி காய்ச்ச பணம் இல்லாது தன் கணவனுக்காக கற்பை இழந்து பணம் பெறுகிறாள். இவ்வாறான அவளது முடிவு சரியா? இல்லையா? என்பது பற்றி வாசகனே முடிவு எடுக்கவிட்டிருக்கிறார் புதுமைப்பித்தன். இவ்வாறே 'புதிய கூண்டு' 'நியாயம் தான்' ஒப்பந்தம் போன்ற கதைகள் வாசகனின் சிந்தனையைத் தூண்டுவனவாய் வாசகனிடம் அதன் முடிவுகள் விடப்பட்டுள்ளன.

'ஒரு நாள் கழிந்தது' 'செல்லம்மாள்' 'சாபவிமோசனம்' 'அகலிகை' 'வெளிப்பூச்சு' 'துன்பக்கேணி' போன்ற பல கதைகளுக்கு; ஏற்ற முடிவுகளைக் கொண்டு முடித்துள்ளார்.

உதாரணமாக 'அகலிகை' எனும் கதையில் அகலிகை தன்னை அறியாமல் கற்பை பறிகொடுத்து விட்டாள்; என்பதை தெரிந்த கௌதமர் சாந்தியடைந்து அவளை மன்னிப்பதாக கதை முடிகிறது.

'கல்யாணி' 'வாடாமல்லிகை' 'பாலவண்ணப்பிள்ளை' 'வழி' போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளின் முடிவுகள் திருப்பு முனையாக அமைந்துள்ளன. கலெக்டர் குமாஸ்தாவான பால்வண்ணப்பிள்ளைக்கு நான்கு குழந்தைகள். அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் பால்வாங்க முடியாததால் அவர் மனைவி ஒரு மாட்டை வாங்குகிறாள். ஆனால் 'என்புள்ளெகள் தீத்தண்ணி குடிச்சி வளந்திடும், என்று மனம் இரக்கமில்லாமல் அம்மாட்டை விற்றுவிடுகிறாள்.

இவ்வாறு சிந்தனையைத் தூண்டி பல கேள்விக்கணைகளை வாசகனிடம் விடுத்தும், சிறுகதைக்கு ஏற்றவாறும் அவர் கதைகளை முடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாம் வாழ்க்கையில் அன்றாடம் காணும் பாத்திரங்களையே இவர் கதைகளில் நடமாடவிட்டிருக்கின்றார். அவர் பாத்திரங்களை சிறப்பாகக் கையாண்டது மாத்திரமன்றி அவற்றை அறிமுகம் செய்யும் திறனும் தனித்துவமானது. உதாரணமாக 'கல்யாணி' எனும் கதையில் கல்யாணியை அறிமுகம் செய்கின்ற போது.

'நினைவுகள் ஓடிமறைந்த கண்கள்
சோகம் கலந்த பார்வை, அவளது புன்னகை
ஆளை மயக்காவிட்டாலும் ஆளை வசீகரிக்கும்'

என்கிறார். இவ்வாறு பாத்திர அறிமுகங்கள் கூட தன் கதைகளுக்கேற்ப படைத்துள்ளார். அது மாத்திரமன்றி சமூகத்திடையே காணப்படும் மனித மனக்கோலங்களை வெகுதிறமையாக சித்தரித்துக் காட்டும் பாத்திரங்களாக அவர் பாத்திரங்கள் காணப்படுகின்றன. இதனால் தான் நாள்தோறும் பசியினாலும் நோயினாலும் கஷ்டப்படும் கணவனுக்காக தன் கற்பை இழக்கும் அம்மாளுவையும் (பொன்னகரம்), வழியில் போகின்றவரை 'என்னய்யா சும்மா போறே வாறியா?' எனக்கூறும் விபச்சாரியான தொழிலாளியையும் (கவிந்தனும் காமுகனும்), நோயாற் குடும்பத்தின் உதவியின்றி தன் கணவனுடன் இருந்து கொண்டு சாகத்துடிக்கும் செல்லம்மாள், இதனால் அவதிப்பட்டு அல்லலுறும் அவளது கணவன் தியாக மூர்த்தியையும் (செல்லம்மாள்), திருமணம் முடித்தும் சுகம் காணமுடியாமல் தவிக்கும் கல்யாணியையும் (கல்யாணி), வறுமையால் கஷ்டப்படும் முருகதாஸ் போன்றோரையும் துணிச்சலான முறையில் யதார்த்தமாக அவர் படைத்துள்ளார். இவர் படைத்த குழந்தைப் பாத்திரங்கள் கூட அதன் தன்மைக்கேற்ப படைக்கப்பட்டுள்ளன.

சிறுகதைக்கு வலுவைத்தருவது நடை, புதுமைப்பித்தனின் அதிகமான கதைகள் எளிய சொற்கள், சொல்வளம், சிறியசிறிய வசனங்கள், கருத்தாழம் மிக்க வசனங்கள், மண்வளச் சொற்கள், பேச்சு நடை, உவமானங்கள் என்பவற்றைக் கொண்டு அவர்தன் நடையைக் கதைகளில் கையாண்டுள்ளார். இதனால் தான் இவரை 'வசன நடை இலக்கியத்தின் மன்னன்' என அழகிரிசாமி குறிப்பிடுகின்றார். உதாரணமாக 'தெருவிளக்கு' எனும் கதையில்

'இனிமேல் விளக்கு அந்த பக்கத்திற்கு வேண்டாமாம். அதை எடுத்து விட வேண்டுமாம்.

அதற்கு ஒரு தோழன் - ஒரு கிழவன்
கிழவனுக்கு விளக்கு
விளக்கிற்கு கிழவன்
விளக்கை எடுத்து விடப்போகிறார்கள் என்று கிழவனுக்குத் தெரியாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு எப்படித் தெரியும்?

அவன் வயிற்றுக்குப் பிச்சை எடுக்க வேண்டாமா?

இவ்வாறான தனிநடை போன்ற கருத்தாழமிக்க நடையை 'பறிமுதல்' 'மிஷின்யுகம்', 'கவந்தனும் காமனும்' 'கட்டில் பேசுகின்றது' 'பொன்னகரம்' போன்ற கதைகளில் காணலாம்.

இவர் அதிகமான கதைகளில் பேச்சு மொழி நடையைக் கையாண்டுள்ளார். உதாரணமாக:- 'ஆமாம் பாக்கும் இல்லே போலிருக்கு எல்லாமா ஒரு துட்டுக்கு வாங்கியா'

'ஆமாம் அவுககேக்கதை வாங்கிக்கிட்டு, வெள்ளையனைப் பாத்து இருந்தா நாளை விடியன்னைக்கு கச்சேரிக்குப் போகனும்.'

(துன்பக்கேணி)

இவ்வாறு தனது 'ஒரு நாள் கழிந்தது', 'பால்வண்ணப்பிள்ளை' 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்' போன்ற அநேகமான கதைகளில் பேச்சு நடையைக் கையாண்டுள்ளார்.

இவ்வாறு தனது கதைகளின் நடையை நகர்த்தியுள்ள அவர்தன் நடையைப்பற்றி,

'கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு, வார்த்தைகளை வெறும் சாதாரணமாகக் கருதி, தாவிச் செல்லும் நடை ஒன்றை; அது தமிழ்ப் பண்பிற்கு முற்றிலும் புதிது' எனக் குறிப்பிட்டுக் காட்டுவதானது இவரது வித்தியாசமான நடைப் போக்கின் காரணம் எனலாம்.

அது மாத்திரமன்றி யதார்த்தங்களை குத்தலான நடையில் அவர் கதைகளில் ஆங்காங்கே சுட்டிக்காட்டுகின்றார். விபச்சாரம் பற்றி குறிப்பிடுகையில் 'நாசுக்காகக் கண்ணை மூடவேண்டாம். நீங்கள் போட்டிருக்கின்றீர்களே பாப்ளின் ஷேட்டு, உங்கள் ஷெல்பிரேம் கண்ணாடி எல்லாம் அவர்கள் வயிற்றில் இருக்க வேண்டியதைத் திருடியது தான்' என குத்தலாகக் காட்டுகிறார்.

உவமானங்களை அவர்கதைகளில் கையாளும்போது பாத்திரத்திற் கேற்பவும், கதைக் கேற்பவும் சிறந்த முறையில் கையாண்டுள்ளார். நாளாந்தம் நிகழும் நிகழ்வுகளையே அவர் உவமையாகக் கையாண்டுள்ளார். பாத்திரங்களுக்கேற்ற. மன உணர்வுகளுக்கேற்ப உவமைகளை சிறந்த முறையில் பயன்படுத்தியுள்ளார்.

'செம்பாதி நரைத்த தலை ஜீவியத்தில் பட்ட கஷ்டங்களை படம் போட்டுக் காட்டுவது போல் கோடுகள் நிறைந்த முகம்.' என 'சங்குதேவனின் தர்மம்' எனும் கதையில் வரும் முத்தாச்சிப் பாட்டியைப் பற்றி வர்ணிக்கிறார்.

'மகாமசானம்' எனும் கதையில் சென்னை மவுண்ரோடு ரவுண்டானாவின் மாலை நேரக்காட்சிகள், சந்தடிகள், பரபரப்பு என்பவற்றை உவமைகளுடன் சிறந்த முறையில் இடத்திற்கேற்ப வர்ணிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இவர் சூழல், இட, பாத்திர, மனநிலைச் சித்தரிப்பு போன்றனவற்றை இயல்பான முறையில், இலகுவாக விளங்கும் வண்ணம் வர்ணிக்கிறார். இவ்வர்ணிப்புகள் கதைகளுக்கேற்றவாறும், கற்பனை நயத்துடனும் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு உவமை, உருவகங்களிலும் கூட புதுமை செய்து நடைக்கு விஷேசமான அழகும், தனிச்சுவையும் உண்டாக்கியவர் புதுமைப்பித்தன்.

முற்றிலும் நனவோடை உத்தியைக் கொண்டு எழுதப்பட்ட கதை' நினைவுப்பாதை' எனும் கதை. தனித்திருந்த வைரவன் பிள்ளையின் நினைவோட்டத்தை இது விபரிக்கின்றது. துக்கவீட்டு சூழ்நிலை, அங்கே வந்தவர்களின் மனநிலை, மற்றும்ஆசைகள், நோக்கங்கள், கால உணர்வு முதலியவற்றையும் அவற்றினூடே தனியாகிவிட்ட முதியவரின் நினைவுகளைக் கொண்டு இது எழுதப்பட்டுள்ளது. 'கயிற்றிரவு' எனும் கதை பரமசிவப்பிள்ளையின் நனவோட்டத்தை அற்புதமாக எடுத்துச் செல்கின்றது.

கதைகளில் அவர் கொண்ட கருத்தை தைரியமாக வெளியிட்டார். உதாரணமாக, தன் கணவனிடம் சுகம் காணாத கல்யாணி தன் காதலனிடம் 'இங்கே இருந்து விடுங்கள்' என்று தன் வீட்டில் இருக்கும்படி கூறவைக்கின்றார். அவ்வாறே கௌதமர் இந்திரனுடன் உறவு கொள்ள நேர்ந்து விட்ட அகல்யையை 'மனத்தூய்மை தான் கற்பு சந்தர்ப்ப வசத்தால் உடல் கலங்குமானால் அபலை என்ன செய்யமுடியும்?' என்கிறார். இவ்வாறு பல கதைகளில் தன் கருத்தை அக்காலத்தில் சுதந்திரத்துடன் கையாண்டாமை அவரது தன்னம்பிக்கையே எனலாம்.

எந்தப் படைப்பாளியும் பலமும் பலவீனங்களும் கொண்டவன் தான். இந்த அடிப்படையில் புதுமைப்பித்தன் கதைகளிலும் பலவீனங்கள் சில காணப்படுகின்றன. நாவலுக்குரிய குணங்கள் அவரிடம் முனைப்பாகச் செயல்படுகின்றனவோ என்ற எண்ணம் கதைகளை வாசிக்கும் போது ஏற்படுகின்றன. ''துன்பக்கேணி' போன்ற கதைகள் உருவம் கூடிய கதையமைப்பைக் கொண்டுள்ளன.

தன்மன ஓட்டத்தின் விமர்சனங்களை கதையில் அவர் புகுத்தியுள்ளார். உதாரணமாக 'சங்கு தேவனின் தர்மம்' எனும் கதையின் ஆரம்பத்தில் ஹிந்து தர்மத்தின் கட்டப்பாடுகளை பற்றிய விளாசல் சற்று விரிவாகவே காணப்படுகின்றது.

சூழல் வர்ணிப்புக்கள், உவமான, உவமேயங்கள் போன்றவற்றை அதிகமாக நூல்களில் கையாள்வது போன்று கையாண்டுள்ளார். உதாரணமாக 'பொன்னகரம்' எனும் கதையில் அக்கதையின் முக்கால் பங்கு பொன்னகரம் பற்றிய வர்ணிப்பே.

அது மாத்திரமன்றி பேய் பிசாசுகள் பற்றிய கதைகள் சமுதாயத்தை உய்விக்கத்தக்கதன்று.

இவ்வாறு இருந்த போதிலும் இவரது கதைகளை நோக்குமிடத்து அவர் தான் வாழும் சமுதாயத்தில் காணப்படுகின்றவற்றையே கதைப் பொருளாகத் தேர்ந்தெடுத்து அதற்கேற்ற வடிவம், நடையை சிறந்த முறையில் கையாண்டுள்ளார். இவரது கதைகள் சமுதாய உணர்வுகளை பிரதிபலிப்பது, சமுதாயத்தை வழிப்படுத்தக்கூடிய சிறந்த கதைகள் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்புத் திறன் விருத்தியில் பாடசாலை நூலகங்கள்

வல்வை. ந. அனந்தராஜ்

நூலகம் என்பது கல்வியை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் மக்கள் தொடர்பு சார்ந்த நிறுவனமாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலத்தில் இருந்தே நூல்களினதும், நூலகங்களினதும் தேவையும் உணரப்பட்டதால் தொன்மையான இலக்கியங்களும், ஓலைச்சுவடிகளும் இன்னும் எமது பார்வைக்குக் கிடைக்கக் கூடியவையாக உள்ளன.

'நூலகம்' அன்றே இருந்தமைக்கு நாலடியாரில் வரும் பின்வரும் பாடல் அடிகள் சான்றாக உள்ளன.

''புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள் தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும் மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு"

தான் தேடிவந்த நூல், நூலகத்தில் கிடைக்காதது மட்டுமன்றி, அங்கே இருந்த நூல்கள் வழிகாட்டலுக்கான உசாத்துணை உதவிகளைக் (Reference Service) கூடச் சரியாக மேற்கொள்ளாத காரணத்தினால் சினம் கொண்ட புலவரால் பாடப்பட்ட பாடலே இது.

இதே போன்று தமிழகத்தில் சமணசமயம் உச்சம் பெற்றிருந்த காலத்தில் சமணத்துறவிகள் நடமாடும் நூலகங்களாகச் செயற்பட்டனர். கி.மு. 5ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தினால் பல சமணத் துறவிகள் இறந்த போது அவர்களுடன் இருந்த அறிவுச் செல்வமும் கூடவே அழிந்து போனதால், பிறகாலத்தில் அவர்களது அறிவுச் செல்வத்தைச் சேகரித்து நூல்களாகத் தொகுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு நூல்களைத் தொகுக்கும் முயற்சி 'புத்தக ஆரோகணம்' எனப்பட்டது.

இவ்வாறு தொகுத்த நூல்களைச் சேகரித்து வைத்த இடங்கள் ''ஞானப்பண்டாரங்கள்" என அழைக்கப்பட்டன.

பௌத்தசமயக் காலத்திலும், கூட நூலகங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டன. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான 'மணிமேகலையின்' ஆசிரியரான சீத்தலைச் சாத்தனாரின் பாடலில் நூலகம் பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது. யாவரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏத்தும் இருங்கலை நியமித்துத் தேவி சிந்தா விளக்குத் தோன்றி" இப்பாடல் அடியில் வரும் ''இருங்கலை நியமம்'' என்பது கலை செறிந்த இடம் என்பதைக் குறிக்கும். இதுவே இன்று நாம் அழைக்கும் நூலகங்கள் அன்று மிகச் சிறந்த நூலகமாக நாளாந்தப் பல்கலைக்கழக நூலகம் விளங்கியது.

வைணவ சமய காலத்தில் ''பொஷ்கர சம்ஹதை'' என்ற சமண சமய நூலில், ''ஞானப்பிரதிஷ்டை'' என்ற பகுதியில், நூலகங்கள் அமைக்கும் முறை, நூல்களைச் சேகரிக்கும் திட்டங்கள், பாதுகாப்பு முறை மற்றும் பயன்படுத்தும் முறைகள் என்பன பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சைவ சமய காலத்தில் நாயன்மார்களின் தேவாரத் திருப்பாசுரங்கள் அடங்கிய சுவடிகள் சிதம்பரத்தில் கர்ப்பக் கிரகத்தின் பின்னால் சேகரிக்கப்பட்டிருந்தன. இவை பின்னர் இராஜஇராஜசோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியினால் கண்டெடுக்கப்பட்டுத் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. கி.பி. 788 - 820 இல் சங்கரர் வாழ்ந்த மடத்தில் பல்வேறு சமய நூல்கள் சேமிக்கப்பட்டிருந்த நூலகம் அமைக்கப்பட்டிருந்தது.



இஸ்லாமியர் காலத்தில், நூலகங்கள் மேலும் சிறப்பாக பராமரிக்கப்பட்டிருந்தன. முகம்மது பின் - துக்ளத் தம் அரச சபையில் ஒரு சிறந்த நூலகத்தை வைத்திருந்தார்.

அக்பர் (1556 - 1605) தனது ஆட்சிக்காலத்தில் நூலகங்களை விரிவுபடுத்தினார். அவர் அன்னிய நாடுகளுடனான போர்களின் போதும், முற்றுகைகளின் போதும் அங்கிருந்த நல்ல நூல்களைக் கொள்ளையடித்துக் கொண்டு வந்து தனது நூலகத்தில் அவற்றைச் சேர்த்து வைப்பாராம். அக்பர் காலத்தில் நூலகங்கள், நசீம் (Nazeem) என்று அழைக்கப்பட்டனர்.

இவ்வாறு மனித குல வரலாற்றில் இமை, மதம், மொழி என்பவற்றிற்கு அப்பால் நூலகங்களைப் பராமரிக்கும் கலாச்சாரம் ஒன்று நிலவி வந்ததை வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அந்தவகையில் நீண்ட இடைவெளியான பின் இலங்கைப் பாடசாலைகளில் தற்பொழுது நூலகங்களை அமைத்தலிலும், அவற்றை விரிவாக்குதலிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களைப் பயன்படுத்த வைப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருவது கல்வி அபிவிருத்தியில் ஒரு ஆரோக்கியமான செயல்பாட்டே உறுதிப்படுத்துவதாக இருக்கின்றது.

இலங்கைப்பாடசாலைகளில் மாணவர்கள் ஆசிரியர்கள் மட்டத்தில் ''வாசிப்புத்திறன் விருத்தித் தொடர்பான ஆய்வு ஒன்றை 1995இல் உலகவங்கிக் குழு மேற்கொண்ட போது, அவர்களது அறிக்கை அதிர்ச்சி தருவதாக இருந்தது.

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் வாசிப்புத் திறனும், நூல்களின் பாவனையும் குறைவாக இருப்பதைப்பற்றி உலக வங்கி கவலையுடன் சுட்டிக்காட்டிய போது அதிகளவு ஜீவிகளால் எப்படித் தலை நிமிர்ந்து நிற்க முடியும்?.

உலகவங்கிக் குழுவினரின் அறிக்கையைத் தொடர்ந்து புதிய கல்விச் சீர்திருத்தத்தில் நூலகப் பாவனைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது. அதன் ஒரு நடவடிக்கையாகவே அவர்களின் சிபார்சின் பேரில் இலங்கையில் உள்ள 4000 பாடசாலைகளில் நூலகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம்; நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. இவற்றில் 2000 பாடசாலைகளுக்கு புதியதாகவோ அல்லது புனரமைத்தோ கட்டிட வசதிகளும், தளபாடவசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இச்செயல் திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 568 பாடசாலைகளில் பாடசாலைகளுக்குக் கட்டிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகளுக்கு நூல்களையும் ஆசிரியர் நூலகங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளில் வாசிப்புத்திறனை விருத்தி செய்வதில் பின்வரும் 3 காரணிகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவையாகும்.

1. நூலகத்திற்கான இடத்தைத் தெரிவு செய்தல்.
2. நூல்களைச் சேகரித்தலும், விரிவாக்கலும்.
3. வழிகாட்டி உதவும் ஆசிரியர் நூலகங்களை நியமித்தல்.

***நூலகத்தின் அமைவிடம்***

நூலகத்திற்கான அமைவிடம் புதிய கட்டிடமாகவோ, அல்லது இருக்கின்ற வகுப்பறையை மாற்றி அமைப்பதாகவோ இருக்கலாம். நூலகத்திற்கான இடத்தைத் தெரிவு செய்யும் பொழுது பின்வரும் அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. மாணவர்களும், ஆசிரியர்களும், பிற்பகலில் ஓய்வு நேரங்களில் பொதுமக்களும் இலகுவில் அணுகும் வகையில் பாடசாலையின் மத்தியில் அல்லது முகப்புடன் அமைக்கப்படவேண்டும்.

2. அமைதியான சூழலில், இயற்கையான வெளிச்சமும், காற்றோட்டமும் உள்ள இடமாக இருத்தல் வேண்டும்.

3. நூலகங்கள் தரைத்தளத்தில் (Ground Flour) அமைப்பது சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நூலகங்கள் பார்ப்பதற்குக் கவர்ச்சியானதாகவும், பார்ப்பவறை ஈர்க்கும் வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும்.

5. கலையரங்கம், கேட்போர் கூடம், விளையாட்டு மைதானம் மற்றும் இடங்களுக்கு அண்மையில் இருந்து சற்றுத் தொலைவில் அமைந்திருத்தல் வேண்டும்.

6. வெளியில் இருந்து வரும் இரைச்சல், நூலகத்தினுள் நுழையாத வகையில் ஒலியை உறிஞ்சக்கூடிய தடுப்புக்கள் உள்ள வகையில் கட்டடம் அமைத்தல் வேண்டும்.

7. நூல்கள் மற்றும் வீடியோ, ஓடியோ, பதியிகள், சி.டி.ரோம் என்பன இலகுவில் எல்லோராலும் பார்க்கக் கூடிய வகையில் நூலகக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

8. படிப்பதற்கு தேவையான இடவசதி, இருக்கை வசதிகள் போதுமான அளவுக்கு இருக்க வேண்டும். கதிரைகள் ஒன்றுடன் ஒன்று அடுக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

9. மின் விளக்குகள் ஒரே சீராகப் பரவிப் போதிய வெளிச்சம் இருக்கும் வகையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. கணணி, இணைய வசதிகள் என்பவற்றை ஏற்படுத்தும் வகையில் தனியான அமைப்பை உருவாக்க வேண்டும்.

***நூல்களைத் தெரிவு செய்தலும், சேகரித்தலும்.***

நூலகத்திற்கான கட்டடம் எவ்வளவு சிறப்பானதாக அமைக்கப்பட்டாலும், அங்கு நூல்கள் போதியளவு இல்லாவிடின் அவை வெறும் உயிரற்ற உடல்களாகவே கருதப்படும்.

எனவே ஒரு நூலகத்திற்குத் தேவையான நூல்களைச் சேகரிப்பதிலும், விரிவாக்கப் பணியிலும் அதிபர்கள் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

அமெரிக்க வெப்ஸ்டர் அகராதி, ''எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத காகிதங்களைச் சேர்த்துத் தைக்கப்பட்ட ஒரு தொகுப்பே நூல் ஆகும்'' என்று விளக்கம் கொடுக்கின்றது. எனவே பாடசாலைகளிலோ அல்லது பொது நூலகங்களிலோ நூல்களைத் தெரிவு செய்யும் பொழுது, அவை நல்ல நூல்களாகவும், பயன்படக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும்.

தமிழர் பண்பாட்டின் மொழி வளர்ச்சியில் ஒவ்வொரு பொருளுக்கும், அதன்பண்புஈ உருவஅமைப்பு, அது பயன்படும் விதம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டே அவற்றுக்கான பெயர்களைச் சூட்டி இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் நூல் என்பதற்கு ஏடு, சுவடி, ஓலை, தூக்கு, பனுவல், மொத்தகம் என்று பல பெயர்கள் உள்ளன.

எனவே ஒரு நூலகத்தின் விரிவாக்கப்பணியில் நல்ல நூல்களைச் சேகரிப்பதும், சேர்த்து வைத்தலும் என்பது முக்கியமான ஒரு செயற்பாடாகும்.

பாடசாலை அதிபர்கள் பின்வரும் வகைகளில் நூல்களை எடுக்கலாம்

1. கல்வி அமைச்சு, மாகாணக்கல்வி அமைச்சு மாகாணக்கல்வித் திணைக்களம் என்பவற்றில் இருந்து நூல்களைப் பெற்றுக் கொள்ளுதல்

2. இந்து கலாச்சார அமைச்சு, முஸ்லிம் கலாச்சார அமைச்சுக்கலில் இருந்து நூல்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

3. வசதிகள் சேவைகள் கட்டிட நிதி, பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதி, குணநல உள்ளீட்டு நதியில் இருந்து நூல்களைக் கொள்வனவு செய்தல்.

4. பழைய மாணவர் சங்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களில் இருந்து நூல்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியைப் பெறுதல்.

5. மாணவர்கள், ஆசிரியர்கள் தமது பிறந்த நாள் நினைவாக 'ரொபி', மற்றும் 'கேக்' வகைகள் வழங்குவதை நிறுத்தி, அந்த நினைவாக ஒரு நூலைப் பாடசாலை நூலகத்திற்கு வழங்குதல்.

6. ஆசிரியர்கள் வீடுகளில் இடம் பெறும் நினைவு தினங்களில் பெருமளவு நிதியைச் செலவு செய்கின்றனர். அவற்றைத் தவிர்த்து, அந்த நினைவாக நூல் ஒன்றை அன்பளிப்பாக வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தல்.

7. தீபாவளி, வருடப்பிறப்பு, ரமழான், நத்தார், வெசாக் பண்புகளின் போது கைவிசேசமாகப் பணத்தை வழங்குவதற்குப் பதிலாகக் குழந்தைகளுக்கு நூல் ஒன்றை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

8. உள்ளூர் வர்த்தகர்களிடம் இருந்து நூல்களை அன்பளிப்பாகப் பெறுதல்.

9. நூலகவிபரம், நூல் கண்காட்சி என்பவற்றை ஒழுங்கு செய்து வீட்டுக்கு ஒரு நூல் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.

10. மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளிடம் இருந்து அவ்வப் பிரதேசங்களுக்கான நூல்களைக் கொள்வனவு செய்வதற்கான நதியை ஒதுக்குவித்தல்.

இவ்வாறு பல்வேறு வகைகளில் நூல்களின் பெருக்கத்தை விரிவாக்குவதற்கான முயற்சிகளை அதிபர்கள், நூலக முகாமைத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வழிகாட்டி உதவும் ஆசிரியர் நூலகர்கள்* **(Teachers Librarians)**

பாடசாலை நூலகங்களில், நூலகச் செயற்பாட்டை விஞ்ஞான பூர்வமாக முன்னெடுப்பதற்கும், மாணவர்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்கும் என 'ஆசிரியர் நூலகர்கள்' ஒவ்வொரு பாடசாலைக்கும் நியமிக்கப்பட உள்ளனர்.

கனடா, நியுசிலாந்து போன்ற நாடுகளில் நூலகச் செயற்பாடு மிகச் சிறப்பாக இருப்பதில் இவர்களின் பங்கு முக்கியமானது. உயர் கல்வித்தகைமையும், சேவை முதிர்ச்சியும், கற்பித்தல் அனுபவமும், நூலக விஞ்ஞானத்தில் பயிற்சியும் உடைய ஆற்றல் மிக்க ஆசிரியர்களிடம் இருந்து ஆசிரியர் நூலகர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

ஆசிரியர் நூலகர்கள் கல்வி அபிவிருத்திச் செயற்பாட்டின் முக்கியமான ஒரு கூறாக விளங்குவதுடன் மாணவர்களுக்கு கற்றல் செயற்பாட்டில் உதவும் வழிகாட்டியாகவும், ஆசிரியர்களுடன் இணைந்து செயலாற்றும் ஒரு ஆலோசகராகவும் செயற்படுகின்றனர்.

நன்கு வளர்ச்சியடைந்த மேலைத் தேசிய நாடுகளில் கல்வித் தகைமையிலும், கற்பித்தல் அனுபவத்திலும் சிறந்த ஆளுமை உள்ளவர்களாக இருப்பதால், அங்குள்ள ஆசிரியர் நூலகர்கள் அதிபருக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படுகின்றனர்.

அதே அமைப்பை ஒத்த புதிய ஆளணிக் கோப்பு (Cadre) ஒன்று தற்பொழுது இலங்கையிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

ஐந்து வருட ஆசிரியர் சேவையை உடைய பட்டதாரி ஆசிரியர்களில் இருந்து தெரிவு செய்யப்படும் ஆசிரிய நூலகர்கள் ஆரம்ப வலுவூட்டல் பயிற்சி ஒன்றின் பின்னர் பாடசாலைகட்கு நியமிக்கப்பட உள்ளனர்.

இவர்கள் பாடசாலைகளில் நூலகச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்பவராகவும், கற்றல் - கற்பத்தல் நடவடிக்கைகளுக்கு உதவும் வழிகாட்டியாகவும், மாணவர்களின் வாசிப்புத் திறனை உயர்த்தும் ஆசானாகவும் செயற்படுவார்கள்.

இந்த நிலையில் பாடசாலை நூலகங்களின் முக்கிய பணியாக விளங்குவது, மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்து சிறந்த வாசகர்களாக்குவதே (Good readers) யாகும்.

இதனாலேயே புதிய கல்விச் சீர்திருத்த ஒழுங்கமைப்பின் கீழ் உருவாக்கப்படும் பாடசாலை நூலகங்கள் "நூலகமும், கற்றலுக்குமான வன நிலையங்கள்" (LIBRARY AND LEARNINGS RESOURCE CENTRE) என விரிந்த பொருளில் அழைக்கப்படுகின்றன. இந்நிலையில் ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் தமது பாடசாலைகளில் வளம் நிறைந்த நல்லதொரு நூலக வளநிலையத்தை உருவாக்குவதற்கு முயற்சிகள் எடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோ. கைலாசநாதன்

# நவீன ஓவியங்கள் ஒரு பார்வை.

நவீன ஓவியங்கள், நவீன சிற்பங்கள், நவீன கட்டிடக்கலை போன்ற சொற்பிரயோகங்களை நாம் அன்றாடம் கேட்டுவருகின்றோம். 'நவீன' என்ற சொற்றொடரைச் சாதாரணமாக எல்லோரும் 'தற்காலத்துக்கு ஏற்ற' பாணி அல்லது முறை என்னும் அடிப்படையிலேயே புரிந்து வைத்துள்ளனர். அகராதிக் கருத்தும் இதுவேயாகும். உண்மையில் நவீன என்பதற்குரிய சரியான கருத்து வழமையில் இருந்து 'வித்தியாசப்பட்டது' என்பதேயாகும். இதிலிருந்து 'நவீன' என்பது காலம் சார்ந்த ஒன்றாகாது என்பதை விளங்கிக் கொள்ளலாம். பலவருடங்களுக்கு முன்னுள்ள ஏதாவது ஒரு வடிவத்திலும் நவீன அம்சங்கள் இருந்திருக்கலாம். ஆனால் இன்று காலையில் ஆக்கப்பட்ட வடிவத்தில் அவ்வம்சங்கள் இல்லாதும் போகலாம்.


பொதுவாக நவீன ஓவியர்கள் எதைப் பார்க்கின்றார்களோ அதை வரையாது எதை உணர்கின்றார்களோ அதனை வரையவே முயற்சிக்கின்றார்கள் எனக் கூறினால் அது பிழையாகாது. இந்த வரிசையில் வான்கோ, பிக்காஸோ சிசான், போன்ற கலைஞர்களைக் குறிப்பிடலாம். உதாரணமாகப் பெருந்தீ கொழுந்து விட்டெரிக்கின்றது என வைத்துக் கொள்வோம். ஓர் ஓவியர் தீச்சுவாலையின் போக்கு, அதன் நிறம் அதன் புறவடிவம் இவற்றில் கவனத்தைச் செலுத்தி அடிச்சுவாலையை யதார்த்தமாகக் காட்டிவிடுவார். வேறு ஓர் ஓவியர் இவற்றை யெல்லாம் காட்டாது சூடு அல்லது வெப்பம் என்று உணரக்கூடிய அம்சத்தை நிறங்கள் ஊடாக அல்லது ஏதாவது உத்திகளைக்கையாண்டு காட்டிவிடுவார். இங்கு இரண்டாம் வரை நவீன போக்குள்ளவர் எனக் கூறலாம். அதாவது ஒன்றின் சாரம்சத்தைக் காட்டுபவர் என இவரைக் குறிப்பிடலாம்.



நவீன ஓவியங்களைப் புரிந்துகொள்வதற்கு ஓவியங்களை அடிக்கடி பார்ப்பது மிகவும் அவசியமானது. பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட வேண்டும். தர்க்க ரீதியானவினாக்கள் கேட்கப்படுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவிர்க்கப்படவேண்டும். கடுமையாக உழைக்கும் சுரங்கத் தொழிலாளர்களைக் காட்டுவதன் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட விடயத்துக்கு மேலதிக அழுத்தத்தைக் கொடுக்கமுடியும். உழைத்து உழைத்துத் தொழிலாளர்களே சப்பாத்து ஆகிவிட்டார்கள். அவர்களின் வாழ்வு நிலை சப்பாத்துப் போல் தேய்ந்து கொண்டு போகின்றது என்னும் கருத்துக்களை இவ்வடிவங்கள் ஊடாகப் பிரதிபலிக்கச் செய்ய முடியும். இதே தொழிலாளர்களைக் கரி நிறமான உடுப்புகளுடனும் வியர்வை முகங்களுடனும் உள்ளதை உள்ளவாறே யதார்த்தமாகக் காட்டவும் முடியும். ஆனால் இதற்கு வரைய வேண்டிய தேவையில்லை. சுரங்கத் தொழிலாளர்களைக் கலைத்துவமாக நவீன புகைப்படக் கருவி மூலம் படம் பிடித்து விட்டுப் போகலாம். புகைப்படக்கருவியின் வரவு ஓவியக்கலையில் மாற்றத்தை உண்டு பண்ணியுள்ளது. புறத்தே உள்ள காட்சியானது புறத்தே உள்ளவாறு கலைஞரால் காட்டப்பட வேண்டுமென்பது பார்வையாளர்களால் நிபந்தனைப் படுத்தப்படுகின்றது. இதன் காரணமாக சிறு வித்தியாசங்கள் இருந்தாலும் கூட அவர்கள் மனது ஏற்க மறுக்கின்றது. இவ்வாறு மனது ஏற்க மறுப்பதற்குக் காரணம் சிந்தனை என்பது எப்போதும் நிபந்தனைப் படுத்தப்பட்டு வருவதனால் ஆகும்.

நியூட்டனுக்கு முன்பு இருந்தவர்கள் எல்லோருமே நியூட்டனின் வம்சத்தவர்கள் கூட அப்பிள் பழம் சாதாரணமாகக் கீழேதான் விழும் அது விழாமல் மேலே போகாதோ எனச்சிந்திக்கவில்லை. ஆனால் நியூட்டன் மட்டுமே பழத்தின் விழுகை பற்றிச் சிந்தித்தார். இந்த மாதிரிச் சிந்தனையே புவி ஈர்ப்புக் கொள்கையைத் தந்தது.

பொருள் ஒன்றைச் சாதாரண மனிதர்கள் பார்த்தல், அதனைக் கலைஞர்கள் பார்த்தல்; அதனை விஞ்ஞானிகள் பார்த்தல் என மூன்று நிலைகளை எடுத்துக் கொள்வோம். பொருள் ஒன்றாக இருப்பினும் பார்வையானது வித்தியாசப்படும் என்பதை எல்லோரும் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். எடுத்துக் காட்டாக கோளவடிவான உலக உருண்டையைச் சாதாரண மாணவர்கள் பார்ப்பார்களானால் அங்குள்ள நாடுகளை இனங்காண்பார்கள். விஞ்ஞானி ஒருவர் பார்த்தாரெனின் அது எப்படித் தோன்றிற்று என்ன மூலகங்களால் அது ஆக்கப்பட்டுள்ளது. கோளமாக அதுஏன் இருக்கின்றது. எப்போதோ ஒரு நாள் இது வெடிக்கும் என்றவாறு சிந்திப்பார். எனவே நவீன ஆக்கம் என்பதில் கலைஞரின் மன உணர்வு முக்கிய இடத்தை வகிக்கின்றது. X என்ற பொருளை இரு கலைஞர்கள் பார்க்கின்றார்கள் என வைத்துக் கொள்வோம். ஒருவர் X என்பதை எந்த மாறுதல்களும் செய்யாது X போன்றே வரைகின்றார். மற்றவர் X என்ற வடிவத்துடன் 'தன் உணர்வுப் பார்வை' அனுபவம் இவற்றைக்கலந்து Y என ஆக்குகின்றார். எனினும் Yஎன்பது வரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அல்லது படைப்பு ஆகும்போது Z ஆகின்றது. இதுவே ஆக்கத்திறன் சாதாரணமாகப் படைப்பாற்றல் என இதனைக்கூறுவோம்.

நவீன பாணி ஓவியங்கள் என்ற போதிலும் திரும்பத்திரும்ப ஒரேபாணியைப் பின்பற்றி ஓர் ஓவியர் வரைவாரெனில் அந்த ஓவியங்கள் இருந்த ஓவியங்களாகவே கொள்ளப்படும். அதாவது கலைஞர் என்பவர் தனது பாணிக்குள் தானே சிறைவைக்கப்பட்ட நிலைக்கு உள்ளாவார் என்பதே இதன் கருத்தாகும். மரபை மீறிச் செய்தாலும் திரும்பத் திரும்ப ஒரே மாதிரிகள் பலவருமெனின் அவையாவும் மீண்டும் மரபாகி விடும் ஆபத்து உண்டு என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும்.



நவீன ஓவியத்தில் கோடுகளின் சுயாதீனம், நிறத்தின் சுயாதீனம் ஓவியத்தின் மேற்பரப்புக்கும் தூரிகைக்கும் உள்ள தொடுகைத் தடங்கள்; பெரும் சுமையைச் சுமந்து கருத்தைக் கடினப்பட்டுக் காட்டாமல் லாவகமாக காட்டுதல் போன்றவை முக்கியமான அம்சங்கள் ஆகும். அதிக விபரிப்புகள் ஓவியத்துக்குப் பலவீனத்தையே கொடுக்கும்.


தன் அக உணர்வு நிலைகளை உணர்வுகள் சிதைவடையாது உருவங்களாகவும் நிறங்களாகவும் வெளிப்படுத்தியவர்களில் வின்சென்ட்வான்கோ மிகவும் முக்கியமானவர், இவரின் தூரிகைத்தடங்கள் உயிரானவை. தனது படுக்கை அறையுடன் தான் எவ்வாறு உணர்வு பூர்வமாக ஒன்றித்து இருந்தாரென்பதை Mybed room என்ற தலைப்பிலான அவரின் ஓவியத்தில் இருந்து நாம் புரிந்து கொள்ள முடியும். அந்த அறையில் உள்ள பொருள்களுக்கு நிற பேதங்களின் மூலம் அதிக வித்தியாசத்தை அவர் காட்டவில்லை. ஏனெனில் உணர்வு பூர்வமான ஒன்றிப்பில் பேதங்கள் அதிகம் தெரியாது என்பது வெளிப்படையான ஓர் உண்மை.

எவ்வளவு ஓவியங்களைப் பார்த்தாலும் மூன்றாவது கண் என்பதன் ஊடாகப் பார்க்கும் போதே புரிதல் தெளிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தரிப்பில் அல்லிராணி


அல்லிராணிக் கோட்டை

ஈழத்தில் மன்னார் மாவட்டத்திலே ஆழ்கடல் தேடி முத்தெடுக்கும் முசலியில் முத்தரிப்பு என்னும் கிராமம். இது மன்னாரின் இறுதி எல்லையாகும். இக்கிராமம் அழகிய நீலக்கடலினால் சூழப்பட்டு அழகை ஊட்ட மற்றைய பகுதியிலே மல்வத்து ஓயாவின் ஒரு கிளை அருவியாக பல ஊர் கண்டு ஓடி வந்து முத்தரிப்புத் துறையிலே சங்கமிக்கின்றது. இவை முத்தரிப்புக் கிராமத்துக்கு அழகை ஊட்டுகின்றன. வெளிநாட்டவர் வியாபாரம் நோக்கமாக இங்கு வந்து தங்கிச் சென்றார்கள், என்பதற்கு ஆதாரமாக முத்தரிப்புக் கிராமத்தின் நடுப்பகுதியிலே ஒரு பெரிய கட்டிடம் காணப்படுகின்றது. இன்று அது பல சிதைவுகளுக்கு உள்ளாகிக் காணப்படுகின்றது. இவை மிகவும் புராதன சிதைவுகளாகும். இதுவே அல்லிராணிக் கோட்டையென அறியப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுக்கும் முசலியில் இற்றைக்கு கி.பி.10ம் நூற்றாண்டளவில் அல்லிராணி அரணமைத்து செங்கோல் ஆட்சி நடத்தினாள். அல்லி அர்ச்சுனன் திருமணம் இங்குதான் நடைபெற்றது, என சரித்திர ஏடுகள் கூறுகின்றன. அந்த அல்லிராணிக் கோட்டை இன்று பல பாதிப்புகளுக்கு உள்ளாகி கடல் அரிப்புக்கு உட்பட்டுக் காணப்படுகின்றது. இது செங்கற்களினால் கட்டிய

**செ. சகாயராணி துரம்**
12ம் ஆண்டு கலைப்பிரிவு, மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி

பெரிய மாடமாளிகையாகும். ஆனால் இன்று கூரைகள் அற்ற நிலையில் பல்வேறு அழிவுகளுக்குள்ளாகி இருக்கின்றது. இதனோடு சேர்ந்து பெரிய அல்லிராணியின் கோபுரம் அமைந்துள்ளது. இது இன்று கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது. அல்லிராணியின் மீன் கொடியானது நீலக் கடலோரத்தில் வானளாவிப் பறந்து வெண்முகிலைத் தொட்டு நின்றது. இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் இந்த முத்தரிப்புக் கிராமத்தில் இவள் அரண் அமைத்து தனிஆட்சி நடத்தி வந்தாள். இங்கு நடைபெற்ற பெண்ஆட்சிக்காலத்தில்தான் இங்கே உள்ளவர்கள் இக்கடலில் முத்தெடுக்கும் தொழிலை மேற் கொண்டனர்.

இவள் மிகவும் அழகிய பெண். பிறைமதிபோன்ற நெற்றியும், வஞ்சிக்கொடிபோன்ற மெல்லிய இடையும், தெருவோரத்தில் உள்ளவரை அடிமையாக மாற்றும் கருவிழிகளும், நெஞ்சையள்ளும் அன்னம் போன்ற நடையும், கொஞ்சும் கிளிபோன்ற மழலை மொழியும், பஞ்சணையின் நிகரான தேகம், அஞ்சனம் தீட்டிய புருவமும் கொண்ட குஞ்சியழகாள் அவள் பெயர் அல்லிராணி ஆகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவள் ஆண்முகத்தைக் கண்டாலே கொன்று வீழ்த்துபவள். இவளின் ஆட்சி தனி ஆட்சியாகவே காணப்பட்டுள்ளது. இக்காலத்தில் தான் அர்ச்சுனனும் கிருஸ்ணபகவானும் மாந்தையில் உள்ள திருக்கேதீஸ்வரத்தை தரிசித்து விட்டு மாதோட்டம் செல்கையில் குளிர் நீரோட்டத்துக்கருகில் போராடும் கண்கள் கொண்ட இளம் பெண்கள் பலர் குடத்திலே பால் மொண்டு வரிசையாக முசலியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைக் கண்ட அர்ச்சுனன், இவர்கள் எங்கு இந்தப்பாலைக் கொண்டு செல்கின்றனர். என்று அறியும் ஆவலுடன் கிருஸ்ண பகவானிடம் கேட்டான். அவன் சொல்ல மறுத்தான். அதனால் அர்ச்சுனன் மிகவும் இரந்து கெஞ்சிய வேளை அவர் அவன் மீது இரக்கம் கொண்டு, முசலியில் முத்தரிப்பு என்னும் கிராமத்தில் ஓர் பெண் அரண் அமைத்து ஆட்சி செய்கின்றாள். அவள் பெயர் தான் அல்லிராணி, அவள் நீராடுவதற்குத்தான் அவளுடைய தோழிகள் பால் மொண்டு நடையில் செல்கின்றனர். நீ அங்கு செல்லமுடியாது அவள் மிகவும் கொடியவள் ஆண்களைக் கண்டால் வெட்டி வீழ்த்துபவள். அர்ச்சுனா நீ அங்கு செல்லாதே என்று, கிருஸ்ண பகவான் சொல்கின்றார். அதைக்கேட்ட அர்ச்சுனனுக்கு அவளைப் பற்றி அறிந்துகொள்ள உடனே விரைந்து செல்ல வேண்டும் போற தோன்றியது. தன்னிடமிருந்த பெண்ணாக மாறும் வரத்தைக் கொண்டு ஓர் நாட்டியக்காரியாக மாறி அல்லிராணியின் இடத்திற்குச் செல்கின்றார். நாட்டியக்காரியாகச் சென்ற அவனை, பெண்ணென நம்பி அவளது அழகையும், நாட்டியத்தையும் கண்ட அல்லிராணி மிகவும் அன்பாகப் பழகி தனது உயிர்த் தோழியாகத் தன்னுடனே இருக்குமாறு பணிக்கவே அர்ச்சுனன் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அவளுடனே தங்கி வாழ்கின்றான். ஒரு நாள் நள்ளிரவு உறங்கிக் கொண்டிருக்கும் வேளை அர்ச்சுனன் தன் சுய உருவத்தை மாற்றுகின்றான். இதைப் பார்த்த அல்லிராணி தன்னுடன் இவ்வளவு அழகான ஓர் ஆடவன் படுத்து உறங்குகின்றான் என்று அறிந்து அவனுடன் காதல் மொழி பேசிக் கொண்டிருந்தாள். அரண்மனையில் விடிவதற்கான மணி ஒலிக்கப்பட்டது. இத்தனை நேரமும் தன்னை அறியாமல் ஓர் ஆடவனுடன் காதல் மொழி பேசியதை எண்ணிக் கோபப்பட்டு, அவன் தன்னை ஏமாற்றியதை நினைத்து, அவனைத் தன் கையால் அடிக்கக் கை ஓங்கிய வேளை அர்ச்சுனன் அவள் கையைப்பிடித்து விட்டான். தனது கையை ஓர் ஆடவன் தொட்டுவிட்டான். இனி நான் என்ன செய்வது, அவனைத்திருமணம் செய்வோம் என்று எண்ணி திருமணத்திற்கு சம்மதித்தாள். என்று கதையொன்று அக்காலபுலவர்கள் மூலமும் வாய்மொழியாகவும் பாரம்பரியமாகவும் ஏட்டுச் சரித்திரங்கள் மூலமும் சொல்லப்பட்டு வருகின்றது.

பின்னர் அல்லிராணி தென்னிந்திய இராமேஸ்வரம் ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தியின் வருடாந்த விழாவிற்குப் போவதற்காகத் தனது முடியை தன் மகள் கோலவேணியின் கணவனான பாலதேவனுக்குக் கொடுத்து விட்டு அரைவாசிப் படையணியோடு முத்தரிப்புக் கடலின் சுரங்க வழிமூலம் தென்னிந்தியா சென்று விடுகின்றாள், என்று கூறப்படுகின்றது.

இன்று இந்தச் சுரங்க வழிப்பாதை இருந்த இடங்களெல்லாம் மூடி மறைக்கப்பட்டுள்ளது. இவ்வரண்மனை கடல் அரிப்புக்கு உள்ளாகி சிதைந்து செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாரை இரு பிரிவுகளாகக் குறிப்பிட்டுக் கூறுவது வழக்கம் ஒன்று மன்னாரின் தீவுப்பகுதி, மற்றையது மாதோட்டப்பகுதியாகும். மன்னார்த் தீவையும் மாதோட்டத்தையும் இணைக்கும் பாலமானது ஆங்கிலேயர்களால் 1930ம் ஆண்டு கட்டித் திறக்கப்பட்டது.

மன்னார்த்தீவானது 18மைல் நீளமும் 6 மைல் அகலமும் கொண்டது. வியாபாரப் பொருட்கள் வத்தை மூலம் இங்கு குவிக்கப்படுவதனால் தீவுக்குக் கிழக்கேயுள்ள மாதோட்டப்பகுதி மக்கள் மன்னாருக்குச் சென்று தங்களுக்குத் தேவையான பொருட்களைப் பெற்று வந்தனர். இவர்கள் தீவுக்குச் சென்று பொருட்கள் வாங்க நெய், தேன், இறைச்சி, வற்றல் போன்ற பொருட்களைப் பண்டமாற்றாகக் கொடுத்து வந்தனர் என்பது பாரம்பரியக்கதை இங்கு இறங்கு துறையைக் கடக்க மன்னிக் கட்டியபடியால் மன்னார் என்ற பெயர் வந்ததென்பது வழக்கம்.

மன்னார் மாவட்டமானது மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய பகுதிகள் கடற் பிரதேசமாகவும் முள்ளிக்குளம் மோதிரை ஆறு, அதனையடுத்து காட்டுப் பிரதேசம், ஆலங்குளம் இரணை இலுப்பைக்குளம். கல்மடு 2ம் யுனிற் என்பனவும் வடகிழக்கே வெள்ளாங்குளம் 29ம் மைல்கல் என்பனவுமாகப் பரந்துள்ள பிரதேசமாகும்.

மாதோட்டம் என்ற போது பலரும் பலவாறாக கருத்துக் கொள்கின்றார்கள். ஆரம்பத்தில் இப்பிரதேசம் நீர் வளமற்ற வரண்ட பிரதேசமாக காணப்பட்டதனால் மாதோட்டை (தொட்டை வெளி) என அழைக்கப்பட்டதாக கூறுவர். குளக்கோட்டன் அருவியாற்றை மறித்து அணைக்கட்டியதன் பின்பே இப்பகுதி மருத நிலத்தை தன்

# மன்னார் மக்களும் வாய்மொழி இலக்கிய மரபும்

வளமாகக் கொண்டிலங்கும் பகுதியாயிற்று என்று கூறுவதை ஏற்றுக் கொள்ளலாம். மன்னார்த்தீவானது நெய்தல் நிலப் பிரதேசமாக விளங்குகின்றது. மன்னார்த்தீவையும் மாதோட்டத்தையும் உள்ளடக்கும் பிரதேசம் இயற்கைத் தாவரத்திலும் தரைத்தன்மையிலும் இந்தியாவை ஒத்துள்ளது. இயற்கைத் தாவரமான புளி, ஆல், இத்தி, இலுப்பை, வேம்பு போன்ற விருட்சங்களையும் முட்புதர்களையும் இது கொண்டுள்ளது. செயற்கைத் தாவரங்களான பனை, தென்னை, மா, முந்திரிகை, முருங்கை போன்ற மரங்களையும் கொண்டுள்ளது. மாதோட்டம் இவ்வாறான தாவரங்களோடு மருது, பாலை, நாவல், போன்ற மரங்களும் கொண்டுள்ளது மாமரமும், பலா, வாழை என்பன குடிநகர்ப் புறங்களிலும் நீர்க் கரையோர மேட்டு நிலங்களிலும் செயற்கைத் தாவரமாகக் காணப்படுகின்றன. மாமரம் நிறைந்து காணப்பட்டால் இப்பழமைப்பிரதேசம் மாதோட்டம் எனப் பிற்காலத்தில் பெயர் பெற்றதாக முதியோர் கூறுவர். இதை உண்மைப்படுத்தும் வகையில் இன்றும் குடியிருப்புப் பகுதிகளில் மாமரங்கள் காணப்படுகின்றன இவை பல தலைமுறைகளைக் கண்ட மரங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராபிய வியாபாரிகள் இங்கு வந்து சென்றார்கள் என்பதை சரித்திர வாயிலாகக் காட்ட ஊசி-உடை, பெருக்கு தனுக்கு, உவா (வியாயமரம் ஆகிய மரங்களை இன்றும் மன்னார் தீவில் காணலாம். அராபியரைத் தொடர்ந்து மளையாளத்திலிருந்து வந்த முஸ்லிம்கள் இங்கு வந்து குடியேறினர் ''குஞ்சாலி'' என்ற சிறப்புப் பெயருடன் இருப்பவர்கள் இவர்களது வழித்தோன்றல்கள் எனக் கூறுவர் குஞ்சாலி என்ற பெயர் மருவி குஞ்சு என்று இன்று வழங்கப்படுகின்றது. உ+ம்:- குஞ்சுமுகமது

மாதோட்டபிரதேசத்தின் நெல் வயல்கள் கட்டுக்கரை குளத்தை நம்பியிருக்கின்றன. அனுராதபுரத்தில் இருந்து வரும் அருவியாற்றின் நீர் மூலமே இக்குளம் நீரைப்பெற்றுக் கொள்கிறது குளங்களும் நீர் வாய்க்கால்களும் கட்டுரைக் குளத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. இவை கட்டுக்கரை குளத்தில் இருந்து நீரைப் பெற்று நெல் வயல்களுக்கு வழங்குகின்றன. சீரான மழை வீழ்ச்சி இருந்தால் வருடத்தில் பெரும்போகம், சிறுபோகம் என இரண்டு போகங்கள் வேளாண்மை செய்யப்படுகின்றன. காடும் காடு சார்ந்த பிரதேசங்களிலும் சேனைப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றின் மூலம் கிடைக்கும் பொருட்களே மக்களின் உணவுத் தேவைகளையும் ஏனைய தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன.

மன்னார்த்தீவின் மக்கள் வர்த்தகம், மீன்பிடி, தோட்டம் என்பவற்றை சிவனோபாயத்திற்காகச் செய்கிறார்கள். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சகல அரச அலுவலகங்களும் வியாபாரக் கடைகளும், முக்கிய கல்வி நிலையங்களும் இங்கு அமைந்துள்ளன.

மன்னார் மாதோட்டம் பகுதியில் (மக்கள் குடியேற்றம்) சங்கு குளிப்பதற்காக கடற்தொழிலாளரும், சிற்ப வேலைகளுக்காகக் காஞ்சிப்புரக்குடிகளும், அரசியல் காரணங்களுக்காகப் படைவீரரும் வந்து குடியேறினர். என்றோர் பாரம்பரியக்கதை கூறுகின்றது. இதற்குச் சான்றாக ம. பென்சமின் செல்வம் கூறியதைக் காட்டலாம்.

''முத்துக் கொள்வனவு செய்வதற்காக 16ஆம் 17ஆம் நூற்றாண்டில் நாட்டுக் கோட்டைப் பகுதியில் இருந்து இலாபத்திற்கு வந்த செங்கலடிச் செட்டியார் திருப்பிச் செல்லாது முள்ளிக்குளத்துக்கு அண்மையிலுள்ள அரசன் குளம் என்னும் ஊரில் குடியேறியுள்ளார். அவர் மகன் இராமன் செட்டியார், அவர் மகன் பேதுருச் செட்டியார் அரசன் குளத்தில் நின்றும் குடிபெயர்ந்து வடக்கு நோக்கிச் சென்று நானாட்டானுக்கு அண்மையில் குடியேறியதுடன் செட்டியார் கட்டைக்காடு என்றும் ஓரியம் அழைக்கப்படுகின்றது. பேதுரு செட்டியாரின் மகன் தான் மரியாம்பிள்ளை இவர் 19ம் நூற்றாண்டில் நடுப்பகுதியில் கட்டைக்காட்டாற் குடிபெயர்ந்து குடிபுகுந்த வளவினுள் கல்லாலோர் கிணறு அமைத்து அக்கிணற்றிலே கட்டிய காலத்தை 1880ஆம் ஆண்டொன்றும் கட்டியவர் பெயர் பேதுருச் செட்டியார் மரியாம்பிள்ளை என்றும் எழுதியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் குடியேறிய மக்களில் வேளாளர், குருகுலத்தவர், பரதர், கமண்டலர், கம்மாளர், எயினர், மறவர், என்போர் பரவலாக வசித்து வந்தனர். கமண்டலரும், கம்மாளரும், குளக்கோட்டனால் அமைக்கப்பட்ட திருப்பணியில் சிற்ப வேலைகளையும், மேல்மாட வேலைகளையும் செய்யக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பட்டனர். குருகுலத்தவரும் பரதரும் கடற்றொழில் காரணமாகவும் மறவர் போர் வீரர்களாகவும், எயினர் மந்தை பராமரிப்பவர்களாகவும், வேளாளர் முகாமைத்துவ தொழில்களுக்காகவும் வந்தனர் என்பது பாரம்பரிய வழக்கமாகும்.

மன்னார் தீவில் வசிக்கும் கன்னடியர் என்போர் போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் குடியேறியவர்களாக் கருதப்படுகின்றனர். இஸ்லாம் சமயத்தினரான முஸ்லிம்கள் அராபியரின் வழித்தோன்றல்களாக வந்தனர் என்று கூறப்படுகின்றது. இதற்கு உடை, பெருக்கு மரங்கள் சான்று பகர்கின்றன. பெருக்கு மரம் அராபியரின் குதிரைகளின் உணவுக்காகப் பயன்படுத்தப்பட்டது. காண்ணாளர், கமண்டலர் என்போர், பம்பனை அடுத்துள்ள இடங்களில் இருந்தும் காஞ்சிபுரக் குடி மக்களிடையே இருந்தும், வந்து குடியேறினர். இவர்களோடு சொற்பமாகப் பல்வேறுபட்ட சாதியினரும் வந்து குடியேறினர் என்பது வழக்கு.

தற்போது வேளாளர் நானாட்டான் பறப்பாங்கண்டல், இத்திக்கண்டல், போன்ற ஊர்களிலும் கமண்டலர் நெடுங்கண்டல், காத்தான்குளம், கருங்கண்டல் அளவக்கை போன்ற இடங்களிலும் மன்னார்த்தீவில் மன்னார் தொடக்கம் தலைமன்னார் இறங்குதுறை வரையும் தீவின் தென்பகுதி முழுவதும் பரவலாக வசிக்கின்றனர். கம்மாளர் கறுக்காக்குளம், பாலையடிப்புதுக்குளம், அடம்பொன்தாழ்வு, போன்ற இடங்களிலும், மறவர் கன்னாட்டி, குமானயன்குளம், கொக்குப்புடையான், சாளம்பன், மாவிலங்கேணி பொன்தீவு கண்டல் ஆகிய இடங்களிலும், குருகுலத்தவர் சுண்டிக்குளம், பிச்சைக்குளம், பறப்பாங்கண்டல், உயிலங்குளம், ஊற்றுவாயன்குளம், நாவற்குளம், முதலைகுத்தி, கட்டைக்காடு, காத்தன்குளம், புதுக்கமம், வஞ்சியங்குளம் நறுவலிக்குளம் உட்பட 25 சிற்றூர்களுக்கும் மேல் வசிக்கின்றனர். பரதவர் பேசாலை, வங்காலை, தாழ்வுபாடு, அரிப்புத்துறை, சிலாவத்துறை, முள்ளிக்குளம், போன்ற இடங்களிலும், எயினர் சிறுத்தோப்பு பரப்புக் கடந்தான், கொவ்வன்குளம், பாபிபாமொட்டை, மருதமடு போன்ற இடங்களில் வசிப்பதாகக் கருதப்படுகின்றது. முஸ்லிம்கள் எருக்கலம்பிட்டி, விடத்தல்தீவு, முசலி, தாராபுரம், கரிசல், புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் வசிக்கின்றனர். கன்னடியர் எனப்பட்டோர் பள்ளிமுனை, அடம்பன், பகுதிகளில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவற்றை விட வாணிபர், முக்கியர், திமிலர் வண்ணார், நாவிதர், பறையர், நாடார், தேவர், குயவர் பள்ளிவெரியர் என்ற சாகியத்தவாகளும் பரவலாக வாழ்கின்றனர்.

நாட்டார் பாடல்கள் தனிமனிதனின் அல்லது சமூகத்தினரின் அனுபவங்களையும், உணர்ச்சிகளையும் எவ்வித தடையுமின்றி வெளிப்படுத்து வனவாகவும், குறிப்பிட்ட ஒரு இன மக்களின் அல்லது பிரதேசத்தின் பண்பாட்டுக் கோலங்களைப் பிரதிபலிப்பனவாகவும் விளங்குகின்றன.

எந்தவொரு மொழியும் முதலில் பேசப்பட்டு அதன் பின்பே வரிவடிவத்தைப் பெற்றுக்கொள்ளும். ஒரு மொழியின் வரிவடிவம் தோன்றுவதற்கு முன்பே நாட்டுப்பாடல்கள் தோன்றவதற்கு சாத்தியம் உண்டு.

கிராமமக்கள் கூட்டமொன்றின் கதைப்பாட்டுப் பாடப்போகும் கலைஞர் அவையடக்கமாக கூறுவது இங்கு நோக்கற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடறியேன் ~ படிப்பறியேன் ~ பள்ளிக்கூடம் நானறியேன்
ஏடறியேன் ~ எழுத்தறியேன் ~ எழுத்துவகை நானறியேன்
ஏட்டிலே எழுதவில்லை ~ எழுதி நான் படிக்கவில்லை
வாயிலே வந்தபடி ~ வகையுடனே நான் படிச்சேன்.

இவ்வாறு எழுதிப்படிக்காமல் தாம் பாடியதை எழுதி வைக்காமல் உணர்ச்சி மேலீட்டால், கிராமமக்களால் பாடப்பட்ட பாடல்கள் எண்ணற்றவை இவையே பிற்காலக் காவியங்களுக்கெல்லாம் தாயெனலாம்.

மன்னார் நாட்டார் பாடல்களை வசதி கருதி 2 வகையாக நோக்கலாம். ஒன்று ஆக்கியோன் யார்? எப்போது பாடப்பட்டது, என அறியப்படாத வாய்மொழியாக வழங்கிவரும் பாடல் மற்றையது புலவர்களால் பாடப்பட்டு புலவர்களிடையே வழங்கி வந்த பாடல்.

மன்னார் வாய்மொழி இலக்கிய மரபினை எடுத்துக் கூறும் பொழுது நடைவழிச்சிந்து. இது வழிநடைச்சிந்து என்றும் அழைக்கப்படும். நடைக்களைப்புத் தோன்றாதிருக்க வழியிற்காணும் காட்சிகளைப் பாடலாகப் பாடிக்கொண்டு செல்வர். பேராசிரியர் சு. வித்தியானந்தன் மன்னார் நடை வழிச்சிந்தைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

**செல்வி. ஞா மரியகொறற்றி (ஆசிரியை)**
மன்னார் சூரிய கட்டைக்காடு றோ. க. த. பாடசாலை

மன்னார் - கண்டி வீதியிலுள்ள உயிலங்குளம் என்னுமிடத்தில் இருந்து தென்திசையாக செல்லும் செம்மண் பாதையிலே ஒன்றரைமைல் தூரத்தில் வயல்கள் சூழ்ந்த காட்டகத்தே நின்றிலங்கும் தூய அந்தோனியரின் கோயில் கொண்ட துவரைகள் நிறைந்த இவ்வூரே துவரங்கேணியாகும். இத்தலம் பக்தி நிறைந்த புனிதத்தலமாகும். இதற்கு ஒவ்வோர் செவ்வாய்க்கிழமையும் பக்தர்கள் வந்து போவார்கள். இது ஒரு அற்புத சேத்திரம் இச்சேத்திரத்திற்கு முருங்கனிலிருந்து நேர்த்தி கொண்டு வருவதாக அமைந்திருக்கிறது. இந்த நடைவழிச்சிந்து. வீதி வழியே சென்று துவரையம் பதியை அடையும் வரையுள்ள இடங்களும் காட்சிகளும் சுவையான முறையில் இதில் எடுத்துக் கூறப்படுகின்றன. இந்த வழிநடைப் பாடல் சிந்து முறையில் புனையப்பட்டிருக்கின்றது.

அந்தோனியாரைத் துதிப்போம் வா ~ துவரங்கேணி
ஆலயத்துக்கே நடப்போம் வா ~ எந்தன்
சந்தனமடமயிலே தார்குழலே நீ சுறுதி
சந்திரப்பட்டு ஆடை தன்னைத்தையவரும்புடுத்தி
வண்டுமொய் தனைய கூந்தலை ~ வடிவாய்ச்சீவி
வாரியணைத்தே முடிப்பாயே ~ வடிவினொளீா
கண்டு கண் மருட்டுகின்ற கல்நகை தனையெடுத்து
காதலியே நீ யுமன்பாய்க் கைகழுத்தில் தானணிவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொங்கு செந்நெல் தான்மலியும் ~ புகழ்முருங்கன்
பூரணமாய் தானறிவாயே ~ இறுபுமொரு
அங்கு சலமோ அப்புவின் அலங்காரக் கடையதுபார்
ஆக்கிய தேத்தண்ணி இப்போ ஆயிழையே நீ குடிப்பாய்

நீதி மன்னார் கூவினங்கள் ~ நிறைந்தவாடி
நின்னொளியைப்பாரும் நங்கையே ~ அதற்கடுத்து
ஆதி சுதனை துதிக்கும் வேதக் கோயில்தானறிவாய்
ஆரணங்கே துள்ளியே நடந்து வாரும்.

செங்கல் நிறை மானி மண்ணேபார் ~ இதற்குமுன்னே
செம்மண்தீவு என்றொரு பேராம் ஈதறிவாய்
செங்கமல வாவிசூழ சிறந்த கட்டுக்கரையிதோ பார்
இங்கே பாரு பதின் மூன்றாம் கட்டையது பாருபாரு

அர்த்தமுள்ள இந்த வெளிபார் ~ பிரேராவுக்கு
அளந்திருக்குதே தறிவாயே ~ அதிகமாய்
அந்தோ பாரு கோர மோட்டை ~ ஆகிய நற்கஞ்சித்தாழ்வு
கண்டி வரும் பன்னிரெண்டாம் கட்டையிது என்றறிவாய்.

தத்துவம் மிகுந்த மன்னாராம் ~ ஆனந்தமிவர்
தன்னுறுகி கொண்ட காணியாம் ~ இதற்குமுன்னே
பிட்டிசம் எழுது பிலாக்கொட்டை தோட்டமிது
எட்டிப்பார் கடைத் தெருவை ஏகுவோம் ஒன்பதாம் கட்டை

கண்டு கொள் கல்மோட்டை இதுவே ~ கனநிதி
கதித்தழிய சேனா கடையிது பார் ~ இதன்வழிக்கே
சென்றிட முத்துக்கடைக்கே தருகிலருகிலே யிருக்கும்
நின்று வெறி கொண்டு வரும் நேசமுள்ள கற்கடைபார்.

மாந்தை தெற்கிலே சிறந்த ஊர் ~ உயிலங்குளம்
வங்களாத் தெரிவினொளி பார் ~ வரிசையுற
வாடாத செந்நெல்களும் ஏராளமாய் நீர் கொடுக்கும்
வாகான் சுப்பிரிண்டன் வீடு இதைப்பாரு

எட்டி நடந்தோடிவரும் ~ எந்தன் தேவி
எட்டாங்கட்டை என்றறிவாயே ~ கருத்தில் நீயும்
தட்டொரு சறடுகள் அட்டியல், பதைக்கன்மாலை
சந்திர வசை முகத்தையலே நீர் பார்த்தக் கொள்ளும்

கணவன் குளம் தானிதுவே ~ காதலியே நீ
காணுவாய் நொச்சிக்குளம் ~ ஈதா மின்னம்
வருமோர் ~ ஆழிகண்டல் ~ மண்டுக்குண்டான் அங்கேபார்
துவரங்கேணி அற்புதனின் ஆலயந் தெரியுதுபார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரமுதே ஆலயத்துள்ளே ~ இருமுழந்தாள்
இட்டுமே சிலுவை வரைந்து ~ தேவனையே
போற்றிக் கொண்டு காணிக்கையை நேர்ந்து அடுத்தார் வைத்து
பந்தலினை தீதகற்றிப் பாதுகார் அந்தோனி வழியே

மாதோட்டப்பகுதியிலிருந்து மன்னார் செல்லும் போது பாடப்பட்டதாகப் பின்வரும் நடைவழிச்சிந்து அமைகிறது.

நட நட மன்னார்ப் பகுதியில்
தோட்டத்தைப் பார்க்கலாம்
வா மயிலே நடந்து
எனது பின்னாலே தொடர்ந்து

நல்ல தண்ணீரென்று முன்னோர்கள் சொல்லுவது
நாவலடிக் கிணறாமடி பெண்ணாவே
முன்னால் இருந்து தலையைப் புரட்டிக் கொள்
வேண்டு மட்டும் தண்ணீர் நானள்ளி வார்க்கிறேன்.

நட நட

கள்ளுக்குடிக்கிற பேர்களைக்
கண்ணாலே பாரடி பெண்ணாளே நீசற்று
துள்ளித் துள்ளிக் காலை முன்னாலே போடுகிறார்
சோபனம் சோபனம் என்றவர் ஆடுகிறார்.

நட நட

தோகையரே பாரும் அவர் கையிலோர் கருவாடு
இளங்கிழவிகள் துண்டு துண்டாக வெளி வந்து பாயுது
இன்றைக்கு மரண மென்றவர்க் கோதுது
எட்டி நடவடி வித்தாரமயிலே

நட நட

இவ்வாறு ஆக்கியோன் யார் என அறியப்படாத வாய்மொழிப் பாடல்களாக மன்னார் நாட்டுப்பாடல்கள் அமைந்து காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்பட்ட தேச(ச)ம்

வி. குணபாலா
கலாசார உத்தியோகத்தர்

புண்பட்ட தேசம்
புது வாழ்வு பெற்றது (வாம்)
புதையுண்ட மறவர்
புகழுடம்புக் கல்லறைகளும்
புதுப்பொலிவு தான் பெற்றன (வாம்)

வீதித்தடைகளும்
விரைவாய் நீக்கப்பட்டன (வாம்)
பொருளாதார தடைகளும்
பொருத்தமில்லை என்றாகியதாம்
பொருதியவர்களும் – பெரும்
புன்னகையுடன் பூச்செண்டு
கொடுக்கிறார்களாம்.

காக்கைகளும்
கானம் பாடும் பறவைகளும்
தம்மில்லிடம் திரும்பின (வாம்)
காட்டு யானைகளும்
கூடத்தானாம்

ஆயினும் என்ன
அல்லலுறும்
நாங்கள் இன்னும்
நாலு சுவருக்குள்
நாயிலும் கேவலமாய்
நசுக்கப்பட்டவராய்
நாதியற்றுள்ளளோம்.


நோர்வே என்னும்
பாங்கொக் என்றும்
மாறி மாறி பேசிடுவார்
நோவுண்ட எம்மை
நோக்காமலும் – எமது
நோக்காடு உணராமலும்

நோக்காடுகளோடும்
விடுதலைபெறும்
நோக்கத்தோடும் உண்ணா
நோன்புகள் இருந்து தான்
பார்த்தோம் நாம்
இருந்து தான் பார்த்தோம்
எம்மை சிறை மீட்கும் நோக்கம்
யாருக்குமில்லை

காரணமின்றி
கைது செய்யப்பட்டோம் – எம்
காலத்தை இங்கே கண்ணீரோடு,
கழிக்கின்றோம் – எம்
சிறகுகள் கத்தரிக்கப்பட்டு
காலுக்கும் விலங்கு
பூட்டப்பட்டு

காலன் வரும் வரையில்
எம்கடன் இடிபட்டு – இங்கு
அடைபட்டு
அடங்கிக் கிடப்பதுவா?
அவ்வளவு தானா?

அமைதிக்காய் பேசுவோரே
ஆள்வோரே அரசியல்வாதியரே
அயலோரே,
அவரெல்லாரும் போனாலும்
அப்பனே ஆண்டவா
நீயாவது எமை
ஆட்கொணர்ந்து
வெளிக்கொணர்வாயா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் இடம்பெறும் யுத்த நெருக்குதல், அமைதி இன்மை, அழிவு, பதற்றம், பயம் என்ற பல்வேறுப்பட்ட காரணங்களாலும் பொருளாதார நோக்கோடும் இலங்கையிலிருந்து தமிழ் இளைஞர்கள் வெளியேறி ஐரோப்பிய நாடெங்கும் சிதறி வாழ்கின்றனர். இவ்வாறு பல்வேறு நாடுகளிலும் சிதறி வாழ்கின்ற மக்களிடையே இலக்கியப் பரிட்சையமும், மண்பற்றும் கொண்ட இளைஞர்கள் ஒன்று சேர்ந்து வெளிப்படுத்திய உணர்வோட்டங்களின் பிரதிபலிப்பே புலம் பெயர் இலக்கியம் என்னும் புதிய வடிவமாக பரிணமித்துள்ளது.

புலம் பெயர்ந்த கால இலக்கியங்கள் ஈழத்தின் பிரச்சினைகளையும் மண்பற்றினையும் பேசுவதாக அமைந்திருந்தன. இழப்புக்கள், ஏக்கங்கள் பற்றிய உணர்வலையையே இவ் இலக்கியங்கள் வெளிப்படுத்தின. மனப்பாரங்களை எழுதித் தீர்த்து விட்ட இப்புலம் பெயர் இலக்கியம் ஒன்று அவர்கள் வாழ்கின்ற மண்ணையும் மக்களையும் பற்றி எழுதத் தொடங்கி விட்டது. இழந்து போகும் தலைமுறையைப் பற்றியே பரிதவிப்புத் தோன்றிவிட்டது.

இவற்றை எல்லாம் எழுதுபவர்கள் நம்மவர்களாக இருந்தாலும் அவர்களின் கருத்துக்களும் எழுத்துக்களில் விளையும் சொற்களும் புதியன. சர்வதேச அனுபவம், உலகளாவிய எழுத்துக்களின் பரிட்சையம் பழக்க வழங்கங்கள் இவை அனைத்தும் இப்புலம் பெயர் இலக்கியங்களுக்கு மேலும் கனதி சேர்ப்பனவாக அமைந்திருக்கின்றன.



# புலம்பெயர் இலக்கியங்களும் ஈழத்துத் தமிழர்களும்

**நா. பாலகிருஷணன் (ஆசிரியர்)**
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.

தமிழ் இலக்கியம் அண்மைக்காலத்தில் எய்தியுள்ள புதிய பரிமாணங்களில் ஒன்று புலம் பெயர் இலக்கியமாகும். 1950 - 90களில் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடா, அவுஸ்திரேலியா முதலியவற்றுக்கும் சென்று வாழத்தொடங்கிய தமிழர்களின் இலக்கிய முயற்சிகளே இவ்வாறு ''புலம் பெயர்'' என்ற அடைமொழியுடன் சுட்டப்படுகின்றன. மேற்படி காலப்பகுதிகளுக்கு முன்பும் புலம் பெயர்ந்து சென்ற தமிழர்களின் இக்காலப்பகுதிக்குரிய ஆக்கங்கள் புலம் பெயர் இலக்கியம் என்ற பொது வரையறைக்குள் வருகின்றன. உதாரணமாக ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் முதலியோரின் எழுத்துக்களைக் கூறலாம். [ஈழத்தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் ஒன்று இந்தியா (தமிழகம்)] அங்கும் ஈழத்தவர் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆயினும் அவ்வகை முயற்சியினை ''புலம்பெயர்'' என்று அடை சேர்த்துச் சுட்டுவது வழக்கமில்லை. பண்பாட்டு நிலையில் பெரிதும் வேறுபடாத சூழலிலே ஈழம், தமிழகம் ஆகிய இரு நிலங்களும் நிலவுவதால் இவ்வாறு புலம் பெயர் என்ற அடைமொழி தேவைப்படவில்லை எனலாம்].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழர் கடந்த நூற்றாண்டு முதல் பல்வேறு காலகட்டங்களில் பிறநாடுகளுக்குப் புலம் பெயர்ந்துள்ளனர். கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் மலாயா (இன்றைய மலேசியா)வுக்கு ஒரு புலப்பெயர்ச்சி நிகழ்ந்தது. 1950-60 களில் மத்திய கிழக்கு நோக்கி புலம் பெயர்ச்சி தொடங்கியது. இவை பொதுவாக பெருவருவாய்க்குரிய தொழில்களை நாடியும், உயர்கல்வி நோக்கிலும் நிகழ்ந்தவையாகும். மேற்சுட்டிய புலப்பெயர்ச்சிகளில் இருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபட்டதே அண்மைக்கால புலம் பெயர்ச்சிகளாகும். இக்காலப்பகுதியில் புலம் பெயர்ந்தோர் பலரும் இலங்கையின் இனக் கொலைச் சூழலில் உயிர் வாழ்வதற்கென அடிப்படை வசதியமைப்புக்கள், பாதுகாப்பு என்பவற்றைத் தேடி அன்னிய நாடுகளில் தஞ்சமடையும் நிர்ப்பந்த நிலைக்கு உட்பட்டவராவர். சுருங்கக் கூறினால் அகதி நிலையினர் எனலாம்.

1980களுக்கு முன்பு குடிபெயர்ந்தோரும் பலரும் முக்கியமாக நடுத்தர உயர்தரவர்க்கம் சார்ந்தவர்கள் ஆங்கிலம் கற்றவர்கள், தொழில் வல்லுனர்கள். மேலும் கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற நகர்சார் சூழல்களோடு தொடர்புடையவர்கள். ஆனால் 80க்குப் பின்னர் குறிப்பாக 1977-83 இனக்கொலை நிகழ்வுகளை அடுத்து புலம் பெயர்ந்தோர் யாழ் குடாநாட்டின் பல்வேறுக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். யாழ் குடாநாட்டிற்கு வெளியே வன்னி மற்றும் கிழக்கு மாகாணப்பகுதிகளை சார்ந்தவர்கள். இவ்வாறு 80களில் நிகழத் தொடங்கிய புலப்பெயர்ச்சி புவியியற்கள நிலையிலே அகலமானது. மட்டுமன்றி கல்வி, மொழியறிவு முதலிய நிலைகளிலும் வேறுபட்டிருந்தது. இக்காலப்பகுதியிற் புலம்பெயர்தோருட் பெரும்பாலோர் உயர்கல்வி பெறாதவர்கள். தமிழ்தவிர வேற்றுமொழி அறியாதவர்கள். இவர்களுட் பலரும் சமூக நிலையிலே கீழ் நடுத்தரவர்க்கம் சார்ந்தவர்களாகவும் மற்றும் கிராமப்புற சிறு விவசாயிகளாகவும் தொல்வினையாளராகவும் திகழ்ந்தவர்களாவர்.

இவ்வாறு 80களை அடுத்து புலம்பெயந்தோருள் குறிப்பிடத்தக்க தொகையினர் கலையிலக்கிய ஆர்வம் கொண்டவர்களாயும் திகழ்ந்தனர். இவர்கள் புலம் பெயர் நாடுகளில் தாம் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் பதிவு செய்து கொள்ளவும் முயன்றனர். இம்முயற்சிகளின் விளைபொருளாக எமக்குக் கிடைத்துள்ளவையே நமது புலம் பெயர் இலக்கியங்களாகும். இதழ்களாகவும், நூல்களாகவும் இவர்கள் தொடங்கிய இவ்வகை முயற்சி இப்பொழுது இணையம் எனப்படும் சர்வதேச வலைப்பின்னல் ஊடகத்தைப் பயன்படுத்தும் நிலைக்கு வளர்ச்சி எய்தியுள்ளது. இத்தகைய முயற்சியினூடாக நமக்குப் புலப்படும் ஈழத்தமிழர் சமூகம் எத்தகையது என்பதை பற்றிய ஒரு அவதானிப்பே இந்த ஆய்வுரை.

இலக்கியம் என்பது சமூகத்தின் விளைபொருள். அதுதான் பிறந்த சமூகத்தை எமக்குக் காட்டுகின்றது. இவ்வாறு தரப்படும் காட்சியானது கண்ணாடியில் தெரிவது போன்று நேர் பிரதிபலிப்பு அல்லது அனுபவங்களைப் பெற்றவர்களது உணர்வு நிலை உலக நோக்கு என்பவற்றினூடாக புதியதொரு வடிவமாக நமக்குக் கிடைக்கும். நாம் மேலே சுட்டிய புலம் பெயர்ந்தோர் இலக்கியங்கள் தரும் காட்சிகளையும் இவ்வாறே நாம் புரிந்து கொள்ள வேண்டும், பொருள் கொள்ள வேண்டும்.

புலப்பெயர் இலக்கியங்கள் தொடக்க காலத்திலே முக்கியமாகப் பிரயாண நிலையில் பெற்ற அவலங்களையும், சென்று அடைந்த நாடுகளில் வதிவிட அனுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் குடியுரிமை பெறுதல், தொழில் பெறுதல் என்பவற்றில் பெற்ற இடர்ப்பாடுகளையும் பேசின. இன்றும் பல அவலங்கள் இலக்கியங்களில் பதிவாகி வருகின்றன. அடுத்த கட்டத்திலே விட்டுப்பிரிந்த தாயகத்தின் மீதான பண்பாட்டுச் சூழல் பற்றையும், புலம் பெயர் முயற்சிகளில் குடும்ப நிலைகள் சிதறிப் போனமையால் நிகழ்ந்த துயரங்களையும் பேசின. இவ்வாறு பேசும் பொழுதே விட்டுப்பிரிந்த தாய் நாட்டின் சமூக குறைபாடுகள் பற்றிய விமர்சனங்களும் வெளிப்படத் தொடங்கின.

இவ்வாறு தொடங்கிய புலம் பெயர் இலக்கியங்களில் நாளடைவில் புதிய சமூக பண்பாட்டுச் சூழலோடு உடன் வாழ்தல் அல்லது இணைதல் தொடர்பான பிரச்சினைகள் முனைப்புப் பெறலாயின சிலவற்றை இங்கு நாம் நோக்கலாம்.

**அ. அடையாளச்சிக்கல்**

**ஆ. பாண்பாட்டுச்சிக்கல்**

**இ) பாலுணர்வுச்சிக்கல்.**

அடையாளச்சிக்கல் என்பது நிற வேறுபாடு சார்ந்த பிரச்சனை ஆகும். குறிப்பாக புகழடைந்த நாடுகளில் நிலவும் கறுப்பர் வெள்ளையர் என்ற வேறுபாட்டு உணர்வு புலம் பெயர் தமிழர்களை மிகக் கடுமையாகப் பாதிக்கின்றது. பொதுவாக ஐரோப்பிய நாடுகள் அவுஸ்திரேலியா, கனடா உட்பட எல்லா நாடுகளிலும் இச்சிக்கலை புலம்பெயர் ஈழத்தவர்கள் எதிர் கொண்டபடி உள்ளார்கள். குறிப்பாக ஜேர்மனி போன்ற நாடுகளில் இதன் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. அத்துடன் புதிய நாடுகள் என்ற அமைப்பு அகதிகளுக்கு எதிராக அங்கு செயற்படுவது சுட்டிக்காட்டப்படத்தக்கது. இவ்வகையில் அங்குள்ள குடியரசுக் கட்சியின் பிரசாரக் கவிதையொன்று கிடைத்துள்ளது. அது தமிழாக்கப்பட்டுப் புலம் பெயர்ந்தோர் பதிவாக இங்கு தரப்படுகிறது.

**"தள்ளாடியபடியே நான் வீடு வருகையில்**
**யாரது வீட்டு வாசலில் நிற்பது**
**வீடு தேடும் கள்ள அகதித்**
**தமிழனொருவன்!"**

மேலும் அகதிகள் வெள்ளம், பொருளாதார அகதிகள் வெள்ளம் நிறைந்து விட்டது போன்ற வார்த்தைகளை ஜேர்மனியில் அரசியல்வாதிகளிடமும் கேட்க முடிகின்றது. அத்துடன் பொதுசனத் தொடர்பு ஊடகங்களும் இவற்றைப் பேசுகின்றன.

பண்பாட்டுச்சிக்கல் என்ற வகையிலே ஈழத்தமிழர்கள் இங்கு பேணி வந்த பண்பாட்டு உணர்வுகளையும் விழுமியங்களையும் புலம்பெயர் நாடுகளில் பேணிக்கொள்வதில் பல பிரச்சனைகளை எதிர் கொள்கின்றார்கள். பொதுவாக அயல் நாட்டினரோடு பழகும் பொழுது பழக்கவழக்கங்களில் ஒத்துப்போக முடிந்தாலும் உறவு நிலையில் சிக்கல்களை எதிர்கொள்ள நேர்கின்றது. இளந்தலைமுறையினர் ஆண்நண்பர்கள் அல்லது பெண் நண்பர்களைத் தேடிக் கொள்ளும் போது அதை எவ்வாறு ஜீரணித்துக் கொள்வது என்பது முதிய தலை முறைக்கு உள்ள முக்கிய பிரச்சனையாகும்.

பெண்பிள்ளைகள் தங்கள் ஆண் நண்பர்களோடு வெளியே செல்வதும் இரவில் தங்குவதும் பெற்றோருக்கு மனத்தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளமையை சில படைப்புக்கள் பேசுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக பாரம்பரிய பண்பாட்டை பேண வேண்டும். என்ற நோக்கில் இசை, நடனம் முதலியவற்றைப் பழகி, பேணி அவற்றை பரப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வந்தாலும் அவை அடுத்துவரும் தலைமுறைக்குச் சரியாகக் கொண்டு செல்லப்படுமா, என்பது பற்றி புலம்பெயர் நாடுகள் பலவற்றிலும் பரவலாக ஒரு ஐயம் நிலவுகின்றது. இவற்றைச் சில படைப்புக்கள் உணர்த்துகின்றன. மேலும் பண்பாட்டுச் சாதனம் என்ற வகையில் மொழியைப் பயன்படுத்துவதிலும் பேணிக்கொள்வதிலும் ஒரு தெளிவற்ற நிலை காணப்படுகின்றது. பெற்றோர் தமிழில் உரையாடிக்கொள்வதும் பிள்ளைகளோடு அவ்வவ் நாட்டு மொழிகளில் உரையாடிக்கொள்வதும் ஒரு முக்கிய முரண் நிலையாகும். தமிழ் மொழி இலக்கியம் என்பவற்றைப் பல்வேறு சாதனங்களின் துணையோடு பிள்ளைகளுக்கு கற்பித்துப் பேணிக்கொள்ள பல்வேறு பெற்றோர்கள் முனைகின்றார்கள். ஆனால் பிள்ளைகளின் சிந்தனை அவ்வவ் நாட்டு மொழிகளூடாகவே உருவாகுவதை இம்முயற்சியினால் தடுக்க முடியாது. சிக்கல் என்ற வகையிலே மிகப் பெரிதாக உருவாகி நிற்கும் முக்கிய வினாக்கள் இவை.

பாலுணர்வுச் சிக்கல் என்பது குறிப்பாக ஆண்கள் சார்ந்த ஒரு பிரச்சனையாகவே புலம் பெயர் நாடுகளில் வெளிப்படுவதைக் காணமுடிகின்றது. பெற்றோரையும் சகோதரரையும் ஈழத்தில் விட்டுவிட்டு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரான்ஸ், நோர்வே, ஜேர்மனி போன்றவற்றில் வாழும் ஆண்கள் உரிய வயதில் திருமணம் செய்துகொள்ள முடியாமல் தங்கள் பாலுணர்வுத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியாமல் தவிப்பதைச் சில ஆக்கங்கள் மூலம் உணர முடிகின்றது பெற்றோருக்குக் கட்டுப்பட்ட மனோநிலை சகோதரர்களுக்கு வாழ்வளிக்கும் தியாக மனப்பாங்கு என்பன பலரை ஒழுக்கங்கெடாமல் பாதுகாக்கின்றன என்பது தெரிகின்றது. ஆனால் சூழல் அவர்களை ஒழுக்கக் கேட்டிற்கு வலிந்து அழைப்பதாகவே உள்ளது. இவ்வாறு அமையும் சில கதைகளை வாசிக்கும் போது ஈழமண்ணில் இருந்து கொண்டு அப்பிள்ளைகளின் உழைப்பைச்சுரண்டி வாழும் பெற்றோரின் மீது வாசகர்களுக்கு தார்மீகக் கோபம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. (தேவதை சொன்ன கதை-ஷோபா சக்தி, இனியும் சூல் கொள்ள, நான் ஒரு கேள்வியாக கி. புஸ்பராஜா மேற்படி இதழ்) புலம் பெயர் சூழலில் எதிர் கொள்ளப்படும் முக்கிய சிக்கல்கள் தொடர்பான இலக்கியப் பதிவுகளை மேலே நோக்கினோம். ஈழத்தமிழர் சமூகம் எத்தகைய புதிய சூழல்களை எதிர் கொண்டாலும் எத்தனையோ சவால்களுக்கும் மத்தியில் பேணிக்கொள்ளும் பண்புகள் சில உண்டு.

I - சாதிமுறை II - சீதனமுறைமை

இவை புலம் பெயர் நாடுகளில் இன்றும் தொடர்கின்றன. இனியும் தொடரலாம். சகோதரர்களின் நல் வாழ்க்கைக்காக தம்மை அடுப்பு வெக்கையில் எரித்துக் கொள்ளும் சகோதரர்கள் அரசியற் தஞ்சம் கிடைத்ததனால் தங்கள் விலை அதிகரித்து விட்டது என மார்தட்டிக் கொள்ளும் ஆண்கள் காணி பூமிகளை விற்று சீதனப் பொறியுடன் ''பிராங்போட்'' நகரில் வந்து குவியும் பெண்கள் என்போரைப் பற்றி பார்த்தீபன் ''ஆண்கள் விற்பனைக்கு'' எனும் நாவலில் தந்துள்ள குறிப்பு சீதன முறையின் 'சிரஞ்சீவித்துவத்திற்கு' தக்க சான்று.

புலம் பெயர் இலக்கியம் காட்டும் ஈழத்தமிழர் சமூகத்தில் வரவேற்கத்தக்கதாக புலப்படும் ஒரு அம்சம் பெண்களினுடைய சுதந்திர உணர்வு ஆகும். அயல் நாட்டு வாழ்க்கை பெண்களின் சுதந்திர நிலையை மேம்படுத்தி உள்ளது என்பது இலக்கியவாதிகள் பலராலும் பேசப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக வேலைகளில் .......



காலையில் எழுந்து நாம்
கடமைகள் முடித்து விட்டு
அன்றாட கடமை செய்ய
அலுவலகம் வந்திடுவோம்
செய்யும் தொழிலை தெய்வமாக
சிறப்புடனே நாம் செய்வோம்
குடும்பம் போல ஒற்றுமையாய்
குதுகலித்துச் சிரிப்போம் நாம்

சாதிகள் பார்ப்பதில்லை
சமயமும் பார்ப்பதில்லை
இன்ப துன்பங்களில்
இரண்டறக் கலந்திருப்போம்
சுற்றுலா செல்வோம்
ஆண்டு முடிவதனை
அழகாய் களித்திடுவோம்

கோவைகள் யாவும் எம்
குழந்தை போல் காத்திடுவோம்
மேலதிகாரிகளின் மேலான
கருத்துக்களை மேவியே, நாம்
பணிகள் செய்வோம் – அதை
மென்மேலும் சிறக்கச் செய்வோம்
நிறைவுகள் பல உண்டு இங்கு
குறைகளில் குறைவும் இல்லை

எட்டு மணி நேரம் நாம்
ஏணி போல் இருப்போம் அங்கு
லீவுகள் கேட்டால் நாம்
பலகேள்விகள் தோன்றும் இங்கு
மனதினை நோகச் செய்து
மனநிலை குழம்பச் செய்யும்
நிலமைகள் இனியும் வேண்டாம்
நிம்மதி இருந்தால் போதும்.

**செல்வி. எஸ்.என். பிர்தௌசியா**
**மாகாணக்கல்வித் திணைக்களம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத் தமிழில் வீரத்தின் மாண்பு



**திருமதி. க. சிவகுமாரவேலு**

உதவிக்கல்விப் பணிப்பாளர்,
மன்னார் கல்வி வலயம்.

"குறுகத் தறித்த குறளால் உலகம் தெளியத்தழைத்த செந்தமிழ், குமரிமுதலாக இமயம் வரையாக முடிகொண்டு வாழ்ந்த முத்தமிழ் ஆதியாய் அநாதியாய் அவதரித்த செந்தமிழ் அன்புக்கு விளக்கேற்றி அறங்காத்த எங்கள் தமிழ். அன்று அவ்வைக்கு அவனருளால் அருளப்பெற்ற சங்கத்தமிழ் மூவுலகும் ஆளவந்த முத்தமிழ் என்று பல்லாற்றாலும் பாராட்டப்படும் எங்கள் உயிரினும் மேலான தமிழ் மொழி தனித்தமிழாய் தரணியில் தவழ்ந்த காலம் சங்ககாலம் ஆகும்.

சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த அக்கால கட்டத்தில் மக்கள் வாழ்ந்த வாழ்க்கை ஒரு மாண்புமிகு வாழ்க்கையாகும். இயற்கையோடு தம்மை இணைத்து வாழ்ந்த சங்கச் சமுதாயத்தில் அகம், புறம் என இருவகைப்பட்ட ஒழுக்கங்களே முதன்மை பெற்றிருந்தனவாதலால் அக்கால இலக்கியங்களுக்கு இவையே முதற் பொருளாகவும், கருப்பொருளாகவும் அமைந்தன இவற்றுள் அக ஒழுக்கம் என்பது தூய காதலொழுக்கம், புறவொழுக்கம் என்பது போரும் வீரமும் ஆகும்.

இவ்வாறு தமிழர் வாழ்ந்த வாழ்க்கையும் கொண்ட கொள்கையும் ஆகியவற்றின் கருவூலமாகத் திகழ்கின்ற சங்கப்பாடல்களும். தமிழர் வேற்று நாட்டாருடன் தொடர்பு கொள்வதற்கு முன்னரேயே தோன்றினவை ஆதலால் பிறநாட்டார் சார்பையோ, கலப்பையோ அப்பாடல்களில் காண்டல் அரிது அத்துடன் எக்காலத்தில் இப்பாடல்கள் தோன்றின என அறுதியிட்டுக் கூறவும் முடியாது. இவ்வண்ணம் பொருள் நோக்கி அகம், புறம், எனப்பிரிக்கப்பட்ட சங்கத்தமிழ் பாடல்கள் அடி வரையறை நோக்கி எட்டுத் தொகையாகவும், பாடல்கள் பத்தை தொகுத்துப் பத்துப்பாட்டாகவும் தந்தனர். இந்நூல்கள் அனைத்திலும் சிறந்து விளங்குவது புறநானூறு இந்நூல் தமிழ் மொழியில் தோன்றிய இரண்டாவது திருக்குறள் எனப் போற்றப்படுகின்றது. தமிழர்களின் ஒப்பற்ற வீரத்தைப் பற்றி உரைக்கும் பாடல்கள் பல இந்நூலுக்கு அணி செய்கின்றன. வீரம் என்பது இளைத்தவர்களை வீணாக இன்னலுக்கு ஆளாக்கித் தான்மட்டும் இன்புற்றுவாழ்வதன்று, மற்றவர்களைக் காட்டிலும் தான் ஆற்றல் உடையவன் என்பதை அறிவித்துக் கொள்வதும் அன்று தான் கொண்ட கொள்கையில் உறுதியுடன் நிற்றல் தான் செய்யத் தொடங்கியச் செயல்களை எத்தடைகளுக்கும் அஞ்சாமல் முயற்சியுடன் செய்து முடித்தல் தன்மானத்திற்கு இழுக்கு வராமல் தன் செயலிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி அடைதல். தன்னைக் காரணமின்றித் தாழ்த்திப் பேசுவோர் நாணும்படி அவர்களின் செருக்கைச் சிதைத்தல் போன்றனவே வீரத்தின் இயல்பு. இவ்வீரத்தின் மகிமைக்கு கொடிகாட்டி நிற்பனவே புறநானூற்றுச் செய்யுட்கள்.

இந்நூலில் வீரத்தின் மாண்பு அரச வாகை, உவகைக் கலுழ்ச்சி, எருமைமறம், ஏர்க்கள உருவகம், குடிநிலையுரைத்தல், செருவிடை வீழ்தல். தானை நிலை, தானைமறம், நல்லிசை வஞ்சி, நூழிலாட்டு, நெடுமொழி, மூதின்முல்லை, வஞ்சினக்காஞ்சி போன்ற பலதுறை சார்ந்த வீரம் சிறப்பிக்கப்படுகின்றது.

சங்கத்தமிழில் வேந்தர் தம் வீரத்தின் மாண்பு போற்றப்படும் வகையினை நோக்குவோம். இடைக்குன்றூர் கிழார் என்னும் புலவர் பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனின் வீரத்தைப் பாடுகையில் முடிமன்னர் இருவர், குறுநில மன்னர் ஐவர் ஆக எழுவரும் அவனை எதிர்த்தபோது, அந்த எழுவரையும் தான் ஒருவனாக நின்று வென்றான் எனவும் அதுவும் நெடுஞ்செழியன் மிக்க இளமையாக இருக்கும் போதே இப்போரைச் செய்தான் எனவும் அப்போர்ச் சிறப்பைக் கூறுகையில்.

**''வயின்வயின் உடன்று மேல்வந்த**
**வம்ப மள்ளரை, வியந்தன்றும் இழிந்தன்றும்**
**இலனே, அவரை அழுந்தப்பற்றி அகல்**
**விசும்பு ஆர்ப்ப எழக் கவிழ்ந்து நிலம் சேர**
**அட்டதை, மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும்**
**அதனினும் இலனே''**

என வரிசை வரிசையாக வந்த படைகளைக் கண்டு வியக்கவும் இல்லை. அலட்சியமாக நினைக்கவும் இல்லை. அவர்களை அழுந்தப்பற்றி வானத்தே எறிய, எறிந்தவுடல் கவிழ்ந்து நிலத்தில் வீழ்ந்ததாம் எனப்பாடுகின்றார். அப்புலவரே இம் மன்னனின் வீரத்தை இன்னொரு பாடலிலும் கூறுகையில் குகையின் நின்றும் புலி இரை தேடிப் புறப்பட்டது போல அம்மன்னன் புறப்பட்ட போது, இவன் இளையவன் இவன் நாட்டில் நாம் பெருந்தொகையாக கொள்ளையடிக்கலாம் என, இறுமாந்து வந்த பகை மன்னரைப் போர்க்களத்திலேயே கொல்லாது, அவர்களது மனைவியர் நாணம் கொண்டு இறந்து போகுமாறு அவரவர் ஊர்வரை துரத்திச் சென்று கொன்றானாம் என அரசர் தம் வீரத்தின் மேன்மையை சங்கப் புலவோர் போற்றியுள்ளனர்.

சோழ நாட்டு குறுநில மன்னருள் ஏலாதி திருக்கிள்ளி என்பான் சோழமன்னருக்குப் படைத்துணையாக பல போர்களில் வாகை சூடி படைக்கலங்களால் புண்பட்ட மேனியன் அவனது வீரத்தைப் புகழ்ந்து பாடுகையில் புலவர் மாடலன் மதுரைக்குமரனார் பின்வருமாறு கூறுகின்றார். ''வெல்கின்ற போரையும் வீரக்கழல் அணிந்த திருந்திய அடியினையும், விரைவாக ஓடும் குதிரையையும் உடைய கிள்ளியே நீ, போரைக் கண்டால் அப்போரை வென்று, பகைவரது படையை விலக்கி எதிர் நிற்பதால் வாள் ஏற்படுத்திய வடுப் பொருந்திய உடலுடன் கேட்கும் செவிக்கு இனியவனாக இருக்கின்றாயே? தவிர கண்ணுக்கு இனியவனாக இல்லையே, ஆனால் உன்னைக் கண்டு புறமுதுகு காட்டி ஓடிய உன்பகைவர் புண்படாத உடலுடன் கண்ணுக்கு இனியவராக உள்ளனர் எனவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் இருவரும் ஏதோ ஒரு வகையில் இனியவராக இருந்த போதும், உன்னை மட்டும் இவ்வுலகம் புகழ்வானேன்?" என வீரத்தின் மாண்பை விதந்துரைக்கின்றார். இதனை

> **''நீயும் ஒன்று இனியை அவரும் ஒன்று இனியர்**
> **வெல்போர்க் கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளியே**
> **நின்னை வியக்கும் இவ்வுலகம் அஃது என்னோ?**
> **பெரு உரைத்திசின் எமக்கே'' என்ற பாடலடிகள் மூலம்**
> **புலப்படுத்துகின்றார்.**

இவ்வாறு சங்கத் தமிழில் மன்னர்களது வீரம் மட்டுமன்று வீரர்களது வீரமும் களத்தே மாண்புகண்டது ஒரு வீரன் பகைவர் யானைகளைக் கொன்று குவித்து தானும் புண்பட்ட மேனியுடன் நகரவியலாது நின்ற வேளையிலும் தன்னைத் தாக்க வந்த யானையைக் கொன்ற வீரனின் நிலையைக் கண்ட மன்னன் தானும் போரிட்டு வீழ்ந்து இறப்பது சிறப்புடையது என எண்ணி அவ்வாறே செய்தான் என வீரத்தினுக்கு மகுடம் சூட்டி நிற்கின்றது. இது போன்று புலவர் பொன்முடியார் பாடிய ஒரு பாடலும் வீரன் ஒருவனின் மாண்பைச் சுட்டி நிற்கின்றது. மன்னர் இருவருக்கிடையே தும்பைப்போர் நடக்கின்ற போது, களம் பலகண்டு வீரத்துடன் போராடி மடிந்த வீரனின் மகன் ஒருவனும் பகைவரின் யானைகள் பலவற்றை வீழ்த்தி வீரத்துடன் போராடிக் கொண்டிருக்கிறான். அச்சந்தர்ப்பத்தில் பகைவரது வேல் அவன் மார்பில் பாய்ந்தது. எனினும் அதைப் பொருட்படுத்தாது தொடந்தும் போராடி முடிவில் கேடயத்தின் மீது சாய்ந்து உயிரை விடுகிறான். இதனை பத்து மாதஞ்சுமந்து பாலூட்டி வளர்த்துப் போர்க்களம் அனுப்பிய தாய் காண்கின்றாள். உடனே அவளுக்கு அவனது பிள்ளைப்பருவ நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது பிள்ளைப் பராயத்தில் பால் குடிக்க மறுத்த போது கோல் எடுத்து அச்சுறுத்த அவன் அஞ்சினானே அத்தகையவன் இன்று களிறுபலகொன்று தன் கேடயத்தின் மீது விழுந்து கிடக்கின்றான். இவன் மார்ப்புப் புண்ணில் தைத்துள்ள அம்பைக் காட்டிய போது ''யான் இதனை அறியேன் என்கின்றாள்'' என்னே இவன் வீரம் என இறுமாப்புக் கொள்கின்றான். எனப்புலவரும் வீரத்தைப் போற்றிப் புகழுகின்றார்.

முத்தமிழ் வித்தகி ஔவைப் பிராட்டியும் வீரத்தின் விளைநிலமான சங்கச் செய்யுட்களில் வீரச் சிறப்பினை பின்வருமாறு கூறுகின்றார்.

> **''பலர் குறைசெய்த மலர்த்தார் அண்ணற்கு**
> **ஒருவரும் இல்லை மாதோ, செருவத்துச்**
> **சிறப்புடைச் செங்கண் புகைய வோர்**
> **தோல் கொண்டு மறைக்கும் சால்புடை யோனே''**

எனப்பாடுகின்றார்.

அதாவது பலருக்கும் பலவிதமான உதவிகளைச் செய்தவன், ஆனால் இப்போது இவனுக்குத் துணையாக ஒருவரும் இல்லை இருந்தும் சிறப்புடைய கண்கள் சினத்தால் சிவந்து புகை எழ, தன் ஒரு கேடயத்தைக் கொண்டே பகைவர் வீசும் படைக்கலங்களைத் தடுக்கும் வலிமையுடையவனாக உள்ளான் என வீரனின் ஒப்பற்ற வீரத்தை எம் கண் முன் ஒரு காவியமாக காட்டி நிற்கின்றார்.

இவ்வீரத்தினுக்கு எல்லாம் மகுடம் வைத்தாற் போல மதுரை இளங்கண்ணிக் கோசிகனார் என்னும் புலவர் ஒரு வீரனின் மாண்பை எடுத்துக் கூறியுள்ளார். ஒப்பற்ற ஒரு வீரன் போரில் பலபகைவரையும் பல ஆண்யானைகளையும் கொன்று குவிப்பதல்லாமல் அவனது பெயரைக் கேட்டவுடனேயே பகைவர் நெஞ்சில் அச்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாகின்றதாம். அந்தப் புகழைப் பெறுவதே எல்லாப் புகழினும் மேலானது என்பதனை

''நல்லரா உறையும் புற்றம் போலவும்
கொல் ஏறு திரிதரு மன்றம் போலவும்
மாற்றருந் துப்பின் மாற்றோர் பாசறை
உளன் எனின் வெருஉம்'' எனப் பாடியுள்ளார்.

என்னே சங்கம் கண்ட மறந்தமிழனின் வீரம் என வியக்க வேண்டியுள்ளது.

ஆண்களது வீரம் மட்டுமன்று பெண்களின் வீரமும் சங்கத்தமிழில் உயிர் பெற்று உலவுகின்ற சொல் ஓவியமாகக் காட்சி தருகின்றது. வெற்றியுடைய மறக்குடியில் பிறந்த மகளிர்க்கும் மறப்பண்பு மிகுந்து விளங்குவதாக 'ஒகூர் மாசாத்தியார்' என்னும் பெண் புலவர் இவ்வாறு கூறுகின்றார். முன்நாளும் அதற்கு முந்தைய நாளும் இவளுடைய கணவனும் தந்தையும் போரில் மாண்டனர். அப்படியிருந்தும் தனக்கு ஒரே மகனாக உள்ள சிறுவனையும் போருக்கு அனுப்புகின்றாள். அவனோ போருக்குச் செல்லும் பருவம் கூட அடையாதவன் தெனைக் கூட அறிந்து கொள்ளாமல் அவனைப்போருக்கு அறிவு மயங்கி, அனுப்புகின்றாளாம். அதற்குக் காரணம் மறப்புகழில் ஏற்பட்ட விருப்பமே, அவன் உலக வாழ்வில் உயிரை விட வீரத்தைப் பெரிதாக எண்ணியதாலேயே அப்படிச் செய்தாள் என்பதனை.

''ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுக நோக்கிச் செல்கஎனவிடுமே
கெடுக சிந்தை, கடிது இவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே''

என இகழ்வது போல புலவர் புகழ்ந்து கூறுகின்றார். இங்கு மூதில் என்பது முதுகுடி அதாவது கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்தகுடி.

இது போன்றே அள்ளூர் நன் முல்லையார் என்னும் புலவர் ஒருக்கால் ஒரு மறக்குடிமகளின் இல்லத்திற்குச் சென்றிருந்தாராம். அங்கு அப்பெண் தன்முன்னோர் புகழ்கூறும் நடுகல்லை வழிபடுவதைக் கண்டார். அம்மறக்குடிமகள் அந்நடுகல்லிடம் நாளும் தன்னிடம் விருந்து வரவேண்டும். தன் கணவன் போரில் வெற்றி காணவேண்டும். தன் கணவனுக்குப் போர் செய்யும் பகை வேந்தர் உண்டாக வேண்டிக் கொண்டாளாம். இவ்வியத்தகு செயல் அம்மறக்குடி மகளின் வீரத்தை, வீரத்தின் விளை நிலமாக உள்ள இதயத்தைக் காட்டி நிற்கின்றது எனக் கூறின் வியப்பாகாது.

ஔவையாரும் இவ்வாறே ஒரு காட்சியை வர்ணிக்கின்றார். இரு மன்னருக்கிடையே நடந்த போரில் இரண்டு பக்கங்களிலுமே பலர் இறந்தனர். அவர்களுள் வீரன் ஒருவனின் தாய்க்கு மகன் இறந்த செய்தி அறிவிக்கப்பட்டதும் அவன் போர்க்களம் நோக்கிச் சென்றாள். அம்மாதின் செயலை ஔவை மூதாட்டி உற்றுப்பார்த்தார். படைக்கூட்டத்தின் நடுவில் வெட்டுப்பட்டு உடல் வேறான தன்மகனின் மறமாண்பைக்கண்டு, அன்பு மிகுந்து புறமுதுகிடாத காளையின், தாயான அப்பெண்ணின் வாடிப்போன முலைகள் மீண்டும் பாலைச் சுரந்தனவாம். இது வீரத்தில் விளைந்த பாசமல்லவா? இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இடைப்படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய
சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி
வாடு முலை ஊறிச் சுரந்தன
ஓடாப்பூட்கை விடலைத் தாய்க்கே''

என மறக்குடித் தமிழ் மகளின் வீரத்தின் மாண்பை ஔவையார் அழகுறப் பாடியுள்ளார்.

இன்னுமொரு மறக்குடிமகளின் வீரத்தின் விழுதை பூங்கண் உத்திரையார் என்னும் புலவர் கூறுவதாவது. கொக்கின் இறகு போன்று நரைத்த கூந்தலையுடைய ஒரு முதியவளின் மகன் போர்க்களத்தில், தன்னை எதிர்த்து வந்த யானையைக் கொன்று தானும் இறந்தான். எனச் சான்றோர் உரைத்த செய்தியைக் கேட்டதும் அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியைவிட பேருவகைக் கொண்டு அவள் சொரிந்த கண்ணீர் வன்மையான மூங்கிலிலே மழைபெய்த போது அங்கு பொருந்தித் தூங்கித் துளிக்கும் நீர் துளிகளை விடபலவாம். காரணம் அது ஆனந்தக் கண்ணீர் அன்றோ, சோகத்தின் கண்ணீர் என்றால் ஆறாகப் பெருகும். இங்கு பெருமையை, வீரத்தை நினைந்து, நினைந்து உவகை கொள்வதனால் அது துளித் துளியாக சிந்துவதாகப்புலவர் போற்றும் வீரத்தின் மாண்பினை என்னென்பது. இன்னும் ஒருதாய் தன்மகன் வளர்ந்து போரில் வெற்றி பெற்று வீரத்திருமகனாக விளங்க வேண்டும் என எண்ணிய போது அவளது உள்ளத்தில் ஊற்றெடுத்த உணர்வலைகளை பொன்முடியார் என்னும் புலவர் மறக்குடி மகள் ஒருத்தியின் கூற்றாய் இவ்வாறு பாடுகின்றார்.

''ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்கு கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குகடனே
ஒளிறு வாள் அருஞ்சமர் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே''


மகனைப் பத்துமாதம் சுமந்துபெற்று வளர்த்தல் தனது கடமை, அவனை நற்பண்பு உள்ளவனாக ஆக்குதல் தந்தையின் கடமை, அவனுக்கு வேண்டும் வேல் முதலிய படைக்கருவிகளை செய்து தருதல் கொல்லனின் கடமை, நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது நாடாளும் வேந்தனின் கடமை ஆனால் மகனது கடமை என்ன? வாளேந்தி தடுப்பதற்கரிய போர் செய்து, ஆண்யானைகளை போர்க்களத்தில் கொன்று வருதல் மகனின் கடமை என்கின்றாள். இங்கு தாய்மையில் வீரம் விளைகின்ற தன்மையை நாம் காண்கின்றோம்.

வீரத்தின் விளைநிலமாய், வெற்றியின் தாயகமாய், அஞ்சாமையின் அவைக்களமாய் ஆண்மையின் ஆடுகளமாய் விளங்கிய சங்க காலத்தில், வீரத்தின் மாண்பு வெற்றி நடைபோட்டு நர்த்தனம் புரிகின்றது. அவ்வெற்றியின் அடியொற்றி நாமும் வீரத்தின் மாண்பை போற்றி நிற்போம். சங்கத் தமிழனின் வீரத்தைக் கண்டு பணி மலைகள் கூட ஆறாக ஓடின என்றால் அவ்வீரத்தினுக்கு விளக்கமும் வேண்டுமா?

''வாழ்க சங்கத் தமிழனின் வீரம்
வளர்க அவர் புகழ் என்றும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயற்கை வளம் நிறைந்த இலங்கைத் திரு நாட்டில் இறைவனின் எழிலோவியங்களாகிப் பரிந்து விரிந்து கிடக்கும் தமிழ் முஸ்லிம் பாரம்பரிய நாட்டுப்புற வழக்காறுகள், வாழும் சமூகத்தினையும் அவர்தம் கலை கலாசார இலக்கிய பண்பாட்டு விழுமியங்களையும் பறை சாற்றி நிற்கின்றன.

'நாட்டுப்புற இயல்' என்ற சொல்லை 1846-ஆம் ஆண்டு வில்லியம் தோமஸ் என்பவரே முதன் முதலில் ஆங்கிலத்தில் ஃபோக்லோர் எனப் பயன்படுத்தினர். இவரைத் தொடர்ந்தே நாட்டாரியல் ஆய்வாளர்கள் இச் சொல்லைப் பயன்படுத்த தொடங்கினர்.

# தமிழ் முஸ்லிம்களின் நாட்டுப்புற வழக்காறுகள்

கு. மேகலா
தி/சம்பூர் மகா வித்தியாலயம்

''நாட்டார் வழக்கியல்'' என்ற சொல் நாட்டாரியல் என்ற சொல்லுக்குப் பதிலாக வந்ததாகும்.

இலங்கை வாழ் கிராமத்து முஸ்லிம்களின் நாட்டார் வழக்கியற் கூறுகளாக உள்ள பாடல்கள் தாலாட்டு, பொல்லடி, அம்மா பாடல்கள், பழமொழிகள், குழந்தைப்பாடல்கள், நொடிகள், சீனடிசிலம்படி, திருமண சம்பிரதாயங்கள், மாப்பிள்ளை வாழ்த்து, கதைப்பாடல்கள் ஆகியவை பற்றி இதுவரை காத்திரமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாதிருப்பது ஒரு துர்ப்பாக்கிய நிலையென்றே கூறுதல் வேண்டும். இலங்கையின் கிழக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களுடைய பாடல்களில் கவிதை மட்டும் கருப் பொருளாக கொண்டு ஒரு சிலர் ஆய்வுகள் செய்து; அவைகளை நூல்களாக வெளியிட்டுள்ளனர். பல கஷ்டங்களுக்கு மத்தியில் தேடுதல் செய்து, இப்பாடல்களை எழுத்துருவில் கொண்டு வந்த இவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்களே. இவர்களில் எஸ். முத்துமீரான், கலாநிதி எம்.ஏ. நுஹ்மான், அல்ஹாஜ் எஸ்.எச்.ஜெமீல் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இதுவரை வெளிவந்த இலங்கை முஸ்லிம்களின் நாட்டாரியல் பற்றிய நூல்களில் 1995ம் ஆண்டு அல்ஹாஜ் எஸ்.எச். ஜெமீல் அவர்களால் தொகுக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் சமய கலாச்சார, அலுவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ''கிராமத்து இதயம்'' குறிப்பிடத்தக்க நூலாகும்.

''நாட்டுப்புறம்'' என்பது கற்காத - கிராமியப் பகுதிகளையே குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைக் கிராமத்தான், பட்டிக்காட்டான், பாமரன், நாட்டுப்புறத்தான், ஊர்மகன், சிற்றூரான் எனப் பலவாறு பெயரிட்டு அழைக்கின்றனர். இவை அனைத்தும் கிராமத்தில் வாழும் மக்களையே குறிக்கும் இவர்களது கலை இலக்கியங்களைப் பற்றி அறியும் ''நாட்டுப்புற இயல்'' என்ற சொல்லும் தற்போது தான் சில அறிஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பார்.

நாட்டுப்புற வரலாற்றை, எடுத்துக் கொண்டால் இசைக்கு மனிதன் இசைந்து ஒலித்த காலத்திலிருந்தே நாட்டார் இலக்கியம் உலகில் பிறந்து வளரத் தொடங்கியது எனலாம். நாட்டுப் புறப்பாடல்கள் ''முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்'' விளங்குகின்றன. வாயில் பிறந்து செவிகளில் உலவி காற்றில் மிதந்து கருத்தில் இனிப்பவை இப்பாடல்கள். இவை என்று பிறந்தன? எவரால் பிறந்தன? என எடுத்துச் சொல்ல இயலாத பண்பும் பாங்கும் பெற்றவையாகும்.

அதாவது இவர்களுடைய விஞ்ஞானத் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்து நவீன கைத்தொழில்கள் இயந்திர மயமாக்கப்படுவதற்கு முன்னர், இப்பகுதியிலுள்ள கிராமப்புறங்களில் முக்கிய தொழில்களாக விவசாயம், பாய்பின்னுதல், மீன் பிடித்தல், ஆடு,மாடு வளர்த்தல், தாவர வர்த்தகம் செய்தல், சேனைப் பயிர்ச்செய்கை போன்றவைகள் இருந்தன. ''தொழில் செய்வோர் தம் களைப்பினைப் போக்கிக் களிப்பினைப் பெருக்கப் பாட்டினைத் துணைக்கு அழைப்பர். துன்பமும், மகிழ்வும், தொழிலும் பாட்டினை உருவாக்கும் நிலைக்களன்களாகும். இழப்பால் வரும் துன்பத்தைப் போக்கப் பாட்டே தோணியாகிறது. உள்ளத்தில் பொங்கியெழும் இன்பவெள்ளம் பாட்டாக ஓடி வருகிறது. மனிதன் தொழிலில் ஈடுபடும் போது அதனால் எழும் களைப்பைப் போக்கிக் கொள்ளச் சாய்விடமாய்ப் பாட்டருவி குதித்தோடி வருகிறது. எந்தத் தொழில் செய்தாலும் பாட்டினைத் துணைக்கழைப்பது நாட்டுப்புற மக்களின் இயல்பாகும்'' என்பார்.

மனித வாழ்க்கையில் செய்திப்பரிமாற்றம் மிக முக்கியமான இடத்தை வகித்து வந்துள்ளது. ஒருவரிடம் ஒரு பொருளைப் பெற்றுவரவோ, ஒரு செய்தியைச் சொல்லி வரவோ இன்னொருவரை அனுப்புகின்ற வழக்கம் தொன்று தொட்டு வருவதாகும். இதனையே ''தூது'' என்றழைத்தனர். இச் சொல்லாட்சி தொல்காப்பியத்திலேயே காணப்படுகின்றது, என்று கூறியுள்ளார்.

முஸ்லிம்கள் மதப்பற்று மிக்கவர்கள் இவர்கள் வாழ்வு, மதத்தோடு பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம். வாழ்க்கையில் தங்கள் சமய நூலான 'திருக்குர்ஆனை'யும், பெருமானார் முகம்மது நபி அவர்களின் வாழ்க்கை முறையினையும் கிஞ்சித்தும் அணுப்பி சகாமல் பின்பற்றி வருபவர்கள் முக்கியமாகக் கிராமத்து மக்கள் சமயக்கட்டுப்பாட்டுக்களையும், ஒழுக்க நெறிகளையும் மிகவும் பயபக்தியுடன் பின்பற்றி ஒழுகும் பண்புள்ளவர்கள். இவர்கள் எந்தவொரு காரியத்தைச் செய்யும் போதும் இறைவனைப் பிரார்த்தித்து அவனருள் வேண்டியே செய்வார்கள். அண்டமனைத்தும் இறைவனின் ஆணைப்படியே இயங்கிக் கொண்டிருக்கிறது. என்ற பூரண நம்பிக்கையில் வாழும் முஸ்லிம்கள் அவனுக்கு அஞ்சி அவன்பாதுகாவல் தேடியே எந்தவொரு காரியத்தையும் தொடங்குவார்கள்.

முஸ்லிம்களிடையே வழக்கில் உள்ள நாட்டார் பாடல்களில் பிரார்த்தனைப் பாடல்கள் அதிகமாக உள்ளன. இவர்களின் முயற்சிகள் வெற்றி பெறவும் வேண்டுதல் கைகூடவும் மனமுருகி இறைவனைப் பிரார்த்திப்பார்கள். குறைகள் நீங்கவும். குலம் தளைக்கவும், அருள் ஓங்கவும் ஆண்டவனிடம் மன்றாடிப் பிரார்த்திக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்து மக்களின் பாடல்கள், யதார்த்தமாகவும் தனித்துவமாகவும் உள்ளன. இப்பிரார்த்தனைப் பாடல்கள் இருபாலாருக்கும் பொதுவான பாடல்களாகவே உள்ளன. இப்பாடல்களை ஆண்களும், பெண்களும் பாடியிருக்கலாம். ஏனெனில் பிரார்த்தனை எல்லோருக்கும் பொதுவாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

கிராமத்து மக்கள் புறச் சூழலுக்கும் கூடுதலாகக் கட்டுப்பட்டு வாழும் பழக்கமுள்ளவர்கள். இவர்களின் வாழ்க்கையில் பழமைபதிந்திருக்கும் மரபுகள் மலிந்திருக்கும். மதக் கோட்பாடுகள் நிறைந்திருக்கும். அதிலும் முஸ்லிம்கள், எல்லாக் காரியங்களையும் இறைவனுக்குப் பயந்தே செய்வார்கள். தாங்கள் செய்யும் ஒவ்வொரு செயல்களையும் இறைவன் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்ற பயபக்தியோடு வாழும் பண்புள்ளவர்கள். முக்கியமாக முஸ்லிம்கள் மறுமையைப் பூரணமாக நம்பியுள்ளனர். இவர்கள், மறுமை நாளில் மரணித்த எல்லோரும் உயிரோடு எழுப்பப்பட்டு அவர்கள் உலகில் செய்த நன்மை தீமைகளைப் பற்றி இறைவன் கேள்விகணக்குக் கேட்பான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தங்கள் வாழ்க்கையை அமைத்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் முஸ்லிம்கள் மத்தியில் ஏதாவது தீர்க்க முடியாத பிரச்சனை எழுந்தால் அப்பிரச்சனையை யாராவது ஒரு சாரார் சத்தியம் செய்வதன் பேரில் தீர்த்துக் கொள்வார்கள். இது கிராமத்து மக்கள் மத்தியில் உள்ள வழக்கமாகும். இதை இயற்கையின் நீதி என்றும் இவர்கள் கூறுவார்கள். ஒரு பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நேரடிச் சான்று கிடைக்காவிட்டால், சூழ்நிலைச் சான்றுகளைக் கொண்டு அதைத் தீர்த்து வைக்க முயலலாம். இது இரண்டும் பெற முடியாவிட்டால், சத்தியமே இறுதி முடிவாக எடுக்கப்படும்.

'நாட்டுப்புறப்பாடல்கள் யாப்பமைப்பில் சிந்து வகையைச் சேர்ந்தவை. சிந்து சமனிலைச் சிந்து, வியனிலைச் சிந்து நொண்டிச் சிந்து வழிநடைச்சிந்து ஆனந்தக் களிப்பு, காவடிச்சிந்து, வளையற்சிந்து, தங்கச் சிந்து, சேவற்பாட்டு, புறப்பாட்டு, கிள்ளத்தாராச் சிந்து, தெம்மாங்கு கும்மி, கலாவணி, ஏவல், ஏற்றப்பாட்டு, உடுக்கைப்பாட்டு, ஒப்பாரி தாலாட்டு எனப்பல வகையாக வழங்குகின்றது. கிராமப்புற மக்களின் பிரயாணங்கள் அக்காலத்தில் கால்நடையாகவே கடந்து சென்று தங்கள் காரியங்களைச் செய்து வந்தனர். ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு செல்லும் போது கால் நடையாகவும், மாட்டு வண்டிகள் மூலமாகவும் பிரயாணம் செய்தனர்.

மேலும், மட்டக்களப்பு வாவி மூலமாக வள்ளங்களிலும், தோணிகளிலும் கல்முனைக்கும் இடையில் பிரயாணங்கள் செய்தனர். இதற்கு வசதியாக சம்மாந்துறையிலும், கிட்டங்களிலும் இரு பிரதான துறைமுகங்கள் இருந்தன. சம்மாந்துறையில் இருந்த துறைமுகம் காரியப்ப மன்னரால் உருவாக்கப்பட்டதாக 15ம் நூற்றாண்டில் ஆறாம் பராக்கிரபாகு மன்னனின் காலத்தில் இலங்கையில் வாழ்ந்த ஆனந்ததேரர் விரிவாகக் கூறியுள்ளார். சங்கைக்குரிய ஆனந்த தேரரின் கூற்றை ஆதாரமாகக் கொண்டு பார்க்குமிடத்தில் சம்மாந்துறைத் துறைமுகம் நீண்ட கால வரலாற்றைக் கொண்டதாக உள்ளது. இத் துறைமுகத்தினூடாக அரேபியர்களும் வர்த்தகம் செய்ததாகவும் இவர்களில் சிலர் இங்குள்ள பெண்களைத் திருமணம் செய்து இப்பகுதியில் வாழ்ந்து வந்ததாகவும் அறியத் தொடங்கியது.

தொகுப்பாய்வாக நோக்கின் இலங்கை வாழ் தமிழ் முஸ்லிம் பாரம்பரிய விழுமியங்கள் யாவும் நாட்டுப்புற வழக்காறுகளைக் கொண்டு இன்றும் மலிந்து விட்ட தன்மையினை நாம் காண முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய்
றோ.க.த.க.பாடசாலை



# அருகிவரும் யாழ்ப்பாணத்துக் கிராமியக் கூத்துகள்

மனிதர்களிடம் தோன்றும் இயல்பான உணர்வுகளிலொன்று கலையுணர்வு. இவ்வாறாக இயல்பாகத் தோன்றி இயற்கையோடியைந்து உணர்ச்சிகளின் உறைவிடமாகி மக்களை மகிழ்விக்கும் கலைகளே கிராமியக் கலைகள். அன்றைய மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்க்கை நடாத்திப் பல கலைகளைத் தோற்றுவித்து அவற்றை ரசித்து, ருசித்து அனுபவித்து மகிழ்ந்தான். மன மகிழ்ச்சியே அவனது முக்கிய குறிக்கோளாக விருந்தது. மனித உணர்வுகளுக்கு கலைகள் வடிகாலமைத்தன உணர்ச்சியின் வெளிப்பாடாயிருந்தமையால் கால வெள்ளத்தையும் தாண்டி வாழ்ந்து வளர்ந்துள்ளது. அத்துடன் உணர்ச்சியின் வெளிப்பாட்டை அது புடம் போட்டுள்ளதுடன் மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளது. ரசனை, இயற்கை அறிவு, ஆழ்ந்த உணர்ச்சி, எளிய மனம், நேரடித் தன்மை ஆகியவை கலைகளுள் மறைந்துள்ளன. கிராமப்புற மக்களின் அழகியல் உணர்வுகளில் மையமாக விளங்கி மக்களின் கவலையைப் போக்கி ஐம்புலன்களையும் ஈர்ப்பதுடன் நாட்டின் செல்வமாகவும் இவை திகழ்கின்றன.

## கிராமியக் கலைகளின் வகைகள்

இதனை சமயம்சார் கலைகள், தொழில்சார் கலைகள், சமூகம் மற்றும் வீரம்சார் கலைகள் என மூன்றாக வகைப்படுத்தலாம். சமூகம் மற்றும் வீரக் கலைகளை தற்காப்புக்கலை, திறமை கூட்டும் கலை எனவும் சமயக்கலைகளை வழிபாட்டுக்கலைகள், நேர்த்திக்கடன் கலைகள் புராணங்கள் எடுத்தியம்பும் கலைகள் என மேலும் வகைப்படுத்தலாம்.

## சிலம்பாட்டம்

கம்புகளைக் கொண்டு ஒலியெழுப்பும் இவ்விளையாட்டு வீர விளையாட்டாகக் கருதப்படுகின்றது. வாழ்க்கையே போராட்டமாக அமைந்துள்ள மனித வாழ்வில் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது இதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள சிலம்பாட்டம் ஆடிய மனிதன் பின்னர் அதனைக் கலையாக வளர்த்தான். கிராமப் புறங்களில் இதற்கான ஆசிரியர்கள் இருந்துள்ளனர். இவ்வாட்டத்தில் தட்டு வர்மச் சுவடு முக்கியமானதாகும். முடியாத நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவடி என்ற அடி முறை பயன்படுத்தப்படும். கம்பு வீசுந்திறன், காலடி எடுத்து வைக்கும் முறை, வேகமாக வீசுந்திறன் ஆகியன சிலம்பாட்டத்தின் அடையாளமாகும். வீர விளையாட்டாகத் தோற்றம் பெற்ற சிலம்பாட்டம் நுட்பமான செயற்பாட்டுத் திறனுடன் கலையாக விளங்குகின்றது.

### காவடியாட்டம்



முருக வழிபாட்டின் மரபிலே தோன்றியதே காவடியாட்டம். இவ்வழிபாடு ஈழத்திலே தொன்றுதொட்டு வழிபடப்பட்டு வருகின்றது. காவடி குறுந்தடிகளால் செய்யப்பட்டு வளைந்த அமைப்பில் இருக்கும். இரு முனைகளிலும் பாற் குடங்கள் இருக்கும். வண்ணக் கடதாசிகளாலும், வெட்டிவேராலும் காவடிகள் அலங்கரிக்கப்பட்டிருக்கும். காவடி எடுப்போர் நாக்குகளிலும், உதடுகளிலும் வேல் கொண்டு அலகு குத்திக் கொள்வதுண்டு. பாற் காவடி, சந்தனக்காவடி, மச்சக்காவடி, ஆட்டக்காவடி, துலாக்காவடி, தூக்குக் காவடி, தேர்க்காவடி எனப் பல காவடிகள் ஆடப்படுவதுண்டு. சமயக் கலையில் முகிழ்த்த காவடியாட்டக்கலை பிற்காலத்தில் தொழிற் கலையாகவும் மாற்றம் பெற்று விட்டது. இதில் சுழன்றாடுதல், குனிந்து நிமிர்ந்து ஆடுதல், வளைந்து ஆடுதல், வில்லாடுதல், வரவேற்று ஆடுதல், கைவிரித்தாடுதல் ஆகியவை முக்கியமானவையாகும்.



### கரகாட்டம்

இது மாரியம்மனுடன் தொடர்புடையதாகும். இச் சொல்லாட்சியைத் தொல்காப்பியத்திலும் கலித்தொகையிலும் காணலாம். சிலம்பு குறிப்பிடும் குடக் கூத்திலிருந்தே இன்றைய கரகாட்டம் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் இதை சக்திக் கரகம், ஆட்டக் கரகம் என இரு வகைப்படுத்தலாம். சக்திக் கரகம் பக்தர்களால் எடுக்கப்படும் மேளம், உடுக்கு ஆகியவை இதன் பக்க வாத்தியமாகும். ஆட்டக் கரகத்தின் பக்கவாத்தியமாக நையாண்டி மேளம் இடம் பெறுவதுண்டு. கரகாட்டத்தின்போது தொடக்க நிலை, வேகநிலை, அதிவேகநிலை என மூன்று வகைகள் உண்டு. ஆட்டத்தின் நடுவே கோமாளி ஆட்டம் நடைபெறும் ஆயினும் கரகாட்டத்தில் சிறப்பு மிக்கதாக செல்வச் சந்நிதி ஆலயம் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மயிலாட்டம்

இதுவும் முருகவணக்கத்தின் அடிப்படையில் தோன்றியதாகும். முருகன்போல் வேடமணிந்து மயில் போன்ற உருவம் அமைத்து அதனைக் கட்டி ஆடுபவர் காலில் சலங்கை கட்டி மயில் போலத் தோகை விரித்தாடுவது கண்கொள்ளாக் காட்சியாகும். முருகன் அருள் வேண்டி ஆடப்பட்ட ஆட்டங்கள் இன்று தொழில் முறைக் கலையாக மாறி வருகின்றது.

### ஒயிலாட்டம்

ஆடவர்கள் ஆடும் ஆட்டங்களில் இதுவும் ஒன்று. தலையில் முண்டாசு கழுத்தில் பூமாலை காலில் சலங்கை அணிந்திருப்பர். கையிலே கைக்குட்டை வைத்திருப்பர். இரண்டு அணியினர் எதிர் எதிராக நின்று ஆடுவர். ஒரே வரிசையில் ஆடுவதும் உண்டு. ஒயில் கும்மியில் குதித்துத் தீர்மானம் கொடுப்பர். இது சங்கத் தமிழின் கொஞ்சும் குழந்தையாய் புராண இதிகாச வரலாற்றுக் கருவூலமாய் பக்திப் பயிர் விளைவிக்கும் நன்னிலமாய்த் தமிழ்ப் பண்பாட்டின் சின்னமாக விளங்குகிறது.

### கும்மியாட்டம்

பெண்கள் ஆடும் ஆட்டங்களில் இது முக்கியமானது. இவ்வாட்டத்தில் பெண்கள் விளக்கைச் சுற்றி கும்மியடிப்பர். கால்களில் ஜதிகளை (Jathi) மாற்றி ஒரே வகையான தாள கதி அமையும் வகையில் கையொலி எழுப்பி வட்டமாக அடிப்பர். கைகளின் தட்டு, விரல்களின் தட்டு, உள்ளங்கைத்தட்டு, அஞ்சலித்தட்டு எனப் பலவகையுண்டு. ஜதிகளில் முழுப் பாதமும் தரையில் படும் அடி, கட்டை விரல் மட்டும் படியும் அடி, முன்னங்கால் மட்டும் படியும் அடி குதித்தல் எனப் பல வகையுண்டு.

### கோலாட்டம்

இரண்டு கோல்களைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று மோதி ஒலி எழுப்புகின்ற ஆட்டம் கோலாட்டம். இது ஆண்களாலும் பெண்களாலும் ஆடப்பட்டு வருகின்றது. பாட்டின் தாளத்துக்கேற்ப குனிந்து நிமிர்ந்து உயர்ந்து தாழ்த்தி மாறி மாறி வட்டத்தில் அனைவரும் சுற்றிச் சுற்றி கோலாட்டம் ஆடுவர். இதன் ஓர் அம்சமாக பின்னல் கோலாட்டம் அமைந்துள்ளது. ஆடுபவரின் கரங்கள் கயிறுகளால் கட்டப்பெற்று உயர ஓரிடத்தில் கட்டப்பட்டிருக்கும். சுற்றச் சுற்றப் பின்னல்கள் போடப்பட்டு மறு ஆட்டத்தில் அவை பிரிக்கப்படும் பல்வகை வண்ணங்களாக பின்னுவது காண்பதற்குக் கவர்ச்சியாகவிருக்கும்.

### வில்லுப்பாட்டு

கிராமியக் கலைகளில் இன்றும் சிறப்பிடத்தைப் பெறுவது வில்லுப் பாட்டாகும். இதன் ஆரம்பத்தை இந்தியக் கலைஞர் சுப்பு ஆறுமுகம் விளக்குகையில் வேடர்கள் வேட்டையாடி வந்து ஓய்வு வேளைகளில் மரத்தடியில் கூடித் தமது தோளிலிருந்து வில்லை மடியில் சாய்த்து அம்பை அந்த நாணிலே தட்டித் தட்டிப் பாட்டைத் துவக்கியுள்ளனர் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லுப்பாட்டின் உறுப்புகளாக அமைந்த இசைக் கருவிகள் வில், உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகியவையாகும். பின் படியாக ஆர்மோனியம், மிருதங்கம் ஆகியவையும் சேர்ந்து கொண்டன. பாடும் புலவர் நடுயாயகமாக வீற்றிருப்பார். இடப்புறமாக குடத்துக்காரர் இருப்பார். இவர்கள் முன்புறமாக உள்ள குடத்தில் வில் கட்டப்பட்டிருக்கும். இது வீசுகோலைக் கொண்டு வில் நாணைத் தட்ட வாய்ப்பாக இருக்கும் புலவரின் பின் வரிசையாகப் பின்பாட்டுக் காரர் கட்டை, தாளம் ஆகியவற்றை இயக்குவோர் அமர்வர்.

கதை ஆரம்பமாகு முன்பு காப்பு விருத்தம் பாடி விநாயகர் வணக்கம் பாடப்படும். தொடர்ந்து ஆன்மீக புராணக் கதைகள் பாடலாக கதையாக பாவனையுடன் சுவாரஸ்யமாகக் கூறப்படும். இன்று யாழ்ப்பாணத்தில் வில்லிசையில் சிறந்தவர்களாக க. சின்னமணி, க. சத்தியதாசன் ஆகியோர் திகழ்கின்றனர்.

**கூத்து**

இது பழமையின் சின்னமாக, பண்பாட்டின் எச்சமாக விளங்குகிறது. இதன் வளர்ச்சியே நாடகமும் கூத்துகளுமாகும். பெரும்பாலும் விடியும்வரை நடைபெறும் கூத்தின் கரு புராண இதிகாசங்களிலிருந்தும் வாழ்க்கை முறையிலிருந்தும் கிடைக்கின்றது. இவற்றுள் பல வகைக் கூத்துக்கள் குறிப்பிடத்தக்கவை. அவை வடமோடி, தென்மோடி, சிந்துநடை, விசேட கூத்து எனப்படும்.



**தெருக்கூத்து**

தெருவில் நடாத்தப்படும் கூத்து தெருக்கூத்து. நாடகமேடையோ காட்சித் திரைகளோ இல்லாமல் எளிய முறையில் தெருவிலும் திறந்த வெளியரங்கிலும் நடைபெறும் கூத்து தெருக்கூத்து. இது தொடக்க காலத்தில் நேர்த்தியை அடிப்படையாக வைத்து ஆடப்பட்டன. கருப் பொருளாக புராண இதிகாச கதைகள், சரித்திர நிகழ்ச்சிகள், வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சியின் முன் வைக்கப்பட்டன. தற்போது காலத்துக்குப் பொருத்தமான கருப் பொருளை முன்வைத்து ஆடப்பட்டு வருகின்றது.

மேற்கூறப்பட்ட ஆட்டங்கள் கூத்துக்கள், யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியலில் பிரபல்யம் வாய்ந்தவையாகச் செல்வாக்குச் செலுத்தி வந்தன. பண்பாட்டின் கூறுகளாக கலாச்சார விழுமியங்களில் தனித்துவம் வாய்ந்தவையாகத் திகழ்ந்த கலைகளின் எச்ச சொச்சங்கள் யாழ்ப்பாணத்தில் ஓரளவுக்கு மீளிணக்கம் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம்

திருமதி P. அசும்தா திபூர்சியஸ்
புனித ஆனாள் ம.ம.வி, வங்காலை

**வெண்பா**

**வல்ல சிலுவை மரத்தைப் புயத்தேந்திச்
சொல்லரிய வாதைத் துயரோடு - கல்வாரி
மேட்டுக்கு மேல் நடந்த வேத பரனே யெமது
பாட்டுக்கு முன்னிற்பதாம்.**

இவ் வெண்பா தென்பாங்கு மூவிராசாக்கள் வாசகப்பாவில் புலவர் லோறஞ்சுப்பிள்ளை என்பவரால் சொல்லப்பட்ட காப்புச் செய்யுள். மன்னார் மாதோட்டத் தமிழ்க் கல்வியின் ஆரம்பக் கர்த்தாவாக இவரே கணிக்கப்படுகின்றார். இவரிலிருந்துதான் மன்னார் மாதோட்டக் கல்வி வளம் புத்துயிரடைகிறது. இவர் தந்தை தாய் பெயர்களோ, வாழ்ந்த திட்டமான இடமோ அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. மாந்தை வடக்குக் கட்டுக்கரைக் குளத்தினுள் பச்சைக் கிளாச்சியென்னும் சிற்றூரென்று சிலரும் அதே பகுதி கட்டுக்கரைக்கு வெளிப்புறம் உள்ள இலந்தைவான் கிராமமென்று இன்னும் சிலரும் குறிப்பிடுகின்றனர்.

இவரின் வழித்தோன்றல்கள் இத்திக் திடல், இலந்தைவான், மூங்கில் முறித்தான், மாழிகைத் திடல் என்னும் கிராமங்களில் தற்போது வாழ்ந்து வருகின்றனர். இவர் வாழ்ந்த காலமும் உத்தேசமாகவே குறிப்பிடப்படுகிறது.

02. பெயர் :- காலிங்கராயர்
ஊர் :- நானாட்டான் கிழக்கு கோவிற்குளம்
காலம் :- 1769-1848
சாகியம்:- வேளாளர் குலம்
நூல்கள்:- திருப்பாடுகளின் அம்மானை, திருப்பாடுகளின் புலம்பல்

03. பெயர் :- சந்தியோகுப் புலவர்
ஊர் :- கட்டுரைக் குளத்துள்ளிருக்கும் குருவிற் கிராமம்
காலம் :- 1749 - 1799
சாகியம்:- கண்ணாளர் குலம்
நூல்கள்:- கோதுகப்பித்தான் நாடகம்

04. பெயர் :- கவிரிகேற் புலவர், மரிசால் கவிரிகேல்
ஊர் :- ஊற்றுவாயன் குளம்
காலம் :- 1870 - 1934
சாகியம்:- குருகுலம்
நூல் :- மத்தேசப் போன்தர் நாடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பெயர் :- ஆதித்தி நாடார் பிலிப்பு அந்தோனி
ஊர் :- முருங்கன் கற்கிடந்த குளம்
காலம் :- கி.பி. 1799 - 1849
சாகியம்:- நாடார் குலம்
நூல் :- நற்கருணை வாசகப்பா

06. பெயர் :- மரியானுப் புலவர்
ஊர் :- கட்டுக்கரையுள் ஊற்றுப்பிட்டி
காலம் :- 1780 - 1829
சாகியம்:- பரத குலம்
நூல் :- சந்தொம்மையார் - சந்தியோகுமையோர் - அருளப்பர் நாடகங்கள்

07. பெயர் :- குருகுல நாட்டுத் தேவர் (கந்தப்பு தொம்தீயோகு எதிர்மன்னசிங்கம்)
ஊர் :- மாந்தை தெற்கு புதுக்கமம் வங்காலை
காலம் :- கி.பி 1728 - 1808
சாகியம்:- குருகுலம்
நூல் :- 1. என்றிக் எம்பரதோர் நாடகம், தென்பாங்கு
2. திருச்செல்வர் நாடகம் தென்பாங்கு

08. பெயர் :- வெள்ளைப் புலவர் உபாத்தியாயர்
ஊர் :- நறுவிலிக்குளம் பெத்தான் தோட்டம்
காலம் :- கி.பி 1751 - 1802
சாகியம்:- நாடார் குலம்
நூல் :- மரிசித்தாள் பெரிய நாடகம்

09. பெயர் :- லோறன்ஸ்பிள்ளை உபாத்தியாயர்
ஊர் :- கட்டுக்கரைக்குளம் குளத்துள்ளிருக்கும் பச்சைக் கிளாச்சி
காலம் :- கி.பி 1724 - 1793
சாகியம்:- வேளாளர் குலம்
நூல் :- மூவிராசாக்கள் வாசகப்பா

10. பெயர் :- கீத்தாம்பிள்ளை
ஊர் :- அடம்பன் இந்திக் கண்டல்
காலம் :- கி.பி 1740 - 1813
சாகியம்:- வேளாளர் குலம்
நூல்கள்:- என்றிக் எம்பரதோர் நாடகம் வடபாங்கு, புருசீன கன்னி நாடகம் வடபர்ங்கு நொண்டி நாடகம், வடபாங்கு

11. பெயர் :- சமரமண வாளடை தொம்ஜவிம்
ஊர் :- முருங்கன் சுண்டிக்குளி
காலம் :- கி.பி 1739 - 1790
சாகியம்:- குருகுலம்
நூல்கள்:- லேனா கன்னி நாடகம் தென்பாங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பெயர் :- அருளப்ப நாவலர்
ஊர் :- சம்பேதுருதுறை, எருக்கலம்பிட்டி
காலம் :- கி.பி 1760 - 1805
சாகியம்:- பரத குலம்
நூல்கள்:- பரத பழைமை, பரத புராணம்

13. பெயர் :- சின்னச் சமார்
ஊர் :- முருங்கன் சுண்டிக்குளம்
காலம் :- கி.பி 1791 - 1839
சாகியம்:- குருகுலம்
நூல் :- வித்தோரியா கன்னி நாடகம்

14. பெயர் :- சூசை கொறேர உபாத்தியாயர்
ஊர் :- வங்காலை
காலம் :- கி.பி 1820 - 1869
சாகியம்:- பரதகுலம்
நூல்கள்:- 1. சித்திரப்பிள்ளை நாடகம் (மிகுந்த நகைச்சுவை)
2. ஈசாக்கு நாடகம்

15. பெயர் :- அருணாச்சலப் புலவர் மரிசால் மொத்தம் அந்தோனி
ஊர் :- பறப்பாங்கண்டல் உயிலங்குளம்
காலம் :- கி.பி 1879 - 1922
சாகியம்:- குருகுலம்
நூல்கள்:- தீத்துஸ் வத்தகன் நாடகம்
ஐ நெச கன்னி நாடகம்

16. பெயர் :- குப்பையர் புலவர் மரிசால் முறாயஸ்
ஊர் :- பறப்பாங்கண்டல், சிறுகுளம் (வங்காலைவழித்தோன்றல்)
காலம் :- 1833 - 1878
சாகியம்:- பரத குலம்
நூல்கள்:- தொம்மையப்பா வாசாப்பு, செபமாலை மாதா வாசாப்பு
சூசையப்பர் நாடகம்

17. பெயர் :- தீயாஸ் விதானைப் புலவர் (சந்தியோகு ஆரோக்கியம் டயஸ்)
ஊர் :- தலை மன்னார்
காலம் :- கி.பி 1875 - 1935
சாகியம்:- சந்தியோகுமையோர் படைவெட்டு சவேரியார் நாடகம்

18. பெயர் :- மரியாம்பிள்ளைப் புலவர்
ஊர் :- முத்தரிப்பு
காலம் :- கி.பி 1880 - 1935
சாகியம்:- திமில குலம்
நூல்கள்:- 1. செபஸ்தியார் வசன வாசாப்பு 2. சந்தியோகுமையோர் வாசாப்பு
3. சம்மனசு சுவாமிகள் அம்மானை 4. மருதமடு மாதா அம்மானை
5. தோட்டவெளி வேத சாட்சிகள் அம்மானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. பெயர் :- சூசைப்புலவர்
ஊர் :- கருங்கண்டல்
காலம் :- கி.பி 1862
சாகியம்:- கடையர் குலம்
நூல்கள்:- தைரியநாதர் நாடகம்

20. பெயர் :- விசுவாசப் புலவர்
ஊர் :- கருண்கடல்
காலம் :- கி.பி 1882 - 1940
சாகியம்:- கடையர் குலம்
நூல் :- வேதசாட்சிகள் நாடகம்

21. பெயர் :- ஆனுப்பிள்ளை
ஊர் :- நானாட்டான்
காலம் :- கி.பி 1862 - 1934
சாகியம்:- வேளாளர் குலம்
நூல் :- ஞான சவுந்தரி நாடகம்

22. பெயர் :- நாவற்குளம் புலவர் வ. அந்தோனிப்பிள்ளை புலவர்
ஊர் :- பெரிய நாவற்குளம், திருக்கேதீஸ்வரம்
காலம் :- 1911 -1969
சாகியம்:- குருகுலம்
நூல்கள்:- 1. அந்தோனியார் நாடகம் 2. அந்தோனியார் பவனித்தரு
3. சந்தலூசியா பவனித்தரு 4. புனித லோறன்சியார் வாசகப்பா
5. புனித சவேரியார் வாசகப்பா 6. பிரியத்தம்பி மகிமை டிறாமா

23. பெயர் :- சதக்குத்தம்பிப் புலவர்
ஊர் :- மன்னாரப் பட்டினம்
காலம் :- 1841 - 1921
நூல்கள்:- குலேப காவலி என்னும் நாடகவடிவம்

25. பெயர் :- விதானைப்புலவர் முகையதீன் கற்புடையார்
ஊர் :- எருக்கலம்பிட்டி
காலம் :- 1830 - 1904
நூல்கள்:- யானைக் காதல் என்னும் பிரபந்தம்

26. பெயர் :- பக்கீர்ப்புலவர்
ஊர் :- எருக்கலம்பிட்டி
காலம் :- 1862 - 1917
நூல்கள்:- சதகம், குளகம், திருக்கு, மடக்கு சிலேடை, சமிக்கை, சித்திர வித்தாரக்கவி புனைதலில் வல்லவர்.

16ம் நூற்றாண்டில் வாழ்ந்து பலரைப் பாவலராக உருவாக்கிப் புகழ் பெற்ற பண்டிதர் லோறஞ்சுப் பிள்ளை, 17ம் நூற்றாண்டில் பகைவரும் போற்றும் பாவலராகத் திகழ்ந்த காலிங்க முதலியார் என்றழைக்கப்படும் தொம்பிலிப்பு நாவலர், 18ம் நூற்றாண்டில் வாழ்ந்து தம்மக்களைத் தடந் தவறாது நடாத்தி மன்னாரில் பிரிட்டன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அரசையே பிரமிக்கச் செய்த பெரியகுமாரசிங்க முதலியார், 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த இலக்கணக் கடலாகிய பெரிய நொத்தாரிசு என்று அழைக்கப்படும் நெயினா முகம்மதுப் புலவர், 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த இன்னும் சில மேதாவிகளின் சரிதங்களையும் திரட்டி எதிர்காலத்தார்க்கு அழியாத பொக்கிஷமாக அளிப்பது மாண்புமிகு பணியாகும்.

ஆனால் இத்தகைய பொக்கிஷத்திற்கு இந்த 21ம் நூற்றாண்டில் நாங்கள் உயிரூட்டிய நாடகங்கள் எத்தனை? புத்துயிரூட்டிய வாசகப்பாக்கள் எத்தனை? பழமை போற்றும் பண்பு கணணியுகத்தோடு ஒழிந்து விட்டதா? சிந்தித்து செயல்படுவோம். அக்கலைகளுக்கு புத்துயிர் கொடுத்து நவீன மயமாக்குவோம்.

## தமிழ் வளர்த்த மேலைத்தேய அறிஞர்கள்




ஜி.யு. போப்
1820 - 1907



சாமுவெல் எப். கிறீன்
1822 - 1884



சீகன்பால்கு
1683 - 1719



கால்டுவெல்
1814 - 1891



வீரமாமுனிவர்
1680 - 1747



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் பிரதேச வயற்களத்தில் வழக்கொழிந்து வரும் சொற்கள்

**ஏ. எஸ். உபைத்துல்லா**
வெள்ளை மணல் தி/ அல்-அஸ்ஹர் ம.வி. சீனக்குடா

பூர்வீக மக்கள் மாமிச பட்சிணியாக இருந்திருக்கிறார்கள். நாளடைவில் தாவர உணவு வகையையும் சேர்த்துக் கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். வேளாளர் என்ற சொல் வேளாண்மை என்ற சொல்லிலிருந்து வந்திருக்க வேண்டும். உலக மக்களில் பெரும் பான்மையானோருக்கு உணவாக இருப்பது நெல். கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை வளப்படுத்துகின்ற நெல் சாதாரண புல்லின் குடும்பத்தைச் சேர்ந்தது தான்.

நெல், வயல், தோப்புகள் அனைத்துக்கும் இந்த நிலவுலகந்தான் மூலகாரணமாக இருக்கின்றது. நெற்பயிர் தலை நிமிர்ந்து நிற்கின்றது. அது பூத்துக் குலுங்குகிறது. உள்ளுக்குள் மணி நன்றாக விளைந்து விட்டால், பாரம் தாங்க மாட்டாது தலை கவிழ்கிறது. கற்க வேண்டிய நூல்களை எல்லாம் ஐயம் திரிபறக் கற்ற பண்பாளன் ஒருவன் எவ்வாறு பணிவாக நடந்து கொள்வானோ அவ்வாறு பணிவாகத் தோன்றுகின்றதாம் நெற்பயிர்.

நெற்பயிர் அறுத்துக் கொண்டுவருவதை 'அறுவடை' என்பர். நெற்கட்டுக்களைக் கொண்டு வந்து போடும் இடத்துக்கு 'களம்' என்று பெயர். நெல்கட்டுகளின் குவியலுக்கு 'போர்' என்று பெயர்.

மக்கள் வயலைக் குலமகளாகப் பாவிக்கின்றனர். எனவேதான், பயிருக்கு பால் கட்டுதல், அன்னம் பிடித்தல், குலைதள்ளுதல், மணி விளைதல் என்றெல்லாம் பெயர் சூட்டி மகிழ்கின்றனர்.

எனவேதான், உழவுத் தொழிலும், உழவரும் சமூகத்தில் பெரிதும் மதிக்கப்பட்டு வருகின்றனர். இத்தொழில் குறித்து பல்வேறு மகத்துவங்கள் கூறப்பட்டுள்ளன.

இத்தகைய பெருமை வாய்ந்த நெற் செய்கையின் போது வயற்களத்தில் பேசப்படும் சொற்கள் தனித்துவம் வாய்ந்தவை. இச்சொற்களின் மூலம் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் பலவற்றை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

♣ ***வட்டவிதானை :–*** குறிப்பிட்ட ஏக்கர்வயல் நிலங்கள் ஒரு வட்ட விதானையின் கீழ் விடப்படும். வட்டையில் வரி அறவிடுதல், நீர்பாச்சல், வேளையின் போது நீரினைப் பங்கீடு செய்தல், வேலி அடைத்தல் போன்றவை இவரது கடமைகளாகும். விவசாயிகள் பலர் கூடி வட்டவிதானையைத் தெரிவு செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♣ *வட்டை :-* வயற்புறம் முழுவதும் சேர்த்து வட்டை எனப்படும் வயலைக் காவல் செய்வோர் வயற்புறத்தில் சுற்றிவருதல் 'வட்டைவளைதல்' எனப்படும். மூதூர் பிரதேசத்தில் பூமாலை வட்டை, ஒட்டுப்புல் வட்டை, முன்னம் போடி வட்டை, சந்தனவட்டை என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.

♣ *வரவை:-* வயற்பரப்பில் 20அடி சதுரத்தில் சிறு சிறு பகுதியாக்கப்பட்டு நெற்பயிர் செய்யப்படும் இடம் வரவை எனப்டும். ஒவ்வொரு வரவையையும் சுற்றி வரம்பு கட்டப்பட்டிருக்கும். இந்த வரம்புகள் மூலம் நீரைத்தேக்கி வைத்து வேளாண்மை செய்வது வழக்கம்.

♣ *சுனத்தை:-* வயற்பரப்பின் வரவைக்குள் காணப்படும் மேடான பகுதியாகும். வயல் செய்கை பண்ணப்படுவதற்கு முன்னர் சுனத்தையை இனங்கண்டு விவசாயிகள் இதனை அகற்றி, நிலத்தைச் சமன் செய்வார்கள்.

♣ *கன்னட்டி-* வரவைகளின் மிகவும் சிறியது கன்னட்டி எனப்படும். இது பெரும்பாலும் வயலின் ஓரங்களிலும், மூலைகளிலும் காணப்படும்.

♣ *அருத்தறித்தல்:-* நெற்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் வயலில் அருத்தறித்தல் வேலையில் முதலில் கவனஞ் செலுத்துவார்கள். வயலின் வரம்பில் காணப்படும் சிறு பற்றைகள், செடிகள் என்பவற்றை வெட்டி வரம்பைச் சீர்படுத்துதலை இது குறிக்கும்.

♣ *வக்கடை :-* வயலில் நீர் பாய்ச்சும் போது ஒரு வரவைக்குள் இருந்து இன்னொரு வரவைக்கு நீர் செல்வதற்கு வரம்பின் நடுப்பகுதியில் அல்லது மூலையின் ஒரு பகுதியில் ஏற்படுத்தப்படும் துவாரம் வக்கடை எனப்படும்.

♣ *அளை :-* ஒரு வரவைக்கு நீர் பாய்ந்து செல்வதற்காக அமைக்கப்படும் சிறிய வாய்க்கால்கள் அளை எனப்படும். இவ்வாய்க்கால்கள் வயல் விதைப்பின் போது வெட்டப்படும்.

♣ *ஒமை:-* வயலில் ஒருவரவையிலுள் நீர் இன்னொரு வரவைக்கு பாய்வதற்கு அமைக்கப்படும் வக்கடைகட்டியபின் வயலில் காணப்படும் நண்டுகள் வரம்புக்கு கீழால் துளையிடுவது வழக்கம் இத்துணையின் மூலம் ஒரு வரவையிலுள்ள நீர் இன்னொரு வரவைக்கு வடிந்து சென்று விடும். இச்சிறு துவாரத்தினை ஒமை என்பர்.

♣ *ஆறுதலை:-* ஆறும் வாய்க்காலும் பொருந்துமிடம் ஆறுதலை எனப்படும்.

♣ *பெருமிதி:-* நெற் செய்கைக்கு உட்படுத்தும் வயலை முதற்தடவையாக உழுதலை இதுகுறிக்கும்.

♣ *இரட்டிப்பு:-* ஒரு முறை வயலை உழுதுவிட்டு இரண்டாம் முறை உழுதல் இரட்டிப்பு எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♣ *விதை நெல்:–* ஒரு போக நெற் செய்கையின் போது அடுத்த முறை வதைப்பதற்கென சேமித்து வைக்கும் நெல் விதை நெல் என்று அழைப்பர்.

♣ *கங்களவு நீர்:–* வயல் விதைத்து பயிர் முளைத்த பின்னர் முதன் முதலில் பாய்ச்சப்படும் நீர் கங்களவு நீர் என்று கூறப்படும் இளம் பயிர் மறையும் அளவுக்கு பாய்ச்சப்படும். நீர்.

♣ *அருக்குழி:–* வயலில் நீர் தேங்கு நிற்கும் சிறிய குழியை இது குறிக்கும்.

♣ *பாய்ச்சல்:–* வயலுக்கு நீர் பாயும் மடை

♣ *வடிச்சல்:–* வயலில் உள்ள நீரை வெளியேற்றும் வடிகால்.

♣ *குடலைப்பருவம்:–* நெற்பயிர் வளர்ந்து நெற்கதிர் வெளியே வருவதற்கு முந்திய கரு நிலைப்பருவம்.

♣ *அன்னம் வார்த்தல்:–* குடலைப் பருவத்திலுள்ள நெற்கதிரில் வெண்ணிறப் பூக்கள் காணப்படும். இது சூரிய ஒளிபட்டு மதிய வேளையின் போது இப்பூக்கள் மலரும் இதனைப் பால் வார்த்தல் என்று கூறப்படும்.

♣ *தாக்கத்தி :–* அருவி வெட்டும் கூன் வாள்.

♣ *உப்பட்டி:–* நெல் அறுவடையின் போது பிடிக்கதிர்கள் ஆங்காங்கே வயலில் காணப்படும். இவ்வாறு சிறு சிறு குவியலாகக் காணப்படும் நெற்கதிர்களை இது குறிக்கும்.

♣ *மாவக்கை:–* பல உப்பட்டிகள் சேர்ந்தது மாவக்கை எனப்படும்.

♣ *கட்டு :–* பல மாவக்கைகள் சேர்ந்து கட்டப்படுவது கட்டு எனப்படும்.

♣ *சூடு போடுதல்:–* வயலிலுள்ள களத்தில் நெற்கதிர் அடங்கிய கட்டை மலைபோல் குவித்து வைத்து பின்னர் கதிர்களில் இருந்து நெல் மணிகளைத் தனித்தனியாக பிரித்தெடுப்பர். சூடு மிதிக்கும் போது அரக்குப் பிரித்தல், கிளறுதல் போன்ற பணிகள் இடம் பெறும் இதற்கு வேலைக்காரன் கம்பு பயன்படுத்தப்படும். இது வளைவுடன் கூடிய கம்பினால் ஆக்கப்பட்டிருக்கும்.

♣ *தொடுவை:–* வயற்புறத்தில் நிலத்தை உழுது பண்படுத்துவதற்கு எருதையும், கலப்பையையும் விவசாயிகள் பயன் படுத்தினர். வயலை உழுவதற்கு அல்லது சூடுமிதிப்பதற்கு எருதுகளை விவசாயிகள் அதிகம் பயன்படுத்தினர். அவ்வாறு எருதுகளை இரண்டு இரண்டாக அல்லது நான்கு நான்காகப் பயன்படுத்தும் சோடி மாடுகளை தொடுவை என்று அழைப்பர்.

♣ *பொலி:–* நெல்லைக் குவித்து வைத்து பதர் நீக்கி தெரிவு செய்யப்படுவது பொலி எனப்படும். இதில் இரண்டாம் தெரிவு கந்து முறி எனவும், அரைவாசி உள்ளீடு கொண்ட நெல் அரைவயிறன் எனவும் மிகுதிக் கழிவு பதக்கடை என்றும் அழைக்கப்படும்.

♣ *மடி :–* நெல் ஈரம் படிவதனால் இது ஏற்படுகின்றது. இதன் அரிசி பழுப்பு நிறமாக மாறும். ஒரு விதமான மணமும் வீசும். எனினும் உணவாகப் பயன்படுத்தலாம். பெரும்பாலும் பெரும் போகத்தின் போது தான் மடி நெல், மடி அரிசி விற்பனைக்கு வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♣ *அவுரி:-* நெற்கதிரிலிருந்து பிரித்தெடுத்த நெல்லைத் தரம்பரித்தெடுத்த நெல்லைத் தரம் பிரிப்பதற்காக காற்று வீசும் திசையில் ஏறி நின்று தூத்தலுக்குப் பயன்படும் முக்காலி அவுரி எனப்படும். இது தடியினாலும், வைக்கோலினாலும் ஆக்கப்பட்டிருக்கும்.

♣ *பெருவாயன்:-* சூட்டுக்களத்தில் பெறப்பட்ட நெல்லைக் கட்டுவதற்குப் பயன்படும் சாக்கை இது குறிக்கும்.

♣ *மரைக்கால் :-* நெல்லினை அளப்பதற்கு பிரம்பினால் பின்னப்பட்டது. கடகம், குட்டான், நாழி என்பனவாகும். மரைக்கால் என்பது ஆறு கொத்து நெல் கொண்ட அளவைக் குறிக்கும்.

♣ *கோலத்து:-* சூடு மதிக்கும் களத்தினைக் கூட்டித் துப்பரவு செய்வதற்குப் பயன்படுவது கோலத்து. இது பன்னை, விதாலி மரங்களின் மிலாறுகளால் செய்யப்படும் கூட்டுமாறு.

♣ *புதிர் எடுத்தல்:-* நல்ல நாளன்று முதன் முதலில் வயலில் இருந்து ஒருபிடி நெற்கதிரை முறையாக வீட்டுக்குக் கொண்டு செல்லுதல் புதிர் எடுத்தல் எனப்படும்.

♣ *மெலிஞ்சான்:-* வயலிலிருந்து பெறப்படும் வைக்கோல் மெலிஞ்சான் எனப்படும்.

♣ *விசக்கடை :-* வயலை உழுதல், சூடுமிதித்தல் போன்ற பணிகளுக்காக எருது மாடுகளை விவசாயிகள் போடியாரிடமிருந்து பெற்றுப் பயன்படுத்துவர். அவ்வாறு பெறப்பட்ட எருதுகளுக்கு வழங்கப்படும் கூலி விசக்கடை எனப்படும்.

♣ *புரை:-* வயலில் அமைக்கப்படும் ஓரளவு நிரந்தரமான தங்குமிடம்.

நவீன விஞ்ஞானத் தொழில் நுட்பமானது இன்று எல்லாத் தொழில்களிலும் தனது ஆக்கிரமிப்பைச் செய்துள்ளது. அது போல உழவுத் தொழிலிலும் நவீன தொழில் நுட்பத்தை உள்வாங்கிக் கொண்டுள்ளது.


மண்ணைக்கிண்டி மண்ணை நுகர்ந்து, மண்ணுக்குள் இரகசியங்களைத் தேடும் நமது ''விவசாயிகள் சேற்றில் கால் வைக்காவிட்டால் நாம் சோற்றில் கைவைக்க முடியாது'' என்ற கூற்றிற்கு இணங்க நவீன விஞ்ஞான வளர்ச்சி காரணமாக நமது விவசாயிகள் பாரம்பரிய வயற்பரப்புகளில் பயன்படுத்தி வந்த செந்தமிழ்ச் சொற்கள் வழக் கொழிந்து வருகின்றன. இதனால் இளந்தலை முறையினர் இச் சொற்களை அறிந்து கொள்ள முடியாது போகலாம்.

ஆகவே, மூதூதர் பிரதேச வயற்களத்தில் பேசப்படுகின்ற ஏராளமான சொற்கள் வழக்கிலுள்ளன. அவற்றில் சில சொற்களை மட்டுமே நான் எடுத்தாண்டுள்ளேன். எதிர்காலத்தில் நமது பிரதேசத்தின் வயற்பரப்பில் பாடப்படும் பாடல்கள், கதைகள், சம்பிரதாயங்கள், பேசப்படும் சொற்கள் என்பன தேடித் தொடுக்கப்பட வேண்டும். இக்கட்டுரை ஆரம்ப முயற்சியாக அமையட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளச் சித்திரம்



நம்பிக்கைகளும் வாழ்வின் மர்மங்களும் புரிபடாத அல்லது இயற்கையின் மர்மங்கள் புரிபடாத பண்டைய மனித வாழ்வியல் முறையிலிருந்து முற்றாக மாறிய நவீன சமூக வாழ்வு உண்மையில் மனிதனை பெரும் பிரயத்தனத்துள் ஆழ்த்தியுள்ளது என்றே குறிப்பிட வேண்டும். அளவிட இயலாத பெருத்த ஒன்று என்ற நிலையில் இருந்து அனைத்தும் கிட்டிய கிராமமாக பூமி மாறியது. ஆனால் மனிதன் தனது தனித்துவத்தையும். பாரம்பரியம், பலம் என்பவற்றையும் தக்கவைக்க தொடர்ச்சியாக போராடுகின்றவனாகின்றான். இது அவனது வாழ்ந்து கொண்டிருக்கும் அக்கணத்தை முக்கியத்துவம் மிக்க தாக்குகின்றது. இம் முக்கியத்துவம், அதற்கான அவனது இருப்பு இருப்புக்கான பிரயத்தனம் - இவையே அவனது கலை இலக்கிய வெளிப்பாடுகளாகின்றன. தனது திருப்தியை நோக்கியதாக அவனது படைப்புக்கள் மாறின. அல்லது அமைந்தன. இவ்வாறே இன்றைய ஓவியனதும் அவனது படைப்புக்களதும் அவனது பிரயத்தனத்தை வெளிகாட்டுவைகளாக உள்ளன. மாற்றங்கள் மட்டுமே நிலையானதாக நிச்சயமானதாக உள்ள இன்றைய யதார்த்தத்தின் மெய்யான ஒரு சொல் நவீனம் எனலாம். இதை இன்னும் ஒரு வகையில் கூறினால் இன்றைய ஓவியன் ஓவியனின் உளப்பாங்கு, கற்பனை, அனுபவம் என்பவற்றுடன் உண்மையினை, வெளிப்படுத்துவதாகவும், அமைதல் வேண்டும்.

**முத்து இராதாகிருஷ்ணன்**

இந்த வகையில் உள் மனச்சித்திரம் என்ற இந்த தலைப்பு எதைக் குறிப்பிடுகின்றது அல்லது எதனை ஆராய முற்படுகின்றது என்பதை இனிநோக்குவோம்.

ஒரு ஓவியம் எப்போதும் சில அடித்தளமான விடயங்களை கொண்டிருத்தல் அவசியமானதாகும். அதாவது ஓவியத்தின் வடிவமைப்பு, அல்லது அமைப்பு முறைக்கான உருவமைப்பு அதனை வெளிக்கொண்டுவரும். இரேகை, நிறம், வெளி இவற்றிலிருந்து பிரிய முடியாத உணர்வின் உண்மைத் தன்மை அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்வு நிலை. இவை எல்லாவற்றினதும் ஒருங்கிணைந்த இயங்கு நிலை ஆகியன அவையாகும்.

ஆனால் பலவகைப்பட்ட பாணிகள், இசங்கள் இன்று ஓவியத்தில் பயன்படுத்தப்பட்டாலும் இந்த இயங்கு நிலை எல்லா ஓவியங்களிலும் வந்து விடுவதில்லை. உணர்வுகளுடனான மனித நடத்தைகளை மனிதர்கள் கண்டுணரும் போது தான் அல்லது அவ் ஓவியன் கண்டு அதனைப் பகிரமுற்படும் போது தான் இத்தகைய ஓவியங்கள் உருவாகும்.

உண்மையில் ஒவ்வொரு ஓவியமும் பார்வையாளருடன் பேசுதல் வேண்டும். பார்வையாளர்களும் ஓவியர்களுடன் அந்தரங்கமான உரையாடல்களை புதிது புதிதாக நிகழ்த்திக் கொண்டிருத்தல் வேண்டும். அந்த ஓவியங்கள் தமக்குள் தாமே பேசுவதும் உரையாடுவதும் எமக்கு புரிதல் வேண்டும். இது எப்போது ஏற்படும். இந்த உணர்வு நிலை ஆலயத்தின் மூலஸ்தானத்திற்கு முன் நிற்பது போன்றஉணர்வு நிலை. பக்தி நிலை, ஆண், பெண், ஆடை நிர்வாணம் எதுவும் தெரியாத எதுவும் புலப்படாத புரியாத ஓர் நிலை இது வேண்டும். இது ஏற்பட வேண்டும்.

உண்மையில் உள்மனச்சித்திரம் என்பது அரங்கு என்ற வலிமையான ஒரு நிகழ்கலையின் தாக்கத்தினூடாக உணர்வுகளை உறவாட வைத்து அதன் முழுமையினை ஓவியமாக்கி அடங்குதல் அல்லது அதன் அதிர்வுகளை அனுபவித்தல் என்பதாகக் குறிப்பிடலாம்.

இங்கு வாழ்வின் பிரயத்தனங்கள், போர், காதல் துயரம் எல்லாம் ஒன்றன்மேல் ஒன்றாகி இறுகி அசையாமல் கிடக்கும் மனதின் பாரத்தினை, முட்டினை வெளிக்கொண்டு வருதல், முதற்படியாக அமையும் இவ் அனுபவப்பகிர்வு அரங்கில் முக்கியமான ஒன்றாகும். அரங்கு அரங்கப்பட்டறை இதனைச்சாதிக்கும், நம்பிக்கையும் நட்பும் உண்மையும் நிறைந்த இடம் கிடைக்கும் போது இவ்வுணர்வுகள் முட்டுடைந்து வெளிப்பெருகும்.

பலரது மனங்களின் உணர்வு வெளிப்பாடுகள் பல்வேறுப்பட்ட கதைகளை, பிரச்சனைகளை தூரங்களைக் காட்டும். எல்லோரது பிரச்சனைகளும் பொதுமையான பண்பை கண்டு ஒரு பெரும் உணர்வுப் பாறையாக, அல்லது துயரப் பாறையாக வடிவம் பெறும் போது, அதனை அரங்க முறையிலான படிமங்களாக்கலாம்.

உண்மையில் அரங்கு என்பது ஒரு உயிருள்ள காட்சிகளின் இயக்கம் என்பர். இங்கும் இவ்வரங்கில் பங்குபற்றுபவர்களின். உணர்வின் உண்மைத் தன்மையும் அதன் அதிர்வும் உயிருள்ள காட்சிப் படிமங்களுக்கூடாக, உயிர்த்தன்மையான ஓவியக் காட்சியாகின்றது. உயிருள்ள காட்சி என்பது இங்கே இந்த நிமிடத்திலே இப்போது என்ற அர்த்தத்தில் வெளிப்படும்.

வெளிப்படும் உயிருள்ள காட்சிப்படிமம் இயங்கத் தொடங்க அல்லது அசைவைப் பெற அது ஆற்றுகையாகின்றது. உண்மையில் இந்த ஆற்றுகையினை அசையும் ஓவியம் எனக்குறிப்பிடலாம். இவ்விடத்தில் இவ்வரங்கில் பங்குபற்றும் ஓவியன். இவ்வசைவினை ஆற்றுகையினை முன்னர் தனது மனத்திலிருத்திய உணர்வின் தன்மையுடன் இணைத்து முழுமையாக்குகின்றான். அசையும் இயல் படிமங்களை சுயாதீன கோடுகளின் கூட்டிணைவாக இயங்க வைக்கின்றான். அந்த உயிர்த்தன்மையான அதன் அசைவை மனதில் நிறைத்து அதன் முழு வலிமையையும் அது தரும் வலியையும் அல்லது மகிழ்வையும் முழுமையாக ஓவியமாக வெளிப்படுத்துகின்றான். இதுவே உள்மனச்சித்திரம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் கண்ட கலைகளுள் மிகச் சிறந்த கலை சிற்பக்கலை. சிறிய சிற்பமாயினும் காண்பவர்களுக்கு மனதில் அமைதி, மகிழ்ச்சி, வியப்பு ஆகியவற்றை ஏற்படுத்தினால் அது சிறந்த படைப்பாகக் கருதப்படும். சிற்பக்கலை சமயத்துடன் பெரிதும் தொடர்பு கொண்டே வளர்ந்தது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இக்கலை வளர்ந்து வருகின்றது. பழங்காலமனிதன் எழும்புகளிலும், தந்தங்களிலும் சிறிய வேலைப்பாடுகளைச் செய்தான். முப்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இக்கலை தோன்றியதாக தெரிய வருகிறது.



சிற்பங்களை விட மனிதன் நாகரிகத்தையும், வளர்ச்சியையும் எடுத்தியம்பும் சான்றுகள் இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை. வரலாற்றுச் சான்றாக இவை விளங்குகின்றன. சிற்பங்கள் ஒரு குறிப்பிட்ட மக்களின் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தின் கூறுகளைப் பற்றிக் கூறும் இயல்புடையன. நாகரிகத்தின் கூறுகளை உணர்த்துவன சிற்பங்களேயாகும். எடுத்துக்காட்டாகக் கிரேக்கச் சிற்பங்கள் மனித நாகரிகத்தை உணர்த்துவனவாக அமைந்துள்ளன.

# சிற்பங்கள் உணர்த்தும் கலைத்திறன்

கிரேக்கக் கடவுள் பெரும்பாலும் மனிதனின் பொதுவான வடிவங்களையே பெற்றுத் திகழ்ந்தன. இந்தியா, சீனா மற்றும் பல நாடுகளில் சமய அடிப்படையில் சிற்பவளர்ச்சி ஏற்பட்டது. இன்றையச் சிற்பிகள் சிற்பங்களைத் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் அமைகின்றனர். மக்களின் சமய, சமூக நம்பிக்கைகளை வெளிப்படுத்துவனவே சிற்பங்களாகும். எகிப்து, ஆசியா, அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகளின் தொன்மை வரலாறு அம்மக்கள் வளர்ந்த சிற்பக்கலை மூலமாகவே பெரிதும் தெரியவருகின்றது. சிற்பங்கள் நினைவுச் சின்னங்களாகவும், தொன்மைச் சின்னங்களாகவும் விளங்குகின்றன. கல், உலோகம் போன்றவை நீண்ட நாட்கள் அழியாமல் இருக்கக் கூடியன. எனவே நினைவுச் சின்னங்கள் இவ்வகைப் பொருட்களாலேயே செய்யப்படும் இவ்வகைச் சிற்பங்கள் நினைவுச் சின்னங்கள் எனப்படும்.

**சைவப்புலவர். அ. பரசுராமன்**
ஓய்வு பெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர், ஈச்சிலம்பற்று

சிற்பிகள் தங்கள் மனதில் படும் கருத்துக்களின் அடிப்படையிலும் சிற்பங்களை உருவாக்குகின்றனர். அழகை வெளிப்படுத்தும் இவ்வகைச் சிற்பங்களை ஒருவர் காணும் பொழுது, அவருக்கு மனதில் சிற்பி எதனை வெளிப்படுத்த இச்சிற்பத்தை படைத்தான் என்ற கேள்வி எழும். சிற்பங்கள் இக்காலத்தில் மிகுதியாக வடிக்கப்படுகின்றன. இக்காலச் சிற்பங்களில் உண்மை நிலையையே பெரிதும் காணமுடிகிறது. இக்காலத்தில் சிற்பங்கள் செய்து இரும்பு, அலுமினியம், கண்ணாடி போன்ற பிறபொருள்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படுகின்றன.

சிற்பங்கள் பொதுவாகக் கட்டிடக் கலையுடன் தொடர்புடையனவாகும். ஏனெனில் இவ்விரு கலைகளுக்கும் ஒரே மூலப் பொருட்கள் தான் பயன்படுகின்றன. தொன்மை நாகரிகங்களின் கட்டிடச் சிதைவுகளில் சிற்பங்கள் பல காணப்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சிற்பங்கள் எழும்புகள், விலங்குக் கொம்புகள், பாறைகள் ஆகியவற்றில் செதுக்கப்பட்டன. இவை வாழும் உயிர்களின் வடிவங்களாகவே வடிக்கப்பட்டன.



வரலாற்றுக்கு முற்பட்ட பழங்காலச் சிற்பங்கள், விலங்குகள், மனிதன், மனிதன் விலங்குகளைக் கொல்வது போன்ற அமைப்புடையனவாக வடிக்கப்பட்டன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை எருது தன்னை நக்கிக் கொள்ளும் சிற்பம் வில்லன்டோர்பு வீனசு சிற்பம் போன்றவையாகும். வில்லன்டோர்பு வீனசு சிற்பம் ஒரு பெண் தெய்வமாகும். அவள் மனிதனுக்கு வாழ்வும் உணர்வும் கொடுக்கும் தெய்வமாகக் கருதப்பட்டாள். வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் மட்கலன்களைச் செய்து அதனைச் சூளையில் இட்டு, சுட்ட பிறகு பயன் படுத்தத் தெரிந்து கொண்ட பின், களிமண் உருவங்களையும் அந்த வகையிலேயே செய்தான். இவைபோன்ற சுடுமண் உருவங்கள் பல்வேறு நாடுகளில் கிடைத்துள்ளன.

கண்ணால் கண்ட உருவங்களையோ, கற்பனை உருவங்களையோ வடிவமைத்துச் செய்வது சிற்பம் எனப்படும். மண்கல், உலோகம், செங்கல், மரம், சுதை, தந்தம், வண்ணம், கண்ட சர்க்கரை, மெழுகு என்னும் பத்துப் பொருட்களும் சிற்பம் செய்ய ஏற்றவை என பிங்கல நிகண்டு கூறும். இது தவிர வெண்கலம் பொன், வெள்ளி, செம்பு முதலிய பிற உலோகங்களும் சிற்பவேலைக்குப் பயன் படுகின்றன. கல்லில் கருங்கல், மாக்கல், பளிங்குக்கல், சலவைக்கல், போன்றவற்றாலும் சிற்பங்கள் செய்யப்படுகின்றன. நுட்பமான வேலைப்பாடுகளுக்குத் தந்தம் ஏற்றதென்றாலும் வழிபடு படிமங்களை அதில் செய்வதில்லை. தந்தப்படிமங்கள் காட்சிப் பொருட்களாகவே கருதப்படுகின்றன. சிற்பங்கள் வடிப்பது குறித்துச் சிற்பநூல்கள் கூறுகின்றன.

சிற்பம் ஒரு வடிவக்கலை. வடிவத்தை அமைக்கும் நிலையை ஒட்டிச் சிற்பத்தைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். வடிவம் முழுவதையும், அதாவது முன்புறம், பின்புறம் இரண்டையும் காட்டும் சிற்பங்களே முழுவடிவச் சிற்பங்கள் என்றும், வடிவத்தின் ஒரு புறம் மட்டும் காட்டும் சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் என்றும் வகைப்படுத்தலாம். கோயில்களில் காணப்படும் முதன்மைத் தெய்வத் திரு மேனிகளும், உறுசவத் திருமேனிகளும் முழுவடிவச் சிற்பங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவகோட்டங்களிலும், கோயில் சுவர்களிலும் அமைக்கப்படும் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள் மாவல்லபுரத்துப் பகீதரன் தவம், திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மேல் குடைவரையிலுள்ள கங்காதரர் சிற்பம் போன்றவை புடைப்புச் சிற்பங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

புடைப்புச் சிற்பங்களை வடிவங்களின் பரிமாணம் கருதி உயர்புடைச் சிற்பங்கள், தாழ்புடைச் சிற்பங்கள் எனப் பிரிக்கலாம். தேவகோட்டைச் சிற்பங்களை உயர்புடைச் சிற்பங்களாகவும் திருவையாறு தென் கைலாசம் கோயில் தூண்களிலுள்ள மெல்லிய சிற்பங்களைத் தாழ்புடைச்சிற்பங்களாகவும் கருதலாம்.


திருவரங்கம்
கொக்கு வாய் பிளந்த கண்ணன்.
தந்தச் சிற்பம். நாயக்கர் காலம்.
கி.பி.17-ஆம் நூற்றுண்டு.

புடைப்புச் சிற்பத்தின் வடிவம் செதுக்கப்படும் பொருட்களின் மேற்பரப்பினும் உயரமாகப் பிதுங்கிநிற்கும். மேற்பரப்பைக் குடைந்து வடிவம், அதனினும் தாழ்ந்து இருக்கும் படியாக அமைக்கப்படும் சிற்பம் குடைவுச்சிற்பம் எனப்படும். இது புடைப்புச் சிற்பத்திற்கு நேர் மாறானது. புள்ளமங்கை, திருவாலந்துறை மகாதேவர் கோயில் சிற்புருவச் சிற்பத் தொகுதிகள் குடைவுச் சிற்பங்களுக்குச் சர்யான எடுத்துக் காட்டாகும்.

சிற்பங்கள் அளவு முறையால் மூன்று வகைப் படுத்துவர் ஏழுதாள அளவு உயரமுள்ள உருவம் வா மனம். எட்டுத்தாள அளவு உயரமுள்ள சிற்பம் மானுடனம். ஒன்பது தாள உயரமுள்ள வடிவம் தெய்வீகம்.

சிற்பிகள் இறைவடிவங்கள், மனித வடிவங்கள் விலங்குகள், பறவை, செடி, கொடி போன்ற இயற்கைவாழ் இனங்கள், கற்பனைக் காட்சிகள் என்று எல்லாவற்றையும் சிற்பமாகப் படைத்துள்ளனர். இந்தியாவில் சிற்ப அமைப்பில் இறைவடிவங்கட்கே முதன்மை அளிக்கப்பட்டுள்ளது.

இறைச் சிற்ப வகைகளை சிற்பிகள் உயர்ந்த அறிஞர்களின் கருத்திற்கேற்ப, பரம் பொருளை முப்பெரும் நிலையில் உருவம், அருவம், அருவுருவம் என்று மூன்று வகைகளில் அடக்கினார்கள். தலை, உடம்பு, கை, கால்கள் பொருந்திக் கண்களுக்குப் புலனாகும் வடிவம் உருவம் எனப்படும். அவ்வாறே கண்களுக்குப் புலப்படாதது அருவம் ஆகும். இரண்டும் கலந்தது அருவுருவம். சிற்பநூல்கள் இலிங்கவடிவத்தை அருவமேனி என்றும், எல்லா உறுப்புக்களும் நிறைந்த சந்திர சேகரப் வடிவம் போன்ற தெய்வத்திருமேனிகளை உருவத்திரு மேனிகள் என்றும் முகலிங்கத்தை அருவுருவம் என்றும் வரையறுக்கின்றன.

சிற்பங்களை அவற்றை இருத்தும் நிலையில் அசம், அசலம், சலாசலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மூன்று வகையாகப் பிரிப்பர். சொந்த இடத்திலிருந்தோ, நிறுவப்பட்ட இடத்திலிருந்தோ அசைக்க இயலாவண்ணம் இருக்கும் அப்படிமங்கள் அசலப்படிமங்கள் எனப்படும். ஓரிடம் விட்டு வேறிடம் நகர்த்தக் கூடியனவாய் அமைக்கப்பட்டால் அவை சலம் எனப்படும். இடம் விட்டு இடம் மாறக்கூடிய படிமங்களை மாற்றக்கூடாது என்னும் நோக்கில், நிறுவினால் அவை சலாசலம் எனப்படும்.

தோற்ற அமைப்பைக் கொண்டு சிற்பநூல்கள் இறை வடிவங்களை அமைதித் தோற்றம், அச்சம் அகற்றி அருள் தரும் தோற்றம், அச்சுறுத்தும் தோற்றம் என மூன்றாகப் பிரிக்கின்றன. இயற்கையான அமைதி நிலையும், அன்பர்க்கு வேண்டுவன வழங்கும் திருக் கைகளையும் கொண்டியங்கும் திருமேனிகள் அமைதி தோற்ற வகையின. ஆலமர் கடவுளின் வடிவம் இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகும். நின்ற கோலத்தில் அல்லது ஊர்தியில் ஏறியிருக்கும் நிலையில் பலவகை அணிகலன்களை அணிந்து அம்பு, வாள் முதலிய படைக்கலங்களுடன் அச்சம் அகற்றி, அன்பர்களைக் காத்தருளும் கைக்குறிப்பில் காணப்படும் படிமங்கள் அச்சம் அகற்றி அருள் தரும் தொற்றத்தனவாம். ஆறுமுகப் பெருமானின் திருக்கோலம் இதற்குச் சான்றாகும் அம்பு, வாள் முதலிய படைகளால் கொடியவர்களைக் கொல்லுவதாகவும், எப்போதும் அச்சுறுத்தும் தோற்றத்தை உடையதாகவும், போர்த் தொழிலில் மகிழ்வு கொண்டது போலவும் விளங்கும் வடிவங்கள் அச்சுறுத்தும் தோற்றத்தன. மகிடாசுரமர்த்தினி, கலாரி மூர்த்தி, திருவுருவங்கள் இவ்வகையின.

இவை தவிர உருவச் சிற்பங்களும் உள்ளன. குறிப்பிட்ட ஒருவரின் உருவத்தை உள்ளது உள்ளவாறு இயற்கையாக காட்டும் சிற்பங்களை உருவச் சிற்பங்கள் எனலாம் அன்னை செம்பியன் மாதேவியின் கணவரான கண்டராதித்த சோழனின் உருவச் சிற்பங்கள் கோனேரிராசபுரம், உமா மகேஸ்வரர் கோயில் ஆனாங்கூர் அகத்தீஸ்வரர் கோயில் போன்ற பல கோயில்களில் உள்ளன. கோனேரிராசபுரம் உமா மகேஸ்வரர் திருக்கோயில் உள்ள கண்டராதித்தர் சோழனின் உருவச் சிற்பம் கல்வெட்டுடன் கூடியது.

**ஏர்வாடி 26**

அந்தரித்தபடியே போயின அவ்வுயிர்கள்
இறுகப் பிணைந்த கால்களுடன்.
வானை நோக்கி நிமிர்ந்திருந்தன
கட்டைகளாய்க் கருகிய கைகளும் கால்களும்
தர்காவின் நாதனை இறைஞ்சுவதாய்.
பக்கத்துணைக்குச் சில கரிக்கட்டைகளும்.
வலிய கரங்கள் பிசைவதாய் மனமுணர
வயிற்றில ஊறிற்று அமிலம்.
யாரின் மீது கேள்விகள் சூழ்வது?
சூழினுமென்ன?
வாழும் போதினிலும் வருத்தியவர் உயிரைச்
சுண்டக் குறுக்கிய கொடியவர் நாம்.
மனம் பிறழ்ந்தோர் யாவரிதில்?
வாழும் காலம் வரையும்
கருக்குமிக் கொடுமையெம் மனதை.

ப. சத்தியமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம்பாடுதல்

## - ஒரு சிறுகுறிப்பு

வ. கோவிந்தபிள்ளை,
ஓய்வு பெற்ற உதவிப் பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம்.

இலங்கையிலுள்ள தமிழ் கற்பிக்கப்படும் பாடசாலைகளில், தேசிய கல்வி நிறுவக, கல்வி வெளியீட்டுத் திணைகக்ளத்தினால் 2001ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'தமிழ்' என்னும்' பதினோராம் ஆண்டுப் பாடநூலில் 'அறம்பாடுதல்' என்னும் இச்சொல்லுக்கு உரிய பொருளாகப் பக்கம் 108 இல், 'பிறருக்குத் தீங்கு விளைக்கக் கூடியனவான சொற்களையும் சொற்றொடர்களையும் கோர்த்துக் கவிபாடல்'[1], என நூல் வெளியீட்டுக்குழுவினர் விளக்கம் அளித்துள்ளனர்.

வணக்கத்துக்குரிய வினஸ்லோ அவர்களால் 1862இல் தயாரிக்கப்பட்ட Comprehensive, Tamil and English Dictionary,

"Composing Poetry containing imprcations or spells. Verses of this Kind are supposed, some Times to be made without design and thus to injure the matter and others"[2] என விளக்கம் அளித்தள்ளது. இதனையே Tamil Lexicon என்னும் நூலும் அறம்பாடல் - "Verses containing words or lrtters which bring ruin or death to a person, கேடு விளைக்கும் செயற்பயிலும் பாட்டு"[3] - என மேற்கூறிய அகராதியிலிருந்து எடுத்ததாக அதனை மேற்கோள் காட்டியுள்ளது.

தீங்கு, கேடு, ஊறு என்பன பொருட் சொற்களாகும். எனவே, எவருக்காயினும், தீங்கு விளைக்க வேண்டும் என்ற தீய நோக்கில் பாடப்படும் பாடல்கள் எவையும் அறத்தின் பாற்படாவகையால் பொருந்தாக் கூற்றாகும்.

'மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு' என்பது குறள், இதற்குப் பரிமேலழகர் உரை விரிக்கும் பொழுது,

'ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் எண்ணாதொழிக; எண்ணுவானாயின் தனக்குக் கெடு பயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும், என இங்கு 'அறம்' என்பதற்கு 'அறக்கடவுள்'[4] என்று பொருள் கொள்வதும் மனங்கொள்ளற் பாலதேயாம்.

தனிநபர் ஒருவர், பிறர் ஒருவராலோ, ஒரு குழுவினராலோ அதர்ம வழியில் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்படுகின்ற போது, தம்மை அவ் அதர்மத்தினின்றும் காப்பாற்றும் வண்ணமும், உலகினோர்க்கு உண்மைப் பொருளை எடுத்துக் காட்டுவது மட்டுமன்றி ஏனையோரும், வன்செயல்களில் ஈடுபடாது தம்மைப் போல் இறைவழி நின்று அத்தீமையினின்று தப்பவும், தீமை செய்தவன் இறைவனால் தண்டனைக்குள்ளாக்கப்படவும், இவ் அறம்பாடுதலினால் அடையக்கூடிய நன்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகார காலம் முதல் அண்மைக்காலம் - வரை வாழ்ந்தவர்கள் பலர் தாம் பிறருக்கு எதுவித துன்பமும் செய்ய மனதாலும் நினையாதிருக்க, பிறர் ஒருவரோ ஒரு குழுவினரோ அவர்களுக்குத் தீங்கு விளைத்த போது அதனை தனிப்பட்ட முறையில் எதிர்க்கவோ எடுத்தக் காட்டவோ முடியாத போது இறைவன் துணையை இயல்பாக நாடியது கண்கூடு.

கண்ணகி, கம்பர், காளமேகம், சிவப்பிரகாசசுவாமிகள் போன்ற பலர் இறைவனை வேண்டி அறம்பாடியுள்ளனர். இவர்களுள் முன்னைய மூவரும் மன்னர்களால் ஏதோ ஒரு வகையில் துன்புறுத்தலுக் குள்ளாக்கப்பட்டனர்; பின்னையவர் தனிநபரால் துன்புறுத்தப்பட்டவர் என்பர். இதனை அவர்களின் பாடல்களே தெள்ளிதிற் புலப்படுத்தும்.

ஊழ்வினையாலோ, சூழ்வினையாலோ கணவனை இழந்த பெண்கள் தத்தம் கணவன்மாருடன் தாமும் கூட இறந்தும், இன்னும் சிலர் கைம்மை நோன்பினை நோற்றுத் துயருற்றிருந்தும், வேறுஞ் சிலர் சிறந்த புண்ணிய தலங்களில் உள்ள தீர்த்தங்களில் நீராடி வாழ்ந்தும் வருவர். இ∴தே உலக வழக்கமாகும். எனினும் உலக வழக்கிலிருந்த மூன்றிலொன்றையும் கடைப்பிடித்து வாழ முடியாதநிலை கண்ணகிக்கு ஏற்படலாயிற்று. அ∴துயாதெனில், உயர்ந்த நிலையில் இருந்த நிரபராதியாகவிருந்த - தனது கணவனைக் கொலை செய்ததைக் காட்டிலும்,

**''அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்**
**கரையாமல் வாங்கிய கள்வனாம்''**[5]

என்று மன்பதை அலர் தூங்குவதற்குக் காலாகவிருந்தது மன்னனது கொடிய செயலேயாகும். மன்னனது செயலுக்குக் காலாகவிருந்தது. பொற்கொல்லன் செயலே. பொற்கொல்லன் தனிப்பட்ட பாத்திரமன்று; மதுரைநகர மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு (Representative Character) பாத்திரமாவான், அவன்.

எனவே கண்ணகிக்கு இருவேறு கடப்பாடுகள் எழலாயிற்று. ஒன்று தன் கணவன் 'கள்வன் அல்லன்' என்று உலகோர் அறிய நிறுவுவது; மற்றையது தன்கணவன், மன்னனாலும் அவனைச் சூழ்ந்தவர்களாலும் சூழ்ச்சியாற் கொலை செய்யப்பட்டான் என்பதை நிறுவுவது. இவ்விரண்டில் ஒன்றையேனும் பிற நாட்டினளான கண்ணகியால் தனியாளாக்கப்பட்ட நிலையில் நிறைவேற்ற முடியாது. பிறநாட்டினளான கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என்று சொல்லி, அலர் தூற்றுவதை நிறுத்தவும் முடியாது. இதனாலேயே,

**'பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி**
**காய்திச் செல்வனே கள்வனோ என் கணவன்'**[6]

என்று சொல்லொணாத் துயரில் மூழ்கிய கண்ணகி கேட்டு அலறினாள்.
'கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி உண்ணுமிவ் வூரென்ற தொருசொல்' அக்கினிதேவனது இந்த ஒரு சொல்லே தன் கணவன் கள்வன் அல்லன்; அரசன் அல்லவை செய்தான்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால் 'அறம்' கூற்றமாகி தான் எண்ணியதை நிலைநாட்ட அவ்வறக்கடவுள் உறுதுணையாக அமைவான் எனத் தெளிவடைகின்றாள்.

**'அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம் ஆம் என்னும்**
**பல்லவையோர் சொல்லும் பழுதொன்றே - பொல்லா**
**விடுவினையே செய்த வயவேந்தன் தேவி**
**கடுவினையேன் செய்வதூஉங் காண்'**8

என்று வஞ்சினங் கூறுவதற்கு, 'ஒள்ளெரி உண்ணுமிவ்வூர்' என்ற காய் கதிர்ச் செல்வனின் அசரீரி வாக்கு, அவளுக்கு உறுதுணையாகின்றது. இதனாலேயே கண்ணகி அக்கினிதேவனை 'தீத்திறந்தோர் பக்கமே சேர்க' என ஏவுகின்றாள். அப்பொழுது நன்மை எது தீமை எது என்று தெளிந்தறியும் சிந்தையில்லாத பாண்டியன் நெடுஞ்செழியனது கூடல்நகர் முழுவதும் புகை மண்டியது.

'- காய்த்திய
பொற்றொடி ஏவப் புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர்'

என்கின்றார் ஆசிரியர்.

கம்பர் மீது காழ்ப்புணர்வு கொண்ட சோழமன்னன் அவர் செய்யாத ஒரு குற்றத்தைச் செய்தாரென்றும் அதனால் அவரைக் கொல்லும் பொருட்டு தனது பட்டத்து யானையை அவர் மீது ஏவினான் என்றும், அப்போது அந்த யானை மதங் கொண்டு, கண்சிவந்து, வாலினை முறுக்கிக் கொண்டு கம்பரைக் கொல்ல வந்த போது அதன் நிலை கண்ட கம்பர் அஞ்சாது,

**'வெங்கண் சிவந்து வெடிவால் முறுக்கி வெகுண்டெழுந்தென்**
**அங்கம் பிளக்க வருங்களி றேயன் றிரணியனைப்**
**பங்கம் படப்பப் பல்லுகி ராலுரம் பற்றியுண்ட**
**சிங்கம் இருப்பது காண்கெடு வாயென்றன் சிந்தையுள்ளே'**[10]

என்று பாடினாரென்றும், அப்பொழுது அவரைக் கொல்ல வந்த யானை தலத்தில் வீழ்ந்து இறந்தது என்றுங் கூறுவர்.

இன்னோரன்ன நிகழ்வுகள் மாத்திரமன்றிப் பிறிதொரு நிகழ்வும், 'அறம்பாடுதலை' வற்புறுத்துகின்றது. காளமேகப் புலவர் ஒரு சமயம் திருமலைராயன் பட்டினத்திற்குச் சென்றிருந்த போது, அவனது ஆஸ்தான கவிஞரான அதிமதுரகவி, அவருடன் சேர்ந்த தண்டிகைப் புலவர்கள் ஆகியோரது சூழ்ச்சியில் சேர்ந்த மன்னனும் அவரை அவமதிப்பானாயினான். காளமேகம் தனது கவித்துவத்தைக் காட்டிய பொழுதிலும் அதனை ஏற்க மறுத்தான். இவ்வாறு அவமதிப்புக் குள்ளாக்கப்பட்ட காளமேகம் இதனைத் தாங்க முடியாது.

**'கோளர் இருக்குமூர் கோள்கரவு கற்றவூர்**
**காளைகளாய் நின்று கதறுமூர் - நாளையே**
**விண்மாரி யற்று வெளுத்து மிகக் கறுத்து**
**மண்மாரி பெய்கவிந்த வான்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும்,

'**செய்யாத செய்த திருமலைராயன் வரையில்**
**அய்யா அரனே அரைநொடியில் - வெய்யதழல்**
**கண்மாரி யால்மதனைக் கட்டழித்தல் போல்தீயோர்**
**மண்மாரி யாலழிய வாட்டு**"[11]

என்றும் சிவனை நினைந்து பாடலானார்.

கண்ணகி, நற்றிறம் படராக் கொற்கை (மக்களும்) கொற்கையின் வேந்தனும் அழிய வேண்டும் என்று கூறியது போன்று காளமேகமும் மன்னன் மட்டுமன்றி அவனது ஊரும் அழிய வேண்டும் என்றும், அதற்குரிய காரணத்தைத் தமது இரு பாடல்கள் மூலம் திருமலைராயன் பட்டினத்தில் எத்தகைய மக்கள் வாழ்ந்தார்கள் என்பதையும் தெளிவுறக் காட்டுகின்றார். அத்துடன் பாண்டியன் செயல் போன்று திருமலைராயன் செயல், செய்யக்கூடாத செயலே என்றும் அத்தகைய அவனது செயலால், அவனும் அவனது நகர மக்களும் அழிந்தனர் என்பதையும் காட்டுகின்றார்.

காழ்ப்புணர்வு கொண்ட அதிமதுரகவி முதலியோர்களது சூழ்ச்சிக்கு உடன்பட்டு காளமேகத்தை அவமதித்த திருமலைராயனும் பொற்கொல்லன் சொற்கேட்டுக் கோவலனைக் கொலை செய்யப் பணித்த பாண்டியன் நெடுஞ்செழியனும் செய்த செயல்கள் செய்யக்கூடாத - அல்லாத செயல்களேயாம். இவ்வாறான அல்லாத செயல்களைச் செய்பவர்கள் எவராயினதும் அவர்கள் பால் 'அறம்' கூற்றாகும் என்பது ஒரு தலை.

பேராசிரியர் மு. வரதராசன் அவர்கள் கண்ணகியின் செயல்பற்றிக் கூறும் பொழுது,

'ஒரு தவறும் செய்யாத மதுரை நகரத்தார்க்கு நெருப்பால் பெருந்துன்பஞ் செய்யத்துணிந்தது பொருந்தாததாகவே தோன்றுகின்றது'12 என்றுகூறுகின்றார். இவரது கூற்று எம்மைப் பொறுத்தவரை மட்டுமன்றிச் சிலப்பதிகாரத்தைக் கண்ணகியுடன் மனமொன்றிக் கற்கும் ஒவ்வொருவர்க்கும் சற்றும் பொருந்தாததாகவே தோன்றும். இதனை மதுரையில் வாழ்ந்த மக்களைப்பற்றி,

'**பெண்டிரும் உண்டு கொல்!**
**சான்றோரும் உண்டு கொல்!**
**தெய்வமும் உண்டு கொல்**'![13]

என்று கண்ணகி கூறிக் கண்ணீருகுக்கும் வரிகள் கற்போரையும் கண்ணீருகுக்கச் செய்கின்றன.
இதனாலேயே,

'**சான்றோ ரில்லாத் தொழில்பதி இருத்தலின்**
**தேன்தேர் குறவர் தேயம் நன்றே**'[14]

எனக் கண்ணகி போன்று அநீதியினால் அல்லற்பட்டுக் கண்ணீருகுப்போர்க்கு ஆறுதல் கூறும் அதிவீரராம பாண்டியரின் நீதிவாக்கிய வரிகள் நெடுங்காலமாக நிலைத்து நிற்கின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நற்றிறம் படராக் கொற்கைவேந்தன் போன்று ''நல்லவழியிலே செல்லாதவர்கள் எவர்களாயினதும் அவர்கள் அல்லலுற்று அழியவும், அவர்களால் மறைக்கப்பட்ட உண்மையும் மறுக்கப்பட்ட நீதியும் மீண்டும் நன்நிலை பெறவும் அறக்கடவுளரை வேண்டி அவர் மீது பாடப்படுவதே' 'அறம் பாடுதல்' எனப்படும். ஏனைய பாடல்கள் எவையும் 'அறம்பாடுதல்' ஆகா,


1. 'தமிழ்' ஆண்டு 11ம் தரம், தேசிய கல்வி நிறுவக, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
2. வின்ஸ்லோ அகராதி
3. தமிழ் லெக்ஸிக்கன்
4. திருக்குறள் - பரிமேலழகர் உரை
5. சிலப்பதிகாரம்
6. 7, 8, 9 மேற்படி நூல்
10. தமிழ்ப்புலவர் வரிசை
11. மேற்படி நூல்
12. கண்ணகி - மு.வரதராசன்
13. சிலப்பதிகாரம்
14. நறுந்தொகை - அதிவீரராம பாண்டியர்.


## மட்டை இரண்டு......
## குட்டை ஒன்றே!

சகோதர இனம் – அன்று
ஊரைவிட்டு ஓடியும்
உறவை விட்டுப் பிரிந்தும்
உடலுறுப்பை இழந்தும்.....
வீடு வளவை துறந்தும்
காடு கடல் கடந்தும்
கைதுகளில் சிக்கியும்
சித்திரவதையில் தவித்தும்.......

அகதிகளாய் அவரெங்கும்
அவதியுறவே.......
அரசியலால் புனர்வாழ்வு
இவர் பெறவே......

கிணறுகளையும்......
மலசல கூட குழிகளையும்
புதை குழிகளாய்......
பிரகடனம் செய்தவரும்
மனிதப் பிறவிகளே !

பக்கத்து வீட்டுப் பரிதாவும்
பாசம் நிறை பார்வதியும்
வெட்கத்தை விட்டு – வெற்றிலை
போட்டுக் கொண்டே
முற்றத்திலேயே பேசி
முடிக்க வேண்டியதை........
பேரம் பேசியே......
பிளவைத் தூவியே......
கூட்டம் கூட்டியே.....
கூச்சல் போடும் – அரசியல்
குண்டர்களின் நாட்டத்தை
நாடி பிடித்தறிந்திடுவோமே

நாடிழந்து போன சமாதானம்
நம்மை நாடி வரவும்
நாம் செய்த பாவம் –
தீர்ந்து போகவும் நாளும்சேர்ந்தே வாழுவோம்
வாரீரோ !

**பொத்துவில் ஏ. எல். ஏ. முகம்மத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளில் உடலுறுப்புக்கள்

தலை:- தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை (964)
மக்கள் தம் உயர்வுக்கு உரிய நிலையில் இருந்து தாழ்ந்த போது தலையிலிருந்து வேரோடு விழுந்து தாழ்வுற்ற மயிரினைப் போன்றவர் ஆவர்.

முகம்- மோப்பக் குழையும் அனிச்சம் முகத்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (90)
அனிச்சம் பூ மோந்தவுடன் வாடிவிடும். அதுபோல் முகம் மலராமல் வேறுபட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பர்.

கண்:- எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு (392)
எண்ணென்று சொல்லுவனவும் மற்றை எழுத்தென்று சொல்லு வனவுமாகிய கண்களிரண்டினையும் கற்றோ ர் சிறப்புடைய உயிர்கட்குள் கண்ணென்று போற்றப்படுவர்.

செவி:- செவி கைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கும் உலகு. (389)
குறை கூறுவோரின் சொற்களை செவிகைக்கும் நிலையில் பொறுக்கின்ற பண்புடைய அரசனது குடை நிழலில் உலகம் தங்கும்.

மூக்கு:- பறங்குன்றி சண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் சரியார் உடைத்து. (277)
புறத்தில் குன்றி மணிபோல் செம்மையானவராய்க் காணப்பட்டா ராயினும் அகத்தில் குன்றிமணியின் மூக்குப் போல் கறுத்திருப்பவர் உலகில் உண்டு.

வாய்:- வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். (721)
சொற்களின் தொகுதி அறிந்த தூய்மை உடையவர் அவைக் களத்தின் வகையினை அறிந்து வல்லவரின் அவையில் வாய் சோர்ந்து பிழை சொல்ல மாட்டார்.

நா:- யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு (127)
காக்க வேண்டியவற்றுள் எவற்றை காக்காவிட்டாலும் நாவையாவது காக்க வேண்டும். காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

தோள்:- தன்நலம் பாரிப்பார் தோயார் தகை செருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். (916)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு முதலியவற்றால் செருக்குக் கொண்டு தம் புன்மையான நடத்தையாற் தமை விற்கும் பொது மகளிரின் தோளைத் தம் நல்லொழுக்கத்தைப் போற்றும் சான்றோர் பொருந்தார்.

கை:- கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். (260)

ஒருயிரையும் கொல்லாமல் புலால் உண்ணாமல்வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும்.

விரல்:- வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர் சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல். (1261)

என் கண்களும் அவர் வரும் வழியைப் பார்த்து ஒளி இழந்து அழகு கெட்டன. விரல்களும் அவர் சென்ற நாட்களைக் குறித்து தொட்டுத் தொட்டுத் தேய்ந்தன.

வயிறு:- செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும். (412)

செவிக்கு கேள்வியாகிய உணவு இல்லாத போது அதற்குத் துணையாக உடலை ஓம்புமாறு வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.

கால்:- கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழா அத்துப் பேதை புகல். (840)

சான்றோரின் கூட்டத்தில் பேதை புகுதல் ஒருவன் தூய்மை இல்லாத வற்றை மிதித்துக் கழுவாத காலை படுக்கையில் வைத்தாற் போன்றது.

அடி:- பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்.
இறைவன் அடி சேராதார். (10)

இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும் மற்றவர் கடக்க முடியாது.

உடம்பு:- இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு.

தன் குடிக்கு வரக்கூடிய குற்றத்தை வராமல் நீக்க முயல்கின்ற ஒருவனுடைய உடம்பு துன்பத்திற்கே இருப்பிடமானதோ.

கரதூசனன்
மகிழடித்தீவு கொக்கட்டிச்சோலை
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் பக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குக் கிழக்கு மாகாண எழுத்தாக்கப் போட்டிகளில் முதல் இடம் பெற்ற மாணவர்களின் ஆக்கங்களில் இருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

பிரிவு 1

ஆக்கம் - எழுத்து

# தாய் தந்தையரைப் பேணுவோம்

1. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற ஒளவைப் பிராட்டியின் வாக்கிற்கிணங்க எமது கண் கண்ட தெய்வங்களாக விளங்குபவர் பெற்றோர் ஆவார்.
2. சின்னஞ்சிறு குழந்தைப் பருவ வயதை எட்டிப் பிடித்ததும் பிறர் போற்றும் பெருமகனாக ஆவதற்கு பெற்றோரே மூல கர்த்தாவாக அமைகின்றனர்.
3. மெழுகுவர்த்தி தானே உருகி இருளைப் போக்கி ஒளியை ஊட்டுவது போல்,எமது வாழ்க்கை சீரும் சிறப்புமாக அமைவதற்கு தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்பவர் பெற்றோர் ஆவார்.
4. தம் பிள்ளை எதிர்காலத்தில் சீருஞ்சிறப்புமாக வாழ்வதற்குத் தம்மையே தியாகம் செய்யும் பெற்றோரை அவர்கள் முதுமை அடைந்ததும் போற்றிப் பேண வேண்டும்.
5. சிறகு முளைத்த பறவை கூட்டை விட்டுப் பறப்பது போல், உயர் நிலையை அடைந்ததும் தமது உயர் வாழ்விற்கு உறுதுணையாக இருந்த பெற்றோரை உதாசீனப் படுத்தி தம் வழியே செல்லும் பிள்ளைகளும் இன்று இருக்கத்தான் செய்கின்றனர்.
6. முதியவரான எமது பெற்றோரின் சொத்துக்களைப் பெறுவதற்காக மட்டும் அவர்களுக்கு சேவை செய்யாது உள்ளார்ந்த அன்புடனும், இன்முகத்துடனும் சேவை செய்யவேண்டும்.
7. ஆலமரம் முதிய மரமானதும் அதன் விழுதுகள் எவ்வாறு தாங்கிப் பிடிக்கின்றனவோ, அதே போல் நாமும் எமது பெற்றோரைத் தாங்கி நிற்க வேண்டும்.
8. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க பெற்றோர் எமக்குச் செய்த நன்றியை மறந்தால் நாம் வாழ்க்கையில் முன்னேற முடியாது.
9. அனுபவம் மிக்கவரான எமது பெற்றோர் கூறும் அறிவுரைகளைப் பணிவுடன் கேட்டு அதன்படி நடப்போமாயின் அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள்.
10. எமது பெற்றோரின் மனம் புண்படும்படியான வார்த்தைகளை ஒருபோதும் கூறாது இன்சொல் பேசி அவர்களை மகிழ்விக்க வேண்டும்.
11. ஒளவைப் பிராட்டியும் தம் ஆத்திசூடியில் "தந்தை தாய் பேண்" என்று அழகாகக் கூறியுள்ளார்.
12. எமது பெற்றோர் நோயாளராக படுக்கையில் இருக்கும் போது அவர்களுக்குத் தேவையான மருந்து மாத்திரைகள்,உணவு என்பவற்றை வேளா வேளைக்குக் கொடுத்துப் பராமரிக்க வேண்டும்.
13. எமது பெற்றோர் முதுமையடைந்ததும் முதியோர் இல்லங்களுக்கு அனுப்பி அவர்கள் மனதைப் புண்படுத்தாமல் உண்மையான அன்பு பாசத்துடன் பேண வேண்டும்.
14. பத்து மாதம் பக்குவமாய்ச் சுமந்து ஈன்றெடுத்து கண் துஞ்சாது எம்மை வளர்த்த அன்னையையும்,அல்லும் பகலும் அயராது உழைத்து எமக்கு அறிவூட்டிய தந்தையையும் அவர்கள் முதுமை அடைந்ததும் பராமரிக்க வேண்டும்.
15. எனவே மண்ணின் மைந்தர்களாய்,புத்திர சீலர்களாய்,மணி முடியில் பதித்த மாணிக்கங்களாய் எம்மை உருவாக்கிய பெற்றோரைப் பூஜித்து ஒளிமயமான வாழ்க்கையைப் பெறுவோமாக.

பிரிவு 1 ஆக்கம் எழுத்துப் போட்டியில் முதலிடம் பெற்றது.
செல்வி. ம. பிரசாந்தினி - புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலயம், திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குச் செல்லும் வீதியின் அவலநிலையை விளக்கி அதைத் திருத்தித் தருமாறு வீடு அமைந்துள்ள பகுதி உள்ளூராட்சித் தலைவருக்கு எழுதும் கடிதம்

ந.ஆரணி,
சிவப்பிரகாசம் வீதி,
தேவேந்திரபுரி.

உள்ளூராட்சித் தலைவர்,
அரசடி, திருக்கோணமலை.

ஐயா,

**வீதியின் மோசமான நிலையைத் திருத்துதல்**

அரசடிப் பிரிவில் சிவப்பிரகாசம் வீதியில் அமைந்துள்ள எனது வீட்டிற்குச் செல்லும் வீதியின் நிலை மிகவும் மோசமாகவுள்ளது.ஐயா,வீதியால் நடந்து செல்ல முடியாத அளவிற்கு கழிவுகளும் குப்பைகளும் வீதியில் பெருகி விட்டன.நாங்களும் சற்றுப் பொறுமையுடன் இருந்தோம்.ஆனால் இப்பொழுது எல்லை மீறிவிட்டது.

ஐயா,ஒருவர் இருவரல்ல; எல்லோரும் வீதியிலேயே குப்பைகளைக் கொட்டுகின்றனர்; கழிவு நீரை ஊற்றுகின்றனர்; காகங்களும் நாய்களும் அக்குப்பைகளைக் கிளறி வீதி முழுவதையும் குப்பைகளால் நிரப்புகின்றன. அவர்களிடம் எவ்வளவோ எடுத்துக் கூறினாலும் காதில் வாங்கிக்கொள்கிறார்களில்லை. அவர்களைக் கட்டுப்படுத்த ஆற்றாதவளான நான் உங்களிடம் முறையிடுகின்றேன். தயவு செய்து என் மனுவைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

ஐயா, இந்த வீதியில் நாங்கள் இருப்பதால் எனது குடும்பத்தினர், அடிக்கடி நோய்வாய்ப் படுகின்றனர். இதற்குக் காரணம் வீதியின் சுத்தமின்மையே ஆகும். குப்பைகளை வீதியில் கொட்டுபவர்களிடம் கூறினால், சண்டைக்கு வருகின்றனர். இவ்வாறு செய்வதால் அவர்களும் கூட துன்பத்தை அனுபவிப்பர் என்பதை அவர்கள் உணராமல் இருக்கின்றனர். எங்கள் வீதிக்கு குப்பைகளை அள்ளும் வண்டியும் வருவதில்லை. இதனால் குப்பைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வீதியெங்கும் துர்நாற்றம் வீசுகின்றது.

அவர்கள் வீதியில் ஊற்றும் கழிவு நீரினால் நுளம்புகள் பெருகுகின்றன. இரவில் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. டெங்கு நோய் வருமோ என்று அஞ்சுகின்றேன். காலப் போக்கில் இந்நிலை எங்கும் வந்துவிடும். வெள்ளம் வருமுன் அணைகட்டுவது நல்லதல்லவா? ஐயா, தயவுசெய்து எனது வேண்டுகோளை ஏற்று உடனடியாக எம் வீதியைத் திருத்தித் தருமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

ஐயா, சுகாதாரத் திணைக்களத்தோடு பேச முயற்சி செய்தோம். ஆனால் அங்கு செல்லமுடியவில்லை. தங்களுடன் தொடர்பு கொண்டால் இப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் தங்களை நாடுகின்றேன். தயவு செய்து என் தாழ்மையான வேண்டுகோளை நிறைவேற்றுங்கள்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
ந. ஆரணி

(பிரிவு 2 - கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் நிகழ்ச்சியில் முதலிடம் பெற்ற ஆக்கம்)
செல்வி. ஆரணி ரஞ்சன், புனித மரியாள் கல்லூரி, திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு உம்முடன் கல்வி கற்று, தற்போது இரத்தினபுரியில் கல்வி கற்கும் உமது நண்பன், அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் அடைந்த கஷ்டத்தைக் கேற்வியுற்று, அவனுக்கு எழுதும் ஆறுதல் கடிதம்

சி.த. ஆறுமுகசுந்தரம்
இல.01, 'ஞான ஒளி',
கோயில் வீதி,
அனுராதபுரம்,
14-07-2003

அன்பின் சிநேகிதன் ராமு,

நான் நலம். அதுபோல் நீயும் நலமாக வாழ்வாயாக! அன்று நடந்த வெள்ளப் பெருக்கின் அகோரச் செய்தியைக் கேள்வியுற்றேன். அதற்காக, நான் உனக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது நீ அகதி முகாமில் வாழ்கின்றாய் என்பதையும் அறிந்த நான் மிகவும் துயரம் அடைகின்றேன். என்ன செய்வது? அது காலத்தின் நியதி.

அன்று நாம் புள்ளி மான் போல் துள்ளித்திரிந்து வாவிக்கரை, வண்ணச்சோலைகளின் அருகே அமர்ந்து நகைத்து விளையாடிய அந்த இரம்மியமான வாழ்க்கையும் குருவிகள், அருவிகள் என்பவற்றுடன் உறவாடிய உறவுகளும் என் விழி முன்னே நிழலாடி கண்ணீர் வர வைக்கின்ற சோகத்தை என்னவென்பேன்? காலச் சக்கரத்தின் இன்பத்தையும், துன்பத்தையும் சுவைத்துத்தானே ஆக வேண்டும்?

நான் உங்கள் இல்லம் நோக்கி வரும் போதெல்லாம் உன் பெற்றோர் அன்றலர்ந்த செந்தாமரையை வென்ற மலர்ந்த முகத்துடன் என்னை இனிதே வரவேற்று உபசரிப்பார்களே! அந்தப் பாசமிகு அன்பின் அடித்தளமும், அடைக்கலமுமாகிய நேசமிகு பெற்றோரை நலம் விசாரித்ததாகக் கூறு.

அன்று, அந்தத் துன்பமிகு காட்சியைப் பார்த்த நாம் எங்கே நம் திருநாடும் ஒரு பங்களாதேஷாக மாறிவிடுமோ! என அஞ்சினோம்; எங்களால் முடிந்தளவு பிரார்த்தனை செய்தோம்; உதவி செய்யவும் முன் வந்தோம்.

ராமு, உன்னை ராஜபக்ச, யுகேந்திரன், சலீம், டேவிட் ஆகிய நால்வரும் நலம் விசாரித்தார்கள். நாம் சமாதானத்தின் சகபாடிகளாகவும், சண்டையின் எதிரிகளாகவுமல்லவோ வாழ்ந்தோம்? எம்மை ஒன்று சேர்த்தது மதமல்லவே? தூய நட்புத்தானே!

ராமு, ஒரு மனிதனின் இலட்சியப் பாதையில் ஆயிரம் தடைக்கற்கள் வரலாம். ஆனால், அவை அனைத்தையும் தமக்குரிய படிக்கல்லாக மாற்றிக் கொள்பவனே சாதுரியமான மனிதன் என்பதை நீ உணர வேண்டும். நீ அடிக்கடி கூறுவாயே "நான் ஒரு வைத்தியராக வரவேண்டும்" என்று அந்த கனவு எப்போதும் உன்னுள் ஜனனித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே இருக்கவேண்டும், அது இடையில் சயனித்து விடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கவேண்டும்.

உனக்குத் தேவையான பாடப் புத்தகங்களை என் அதிபரிடம் கேட்டு, வாங்கி, பத்திரமாக வைத்துள்ளேன். நீ என் வீட்டிற்கு உறவினர் சகிதம் வரும்போது அதைப் பெற்றுக் கொள்ளலாம். என் தந்தை அடுத்த கிழமை உன்னைச் சந்தித்து எங்கள் வீட்டிற்கு அழைத்து வருவார். அதைத் தயவு செய்து ஏற்றுக்கொள்!

நீ நன்றாகப் படிக்க வேண்டும், வாழ்வில் ஒரு அறிஞனாக உயர வேண்டும், அறிவிலிகளையும் நீ மேதையாக்க வேண்டும்.

" அறிவின்மை இன்மையுள் இன்மை, பிறிதின்மை
இன்மையா வையாது உலகு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப இவ் அவனியில் நீ மறைந்து விடாத ஒரு விடிவெள்ளியாய் மிளிரவேண்டும்.

நாளை நீயும் ஒரு நியூட்டனாகவோ, ஆபிரகாம் லிங்கனாகவோ, பிளேட்டோவாகவோ திகழவேண்டும். அதற்காக நண்பர்கள் நாங்கள் எப்போதும் இறைவனைப் பிரார்த்திப்போம். கவலைப்படாதே! வெகுவிரைவில் உன் இரத்தினபுரி ஈழத்தின் இரத்தினக் கல்லாக ஜொலிக்கும், என்று வாழ்த்தி என் மடலை முடிக்கிறேன்.

இப்படிக்கு,
உன் அன்பு நண்பன்,
சி.த. ஆறுமுக சுந்தரம்.

(3ம் பிரிவு கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் நிகழ்ச்சியில் முதல் இடம் பெற்ற கட்டுரை.)

செல்வி. ஜே. சுமியா
அல்மனார் மத்திய கல்லூரி, கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசற்ற புன்னகையில்........

சுற்றும்முற்றும் பார்த்தான் அவன். எங்குமே இருள்மயமாக இருந்தது. பழைய துண்டொன்றை வெற்றுநிலத்தில் பிரித்துப் படுத்தான். புரண்டு புரண்டுபடுத்தும் தூக்கமோ வந்தபாடில்லை. எப்படிவரும் தூக்கம்? நெஞ்சம் முழுவதும் துக்கமே ஆக்கிரமித்து நிற்கும்போது எப்படி துயிலமுடியும்? இழந்துவிட்ட உறவுகளையும் கலைந்து விட்ட கனவுகளையும் நினைக்கையில் கண்கள் கசிந்தன. கட்டுப்படுத்தி வைத்திருந்த பழைய நினைவுகள் மீண்டும் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தன.

அவனது பெயர் சுதாகர். அவர்களது குடும்பம் யாழ்ப்பாணம் நல்லூரடியில் வசித்து வந்தது. சுதாகரின் ஒரே தங்கையான சுதாவுடன், சுதாகர் விளையாட்டுக்குக் கூடச் சண்டையிடமாட்டான். அவ்வளவு பாசம் தங்கைமேல் தந்தை கதிரேசன் ஒரு விவசாயி. அவர் எறும்பைவிடச் சுறுசுறுப்பாக வேலை செய்வார். அதனாலோ என்னவோ அவர்கள் வறுமையின் அடிமட்டத்துக்குச் சென்றதே இல்லை. இவ்வாறாக சுதாகரின் குடும்பம் அளவான, அழகான, அமைதியான குடும்பமாக அந்த ஊரில் வாழ்ந்து வந்தது.

காலமோ சக்கரம் பூட்டியது போல வெகு விரைவாக உருண்டோடியது. ‘சுக துக்கம் சுழல் சக்கரம்’ என்பது போல அவர்கள் வாழ்வில் புயல் வீச ஆரம்பித்தது. அவர்கள் வாழ்வில் மட்டுமா? ஆயிரக் கண்க்கான யாழ் மக்கள் வாழ்விலும் தான். போர் எனும் உயிர் குடிக்கும் அரக்கன் தனது அகலக் பாதங்களை யாழ் மண்ணிலும் பதித்தான். அவனது காலுக்குள் நசிந்து கம்பளிப் பூச்சிகளாக நசுங்கிய உயிர்கள் தான் எத்தனை? இவ்வாறு நாசம் விளைவிக்கு கொடிய அரக்கன் தனக்கு இரையாகப் போகும் உயிர்களை எண்ணி குதூகலித்துக் கொண்டு வந்துகொண்டிருந்தான்.

அன்று வெள்ளிக் கிழமை.. குண்டுச் சத்தங்கள் மக்களைக் கிலிகொள்ள வைத்தன. வானத்தில் இயந்திரப் பறவைகள் பேரிரச்சலுடன் பறந்து குண்டுகளைச் சரமாரியாகப் பொழிந்தன. மக்கள் தமது இடங்களை விட்டு இடம் பெயரத் தொடங்கினர். தமது உடமைகளைத் பொதிகளாக்கித் தலையிலும் வாகனங்களிலுமாகச் சுமந்து கொண்டு சென்றனர். அவர்கள் முகத்தில் தாய்மண்ணை விட்டுப் பிரியும் ஏக்கம் நிறைந்திருந்தாலும் எப்போதும் தம் உயிர் போகலாம் என்ற பீதியும் காணப்பட்டது.

சுதாகர் வீட்டிலும் நிலைமை மோசமாக இருந்தது. வயலுக்குச் சென்ற வந்த தந்தைக்கு தேநீரைக் கொடுத்த சுதா “அப்பா! எல்லாரும் இடம் பெயர்ந்து போயினம். நாங்களும் போகத்தானே வேணும் அப்பா!” என வினாவினாள். அதற்கு அவர் பெற்றதாயும் பிறந்த பொன் நாடும் நற்றவவானினும் நனிசிறந்தவை’ எனப் பெரியவர்கள் சொல்லுவினம் அது எவ்வளவு உண்மையெண்டு இப்ப தெரியுது. நான் என்ன நடந்தாலும் இந்த மண்ணை விட்டுவரமாட்டன்” என உறுதியோடு கூறியபடி, சுதாவின் முகத்தைப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதா அதிர்ச்சியடைந்தவனாக தந்தையின் முகத்தை உற்று நோக்கினாள். தந்தையின் முகத்தில் அந்தவேளை தாய்நாட்டுப் பற்று நிறைந்திருந்தாலும்கூட, ஏதோ ஒரு யோசனையும் அவருடைய இதயத்தை வருடிக்கொண்டிருந்தது. சற்று நேரத்தின்பின் மனைவியை அழைத்து "பார்வதி! அஞ்சாறு நாளுக்குத் தேவையான சாமானை எடுத்து வையுங்கோ. நான் எங்கட வயலையொருக்கா பார்த்திட்டு வாறன்" எனக் கூறிவிட்டு வயலை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

தாயும் பிள்ளைகளுமாக அவசியமான சில சாமான்களை மட்டும் எடுத்து உரப்பைகளில் வைத்து பொதிகளாக்கினார்கள். அதேவேளை தளர்ந்த நடையுடன் கண்கள் கலங்கி வந்த சுதாகரின் தந்தை கதிரேசன், "சாமான்களைத் தூக்கிக் கொண்டுபோய் வெளியில வையுங்கோ. நான் வீட்டை ஒருக்காப் பாத்திட்டு வாறன்" எனக்கூறி வீட்டினுள் நுழைந்தார். அதேவேளை சுதாவும்? சுதாகரும், தாயும் வாயிலில் பொதிகளுடன் நின்றிருந்தனர்.

அப்போது அங்கே வேகமாக வந்த ஒரு விமானம் தாழப் பறந்து குண்டொன்றை வீசிவிட்டுச் சென்றது. "அம்மா அங்க பாருங்கோ! நெருப்பு மாதிரி ஒண்டு சுழன்று கொண்டு வருது" என சுதாகர் தாயிடம் காட்டிய அந்தவேளை அது வீட்டின்மேல் விழுந்து வெடித்தது. தம் கண்முன்னே நடந்த இந்தக் கொடூரத்தை கண்டு அதிர்ச்சியில் உறைந்து போனார்கள் சுதாவும், சுதாகரும், அவன் தாயும்.

அங்கு தந்தையின் உயிரற்ற உடலை அந்த மூன்று சோடி விழிகளும், இடிபாடுகளுக்குள் தேடிக்கொண்டிருந்தன. அங்கே எந்தவித அடையாளமுமே காணமுடியவில்லை. கதிரேசன் ஆம்!.... கதிரேசன், தான் விரும்பிய மாதிரியே தனது தாய் மண்ணிலேயே சங்கமமாகி விட்டார். தமது காணிக்கையாக கண்ணீர் முத்துக்களை உதிர்ப்பதைத் தவிர அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சுதாகரின் தாயார் பிள்ளைகளின் நலன்கருதி கண்ணீர் அருவிபோலப் பாய நகர்ந்து சென்றுகொண்டிருந்த மக்களுடன் மக்களாக நகர்ந்தார்.

எப்படியோ மக்களோடு மக்களாக சேர்ந்து யாழ் மண்ணைத்தாண்டி கிளிநொச்சியினூடாக அக்கராயன் மண்ணை அடைந்தார்கள். அங்கே ஆதரிக்க யாருமற்ற நிலையிலே அவர்களை அபயக்கரம்நீட்டி அழைத்த ஆலமரம் சுதாகருக்கு தெய்வ வடிவாய் தோன்றியது.

ஆலமரத்தில் புகலிடம் தேடிக்கொண்டிருக்கும் பறவைகளின் சலசலப்பில், நினைவுத்தொடர் துண்டிக்கப்பட அவன் எழுந்து அமர்ந்தான். ஆலமர விழுதுகளுக்கிடையில் பிடுங்கியெறிந்த வெற்றிலைக்கொடி போல் துவண்டு கிடந்த தாயையும், தங்கையையும் நினைக்க மனதிற்கண் துயரம் பொங்கி வழிந்தது. தந்தையை இழந்த தங்கள் குடும்பம், துடுப்பில்லாத படகுபோல் தத்தளிப்பதை உணர்ந்தான். "நான் தான் இனி இந்தக் குடும்பத்தை பாதுகாக்க வேண்டும்" என்ற எண்ணம் மேலிட அவன் ஒரு உறுதியுடன் நடந்தான்.

அவனது வாய் அவனது பாட்டி சிலவேளைகளில் முணுமுணுக்கும் "இட்டமுடனே என்தலையில் இன்னபடி எழுதிய இறைவனும் செத்து விட்டானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்ட முட்டப் பஞ்சமே ஆனாலும் பாரம் அவனுக்கே'' என்ற பாடலடியை முணுமுணுத்தது. திடீரென ஒரு கூட்டம் அவனைத் தாண்டிச் செல்ல அவன் சுயநினைவை அடைந்து அவர்களுடன் சேர்ந்து நடந்தபடி 'எங்கே போகிறார்கள்?' என விசாரித்தான்.

"இடம் பெயர்ந்தவர்களிற்கு ஏதோ சாமான் குடுக்கினமாம் அங்கதான் போயினம்" என அறிந்து வந்தான். தங்கையை எழுப்பி விடயத்தைச் சொல்லி அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டு அந்த இடத்தை நோக்கிச் சென்றான். அங்கே நிவாரண பெர்மிற் பெறுவதற்காக தனது அடையாள அட்டையையும் வைத்து விட்டு ஓரமாகப் போய் நின்றான்.

அதே நேரம் இருவர் அந்த அலுவலக வாயிலை நோக்கி வந்தார்கள். உள்ளேயிருந்து வந்த ஒரு பெரியவர் இரு கரங்களையும் கூப்பி அகன்ற புன்னகையோடு அவர்களை வரவேற்றார். அவர்கள் இருவரும் அவருடன் உரையாடிய பின்னர் "நான் இடம்பெயர்ந்த மக்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்யலாமெண்டுதான் இந்த ஒரு வழியைக் கண்டுபிடித்தனான். மக்கள் சேவை மகேசன் சேவைதானே?'' என்ற வினாவுடன் அந்தப் பெரியவர் கூறிமுடிக்கவும் 'பளிச்' 'பளிச்' என கமரா படமெடுத்தது. கூடியிருந்த மக்களின் கரகோசம் வானைப் பிளந்தது. அவர் தனிப்பட்ட முறையில் அகதிகளுக்கு உதவுவதாக அவன் கருதினான்.

அவரது அந்த உரையாடலைக் கேட்டதும் மனதில் நம்பிக்கை துளிர்விட்டது. அவன் நம்பிக்கையோடு காத்திருந்தான். அப்போது அவனது முறை வந்தது. வெளியே இருந்த ஒருவர் "ஐயா உள்ளுக்க இருக்கிறார் போங்கோ'' எனக்கூற அவன் உள்ளே சென்றான். அங்கே அந்தப் பெரியவர் வேட்டியுடனும் விபூதியுடனும் அமர்ந்திருந்தார். அதே வேளை சுதாகரின் முகத்திலும் நம்பிக்கை பிரதிபலித்தது. "எப்படியாவது எனக்கு உதவுங்கள் ஐயா'' என தனது கஸ்டங்களைக் கூறி முடித்தான்.

அவர் புன்னகையினூடே "தம்பி நான் எல்லோருக்கும் உதவி செய்யத்தான் விரும்புறன்.... ஆனால் இப்ப இருக்கிற பிரச்சினைக்குள்ள எத்தின பேருக்கு குடுக்கிறது? எண்டாலும் உன்ர கஸ்டம் எனக்கு விளங்குது. ஏதாவது ஒரு பவுணெண்டாலும் பரவாயில்லை. தந்தா இப்பவே உனக்கு நிவாரண பெர்மிற் தரலாம்'' என்று கூறியதும் சுதாகருக்கு பூமி காலடியிலிருந்து நழுவியது போலிருந்தது. அவர் நிவாரண பெர்மிற் தருவதற்கு லஞ்சம் கேட்டதும், அவனுடைய இரத்தம் கொதித்துக்கொண்டு வந்தது. ஆனால், அவனால் அந்த நேரம் எதுவுமே செய்ய முடியாத நிலையில், அடையாள அட்டையுடன் வெளியேறினான்.

பாரதியார் எவ்வளவு உலக அனுபவமுள்ளவர் என எண்ணியது, சுதாகரின் மனம், பாரதியின் பாடலை ஒரு கணம் அசை மீட்டியது.

"மாசற்ற புன்னகையைப் - புதிய
மலரிற்கண்டுவப்போம்.
காசுற்ற மாந்தர் நகை - சுய
காரிய வேசமடி'' என்ற பாடல் நினைவில் வந்ததுதான். எங்கள் அல்லலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி புகழ் தேட முயலும் ஈனப்பிறவிகள் என நினைக்கையில் அவனுக்கு ஆத்திரத்தில் உள்ளம் கொதித்தது.

மனதில் துயரைத்தாங்கியவனாக கால்போன போக்கில் வீதியினூடாக நடந்தபோது பிள்ளையார் கோவிலில் ஒலித்த மணி, அவனை ஆலயத்தை நோக்கி நடக்கத்தூண்டியது. அங்கே அசுரனை அழித்த பிள்ளையார் விக்கினங்களைத் தீர்க்கும் 'விக்னேஸ்வர'னாக வீற்றிருந்தார். அந்த விநாயகரைத் தரிசித்தபோது மனதில் புதுத்தெம்பு பிறந்தது. கோயிலில் கிடைத்த பிரசாதத்தையம் விபூதியையும் பெற்றுக் கொண்டு தமது வீடான ஆலமரத்தை நோக்கி நடந்தான். அங்கு இருந்த இரு ஜீவன்களின் இரண்டுநாள் பசியை ஒரு பிடிப் பொங்கலின் மூலம் தீர்த்துக் கொள்ள முயன்றான்.

ஆலம் கிளைகளுக்கு போட்டியாகப் பஞ்சப் பட்டினியும் தலைவிரித்தாடியது. அந்த வேளையிலே "வறுமையிலும் செம்மை" என்ற கூற்று நினைவில் மோதுகின்றது. "தன்கையே தனக்குதவி" என்ற நினைவோடு வயல் செறிந்த மருதநிலத்தை நோக்கி நடக்கிறான்.

அங்கு வயலில் வேலை செய்துகொண்டிருந்த அந்த ஏழைகளின் கள்ளங் கபடமற்ற சிரிப்பு அவன் உள்ளத்திற்கு உற்சாகத்தை ஊட்டுகின்றது. "இவர்கள் தம்மிடம் உள்ளதைக் கொண்டே மனதைத் திருப்திப் படுத்திக் கொள்ளுபவர்கள். அவர்கள் யாருக்கும் அடிமைகளாகவோ, நிவாரணத்தை நம்பியவர்களாகவோ இல்லாது சுதந்திரமாகத் தொழில் புரியும் வீர புருஷர்களாக அவன் முன்னே தோன்றுகின்றனர்.

ஆம்!.... அந்த வயலில், மண்ணை உழுது, உழைக்கப் புறப்பட்டு விட்ட சுதாகரின் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை துளிர்விட்டது!

(பிரிவு 4 - சிறுகதை ஆக்கத்தில் முதலிடம் பெற்ற சிறுகதை)

செல்வி. ப.நிருத்திகா
கிளி /கிளிநொச்சி மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தன மரங்கள்

செந்தணற்றகடுகளைப் பரப்பி விட்டாற் போல் காட்சியளித்த அந்த மண் வீதி வழியே புகையும் புழுதியும் பின்தொடர காற்றைக் கிளித்துச் சென்று கொண்டிருந்தது சூரியரின் எம்.ரி.90 ரக மோட்டார் சைக்கிள் மண்ணெண்ணையில் உயிர்வாழும் அதன் அசுர சத்தத்துக்கு பக்கவாத்தியம் போல் சில்லில் பட்டுப் பறக்கும் சிறுகற் பரல்களின் சர்... என்ற ஒலி அமைந்தது. தூரத்தில் ஒரு பார ஊர்தி வருவது தெரியவே மோட்டார் சைக்கிளை ஒரு வீதியோர நாவல் மரத்தின் கீழ் ஓய்வுக்கு கொண்டு வந்தார் சூரியர். கையில் இருந்த கைக்குட்டையால் முகத்தை மூடி அங்கு பரந்த புழுதியிலிருந்து தப்புவதற்கு முயற்சித்தார்.

வன்னியின் அந்த மண் வீதிகளும் அதன் சிவப்புப் புழுதியும் அப்புழுதியில் குளித்தவாறே வீதியின் இருமரங்கிலும் காணப்படும் சிவப்பு மரங்களும் அந்த பெருநிலப்பரப்புக்கே உரியதான தனிச் சிறப்புக்கள் எனலாம். முல்லையும் மருதமும் நெய்தலும் ஒருங்கே இணைந்த முல்லைத் தீவுதான் சூரியரின் சொந்த இடம், எதற்குமே பஞ்சமில்லாத அந்த நிலம் ஏழைகளின் தாய். ஆங்காங்கே காணப்படும் யுத்தத்தின் அவல வடுக்களுக்கு நடுவில் நிமிர்ந்து நிற்கும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் அவ்வூரின் அழகுக்கு இன்னுமோர் சிகரம்.

சற்றைக்கெல்லாம் பார ஊர்தி சூரியரைகடந்து சென்றது. கூடவே அதை துரத்திக் கொண்டு புழுதிப்படலமும் சென்றது. மோட்டார் சைக்கிளுக்கு மீண்டும் உயிர் கொடுத்தார் சூரியர்.

சூரியப் பிரகாசம் என்பதுதான் சூரியரின் உண்மையான பெயர். ஆனால் ஊரின் மதிப்பான மனிதரான அவருக்கு, சூரியர் எனும் பெயரே அவ்வூரில் மட்டும் அன்றி அயலூரிலும் பிரபலமாயிருந்தது. எதைக் கேட்டாலும் மனம் கோணாது செய்யும் அவரின் அந்த உயர்ந்த பண்பே சூரியரின் நற்பெயருக்குக் காரணமாக விளங்கிற்று. இதனால் ஊரார் அவரை எவ்வளவு மதித்தாலும் அவரின் தாயும் மனைவியும் கண்டிக்காத நாளே இல்லை எனலாம்.

பனையோலை வேலிகளால் அடைக்கப்பட்ட சூரியரின் வளவின், வரிச்சுப் படலை திறந்தே இருந்தது. முகத்தில் கேள்விக்குறியுடன் நேராக உள்ளேயே மோட்டார் சைக்கிளை செலுத்தினார். அங்கே முற்றத்தில் செழித்திருந்த நிழல் ரைவள்ளிச் செடியின் கீழ் அகிலன் நின்று கொண்ருந்தான். வண்டியைஓர் ஓரமாக நிறுத்திவிட்டு அவனை நோக்கிப் பார்வையைத் திருப்பினார் சூரியர்.

"என்ன அகிலன்? வெளியே நிற்கிறாய்? உள்ள போய் இருக்கலாமே!"

"பரவாயில்ல ஐயா!"

" இங்கேருமப்பா! செம்புக்க கொஞ்சம் தண்ணி கொண்டு வாரும். உந்த வெத்திலப் பெட்டியையும் விட்டிட்டுப் போயிட்டன் கையோட அதையும் எடுத்துட்டுவாரும். நான் அவசரமா வயல்பக்கம் போகவேணும். தம்பி அகிலனுக்கு தேத்தண்ணி போட்டனீரே? மனைவி பரிமளத்திடம் கட்டளைகளையும் கேள்விகளையும் ஒன்றாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து விட்டு நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையை கைக்குட்டையில் சேமித்துவிட்டு மீண்டும் அகிலனிடம் வந்தார் சூரியர்.

"என்ன தம்பி! ஏதும் அலுவலா வந்தனீரோ?"

"ஐயா...... அது வந்து........."

"என்ன? பிரச்சனையில்ல சொல்லும்!"

"அது வந்தய்யா..... மகனுக்கு பள்ளிக்கூடத்துக்கு ஏதோ காசு கட்டவேணுமாம். அதோட புத்தகங்களும் வாங்கவேணுமாம். காசு தராட்டி பள்ளிக்கூடம் போக மாட்டனெண்டு நிக்கிறான்......... அதுதானய்யா......" சற்றுத் தயங்கிய அகிலன் மீண்டும் தொடர்ந்தான். "உங்களால ஏலுமெண்டா தாங்கோய்யா. நாளைக்கு கந்தசாமியண்ணையின்ர வயலில முடிஞ்சவுடன பின்னேரமே தந்திடுவன் " கூறிவிட்டு சூரியரின் முகத்தையே உற்றுநோக்கினான் அவன்.

"என்ன தம்பி இதுக்குப்போய் இவ்வளவு தயங்கிக்கொண்டிருக்கிறாய்? மகளின்ர படிப்புக்குத்தானே! நீ தேவையெண்டா வந்து கேள். வசதிப்பட்ட நேரம் தா. இதுக்குப்போய்......" தனது வழமையான புன்முறுவலுடன் அவனுக்குத் தேவையானதைக் கொடுத்து அனுப்பிவிட்டு திரும்பியபோதுதான் தனக்கு இன்னும் தண்ணீர்ச் செம்பும் வெற்றிலைப்பெட்டியும் வந்து சேரவில்லை என்பது சூரியருக்கு நினைவுக்கு வந்தது. வழமையாக அடுத்த கட்டமான நிகழ்வுகளை அறிந்திருந்த அவா் தானே எடுப்பதற்காக வீட்டினுள் புகுந்தார்.

"பெரிய கா்ணன்னெண்ட நினைப்பு. அவனே கூலி வேல செய்யிறவன்.அவனுக்கு கடன் கொடுத்தா திருப்பித் தருவானோ" ஆரம்பித்து விட்டாள் மனைவி.

பதிலுக்கு ஆரம்பித்தாள் தாய். "அத ஒருக்கா ரெண்டுதரம் சொன்னாக்கேக்க வேணும். சும்மா உழைக்கிறதெல்லாம் ஊருக்குத் தாரவாத்தா கடைசியில நாங்கதான் நடுத்தெருவில நிற்கோணும்"

வசை இசைகள் தொடா்ந்தன. தேவையானவற்றை எடுத்துக் கொண்டு விறாந்தைக்கு வந்தார் சூரியர். அவரின் கடைசி மகன் விளையாடிக்கொண்டிருந்தான். "இன்னும் கொஞ்ச நாளால இவனும் திட்டுவான்." மனதினுள் நினைத்தவாறே சுவரில் மாட்டியிருந்த தனது மூத்த மகனின் படத்தைப் பார்த்தார். சற்றே நழுவியிருந்த மாலையை சரி செய்து விட்டு வெளியே இறங்கி மோட்டார் சைக்கிளை இயக்கினார் அவர். வண்டி முன்னோக்கி நகர அவரின் நினைவுகள் பின்னோக்கி நகரலாயின.

வயற்சேற்றினுள் சித்திரம் வரைந்து கொண்டிருந்த ஏர்முனைகளை தனக்கேயுரிய அதிகாரத் தோரணையுடன் பார்த்துக்கொண்டிருந்தார் சூரியர். அருகில் அவரின் மூத்தமகன் அருணன். உச்சி வெயிலில் ஏர் பிடிக்கும் கரிய மேனிகள் பளபளத்தன. சிறிது நேரத்தில் ஓய்வுக்காக வரம்பிலேறின. அந்த சேற்றுக் கால்கள்.

தயக்கத்துடன் சூரியரை நெருங்கினார் சுந்தரம். ஒட்டியிருந்த மார்பின் மேல் கைகளைக் கட்டிக்கொண்டார்.

"ஐயா!"

"என்ன?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா சாமானுகளும் யான வில குதிரவில விக்குது. பிள்ளையளுக்கு பள்ளிக்கூடத்துக்கும் காசு கணக்கக் கேக்கிறாங்கள். நீங்க கொஞ்சம் மனசு வச்சு கூலிய கொஞ்சம் கூட்டித் தந்தீங்களென்டா......."

"ஓமய்யா... நீங்க தாற கூலி ஒரு வேளைக்கஞ்சிக்கே காணாது. கொஞ்சம் கூடந்தந்தா ஒரு வேளையெண்டாலும் சந்தோஷமா உலை வைப்பம்" நடுங்கிய குரலில் வேண்டினாள் பாக்கியம். சூரியருக்கு வழமையான கோபத்தில் கண்கள் சிவந்தன.

"இங்கே சுந்தரம். இதுக்கு மிஞ்சி நான் உங்களுக்கு கூடக் கூலி தர ஏலாது. சும்மா வந்து நச்சரிக்காதீங்கோ! விருப்பமெண்டா என்ர வயலில் வேல செய்யுங்கோ. இல்லாட்டி நான் பக்கத்து உரில் இருந்து ஆக்களெடுக்கிறேன்."

"ஐயா......! உங்கள விட்டா நாங்க யாரிட்ட ஐயா போறது?"

"விளங்குதெல்லா? அப்ப போய் வேலையைப் பாருங்கோ!" கூறிவிட்டு நடந்தார் சூரியர்.

அங்கிருந்த அருணனுக்கு சூரியரின் நடத்தைகள் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. மனதில் பொங்கிய ஆதங்கத்தைக் கொட்டினான்.

"ஏனப்பா இப்படிச் செய்யிறீங்கள்?"

"நீ சும்மா இரு மகன். நீ சின்னப் பெடியன். இதெல்லாம் உனக்குத் தேவையில்ல. இப்படியிருந்தாத்தான் நாலு காசு கூடச் சம்பாதிக்கலாம்."

"சும்மா விசர்க்கத கதைக்காதீங்க அப்பா, பாவம் அந்தச் சனங்கள். நீங்க இப்படிக் கொடுமைப் படுத்தினா பிறகு உங்களுக்கு ஏதுக்குமேண்டாக்கூட நாயும் நாடாது."

சூரியரின் வயிற்றில் அனல் கக்கியது. மகனின் மீதான ஆத்திரமும் கூலியாட்கள் மீதான ஆத்திரமும் சேர்த்து சூரியரின் கைகள் அருணனின் முகத்தில் பளாரெனப் பதிந்தன.

இது இவ்வாறிருக்கையில் தான் சூரியரின் குடும்பத்தில் அந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது. நகரத்துக்கு பாடசாலைக்குச் சென்று அருணன் திரும்பும் போது வானில் வட்டமடித்த அந்த வான் அனல் கழுகுகளின் எச்சம் அருணனின் உயிரைக் குடித்தது. சதைக் குவியல்களிலிருந்து அவனை பொறுக்கியெடுத்தார்கள்.

சூரியனின் கல்மனதில் ஆயிரம் மின்னல் வெட்டுக்கள். மகனின் ஈறுதி நிகழ்வில் கலந்து கொண்டோரில் சிலரின் குரல்கள் அவரின் காதில் விழுந்தன.

"இவ்வளவு சனமும் இவருக்காண்டியே வந்திருக்கு எண்டு நினைக்கிறாய். அதில்ல இவர் செத்தா ஒரு நாய்கூட எட்டிப் பார்க்காது. எல்லாம் அந்த பெடியன்ர நல்ல குணத்துக்குத்தான்."

"இப்பிடியொரு மனிதனுக்கு இப்பிடியோரு நல்ல பிள்ள இருக்கிறது கடவுளுக்கே பொறுக்கேல போல!"

குறுக்கா ஓடிய கன்றுக் குட்டியை கண்டு தடுப்பை பிரயோகித்தார் சூரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டார் சைக்கிள் சர்.... என்ற ஒலியுடன் இழுபட்டு நின்றது. நேரம் நன்றாகச் சென்றுவிட்டதை முதுகில் சுட்ட வெயில் உணர்த்தியது. கண்ணோரம் துளிர்த்திருந்த கண்ணீரை ஒற்றிவிட்டு மீண்டும் வேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தலானார் அவர்.

முன்னால் இருந்த திருப்பத்தில் வேகமாக வண்டியை திருப்ப மீண்டும் ஒருமுறை சறுக்கியது. அவர் சுதாகரித்துக் கொள்ள முன் ஒரு நாய் குறுக்காக ஓடியது. "பிறேக்" அடித்தால் தூக்கி வீசப்பட்டுவிடுவோம் என்பதை கருத்தில் கொண்ட சூரியர் சட்டென திருப்ப முயற்சிக்கவே.... முன்னாலுள்ள சந்தியிலிருந்து வேகமாக ஒரு பார ஊர்தி திரும்பியது. நிலையிழந்த சூரியனின் மோட்டார் சைக்கிள் பார ஊர்திக்கு நேரே!

அடுத்து என்ன நடந்தத என்று சூரியருக்கு தெரியவில்லை.

சூரியர் கண்விழித்தார். முன்னே மங்கலாகத் தெரிந்த உருவங்களை உற்று நோக்கினார். அது அவரின் மனைவியும் தாயும். கண்கள் கலங்க கைகளைக் கூப்பினாள் மனைவி. "என்ன.... நடந்.... தது?

கஷ்ரப்பட்டு வார்த்தைகளை உச்சரித்தார் சூரியர்.

"நீங்க அடிபட்டு ரெண்டு நாளாச்சு. நல்லா ரத்தம் போயிட்டு. உங்க ரெத்தம் ஏதோ "ஓ" குறுப்பாம். ஒரு இடமும் இல்ல. பிறகு அகிலன் தம்பிதான் ஓடிவந்து தந்தது. பாவம்.... நீங்க காசுகுடுக்க நான் பேசிப்போட்டன்.....! கண்ணீர்க்குமிழிகள் உடைந்து விழ அந்த தளதளத்த குரல் மனைவியிடமிருந்து வந்தது. சூரியனின் உள்ளத்திலிருந்து வார்த்தைகள் எழுந்தன.

"பரிமளம் யாருக்கு எப்ப என்ன நடக்குமெண்டு யாருக்கும் தெரியாது. இண்டைக்கு இருக்கிறவன் நாளைக்கு இருப்பானோ எண்டிறதே சந்தேகம்தான். ஆனா அவன் நல்லவனா இருந்தா மற்றவர்களுக்கு உதவி செய்யிறவனா இருந்தா அவனுக்கு ஆயுளுக்கு முடிவில்ல. ஒரு மனிதன் செத்தா சிலவேளை தெரிஞ்சவன்கூட வரமாட்டான். ஆனா ஒரு நல்ல மனிதன் செத்தா தெரியாதவன் கூடவருவான். இதெல்லாம் நான் சொல்லேல. என்ர.... என்ர.... மகன் சொன்னது. இந்த அறிவு கெட்ட ஜென்மத்துக்கு அறிவுபுகட்டிட்டு அவன் போயிட்டான்". பீறிய கண்ணீரை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"பேசன்ர டிஸ்ரொப் பண்ணவேண்டாம்." எங்கிருந்தோ குரல் வர நகர்ந்தார்கள் அவரின்ட மனைவியும் தாயும் யன்னல் இடுக்கினூடு கசிந்து அவர்களின் முதுகில் பட்ட மாலைநேரச் சூரியனின் கதிர்கள் அவர்கள் செல்லும் திசை கிழக்கென்பதைக் கூறின.

பிரிவு: 5 - சிறுகதை ஆக்கப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற சிறுகதை

செல்வன். இ. ரிஷிகாந்த்
கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" துன்பத்தை பகிர்ந்து கொள் - அது ஆறுதல்
அன்பை பகிர்ந்து கொள் அது - பெருக்கத்தின் சேமிப்பு"

# சொந்தங்களுக்காக ஒரு சொல்

இந்த இயந்திர யுகத்தில்
உணர்வுகளைத் தொலைத்து
இயந்திரமாய் இறுகிவிட்ட
இனிய உறவுகளே,
சந்தோசத்தை தொலைத்து விட்டு
துயரத்தை துணையாக்கி
சோகமாய் வாழும் சொந்தங்களே,
உங்களை நினைத்து
தினம் வருந்தும் நான் இன்று
உங்கள் மனதுடன்
ஒரு நிமிஷம் பேசுகின்றேன்.

மரங்களை வளர்ப்பது மனிதனானாலும்
மரங்களின் சொந்தம் மனிதரல்ல
எனினும் புன்னகைக்கும் பூக்களும் இலைகளும் தான்.
மலர்களைக் காலையில்
மரங்கள் பிரசவிக்கின்றன.
ஆனால் அந்தியில் தன் சிசு
உதிர்ந்து கருகும் போது அழுதாலும்
அழுதே வாடி விடுவதில்லை.
நிமிர்ந்து நிற்கின்றன நாளை மலரும் மலருக்காய்.

இலையுதிர் காலத்தில் உதிரும்
கடைசி இலைக்காகக் கூட
மரங்கள் கருகி விடுவதில்லை.
மீண்டும் துளிர்த்து விடும் நம்பிக்கையில்
வசந்தத்தை எதிர்நோக்கிக்
காத்திருக்கின்றன.
மௌனமாய் தம் சோகங்களைத்
தென்றலுடன் பகிர்ந்தவாறு
என் இனிய உறவுகளே,
இந்த மரத்திடமிருந்தாவது நீங்கள்
கற்றுங்கொள்ளுங்களேன்.
இரவும் பகலும் வருவது இயற்கை.
இரவின் நினைவுக்குள் ஏன் பகலை இழக்கின்றீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து போன காலத்தில்
நிகழ்ந்து விட்ட சம்பவங்கள்
கசப்பான ஞாபகங்கள், முள் போன்ற சோகம்
இதை நினைத்து வருந்துவதில்
இனியென்ன இலாபம்?
கடந்தகால சோகங்களை
நெஞ்சுக்குள் பூட்டாதீர்.
பாதுகாத்து வைப்பதற்கு
சோகங்கள் புனிதமானவையல்ல.
நேற்றுப் பெய்த மழைக்கு
இன்று குடை பிடிப்பதேன்?
எனக்குப் புரியவில்லை.

உன் நெஞ்சுக்குள் நிறைந்து
நெருஞ்சி முள்ளாய் உறுத்தும்
சோகத்தை அடைத்து வைத்தால்
உன் இதயத்திலிருந்து
இரத்தம் தான் வழியுமே தவிர
இன்னிசை கேட்காது.
ஆழ்கடலில் இல்லை சந்தோச அலைகள்
இதனைப் புரிந்து கொண்டு நீயும்
பகிர்ந்து கொள் சோகங்களை.

அந்நியரிடமல்ல
அன்பான அன்னையிடம்
பாசமான சகோதரியிடம்
ப்ரியமான தோழியிடம்.
உன்னை நேசிக்கும் உறவுகள்
நிச்சயமாய் புரிந்து கொள்வர்
உன்னையும் உன் சோகங்களையும்
அவர்கள் கூறும் ஆறுதல் வார்த்தைகள்
கேட்கையில் மட்டுமல்ல,
உன் ப்ரியமான உறவிடம்
சோகத்தைப் பகிர்ந்து கொண்டு
தோள் சாய்ந்து இருந்து விடும்
அந்த நொடியிலும்
அன்பாக அரவணைத்து ஆறுதல் தந்து நிற்கும்
அன்பான உறவின் மடியில்
முகம் புதைத்து அழுகின்ற
அந்த ஒரு நிமிஷத்திலும்
கண்டு கொள்வாய் நீ ஆறுதலை
அந்த ஆறுதல் புயலில்
துயரங்கள் சருகானதாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாய் நீ உணர்வாய்
தனிமரம் நீ தோப்பாவாய்
உன் வானில் இருந்த சோக மேகங்கள்
கண்ணில் தோன்றாமல்
கலைந்து போய் விடும்.

மனிதர்களே
என் மனதில் ஒரு சந்தேகம்
ஐந்தறி ஜீவனுக்குள்ளும் அன்பை விதைத்த இறைவன்
உங்களுக்குள் மட்டும் ஏன்
விதைக்க மறுத்து விட்டான்?
இறைவன் வஞ்சித்தானா?
அன்றி இறைவன் தந்த
அன்பைத் தொலைத்து விட்டு
இயந்திர யுகத்தில் நீர்
இயந்திரமாய் அலைகின்றீரே.
என்றாவது...
அன்புமனம் சேர்க்க நினைத்ததுண்டா?
வாழ்க்கைப் பூங்காவில்
பூக்களை மலர வைக்க
அன்பால் தானே முடியும்
பன்றிக்குப் பால் கொடுத்த சிறுவனும்,
புறாவின் உயிர்காத்த புத்தரும்,
மானுக்குப் பிணைநின்ற நபியும்
மானிடருக்காய் மரித்த யேசுவும்
அன்பைத் தானே ஆதாரமாய் கொண்டார்கள்.
இன்னுமா புரியவில்லை அன்பின் மகிமை?
தாயின் அன்பிற்காய் தவிக்கும் சிசுவிடமும்
தள்ளாடிப் போன வயதிலும்
பெற்ற பிள்ளையின் பாசத்திற்காய்
ஏங்கும் தாயிடமும்
கேட்டுப் பாருங்கள் அன்பின் அவசியத்தை
சொந்தங்கள், சுற்றங்கள்,
ஸ்நேகங்களில் மட்டுமல்ல.
பூமித்தாய் சுமக்கும்
ஒவ்வோர் ஜீவனிடமும்
அன்பைத் தவழ விடுங்கள்.
ஆழ்கடலில் மூழ்கி அன்பு முத்தெடுத்து
அனைவருக்கும் வழங்குங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பை வழங்குவதில்
வேண்டாம் கஞ்சத்தனம்
உம் அன்பு தரும் சொந்தம் தான்
வாழ்வின் நிரந்தர செல்வம்.

என் மனங்கவர்ந்த உறவுகளே.
இறுதியாய் ஓர் வார்த்தை
உங்களுக்காய் கூறுகின்றேன்.
சோகத்தை சுமக்க உம் கையே போதுமென
அன்பில்லா நிசப்தத்துள் உங்கள்
வாழ்வைத் தொலைத்து,
அன்பை மறுத்துத் தனிமரமாகி,
உயிரற்ற உடலாய் இறுகிப் போகாமல்
ரோஜாவை மட்டுமன்றி
முள்ளையும் நேசியுங்கள்
உலகம் உங்கள் கண்ணில்
புதிதாய் மலர்ந்து அழகாய் விரியும்.

**(பிரிவு 5 இல் கவிதை ஆக்கம் நிகழ்ச்சியில் முதலிடம் பெற்ற கவிதை**

**செல்வி. இ. சுதர்சனா**
**வ/ சைவப் பிரகாச மகளிர் கல்லூரி**
**வவுனியா தெற்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி – 2002
## தேசிய மட்டத்தில் பரிசு பெற்ற வடக்கு கிழக்கு மாகாண மாணவர்கள்

| நிகழ் இல. | நிகழ்ச்சி | பிரிவு | இடம் | மாணவர் பெயர் | பாடசாலையின் பெயர் | வலயம் |
|---|---|---|---|---|---|---|
| | | 05 | 01 | செல்வி. ஹம்சத்வனி | தி/ஸ்ரீ சண்முகா இ.ம.க. | திருகோணமலை |
| 4. 14 | இசை | குழுI | 03 | -குழு- | வ/இறம்பைக்குளம் ம.ம.வி | வவு. தெற்கு |
| 4. 15 | இசை | குழுII | 01 | -குழு- | மட்/புனித மிக்கேல் க. | மட்டக்களப்பு |
| 4. 16 | நடனம் | 01 | 01 | செல்வி. சி. கபிலாஷிதா | தி/ஸ்ரீ சண்முகா இ.ம.க. | திருகோணமலை |
| | | 02 | 01 | செல்வன். க. தனஞ்சயன் | திரு/புனித மிக்கேல் க. | மட்டக்களப்பு |
| | | 03 | 02 | செல்வன். த. மோகனப்பிரியன் | மட்/புனித மிக்கேல் க. | மட்டக்களப்பு |
| | | 04 | 01 | செல்வி. வி. ஜீவிகா | யா/யூனியன் கல்லூரி | தெல்லிப்பளை வலிகாமம் |
| | | 05 | 01 | செல்வி. சி. தேவந்தி | யா/வேம்படி மகளிர் கல். | யாழ்ப்பாணம் |
| 4. 17 | நடனம் | குழுI | 01 | -குழு- | மன்/சித்தி விநாயகர் இ.க. | மன்னார் |
| 4. 18 | நடனம் | குழுII | 01 | -குழு- | யா/இராமநாதன் கல்லூரி | வலிகாமம் |
| 4. 19 | நாடகம் | தி.போ | 01 | -குழு- | தி/புனித சூசையப்பர் க. | திருகோணமலை |
| 4. 21 | விவாதம் | தி.போ | 03 | -குழு- | தி/இ.கி.மி. ஸ்ரீ கோணேஸ்-வரா இந்துக் கல்லூரி | திருகோணமலை |
| 4. 22 | தமிழறிவு வினாவிடை | தி.போ | 01 | -குழு- | யா/மகாஜனக் கல்லூரி | திருகோணமலை |
| 4. 23 | முஸ்லிம் நிகழ்ச்சி | தி.போ | 01 | செல்வன். ஜாபிர் நாளி முகம்மது | கமு/மருதானை அல்-மனார் ம.கல்லூரி | கல்முனை |
| 4. 23 | தமிழ்-உறுப்பெழு-த்து சிங்கள மாணவர் | வி.பி.1 | 03 | செல்வன். ஐ.பி. ஆசிறி சமர நாயக்க | தி / திஸ்ஸ மகா. வி. | திருகோணமலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொ இல. | நிகழ் இல. | நிகழ்ச்சி | பிரிவு | நிலை | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4.1 | வாசிப்பு | 1 | 1 | செல்வி. ம. மதுரி | வ/இறம்பைக்குளம் ம. ம. வி | வவு. தெற்கு | வவுனியா |
| | | | | 2 | செல்வன் மு. சஞ்சீவன் | மன்/புனிதசவேரியார் ஆண் கல்லூரி | மன்னார் | மன்னார் |
| | | | | 2 | செல்வி பா. சிந்துஜா | யா /யாழ்ப்பாணக் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் |
| 2 | 4.1 | வாசிப்பு | 2 | 1 | செல்வன் ஏ.என்.எம். தில்சான் | கமு /ஸாகிரா கல்லூரி | கல்முனை | கல்முனை |
| | | | | 2 | செல்வி பி. பிரதாஜினி | வ/வவு சைவப் பிரகாச மகளிர் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் |
| | | | | 3 | செல்வி இ. இரஜந்தினி | தி /ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி | வவுனியா தெ. | வவுனியா |
| 3 | 4.2 | ஆக்கத்திறன் வெளிப்பாடு கதைகூறல் | 1 | 1 | செல்வன் ஜெ. ஜெயமாருதி | கிளி/ இராமநாதபுரம் மகா வித்தி. | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி க. யாழினி | யா/வட இந்து ம. கல்லூரி | கிளிநொச்சி | கிளிநொச்சி |
| | | | | 3 | செல்வன் க. டிலோஜன் | மன்/புனித சவேரியார் ஆண் கல்லூரி | மன்னார் | மன்னார் |
| 4 | 4.3 | ஆக்கம் எழுத்து | 1 | 1 | செல்வி பு. பவித்திரா | தி/புனித பிரான்சிஸ் சவேரியார் ம. வி. | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி எம்.சத்தீக்கா | கமு/இறக்காமல் அல்-அஸ்ரப் ம. வி. | சம்மாந்துறை | கல்முனை |
| | | | | 3 | செல்வன் கோபிநாத் | யா / மாணிப்பாய் விவேகானந்தா ம. வி. | வலிகாமம் | யாழ்ப்பாணம் |
| 5 | 4.4 | கட்டுரை வரைதல் கடிதம் எழுதுதல் | 2 | 1 | செல்வன் செ. செல்வநிவேதனன் | யா / யாழ் இந்துக் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| | | | | 2 | செல்வன் துசாந்த் | தி /ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 3 | செல்வி எம்.ஆர். ஜெசாரா | கமு / அல் மனார் மத்திய கல்லூரி | கல்முனை | கல்முனை |
| 6 | 4.4 | கட்டுரை வரைதல் | 3 | 1 | செல்வி யோ. தர்ஷினி | தி /புனித மரியாள் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி என்.நபிஹா பேகம் | அக் / ஆயிர் பாலிகா ம. வி | அக்கறைப்பற்று | கல்முனை |
| | | | | 3 | செல்வி சி. இலக்கியா | யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி | வடமாராட்சி | யாழ்ப்பாணம் |
| 7 | 4.5 | கட்டுரை சுருக்கம் கவிதை நயம்சுருகம் எழுதுதல் | 4 | 1 | செல்வி செ. கார்த்திகா | யா / உடையார் கட்டு ம. வி | முல்லைத்தீவு | முல்லைத்தீவு |
| | | | | 2 | செல்வி ம. உமைசொரூபி | கிளி /புனித திரேசா பெண்கள் கல்லூரி | கிளிநொச்சி | கிளிநொச்சி |
| | | | | 3 | செல்வன் ஏ.ஆர் எம் அர்சத் | யா / உடையார் கட்டு ம. வி | சம்மாந்துறை | கல்முனை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி – 2002
## தேசிய மட்டத்தில் பரிசு பெற்ற வடக்கு கிழக்கு மாகாண மாணவர்கள்

| நிகழ் இல. | நிகழ்ச்சி | பிரிவு | இடம் | மாணவர் பெயர் | பாடசாலையின் பெயர் | வலயம் |
|---|---|---|---|---|---|---|
| 4. 1 | வாசிப்பு | 01 | 01 | செல்வி. மனோகரன்மதுரி | வ/இரம்பைக்குளம் ம.ம.வி | வவு. தெற்கு |
| | | 02 | 01 | செல்வன். எம்.என்.எம். தில்ஷான் | கமு/ஸாஹிரா கல்லூரி | கல்முனை |
| 4. 2 | ஆக்கத்திறன் வெளிப்பாடு கதைகூறல் | 01 | 03 | செல்வன். ஜெயராஜா ஜெயமாருதி | கிளி/இராமநாதபுரம் ம.வி | கிளிநொச்சி |
| 4. 3 | ஆக்கம் எழுத்து | 01 | 02 | செல்வி. பவித்திரா | தி/புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி | திருகோணமலை |
| 4. 4 | கட்டுரைவரைதல் கடிதம்எழுதுதல் | 03 | 02 | செல்வி. யோ. தர்சினி | தி/புனித மரியாள்கல்லூரி | திருகோணமலை |
| 4. 5 | கட்டுரைவரைதல் சுருக்கம்எழுதுதல் கவிதை நயத்தல் | 04 | 02 | செல்வி. செல்வநாயகம் கார்த்திகா | மு/உடையார்கட்டு ம.வி | முல்லைத்தீவு |
| 4. 6 | தமிழியற்கட்டுரை திறனாய்வுசெய்தல் இலக்கியச் சொற் பொலிவு ஆக்கம், இலக்கண வினா க்களுக்கு விடை எழுதுதல். | 05 | 03 | செல்வி. தர்மராஜா அநிந்திதை | வ/சைவபிரகாச ம.ம. வித் | வவு தெற்கு |
| 4. 7 | குறுநாடகஆக்கம் | தி.போ | 02 | செல்வி. பா. நர்மதா | யா/மல்லாகப் ம.ம.வி | வலிகாமம் |
| 4. 8 | கவிதை ஆக்கம் | 04 | 02 | செல்வி. எம்.எம். சஜிதா | கமு/அல் மனார் ம. கல், | கல்முனை |
| 4. 9 | சிறுகதை ஆக்கம் | 04 | 01 | செல்வி. ஏ.யூ.பாத்திமாஹனி | அக்/ஆயிஷா மகளிர்ம.வி | அக்கரைப்பற்று |
| 4.10 | பேச்சு | 02 | 01 | செல்வி. பிலிப் கேஷினி | தி/புனிதமரியாள் கல்லூரி | திருகோணமலை |
| | | 03 | 03 | செல்வன். கி. சிவபிரசாத் | தி/இ.கி.மி. ஸ்ரீ கோணேஸ் -வரா இந்துக் கல்லூரி | திருகோணமலை |
| | | 04 | 01 | செல்வி. வி. வினுஜா | தி/புனிதமரியாள் கல்லூரி | திருகோணமலை |
| | | 05 | 03 | செல்வி. சி. அகல்யா | வ/இறம்பைக்குளம் ம.ம.வி | வவு. தெற்கு |
| 4.11 | பேச்சு | 01 | 01 | செல்வி. ஹிதாயத்துல்லா | கமு/அல் மனார் ம.கல் | கல்முனை |
| | | 02 | 03 | செல்வி. ஆ. ரம்மியா | கிளி / கனகாம்பிகைக் குளம் அதகபா | கிளிநொச்சி |
| | | 03 | 02 | செல்வி. செ. பிரிந்திகா | வ/இறம்பைக்குளம் ம.ம.வி | வவு. தெற்கு |
| | | 04 | 02 | செல்வி. சி. ஜயந்த ரூபிகா | தி/ஸ்ரீ சண்முகா இ.ம.க. | திருகோணமலை |
| | | 05 | 01 | செலவன். சீ. ரஜீவ் | தி/இ.கி.மி. ஸ்ரீ கோணேஸ் வரா இந்துக் கல்லூரி | திருகோணமலை |
| 4.12 | இசையும் அசைவும் | 01 | 01 | செல்வன். த. தர்ஷாத் | தி/புனித சூசையப்பர் க. | திருகோணமலை |
| 4.13 | இசை | 02 | 01 | செல்வி. மா. ஷயுக்ஷினி | தி/ஸ்ரீ சண்முகா இ.ம.க. | திருகோணமலை |
| | | 03 | 01 | செல்வி. கி. வாசுகி | யா/மாணிப்பாய் ம. கல்லூ | வலிகாமம் |
| | | 04 | 03 | செல்வி. வெ. சுபஹரி | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | வலிகாமம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தினப்போட்டி – 2002
## பரிசுகளும், சான்றிதழ்களும் பெற்ற மாணவர்கள் விபரம்.

| தொ இல. | நிகழ் இல. | நிகழ்ச்சி | பிரிவு | நிலை | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4.6 | தமிழியற் கட்டுரை வரைதல் திறநாய்வு இலக்கிய சொற்பொழிவு ஆக்கம். | 5 | 1 | செல்வி த. சுநிந்திதை | வ/வவு சைவப் பிரகாச மகனிர் கல்லூரி | வவுனியா தெ. | வவுனியா |
| | | | | 2 | செல்வி சு. பிறைசுற்றி குருஸ் | மன்/பற்றிமா ம. வி. | மன்னார் | மன்னார் |
| | | | | 3 | செல்வி..கணபதிப்பிள்ளை ரோகிணி | மட்/ செட்டிப்பாளயம் ம. வி. | பட்டிருப்பு | மட்டக்களப்பு |
| | | | | 3 | செல்வி எம்.எ.எம்.நுஸ்ரத் | அக் /பாயிர் ம. வி. கல்லூரி | அக்கரைப்பற்று | கல்முனை |
| 9 | 4.7 | குறுநாடகம் | தி.போ | 1 | செல்வி பா. நர்மதா | யா/மல்லாகம் ம.வி. | வலிகாமம் | யாழ்ப்பாணம் |
| | | | | 2 | செல்வி செ. சிவசங்கரி | கிளி /கிளிநொச்சி மத்தய கல்லூரி | கிளிநொச்சி | கிளிநொச்சி |
| | | | | 3 | செல்வி சு. சேதுமதி | மு/ வற்றாப்பளை ம. வி. | முல்லைத்தீவு | முல்லைத்தீவு |
| 10 | 4.8 | கவிதை ஆக்கம் | 4 | 1 | செல்வி எம்.எம்.சாஜிதா | கமு / அல்மனார் மத்திய கல்லூரி | கல்முனை | கல்முனை |
| | | | | 2 | செல்வன் மு.உ..மு. சப்ரான் | மட்/ஓட்டமாவடி தேசிய பாடசாலை | கல்குடா | மட்டக்களப்பு |
| | | | | 3 | செல்வி. எம்.எஸ். ஹாமைரா ரஸாத் | தி/பேராற்றுவெளி முஸ்லிம் ம. வி. | கந்தளாய் | திருமலை |
| 11 | 4.8 | கவிதை ஆக்கம் | 5 | 1 | செல்வன் இ. வாசீகா | யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் |
| | | | | 2 | செல்வன் எஸ்.ஏ.சி.எம். அஸ்வத் | கமு /அல்-பஹ்றியா ம. வி | கல்முனை | கல்முனை |
| | | | | 3 | செல்வன் எம்.ஆர்.எம்.ஜெஸ்மின் | தி /அல்-தாரிக் ம. வி. | கந்தளாய் | திருமலை |
| 12 | 4.9 | சிறுகதை ஆக்கம் | 4 | 1 | செல்வி ஏ.யூ. பாத்திமா ஹனி | அக்/ஆயிஸா ம. வி | அக்கரைப்பற்று | கல்முனை |
| | | | | 2 | செல்வி மேரி சிந்துஜா | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| | | | | 3 | செல்வன் இஸ்மாலெப்பைசயாத் | மட் /வாழைச்சேனை அந்நூர் தேசிய பாட. | கல்குடா | மட்டக்களப்பு |
| 13 | 4.9 | சிறுகதை ஆக்கம் | 5 | 1 | செல்வன் சீனித்தம்பி ரஜீவ் | மட் / புனித மைக்கல் தேசிய பாடசாலை. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| | | | | 2 | செல்வன் வே. சாரங்கன் | யா/இந்துக் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| | | | | 3 | செல்வன் சு. பார்த்திப்ராஜ் | ய/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி | திருமலை | திருமலை |
| 14 | 4.10 | பேச்சு | 1 | 1 | செல்வன் ம. மயூரதன் | தி/ இகிச ஸ்ரீ கோணேஸ்வரா இ. க. | கிளிநொச்சி | கிளிநொச்சி |
| | | | | 2 | செல்வி ம. சாஹனா | கிளி / கனகபுரம் மகா. வி. | சம்மாந்துறை | கல்முனை |
| | | | | 3 | செல்வி சௌ. சேபாசௌசியா | மட் / செங்கலடி ம. வி | கல்குடா | மட்டக்களப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தினப்போட்டி – 2002
## பரிசுகளும், சான்றிதழ்களும் பெற்ற மாணவர்கள் விபரம்.

| தொ இல. | நிகழ் இல. | நிகழ்ச்சி | பிரிவு | நிலை | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 4.10 | பேச்சு | 2 | 1 | செல்வி பி. கேசினி எஞ்சலா | தி/புனித மரியாள் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வன் ந. ஜெனன் | வ/கல்மடு படிவம் 1 அதகபா | வவுனியா வட | வவுனியா |
| | | | | 3 | செல்வன் க. கலைராஜ் | மட்/ வந்தாறுமூலை ஸ்ரீமகா விஸ்ணு வி. | கல்குடா | மட்டக்களப்பு |
| 16 | 4.10 | பேச்சு | 3 | 1 | செல்வன் கி.சிவபிரசாத் | தி/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வன் து. கிரோஜன் | மட் / புனித மைக்கல் தேசிய பாடசாலை. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| | | | | 3 | செல்வி சோ. கிருஸ்ணவேணி | வ/கல்மடு படிவம் 1 அதகபா | வவுனியா வட | வவுனியா |
| 17 | 4.10 | பேச்சு | 4 | 1 | செல்வி வி. வினுஜா | தி/புனித மரியாள் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி மரீன் வினித்தா | மட்/புனித சிசிலியா பெண்கள் ம. க.ல்லு | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| | | | | 3 | செல்வி. க. சிந்துஜா | வ/இறம்பைக்குளம் ம. வித்தியாலயம் | வவுனியா வட | வவுனியா |
| 18 | 4.10 | பேச்சு | 5 | 1 | செல்வி சி. அகல்யா | வ/இறம்பைக்குளம் ம. வித்தியாலயம் | வவுனியா வட | வவுனியா |
| | | | | 2 | செல்வி ஜெ. ஜனனி | தி/புனித மரியாள் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 3 | செல்வி சு.சுந்தரவாம்பிகை | மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி | மன்னார் | மன்னார் |
| | | | | 3 | செல்வன் ச. நிரோஜன் | மு / புதுக்குடியிருப்பு ம. வித்தியாலயம். | முல்லைத்தீவு | முல்லைத்தீவு |
| 19 | 4.11 | பாவோதல் | 1 | 1 | செல்வி எச். றுஸ்தியா | கமு / அல் மனார் மத்திய கல்லூரி. | கல்முனை | கல்முனை |
| | | | | 2 | செல்வி மு. ஹம்சத்வனி | மன்/ சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி. | மன்னார் | மன்னார் |
| | | | | 3 | செல்வன் ம. ரகுபரன் | தி/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி | திருமலை | திருமலை |
| 20 | 4.11 | பாவோதல் | 1 | 1 | செல்வி ஆ. ரம்மியா | கிளி / கனகாம்பிகைக் குளம் அதகபா | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| | | | | 2 | செல்வி சி. துவரகா | மு/முருகானந்தா ம.வி. | முல்லைத்தீவு | முல்லைத்தீவு |
| | | | | 3 | செல்வன் கோ. பிரசன்னா | வ/ தமிழ் மகா வித்தியாலயம் | வவுனியா தெ. | வவுனியா |
| 21 | 4.11 | பாவோதல் | 3 | 1 | செல்வி செ. பிரிந்திகா | வ/இறம்பைக்குளம் ம. வித்தியாலயம் | வவுனியா தெ. | வவுனியா |
| | | | | 2 | செல்வி யோ. கவிதா | தி / உவர் மலை விவேகானந்தா கல். | திருமலை | திருமலை |
| | | | | 3 | செல்வி ச. ஆன்வித்தியா | மட் / சிசிலியா பெண்கள் ம. வி. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தினப்போட்டி – 2002
## பரிசுகளும், சான்றிதழ்களும் பெற்ற மாணவர்கள் விபரம்.

| தொ இல. | நிகழ் இல. | நிகழ்ச்சி | பிரிவு | நிலை | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 22 | 4.11 | பாவோதல் | 4 | 1 | செல்வி சி. சயந்தரூபிகா | தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி. | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி எச். எஸ். டஹானா | கமு / அல்மனார் மத்திய கல்லூரி. | கல்முனை | கல்முனை |
| | | | | 3 | செல்வன் சி. விநோதன் | வ/ தமிழ் ம. ம. வி | வவுனியா தெ | வவுனியா |
| 23 | 4.11 | பாவோதல் | 5 | 1 | செல்வன் சி. ரஜீவ் | தி/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி சி. சைத்ரா | வ/இறம்பைக்குளம் ம. வித்தியாலயம் | வவுனியா தெ | வவுனியா |
| | | | | 3 | செல்வன் ம. தருவரங்கன் | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் |
| 24 | 4.12 | இசையும் அசைவும் | 1 | 1 | செல்வன் த. தா்சாந் | தி/புனித சூசையப்பா் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி லோ. அபிராமி | வ/பூந்தோட்டம் அதகபா | வவுனியா தெ | வவுனியா |
| | | | | 3 | செல்வி. பா. பிரதாயினி | மட்/புனித சிசிலியா பெண்கள் ம. க. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| 25 | 4.13 | இசை - தனி | 2 | 1 | செல்வி மா. சயுக்சனி | தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி. | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி யோ.பிரவீனா | மட்/வின்சன் மகளிர் உயர்தர பாட. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| | | | | 3 | செல்வன் சுரசாசித்தன் | யா/பரியோவான் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 26 | 4.13 | இசை-தனி | 3 | 1 | செல்வி கி. வாசுகி | யா / மானிப்பாய் மகளிர் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் |
| | | | | 2 | செல்வி சு. வா்ஜிகா | மு/ புதுக்குடியிருப்பு ம. வி | முல்லைத்தீவு | முல்லைத்தீவு |
| | | | | 3 | செல்வி ர. ஐஸ்வா்யா | தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி. | திருமலை | திருமலை |
| 27 | 4.13 | இசை-தனி | 4 | 1 | செல்வி வெ. சுபகரி | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| | | | | 2 | செல்வி நிவேதனாஇன்பதுரை | மட்/புனித சிசிலியா பெண்கள் ம. க. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| | | | | 3 | செல்வன் க. ஜெயரூபன் | வ/விபுலானந்த ம.வி. | வவுனியா தெ. | வவுனியா |
| 28 | 4.13 | இசை-தனி | 5 | 1 | செல்வி பா.ஹம்சத்வனி | தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி. | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி யோ. நிவேதா | மட்/வின்சன் மகளிர் உயர்தர பாட. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| | | | | 3 | செல்வன் க. ஜெயந்தன் | வ/விபுலானந்த ம.வி. | வவுனியா தெ. | வவுனியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தினப்போட்டி – 2002
## பரிசுகளும், சான்றிதழ்களும் பெற்ற மாணவர்கள் விபரம்.

| தொ இல. | நிகழ் இல. | நிகழ்ச்சி | பிரிவு | நிலை | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 29 | 4.14 | இசை | குழு 1 | 1 | ************ | வ/இறம்பைக்குளம் ம. வித்தியாலயம் | வவுனியா தெ. | வவுனியா |
| | | | | 2 | ************ | மு /இரணைப்பாலை ம. வித்தியாலயம். | முல்லைத்தீவு | முல்லைத்தீவு |
| | | | | 3 | ************ | தி/ கட்டைப்பறிச்சான் விபுலானந்த வித்தி | மூதூர் | திருமலை |
| | | | | | ************ | மட் /மெதடிஸ் மத்திய கல்லூரி | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| 30 | 4.15 | இசை | குழு 11 | 1 | ************ | மட்/புனித மிக்கேல் கல்லூரி | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| | | | | 2 | ************ | கமு/ஸாஹிரா தேசிய கல்லூரி | கல்முனை | கல்முனை |
| | | | | 3 | ************ | தி/ ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | திருமலை | திருமலை |
| 31 | 4.16 | நடனம்-தனி | 1 | 1 | செல்வி கி. கபிராசிதா | தி/ ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி. ச. நாகத்துசிளி | மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி | மன்னார் | மன்னார் |
| | | | | 3 | செல்வி த. ஸெனரஞ்சனி | மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் | முல்லைத்தீவு | முல்லைத்தீவு |
| | | | | 3 | செல்வி பா. கீர்த்தனா | யா / பெரியபுலம் ம. வி. | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 32 | 4.16 | நடனம்-தனி | 2 | 1 | செல்வன் க. தனஞ்ஜெயன் | மட்/புனித மிக்கேல் கல்லூரி | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| | | | | 2 | செல்வி இ. சாகித்தியா | தி/ ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 3 | செல்வி சி. கோபிகா | வவு / வவுனியா தமிழ் ம. வி. | வவுனியா தெ. | வவுனியா |
| 33 | 4.16 | நடனம்-தனி | 3 | 1 | செல்வன் த. மோகனப்பிரியன் | மட்/புனித மிக்கேல் கல்லூரி | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| | | | | 2 | செல்வி தெ. சரஸ்னியா | தி/ ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 3 | செல்வி இ. ஹிந்துஜா | வ/இறம்பைக்குளம் ம. வித்தியாலயம் | வவுனியா தெ. | வவுனியா |
| 34 | 4.16 | நடனம்-தனி | 4 | 1 | செல்வி வி. ஜீவிகா | யா/யூனியன்கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் |
| | | | | 2 | செல்வி ம. உமைரூபி | வ/இறம்பைக்குளம் ம. வித்தியாலயம் | வவுனியா தெ. | வவுனியா |
| | | | | 3 | செல்வி ஜெ. ஜெயதாரணி | மட்/புனித கல்லூரி கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 3 | செல்வி உ. தர்மினி | மட் / சிசிலியா பெண்கள் ம. வி. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தினப்போட்டி – 2002
## பரிசுகளும், சான்றிதழ்களும் பெற்ற மாணவர்கள் விபரம்.

| தொ இல. | நிகழ் இல. | நிகழ்ச்சி | பிரிவு | நிலை | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 35 | 4.16 | நடனம்-தனி | 5 | 1 | செல்வி சி. தேவந்தி | யா/வேம்படி மகளிர் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| | | | | 2 | செல்வி இ. பிரதீபா | வ/இறம்பைக்குளம் ம. வித்தியாலயம் | வவுனியா தெ | வவுனியா |
| | | | | 3 | செல்வி ச. தேனுஜா | மட்/ வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| 36 | 4.17 | நடனம் | குழு 1 | 1 | ************ | மன்/ சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி. | மன்னார் | மன்னார் |
| | | | | 2 | ************ | தி/ ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 3 | ************ | யா/கொக்குவில் இந்துக் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 37 | 4.18 | நடனம் | குழு 11 | 1 | ************ | யா/இராமநாதன் கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் |
| | | | | 2 | ************ | தி/ ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 3 | ************ | வ/ வவுனியா த.ம.வி. | வவுனியா | வவுனியா |
| 38 | 4.19 | நாடகம் | தி.போ | 1 | ************ | தி/புனித சூசையப்பர் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 2 | ************ | மு/முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க. | முல்லைத்தீவு | முல்லைத்தீவு |
| | | | | 3 | ************ | வ/இறம்பைக்குளம் ம. வித்தியாலயம் | வவுனியா தெ. | வவுனியா |
| 39 | 4.20 | வில்லுப் பாட்டு | தி.போ | 1 | ************ | வ / விபுலானந்தா ம. வி. | வவுனியா தெ. | வவுனியா |
| | | | | 2 | | | | |
| | | | | 3 | | | | |
| 40 | 4.21 | விவாதம் | தி.போ | 1 | ************ | தி/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி | திருமலை | திருமலை |
| | | | | 2 | ************ | யா/யாழ் இந்துக் கல்லூரி | யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| | | | | 3 | ************ | வ / விபுலானந்தா ம. வி. | வவுனியா தெ. | வவுனியா |
| 41 | 4.22 | தமிழறிவு வினா | தி.போ | 1 | ************ | யா/மகாஜன கல்லூரி | வலிகாமம் | யாழ்ப்பாணம் |
| | | | | 2 | ************ | வ/ வவுனியா த.ம.வி. | வவுனியா தெ. | வவுனியா |
| | | | | 3 | ************ | மு / புதுக்குடியிருப்பு ம. வித்தியாலயம். | முல்லைத்தீவு | முல்லைத்தீவு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தினப்போட்டி – 2002
## பரிசுகளும், சான்றிதழ்களும் பெற்ற மாணவர்கள் விபரம்.

| தொ இல. | நிகழ் இல. | நிகழ்ச்சி | பிரிவு | நிலை | போட்டியாளர் பெயர் | பாடசாலை | வலயம் | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 42 | 4.23 | முஸ்லிம் நிகழ்ச்சி | தி.போ | 1 | செல்வன் ஜாபீர் றாஸிமுகமத் | கமு/மருதமுனை அல் மனார் மத்திய க. | கல்முனை | கல்முனை |
| | | | | 2 | செல்வி.அப்துல்லதீப் பாத்திமா முஸர்றபா | மட் /காத் தான் குடி அலிகார் வித்தி. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| | | | | 3 | செல்வி எம்.ஆர். சிபாயா | தி/ அல் ஹம் றா முஸ்லிம் வித்தி. | மூதூர் | திருமலை |
| 43 | 4.24 | சிங்கள மாணவர்களுக்கானதமிழ வாசிப்பு | வி.பி 1 | 1 | செல்வி.எஸ்.சனமுனானி ரோகணவீர | தி/ திஸ் ஸ மகா வித்தியாலயம். | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி. ஆர்.கே. துஸ்னிமா நதீசானி | வ/ மடுகந்த மகா வித்தியாலயம் | வவுனியா தெ. | வவுனியா |
| | | | | 3 | | | | |
| 44 | 4.24 | சிங்கள மாணவர்களுக்கானதமிழ் வாசிப்பு | வி.பி 11 | 1 | செல்வி. தி.சந்திமா மதுவந்தி | தி/ திஸ் ஸ மகா வித்தியாலயம். | திருமலை | திருமலை |
| | | | | 2 | | | | |
| | | | | 3 | | | | |
| 45 | 4.25 | சிங்கள மாணவர்களுக்கானதமிழ் உறுப் பெழுத்து | வி.பி 1 | 1 | செல்வன். ஐ. பி. ஆசிறி சமரநாயக்க | தி/ திஸ் ஸ மகா வித்தியாலயம். | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல்வி. இதஸ்கா நெலும் விபுலசேன | வ/ மடுகந்த மகா வித்தியாலயம் | வவுனியா தெ. | வவுனியா |
| | | | | 3 | | | | |
| 46 | 4.25 | சிங்கள மாணவர்களுக்கானதமிழ் உறுப் பெழுத்து | வி.பி 11 | 1 | செல்வி. இ. திலாசனி இலங்காரத்ன | தி/ திஸ் ஸ மகா வித்தியாலயம். | திருமலை | திருமலை |
| | | | | 2 | செல் வி. மதுசிகா பிரியதர்சினி பீரிஸ் | வ/ பரகும் மகா வித்தியாவயம். | வவுனியா தெ. | வவுனியா |
| | | | | 3 | | | | |

**எஸ் மகாலிங்கம்**
**மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக்கல்விப் பணிப்பாளருக்காக,**
**வகிமா.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed by : RAINBOW MINILAB, 026-23454, 077303938

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org